# உதயன்

பக்கங்கள் 52

விலை ரூபா 30.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 069 வள்ளுவர் ஆண்டு 2044 தை 21 ஞாயிற்றுக்கிழமை (03/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily





பரிதாப நிலையில் பாகிஸ்தான் 18

வென்றது கனகரத்தினம் மகா வித்தியாலயம் 17

உரிமையாளர் இல்லாத காணிகள் கட்சி உறுப்பினருக்கு 06

முருங்கை மரப் புனைவுகள் சூரியகாந்தி 01




# யாழ்ப்பாண நகர எல்லையில் நிரந்தர சிங்களக் குடியேற்றம்

## அவர்களுக்குக் காணிகளைப் பகிர்ந்தளிக்க அரசு தயார்



நாவற்குழியில் அமைக்கப்பட்டு வரும் வீடுகள்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 3

யாழ். நகரத்தையொட்டிய எல்லையான நாவற்குழியில் நிரந்த சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்துவதற்கான பணிகள் தீவிரமாக ஆரம்பமாகியுள்ளன. இலங்கை அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவுடனும் இராணுவத்தினரின் பாதுகாப்புடனும் இந்தக் குடியேற்றப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நிரந்தர சிங்களக் குடியிருப்பில் குடியேறியுள்ளவர்களுக்கு காணிகளைச் சொந்தமாக வழங்குவதற்கு உடனடி

பார்க்க பக்கம் 04

## துண்டுக் காணி கூட இன்றி 11,500 தமிழ்க் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், பெப். 03

யாழ். குடாநாட்டில் ஒரு காணித்துண்டு கூட இல்லாமல் 11 ஆயிரத்து 500 தமிழ்க் குடும்பங்கள் நிரந்தரமாக வசிக்கின்றன என்று, வடமாகாணப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பதிவுகளிலிருந்து பெறப்பட்ட புள்ளி விவரமே இது எனத் தெரிவிக்கும் அதிகாரிகள் உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகம் இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் தமிழ் மக்களுக்குக் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் பொருட்டு காணிக் கச்சேரிகளை வடமாகாண காணி ஆணையாளர் அலுவலகம் நடத்தவுள்ளது.

இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலுமுள்ள காணியற்றோரின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டன.

கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே அதிகளவான தமிழ்க் குடும்பங்கள் காணிகள் இல்லாமலுள்ளன.

காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவினால் காணியற்றோருக்கு தலா இரண்டு பரப்பு வீதம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும் இதுவரையில் அதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## பிரேரணைக்கு பிரிட்டன் ஆதரவு

கொழும்பு, பெப். 03

ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் அமெரிக்காவால் சமர்பிக்கப்படவுள்ள, இலங்கைக்கு எதிரான காட்டமான பிரேரணைக்கு பிரிட்டன் தனது ஆதரவை வழங்கும். இந்தப் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதற்கு அமெரிக்காவுக்கு, பிரிட்டன் தனது முழு ஒத்துழைப்புக்களையும் வழங்கும். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களுக்குமிடமில்லை.

இவ்வாறு இலங்கைக்கு இரண்டுநாள் பயணமாக வருகை தந்திருந்த, பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் அலெஸ்ரயர் பேர்ட் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை நிகழ்த்திய தனது

பார்க்க பக்கம் 04

## அமெரிக்கப் பிரேரணை சாதாரண விடயமல்ல

கொழும்பு, பெப். 3

ஜெனிவாவில் அமெரிக்கா சமர்ப்பிக்கும் பிரேரணையை சாதாரண விடயமாகக் கருத முடியாது. இந்தப் பிரேரணையைத் தொடர்ந்து இலங்கைக்கு எதிராக ஐ.நா மூலம் பொருளாதாரத் தடையை விதிக்கும் யோசனை முன்வைக்கும் சாத்தியமும் காணப்படுகின்றது.

எனவே இவ்வாறான சர்வதேச தலையீடுகளைத் தவிர்ப்பதற்கு நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுமே தீர்வாகும்.

இவ்வாறு அரசின் அமைச்சரும், சர்வகட்சிக் குழுவின்

பார்க்க பக்கம் 04

## கலவரத்தை தூண்டும் முயற்சியே தென்னிலங்கை மீனவரின் வருகை

### முல்லைத்தீவு மீனவர் அமைப்புக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,பெப்.3

தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு இனக்கலவரத்தைத் தூண்டும் முயற்சியிலேயே இலங்கை அரசும், படைத்தரப்பினரும் ஈடுபட்டு வருகின்றனர். அதற்காகவே தென்னிலங்கை மீனவர்கள் முல்லைத்தீவில் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளன் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் அமைப்புக்கள் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளன.

முல்லைத்தீவு, மாத்தளன் பகுதியில் மொறவெவப் பகுதியைச் சேர்ந்த சிங்கள மீனவக் குடும்பங்கள் அந்தப் பகுதி மீனவர்களின் எதிர்ப்பையும் மீறி இராணுவப் பாதுகாப்புடன் குடியேற்றப்பட்டு மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை, சில

பார்க்க பக்கம் 04

## ஒகஸ்ட் மாத நடுப் பகுதியில் வடக்கு மாகாணத் தேர்தல்

கொழும்பு, பெப். 03

செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்த வடமாகாண சபைத் தேர்தலை, அரசு எதிர்வரும் ஒகஸ்ட் மாத நடுப் பகுதியில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. வடமாகாண சபைத் தேர்தலையும், மேல் மாகாண சபைத் தேர்தலையும் ஒன்றாக நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சர்வதேச நாடுகள், வடமாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்தி வருகின்றன. கடந்த வருடம் வரவு-செலவு திட்டச் சமர்ப்பிப்பின்போது, வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம்

பார்க்க பக்கம் 04

## வீட்டுத் திட்டத்தை இந்தியா கண்காணிப்பது அவசியம்

### வலியுறுத்துகிறார் மனோ கணேசன்

கொழும்பு, பெப். 03

இந்திய வீட்டுத் திட்டத்தை தமது அரசியல் நோக்கங்களுக்காக எவராவது பயன்படுத்துகிறார்களா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு நிதி உதவி செய்யும் இந்திய அரசுக்கு இருக்கிறது. இந்தப் பொறுப்பை இந்திய அரசு உதாசீனம் செய்யக்கூடாது.

போரில் அழிந்த வீடுகளை கட்டிக் கொடுப்பது இலங்கை

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு எம்.பிக்களை வரவேற்க முடியாத இக்கட்டு

## வன்னிப் பாடசாலை அதிபர்கள் கவலை

வவுனியா,பெப்.03

பாடசாலைகளில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை விருந்தினர்களாக அழைக்க முடியாத இக்கட்டு நிலையில் முல்லைத்தீவுப் பாடசாலைகளின் அதிபர்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தற்போது இல்ல மெய்வன்மைப் போட்டிகள், கால்கோள் விழாக்கள் உட்பட பல்வேறு வகையான நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.


இந்த நிகழ்வுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது அந்தக் கட்சி சார்ந்த பிரமுகர்களையோ விருந்தினர்களாக அழைக்க முடியாத நிலை உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாடசாலையுடன் எந்த வித தொடர்பும் இல்லாத அரசு சார்பான பிரமுகர்களையே இந்த நிகழ்வுக்கு அழைக்க வேண்டிய சூழல் தமக்கு ஏற்பட்டுள்ளதாக அதிபர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள பிரபல்யமான ஆரம்பப் பாடசாலை ஒன்றுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பல இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கிய போதும் அவரைக் கூட அந்தப் பாடசாலையில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு அழைக்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாக பாடசாலை சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை நிகழ்வுகளுக்கு அழைக்கும் பட்சத்தில் தம் மீது பல்வேறு அழுத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்ற அச்சம் காரணமாகவே அதிபர்கள் அவர்களை நிகழ்வு களுக்கு அழைப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-410)

# 24 மாணவர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம்,பெப்.03

கடந்த வருடம் நடை பெற்ற க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்ற 24 மாணவர்கள் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ஐந்து மாவட்டங்களிலும் முதல் நிலைபெற்ற ஒவ்வொரு மாணவருக்கும் சைக்கிளும் வழங்கப்பட்டது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. கௌரவிப்புப்பெறும் 5 மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்களும் அவர்களின் பாடசாலை அதிபர்கள், பெற்றோரும் அழைக்கப்பட்டிருந்தனர். கலைப்பிரிவில் 3'ஏ' சித்தி பெற்று மாவட்ட நிலையில் 4 ஆவது இடத்தைப் பெற்ற சுன்னாகம் வாழ்வக மாணவன் சொர்ணலிங்கம் தர்மதனும் இதில் உள்ளடங்குகிறார். (த-4)

# நெடுந்தீவில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,பெப்.03

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் இன்று ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு மேற்கில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.மோகனகுமார் தலைமையில் நடைபெறும் இந்த மருத்துவ முகாமில் பல்வேறு சிகிச்சைகள் மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இன்று காலை 8 மணி தொடக்கம் மாலைவரை இந்த மருத்துவமுகாம் நடைபெறும். (த-17)

# வவுனியாவில் பேரணி

வவுனியா,பெப்.03

வவுனியா மற்றும் செட்டிகுளம் பிரதேசங்களில் இந்திய வீட்டுத்திட்டத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவித்து கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட கவனயீர்ப்புக் கண்டனப் பேரணிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வவுனியாவில் பேரணியொன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. வவுனியா மாவட்ட இன நல்லுறவுக்கான ஒன் றியம் என்ற அமைப்பினால் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வவுனியா நகர பள்ளி வாசலில் இருந்து ஆரம்பமாகிய இந்தப் பேரணி, வவுனியா செயலகத்தில் சென்று முடிவடைந்தது.

கடந்த 30 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான நலன்புரி அமைப்பினால் வவுனியா அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம். செட்டிகுளம், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுகுட்பட்ட மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதை முழுமையாக நிராகரிக்கின்றோம் என்று இந்த பேரணியின் முடிவில் கையளித்த மனுவில் இன நல்லுறவுக்கான ஒன்றியம் தெரிவித்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயர் குறிப்பிட்டுக் கண்டிக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும், அமைச்சர் ரிஷாட் பதியூதீனுக்கு ஆதரவான வாசகங்களைக் கொண்ட பதாகைகளும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் ஏந்திச் செல்லப்பட்டன. (த-5)

# 61 வீதமான மாணவர் பல்கலைக்குத் தகுதி

கொழும்பு, பெப். 03

கடந்த ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 4 சதவீதமான மாணவர்கள் சித்தியடையவில்லை. அத்துடன் 61.35 வீதமானவர்கள் பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றுள்ளனர்-என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 52 ஆயிரம் பேர் தோற்றினர்.

இவர்களில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்த 128,809 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் செல்லத் தகுதி பெற்றுள்ளனர்.

8544 பேர் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 16,538 பேர் அனைத்துப் பாடங்களிலும் குறைந்த மதிப்பீட்டைப் பெற்று சித்தியடையத் தவறியுள்ளனர்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் உயிரியல் விஞ்ஞானத் துறையில் 313 பேரும், கணிதத்துறையில் 443 பேரும், வர்த்தகத் துறையில் 6 ஆயிரத்து 471 பேரும், கலைத் துறையில் ஆயிரத்து 313 பேருமாக 8544 பேர் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தியைப் பெற்றுள்ளனர்.

பழைய பாடத்தின் கீழ் உயிரியல் விஞ்ஞானத்துறையில் 72 பேரும், கணிதத் துறையில் 47 பேரும், வர்த்தகத்துறையில் 234 பேரும், கலைத்துறையில் 160 பேரும் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தியைப் பெற்றிருப்பதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

### மீளாய்வு

மேலும், வெளியிடப்பட்ட பெறுபேறுகளில் மீளாய்வு செய்ய விரும்பும் மாணவர்கள் இந்த மாதம் 22 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியுமென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (த-5)

# வடக்கு மாணவர் இருவர் இந்தோனேஷியா பயணம்

## ஒலிம்பியாட் போட்டியில் பங்கு கொள்ள



யாழ்ப்பாணம்,பெப்.03

ஆசிய மட்ட பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டியில் பங்கு பற்றுவதற்காக வடக்கு மாகாணத்திலிருந்து இரண்டு மாணவர்கள் இந்தோனேஷியாவுக்கு செல்லவுள்ளனர்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி உயிரியல் பிரிவு மாணவி மிதுரிகா மிகுந்தன், வவுனியா தெற்கு தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் சிவசுப்பிரமணியம் பவித்திரன் ஆகியோரே வடமாகணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து இவர்களுடன் மேலும் சில மாணவர்கள் போட்டியில் பங்கு பற்றுவதற்காக இந்தோனேஷியாவுக்கு செல்லவுள்ளனர். இந்த மாதம் அவர்கள் கல்வி அமைச்சினால் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இரண்டு வார காலம் அங்கு அவர்கள் போட்டிகளில் பங்கு பற்றவுள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(த-4)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தொடர் பணிப்புறக்கணிப்பில்

யாழ்ப்பாணம்,பெப்.03

சுகாதார திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் காலவரையின்றி பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அலுவலகப்படி, சீருடைப்படி, எரிபொருள் படி ஆகியவற்றை அதிகரித்து வழங்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கடந்த ஆண்டு கோரிக்கை முன்வைத்தனர்.

அவர்களது கோரிக்கை புதிய வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் வரவு-செலவுத் திட்டத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. இதனால் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தினமும் சீருடையின்றி அலுவலகத்துக்கு வரும் இவர்கள் வெளிக்களப் பணிகளுக்குச் செல்லாமல் அலுவலகத்தில் தங்கியுள்ளனர்.

சுகாதார அமைச்சினால் அடுத்த வாரம் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் நடத்தப்படவுள்ளவேளையில், பொதுச் சுகாதார பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பு பொதுமக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. (த-9)

# ஷிராணியை நீக்கியமை சரியானது

## சர்வதேச ஜூரிகள் சபை ஆதரவு

கொழும்பு, பெப். 03

பிரதம நீதியரசராகப் பதவி வகித்த ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்கிய முறைமை சரியானது. இலங்கையின் சட்டங்களுக்கு அமைவாகவே அதனை அரசு மேற்கொண்டுள்ளது. இதனால் புதிய பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ள மொஹான் பீரிஸுக்குத் தமது ஆதரவை வழங்குவதாகச் சர்வதேச ஜூரிகள் சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சபையினால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், குற்றப்பிரேரணையானது இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் தேவையான சகலதும் நிறைவேற்றப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையாலும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. எனவே குற்றப்பிரேரணை தொடர்பில் அரசியலமைப்பில் விதிக்கப்பட்ட செயன்முறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

பிழையான, பக்கச்சார்பான முறையில் குற்றப் பிரேரணை இலங்கையில் கடைப்பிடிப்பதாகக் கூறி இலங்கைக்கு அபகீர்த்தியை உண்டாக்கும் சில அமைப்புகள் முயலுகின்றன. அந்தச் செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இலங்கையின் சட்டங்கள் தெரியாதவர்கள் பிரதம நீதியரசர் பதவியிறக்கப்பட்டதை கண்டிப்பதையிட்டு நாம் கவலையடைந்துள்ளோம். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கையின் பிரதம நீதியரசருக்கு பூரண ஆதரவை தாம் வழங்குவோம் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ( -5)

# 'டுவிட்டர்' தளத்துக்குள் திருட்டு

சமூக வலைத்தளங்களில் ஒன்றான 'டுவிட்டர்' தளத்துக்குள் ஊடுருவி சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் பயனாளர்கள் பற்றிய தகவல்களை 'ஹக்கர்ஸ்' கும்பலொன்று திருடிச் சென்றுள்ளதாக அந்தத் தளம் அறிவித்துள்ளது

'டுவிட்டர்' சமூக வலைதளம் அவ்வப்போது 'ஹக்கர்ஸின்' தாக்குதலுக்கு இலக்காகி வருகிறது. கடந்த வாரமும், இவ்வாறானதொரு 'ஹக்கர்ஸ்' கும்பல் தாக்குதல் நடத்த முனைந்தது. அமெரிக்காவின் ஊடகம் மற்றும் தொழில்நுட்பத்துறை மீதான பெரும் தாக்குதலாக இது கருதப்படுகிறது.

இவ்வாறானதொரு நிலையில், அமெரிக்க கணினிகளை ஊடுருவி தகவல்களைத் திருடுவதில் சீனர்கள்தான் அதிகம் ஈடுபடுவதாக அமெரிக்க ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (த-5)

# பதவி விலகும் எண்ணம் இல்லை—பிரதமர்

கொழும்பு, பெப். 03

பிரதமர் பதவியை ராஜினாமா செய்யும் நோக்கம் எனக்கு இல்லை. இருப்பினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேறு ஒருவரைப் பிரதமராக நியமித்தால் தான் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகப் பிரதமர் தி.மு.ஜயரட்ண குறிப்பிட்டார்.

பிரதமர் பதவி எனக்குச் சொந்தமானது அல்ல. பிரதமர் நியமனம் ஜனாதிபதியின் சிறப்புரிமை ஆகும். அரசியல் நியமனம் ஒரு 'கோட்' போன்றது. இது எந்த நேரத்திலும் அகற்றப்படக்கூடியது.

அரசியல் வழியில் எந்த பதவியில் இருந்தாலும் இல்லாவிடினும் எனக்கு மக்களுக்கு சேவை செய்ய முடியும். நான் இளைப்பாறும் எண்ணத்தில் இல்லை. எனது 60 வருட அரசியல் வாழ்வின் போது நாட்டுக்காக என்னால் இயன்றளவுக்கு சேவையாற்றியுள்ளேன்.

ஜனாதிபதி ராஜபக்ஷ, என்ன தீர்மானம் எடுத்தாலும் நாட்டின் நலனுக்காக அதை தான் ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளதாகவும் ஜனாதிபதி தனக்கு மலை போன்ற உறுதியை வழங்கி சுகவீனமாக இருந்தபோது தனக்கு தேவையான சகலத்தையும் செய்தார் அவர் கூறினார். (த-5)

# சிவன்கோயிலில் புதையல் அகழ்வு

பொலனறுவை சிவன் ஆலயத்திலிருந்து இனந்தெரியாத சிலர் புதையல் தோண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலனறுவை சிவன் ஆலயத்தின் சிவலிங்கம் இருக்கும் இடத்தில் காணப்படும் கல்சிலேட்டு அகற்றப்பட்டு அங்கு மூன்று அடி குழி தோண்டி இனந்தெரியாத சிலர் புதையல் அகழ்ந்துள்ளனர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைப்பூச தினத்தன்று காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தினரால் காரைநகர் பிரதேச வயல்களில் அறுவடை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ம-250)


## வெடிப் பொருள் அகற்றிய இளைஞனை தீண்டியது பாம்பு

தென்மராட்சி,பெப்.3

வெடிபொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்ட இளைஞனை நச்சுப்பாம்பு தீண்டியது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை முகமாலையில் இடம்பெற்றது.

கைதடி, நாவற்குழியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் இலங்கேஸ்வரன் (வயது -23) என்னும் இளைஞரே பாம்பால் கடியுண்டவராவார்.

சக பணியாளர்கள்.கடித்த பாம்பைப் பிடித்து போத்தலில் அடைத்து கடியுண்ட இளைஞனுடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வந்தனர். (ம-3)



யாழ்.நகரில் தேசியக் கொடி விற்பனை சூடுபிடித்துக் காணப்படுகின்றது. சுதந்திர தினத்தன்று தேசியக் கொடி ஏற்றப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலை அடுத்து கொடி விற்பனைகளை கட்டியுள்ளது.
பெரிய அளவிலான கொடி ஒன்று 650 ரூபாவாகவும் மற்றும் சிறிய நடுத்தரக் கொடிகள் 100 ரூபா, 70 ரூபா விலைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (ம-17-86)

## மோட்டார் சைக்கிள் திருட்டு குடாநாட்டில் திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,பெ.3

வீடு உடைத்து, கடை உடைத்து கொள்ளை, திருட்டு இடம்பெற்று வரும் நிலையில், தற்பொழுது மோட்டார் சைக்கிள்களைத் திருடும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

கடந்த வாரம் மாத்திரம் இவ்வாறு மூன்று மோட்டார் சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி.

தமது அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் கடந்த 23 ஆம் திகதி திருடப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் மீட்கப்படவில்லை. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

அரசடிச் சந்தி நல்லூரில் கடந்தவாரம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளனர்.திருடிய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்தியுள்ளோம். விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

திருநெல்வேலிச் சந்தியில் கடந்த 23 ஆம் திகதி 70 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்ல. மோட்டார் சைக்கிளும் மீட்கப்படவில்லை. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

தவிர அல்வாய் மேற்கில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது.

திருநெல்வேலி சந்தியை அண்மித்து விடப்பட்டிருந்த 6 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் கடந்த சனிக்கிழமை திருடப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ம-4)

## மீள்குடியமர்த்த மிதிவெடி என்கிறீர்கள் விவசாயம் செய்ய எதுவும் இல்லையா?

### வலி.வடக்கு பிரதேச சபைக் கலந்துரையாடலில் கேள்வி எழுப்பிய பெண்

யாழ்ப்பாணம்,பெப்ரவரி.3

*எங்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு மிதிவெடியைக் காரணம் காட்டுகிறீர்கள். ஆனால் நீங்கள் விவசாயம் செய்யும் போது அந்த மிதிவெடிகள் எல்லாம் எங்கே போயின?*

முள்ளிவாய்க்காலில் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகளில் மண்டையோடுகளுடன், அந்த மக்களை மீளக்குடியமர்த்திய அரசு 23 வருடங்களாக இடம்பெயர்ந்து வாழும் எங்களை எப்போது மீளக்குடியமர்த்தப் போகிறது?

இவ்வாறு நேற்றுமுன்தினம் வயாவிளானை சொந்த இடமாகக் கொண்ட பெண் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

வலி. வடக்கு பிரதேச சபையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வயாவிளானில் இருந்து 90ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இன்று வரையில் 20 வீடுகள் மாறிமாறி வாடகை கொடுத்து வசித்து வருகிறேன். எனது வீடு 7 மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தால் இடித்து அழிக்கப்பட்டு விட்டது.

ஏற்கனவே இடித்து அழிக்கப்பட்ட வீடுகளுக்கு நஷ்டஈடு தரப்படமாட்டாது என்று அரசு சொல்கிறது. எமது வீடுகளை அழித்த இந்த அரசு தான் அரைநிரந்தர வீடு கட்டித்தருகிறது. அது தான் அபிவிருத்தி என்றும் கூறுகிறது.

எங்களது நிலங்களில் இராணுவத்தினர் விவசாயம் செய்கின்றனர். நாங்கள் எதுவும் செய்ய முடியாது நிற்கின்றோம்.

எங்களை மீளக்குடியமர்த்துமாறு கேட்டால் மிதிவெடியைக் காரணம் காட்டுகின்றனர். படையினர் விவசாயம் செய்கையில் இந்த மிதிவெடிகள் எங்கே போய் விட்டன.

முள்ளிவாய்க்காலில் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகளில் மண்டையோடுகளுக்கு மத்தியில் மக்களை மீளக்குடியமர்த்திய அரசு எங்களை 23 வருடங்களாக மீளக்குடியமர்த்தாது பின்னடிப்பது ஏன்?

இந்தப் பகுதிகள் கடல் வளம் மிக்கன. அதனால் தான் இன்னும் விடாமல் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் உண்மை.

இடிக்கப்பட்ட வீட்டு உரிமையாளரின் பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறு பிரதேச சபைத் தலைவர் கேட்டார்.

எமது வீடுகள் அழிந்தமைக்கான நஷ்டஈடு கோரினால் நஷ்டஈடு வராது. வீட்டுக்கு வெள்ளை வான் தான் வரும். அதன் பின்னர் நாம் எந்தச் சிறையில் இருப்போமோ தெரியாது. இதுதன் இன்றைய நிலைமை. - என்றார். (ம-5)

## நிகழ்வுகள் இன்று

**நூல் வெளியீடு**

யாழ்ப்பாணம், பெப்.3

சாளினி சாள்ஸ் எழுதிய 'உனக்காக' எனும் கவிதை நூல் வெளியீடு மாலை 4 மணிக்கு யாழ். நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, வாழ்வகத் தலைவர் எ.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்த நூல் வெளியீட்டுடன் இணைந்து மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற விதத்தில் இறுவட்டும் வெளியீடு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

**உபகரணம் வழங்கல்**

யாழ்ப்பாணம், பெப்.3

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் வைத்திய அதிகாரி எம். உமாசங்கர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-86)

**பொதுக் கூட்டங்கள்**

நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று காலை 8 மணிக்குச் சங்கத் தலைவர் கி.பவுலின் தலைமையில் சென்.பீற்றர் சனசமூக மண்டபத்தில் நடைபெறும். (ம-100)

* * *

யாழ்ப்பாணம், பெப்.3

அம்பன் அ.மி.த.க.பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

## காசோலை மோசடிகள் குறித்து கடந்த வாரம் 6 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ். மாவட்டத்தில் 39 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா காசோலை மோசடிகள் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் கடந்தவாரம் 6 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற வாராந்த ஊடக சந்திப்பில் இவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொட்டடியைச் சேர்ந்த ஒருவர் 2 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையைக் கொடுத்துள்ளார். அதனைப் பெற்றுக்கொண்ட கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நபர் மோசடி செய்ததால் அது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த ஒருவர் 5 இலட்சம் ரூபா காசோலை மோசடி செய்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் 4 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்துள்ளார். சந்தேகநபர் தற்பொழுது தலை மறைவாகியுள்ளார்.

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த ஒருவர் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை மோசடி செய்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

**யாழ். மாவட்டத்தில் 39 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா காசோலை மோசடிகள் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் கடந்தவாரம் 6 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.**

சென்.தோமஸ் வீதியில் 20 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

அதேபகுதியில் பிறிதொரு வர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடியில் ஈடுபட்டுள்ளார். இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பிலும் ஆண், பெண் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. (ம-4)

## வசந்தபுரத்துக்குப் பெயர் மாற்ற எப்போது அனுமதி பெறப்பட்டது?

### எதிரணி உறுப்பினர் கேள்வி

யாழ்ப்பாணம்,பெப்.3

கொழும்புத்துறை வசந்தபுரம் தேவாபுரமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா? பெயர் மாற்றத்துக்கான அனுமதி எப்போது பெறப்பட்டது.

பெயர் மாற்றம் பெறுவதற்கு ஏற்கனவே அனுமதி பெறப்பட்டு அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும்.

யாழ்.மாநகர சபையின் ஜனவரி மாதத்துக்கான கூட்டத்தில் எதிரணி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் இவ்வாறு கூறினார்.

மாநகர சபையின் காணிகளைப் பொது மக்களுக்கு வழங்குவதற்கு அனுமதி பெறவேண்டும்.

ஜனாதிபதியின் அங்கீகாரம் இதற்குத் தேவை. வசந்தபுரம் பகுதியில் பொதுமக்கள் 1984 ஆம் ஆண்டுக்கு முன்னரே குடியிருந்துள்ளனர். இக்காணிகளை மக்களுக்கு சட்டபூர்வமாக வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு ஜனாதிபதியின் அனுமதி பெற்றே உறுதி வழங்க வேண்டும்.

ஆளுநர் ஊடாக மாநகர சபையால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டு அனுமதி கிடைத்தால் இந்திய வீட்டுத் திட்டத்துக்குப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என்று முதல்வர் சபையின் அனுமதிக்காக பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

இதன்போது விந்தன் கனகரத்தினம் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

மக்களின் கோரிக்கைக்கு அமையவே தேவபுரம் என்று போடப்பட்டுள்ளது. தேவாபுரம் என்றல்ல என்று முதல்வர் பதிலளித்தார்.

இது தொடர்பான கடும் வாக்குவாதம் இரு தரப்பினரிடையே இடம்பெற்றது.

எனினும் திருநகர் பகுதியிலும் மக்களுக்குக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என உறுப்பினர். மு.றெமிடியஸ் தெரிவித்தார். பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது ஆளும் தரப்பினருடன் இணைந்து உறுப்பினர் றெமீடியஸ் வாக்களித்தார். (ம-7-17)

## குடும்பப் பெண் விபத்தில் காயம்

தென்மராட்சி,பெப்.3

வீதி விபத்தில் சிக்கி குடும்பப் பெண் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மீசாலையில் இடம்பெற்றது.

கரவெட்டி கரணவாய் மேற்கைச் சேர்ந்த கந்தசாமி வசந்தா (வயது-54) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
முன்னாள் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தாவது:-

ஜெனிவாவில் இந்த மாத இறுதியில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத்தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக மற்றுமொரு பிரேரணையை கொண்டுவர முயற்சிப்பதை சாதாரண விடயமாகக் கருதமுடியாது.

இதன்மூலம் பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு ஐ.நா. சபைக்கு யோசனை முன்வைக்கும் சாத்தியமுள்ளது. இந்த நிலைமையை புலம்பெயர் புலி ஆதரவு மக்கள் நன்றாக பயன்படுத்திக் கொள்வர். எனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதாக சர்வதேசத்துக்கு வலியுறுத்திக் கூறுவதே அழுத்தங்களைக் குறைப்பதற்கான வழி.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைக் கூட்டி அரசியல் தீர்வை விரைவாகக் காண்பதன் மூலமே இந்தியாவின் ஆதரவை ஜெனிவாவில் பெறமுடியும் - என்றார்.(த-5)

## ஓகஸ்ட்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
நடைபெறும் என்று ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் சர்வதேச நாடுகளின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாகவும், இந்த மாத இறுதியில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரை முன்னிட்டும், வட மாகாண சபைத் தேர்தலை ஒரு மாதம் முன்னதாக - ஓகஸ்ட் மாதம் - நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்குமான தேர்தலை அரசு மே மாதம் நடுப்பகுதியில் நடத்தவிருக்கிறது.

குற்றப்பிரேரணை மற்றும் அமைச்சரவை மாற்றத்துக்கு பின்னர் அரசு தொடர்பில் மக்கள் கொண்டிருக்கின்ற நிலைப்பாட்டைக் கண்டறியும் வகையிலேயே இந்த இரு மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. இரு மாகாண சபைகளுக்குமான பதவிக் காலம் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிறைவடையவிருக்கின்ற நிலையிலேயே 7 மாதங்களுக்கு முன்னர் இரு மாகாண சபைகளையும் கலைத்துத் தேர்தல் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 2014 ஆம் ஆண்டு ஊவா மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலும் அதற்குத் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலேயே அமைச்சரவையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## பிரேரணைக்கு..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
நீண்ட உரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அடுத்த மாதம் முதல்வாரத்தில் 22 ஆவது மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ளது. இலங்கையில் இறுதிப் போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையில் இலங்கை அரசை செயற்படக்கோரும் பிரேரணையை இந்தக் கூட்டத் தொடரில் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ளது.

மிகவும் காட்டமான அந்தப் பிரேரணையை பிரிட்டன் ஆதரிக்கும். அந்தப் பிரேரணை கூட்டத் தொடரில் நிறைவேறுவதற்கு தனது முழு ஒத்துழைப்பையும் பிரிட்டன் வழங்கும். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்த பின்னரும்கூட இன்று வரை இலங்கையில் மனித உரிமைகள் குறித்த கவலைகள் பரவலாகக் காணப்படுகின்றன.

**துன்புறுத்தப்படுவதில்லை**

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் குற்றஞ்சாட்டுவது போன்று, பிரிட்டனில் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் தமிழர்கள், சித்திரவதைக்கு ஆளாகிறார்கள் என்பதற்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது.

பிரிட்டனில் அரசியல் தஞ்சத்துக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் திருப்பி அனுப்பப்படும் மக்களை, குறிப்பாகத் தமிழர்களை இலங்கை அரசு சித்திரவதை செய்கிறது என்பதற்கு மருத்துவ ரீதியான ஆதாரம் உள்ளது. பிரிட்டனைத் தளமாகக் கொண்ட சித்திரவதைகளில் இருந்து விடுதலை மற்றும் அமெரிக்காவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகிய அமைப்புக்கள் இதனை ஊர்ஜிதம் செய்யும் வகையில் தெரிவித்துள்ளன.

தவறாக நடத்தப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகக் காணப்பட்டால் மட்டுமே, அவர்கள் நீதிமன்றங்களால் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்- என்றார். (த-5)

## கலவரத்தை..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
சிங்கள மீனவக் குடும்பங்கள், சில மாத்தளன் பகுதியில் குடியமர்வதற்கும் தொழில் செய்வதற்கான ஆயத்தங்களுடனும் வந்து இறங்கின. ஆயினும் அந்தப் பகுதி மீனவர் சங்கங்களின் கடும் எதிர்ப்பால் அங்கு மீளக்குடியமர்த்தப்படாமல் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கரைத்துறைபற்று பிரதேச செயலர், முல்லைத்தீவு கடற்றொழில் திணைக்கள உயர் அதிகாரிகள் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கும், சிங்கள மீனவக் குடும்பங்களுக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றிருந்தது. அதன்போது எதிர்வரும் 8 ஆம் திகதி கடற்றொழில், நீரியல் வள அமைச்சர் முல்லைத்தீவுக்கு வருகை தரும் போது இது பற்றித் தீர்மானிப்பது என முடிவுசெய்யப்பட்டது. அத்துடன் அவர்கள் கொண்டுவந்த தொழில் உபகரணங்களை ஓர் இடத்தில் பாதுகாப்பாக வைப்பது எனவும் முடிவாகியது.

எனினும் சிங்கள மீனவர்கள் இரவோடு இரவாக இராணுவத்தின் துணையுடன் குடியேற்றப்பட்டுள்ளனர்.

அவர்கள் இங்கு குடியமர்ந்து மீன்பிடித்தொழில் ஈடுபட்டால் தற்போது இங்கு தொழிலில் ஈடுபட்டுவரும் மாத்தளன், பொக்கணை, புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம், இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால், வலைஞர் மடம், பகுதிகளைச் சேர்ந்த சுமார் 625 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தென்பகுதியில் இருந்து வருகை தந்துள்ள மீனவர்கள், தாம் தொழில் புரியும் வாடிகளுக்கு அண்மையில் தமிழ் மீனவர்கள் வாடிகளை அமைத்து தொழில் செய்யும் போது தேவையற்ற பிணக்குகள் ஏற்படும்.

சிங்கள மீனவர்களே தமது வாடிகளை சேதப்படுத்திவிட்டு முல்லைத்தீவு மீனவர்கள் மீது பழிபோடக்கூடும். கடந்த காலங்களிலும் இவ்வாறே தமிழர், சிங்களவர் பிரச்சினைக்கு வித்திடப்பட்டது. அவ்வாறான ஒரு நிலையைத் இப்போது ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என முல்லைத்தீவு மீனவ அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன. (த-410)

## வீட்டுத்திட்டத்தை..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
அரசின் கடமை. அதனையே இன்று இந்திய அரசு முன்வந்து செய்கிறது. எனவே, இந்திய அரசுக்கு கண்காணிப்பு அதிகாரம் வழங்கப்படாமலும், மறுபுறம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநீதியும் இழைக்கப்படுமானால் இந்தத் திட்டத்தில் இந்திய அரசு சம்பந்தப்பட்டு என்ன பயன்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் அமைப்பாளருமான மனோகணேசன்.

இந்திய அரசின் வீடமைப்புத் திட்டம் நடைமுறையாகும் முறைமை குறித்து எழுந்துள்ள பதற்ற நிலைமைகள் பற்றி மன்னார், வவுனியா மாவட்டங்களில் வாழும் பாதிக்கப்பட்ட மக்கள் எமக்கு முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கொழும்பில் உள்ள இந்திய தூதுவர் அசோக் கே.காந்தாவுக்கு நான் நேற்றுக் காலை எனது கருத்துகளை அறிவித்துள்ளேன்- எனவும் மனோ கணேசன் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

இந்திய அரசின் வீடமைப்புத் திட்டத்தில் கட்டப்படும் வீடுகளை தமது அதிகாரத்தை கொண்டு ஒரு பிரிவினர் துஷ்பிரயோகம் செய்வதாகப் பரவலாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். பெரும் ஆரவாரத்துடன் அறிவிக்கப்பட்ட இந்திய அரசின் வீடமைப்பு திட்டம் நீண்ட காலமாக முடிவின்றித் தொடர்கிறது.

இந்தத் திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்யும் முறைமையும், பயனாளிகளின் பெயர்களும் ஊடகங்களில் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்களா என்பது பற்றிக் கண்காணிப்பு செய்யப்பட வேண்டும்.

இதை தமது அரசியல் நோக்கங்களுக்காக எவராவது பயன்படுத்துகிறார்களா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு நிதி உதவி செய்யும் இந்திய அரசுக்கு இருக்கிறது. இந்தப் பொறுப்பை இந்திய அரசு உதாசீனம் செய்யக்கூடாது.

பயனாளிகளாக முறைப்படி அடையாளம் கண்டு அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படாவிட்டால், இனங்கள் மத்தியில் விரிசல் ஏற்படலாம். அதற்கான பதற்றம் இன்று சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் நிலவுகிறது.

எனவே இந்திய அரசு நிதி உதவி செய்யும் வீடமைப்பு திட்ட வீடுகள், உரிய பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைக் கண்காணிக்க வேண்டும். இது முறைப்படி நடைபெறாவிட்டால், தவறுகளுக்கு இந்திய அரசும் பொறுப்பு ஏற்கவேண்டி வரும் - என்றார். (த-5)

## யாழ்ப்பாண..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...**
நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் குடியேறும் நோக்குடன் 54 குடும்பங்கள் சிங்களக் குடும்பங்கள் திடீரென வந்து யாழ். ரயில் நிலையத்தில் தங்கின. 1980ஆம் ஆண்டுக்கு முன்னர் தாம் இங்கு வாழ்ந்தனர் என்று தெரிவித்தே அவர்கள் இங்கு குடியேற முயற்சித்தனர். எனினும் அதற்கான ஆதாரங்கள் எவையும் அவர்களால் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே அவர்களுக்கான உதவிகள் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டன.

ஒரு மாத காலம் இந்த நிலைமை தொடர்ந்த பின்னர் திடீரென அவர்கள் அடாத்தாக நாவற்குழியில் குடியேறினர். தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணிக்குள் அத்துமீறி புகுந்து கொட்டில்கள் அமைத்துத் தங்கினர்.

இந்த அத்துமீறிய குடியேற்றம் குறித்து வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரிகள் கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு தெரியப்படுத்தியதுடன் அறிக்கை மேல் அறிக்கை அனுப்பினர். ஆனால் அங்கிருந்து அடாத்தான குடியேற்றத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை**

இவ்வாறு நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறிய சிங்கள மக்கள் தமது குடியேற்றத்தை நிரந்தரமாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை இப்போது ஆரம்பித்துள்ளனர். இதற்கான நிதி உதவிகள் அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவினாலும் சிங்கராவய என்ற பிக்குகள் அமைப்பினாலும் தமக்கு வழங்கப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நிரந்தர சிங்களக் குடியேற்றத்துக்காக 20 வீடுகளுக்கு சுவர்கள் எழுப்பப்பட்டு கட்டப் பணிகள் விரைவாக்கப்பட்டுள்ளன. மேலும் 40 வீடுகளுக்கான அத்திபாரங்களை அமைக்க குழிகள் வெட்டப்பட்டுள்ளன. சிமெந்துக் கலவை இயந்திரங்கள் சகிதம் இரவு பகலாக



வேலைகள் இடம்பெற்று வருகின்றன என்று அயலவர்கள் தெரிவித்தனர்.

''எங்களுக்கு இங்குள்ள அதிகாரிகளால் எந்தவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை. தெஹிவளையைச் சேர்ந்த சிங்கராவய அமைப்பைச் சேர்ந்த பிக்குகளால் ஒரு வீட்டுக்கு 5 லட்சம் ரூபா என்ற ரீதியில் நிதி வழங்கப்பட்டது. எங்களுக்கு ஹெல உறுமய கட்சியினரும் பிக்குகளும் மட்டுமே உதவிகளைச் செய்கின்றனர்'' என்று தெரிவித்தார், சிங்களக் குடியேற்றவாசிகளின் சார்பில் ஊடகங்களிடம் பேசும் சூட்டி என அழைக்கப்படும் மல்காந்தி.

''எமக்குத் தேவையான எல்லா வீடுகளையும் அமைப்பதற்குரிய நிதியை உடனடியாக திரட்ட அவர்களாலும் (பிக்குகளால்) முடியாதுள்ளது. இதனால் கட்டம் கட்டமாகவே நிதி தருகின்றனர்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிரந்தர சிங்களக் குடியேற்றத்தை வலுப்படுத்தும் விதத்தில் பன்சல (விகாரையுடன் உள்ள பொது நோக்கு மண்டபம்) அங்கு அமைத்து முடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அடாத்தாகப் பிடித்து வைத்துள்ள காணிகளை அவர்களுக்கே எழுதித் தருவதற்கான நடவடிக்கைகளைத் தான் மேற்கொள்வார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தம்மிடம் சில நாள்களுக்கு முன்னர் உறுதியளித்தார் என்று அந்த மக்கள் 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

''தற்போது நாங்கள் 135 குடும்பங்கள் இங்கு தங்கியுள்ளோம். எங்களுக்கு இப்போதுள்ள இந்தக் காணித் துண்டுகள் போதாது. கடந்த 28 ஆம் திகதி இங்கு வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எங்களுக்கு இந்தக் காணிகளைப் பகிர்ந்தளித்து உறுதி ஆவணங்களைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்'' என்று மல்காந்தி கூறினார்.

135 குடும்பங்கள் குடியேறி இருப்பதாக மல்காந்தி கூறுகின்றபோதும் அவர்களில் யாரும் நிரந்தரமாக இங்கு குடியிருக்கவில்லை என்றும் இது சிங்களக் குடியேற்றம் ஒன்றை யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் ஏற்படுத்தி குடாநாடு முழுவதிலும் உள்ள தமிழ் மக்கள் தொடர்ச்சியைத் துண்டாடுவதற்கான திட்டமிட்ட முயற்சி என்றும் தமிழ் அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

**நிரந்தரமாகத் தங்குவதற்கே வீடுகளை இங்கு அமைக்கிறோம்**

''நாங்கள் இங்கு எல்லோரும் ஒரே நேரத்தில் தங்குவது கிடையாது. ஊருக்கு (அநுராதபுரம், மிஹிந்தலை) சென்று வருகின்றோம். இங்கு எமக்கு வேலை கிடையாது. பிள்ளைகளுக்கு பாடசாலை கிடையாது. எனவே நாம் இங்கு நிரந்தரமாகக் குடியேறவில்லை. அதற்காகத்தான் நிரந்தர வீடுகளை அமைக்கிறோம்'' என்கிறார் மல்காந்தி.

நிரந்தரக் கட்டடங்களை அமைப்பதற்கான உள்ளூராட்சிச் சபையின் அனுமதி எதுவும் இந்த மக்களால் பெறப்படவில்லை. சிங்கள மக்கள் நிரந்தரக் கட்டடங்கள் அமைப்பதற்கான அனுமதிகள் எதனையும் இதுவரை கோரவில்லை என்று சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் க.துரைராசா தெரிவித்தார். அவர்கள் சட்டவிரோதமாகவே அதனை மேற்கொள்கின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்தச் சிங்களக் குடியிருப்புக்குத் தாமே பொறுப்பு என்று அதன் அருகில் உள்ள இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட சீருடை அணிந்த ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். அதற்கு முன்னதாக அங்கு வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், இங்குள்ள சிங்கள மக்களை யாராவது வந்து சந்திப்பதாயினும் சரி, அவர்கள் தங்கியுள்ள பகுதிகளை ஒளிப்படம் எடுப்பதாயினும் சரி இராணுவ முகாமில் அனுமதி பெற வேண்டும் ஏன்று எமது செய்தியாளரை எச்சரித்தார்.

அத்துடன் சிங்கள மக்களால் தாம் பிடித்து வைத்துள்ள காணி எல்லையில், 'தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான நாவற்குழி வீட்டுத் திட்டக் காணி' என்ற பெயர் பலகை நடப்பட்டுள்ளது.

இதேவேளை சிங்கள மக்கள் இங்கு அடாத்தாகக் காணி பிடித்ததை அடுத்து அந்தப் பகுதியில் 125 தமிழ்க் குடும்பங்களும் காணி பிடித்துள்ளன. எனினும் அந்தக் குடும்பங்கள் அனைத்தும் எதுவித வசதிகளும் அற்ற நிலையில் கொட்டில் வீடுகளிலேயே வாழ்கின்றன. (த -5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு அரசியல் சூழலை பிரபா புரிந்துகொள்ளவில்லை

உள்நாட்டு அரசியல் நிலைமைகளை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விளங்கிக்கொள்ளவில்லை, என்று சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால அமெரிக்க அதிகாரிகளுக்குத் தெரிவித்தார் என்று விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்த நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு 2004 ஆம் ஆண்டு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோருடன் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் நடத்திய சந்திப்பின் அடிப்படையில் இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டட் இந்தக் குறிப்பினை அனுப்பி வைத்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதி சந்திரிக்காவின் தனிப்பட்ட விருப்பமாக அமைந்துள்ளது. சமாதானம் நோக்கி மக்களை நகர்த்தும் பணி அரசியல் பொறிமுறைமையின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா எதிர்நோக்கி வரும் அரசியல் நெருக்கடி நிலைமைகளை பிரபாகரன் புரிந்துகொள்ளவில்லை என்றும் ஜயந்த தனபால தெரிவித்தாக விக்கிலீக்ஸ் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# பிரேரணையை எதிர்கொள்ள இலங்கையரசு புதிய வியூகம்

கொழும்பு, பெப். 03

அமெரிக்காவால் எதிர்வரும் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் சமர்பிக்கப்படும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை எதிர்கொள்ள இலங்கை அரசு புதிய வியூகம் வகுத்துள்ளது. அமைச்சர்களை ஜெனிவாவுக்கு அனுப்புவதைத் தவிர்த்து, வெளிநாட்டுத் எதிர்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானம் மனித உரிமை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த தீர்மானத்தில் இலங்கையின் கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டும் எனவும் போரின் இறுதிக்கட்டத்தில் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மீறப்பட்டதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் எனவும் கூறப்பட்டது.

கடந்த ஆண்டு சமர்பிக்கப்பட்ட பிரேரணையை அமெரிக்கா நிறைவேற்றுவதைத் தடுப்பதற்கு இலங்கை அரசு தனது முழுப் பலத்தையும் பிரயோகித்திருந்தது. குறிப்பாக அமைச்சர்கள் ஜெனிவாவில் தங்கியிருந்து, அங்கத்துவ நாடுகளுடன் மந்திராலோசனை நடத்திப் பிரேரணை நிறைவேற்றாது இருக்க நடவடிக்கைகள் மேற்கொண்டனர். இதற்காக இலங்கை அரசு பெருமளவு பணத்தை கொட்டியது. இருந்தும் அமெரிக்கப் பிரேரணை வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இலங்கை தொடர்பிலான இன்னுமொரு தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வரவுள்ளது. இந்த முறை சமர்பிக்கப்படவுள்ள பிரேரணையை முறியடிக்க இலங்கை அரசு முழுமூச்சாக களமிறங்கியுள்ளது. இதற்காக ஒவ் வொரு நாடுகளினதும் ஆதரவை இப்போதே தேடத் தொடங்கியுள்ளது.

கடந்த வருடம் அமைச்சர்கள் ஜெனிவாவில் முகாமிட்டு ஆதரவைத் தேடினர். ஆனால் இந்த முறை அமைச்சர்களுக்குப் பதிலாக இராஜதந்திர அலுவலர்களே ஆதரவு தேடும்பணியை மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும், இலங்கைக்கு எதிரான புலிகளின் சார்பு சக்திகளின் பிரசாரத்தை முறியடிப்பதற்கான உத்தியோகபூர்வ மட்டத் தூதுக்குழுவுக்கு ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமை தாங்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் இலங்கைக்கு ஆதரவான நாடுகளான சீனா, ரஷ்யா, கியூபா ஆகியன அங்கம் வகிக்கமாட்டா. அந்த நாடுகளுக்குப் பதிலாக ஐரோப்பிய நாடுகளின் அங்கத்து வமே அதிகரித்திருக்கும் என்பதும் குறிப்பிடத் தக்கது. (த-5)

# SUBRA A/L Day

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள்

ஆரம்பம்- 05.02.2013 செவ்வாய் காலை 7.00 மணி

## கலைப்பிரிவு

| | சித்தன்கேணி | வட்டுக்கோட்டை |
|---|---|---|
| தமிழ் | யசிந்தன் | அமரசிவம் |
| அளவையியல் | E.S.பவன் | E.S.பவன் |
| இந்துநாகரீகம் | சிவகரன் | சிறிஸ் |
| அரசியல் | சுகாஸ் | இளங்கோ |
| வரலாறு | R.R.ஆனந்தன் | ரமேஷ் |
| ஊடகம் | கோபி | தேவி |
| கிறிஸ்தவம் | ரோய் | ரோய் |
| நாடகம் | கணேஸ் | வினோ |
| புவியல் | ஐங்கரன் | நவநீதன் |
| மனைப்பொருளியல் | மஜீபன் | மஜீபன் |
| விவசாயம் | சசிக்குமார் | சசிக்குமார் |
| GIT | சசிகரன் | சசிகரன் |

## வர்த்தகப்பிரிவு

| | | |
|---|---|---|
| வணிகக்கல்வி | நந்தீஸ்வரன் | யசோ |
| பொருளியல் | ஜெயக்குமார் | S.S.சிறி |
| கணக்கீடு | சுபேசன், விஸ்வராஜ் | D.Sam |

## கணித விஞ்ஞானப் பிரிவு

| | | |
|---|---|---|
| பௌதீகவியல் | உயிரோவியம் | Sun |
| இரசாயனவியல் | வர்ணன் | வர்ணன் |
| உயிரியல் | கஜன் | கஜன் |
| இணைந்த கணிதம் | குணசிங்கம், விஜேந்திரன் | விஜேந்திரன் |

எம்முடன் இணைந்தோர் வெற்றி பெறுவர் வரிசையில்

## வர்த்தகப்பிரிவு

| | | |
|---|---|---|
| நி.நிறோஜினி | 3A -10 | யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| சி.ரமணன் | 3A -14 | யா/விக்ரோறியா கல்லூரி |
| ப.பிரதீபா | 3A - 43 | யா/விக்ரோறியா கல்லூரி |
| அ.அருள்றெமின்ரா | 3A - 44 | யா/விக்ரோறியா கல்லூரி |
| இ.மேருஷா | 3A -46 | யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| துளசிகா | 3A -51 | யா/சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம் |
| இந்துஜா | 3A | யா/வேம்படி பெ.உ.பாடசாலை |
| துஷ்யந்தன் | 2AB -74 | யா/வட்டு இந்துக் கல்லூரி |
| சி.யனார்த்தன் | 2AB -80 | யா/விக்ரோறியாக் கல்லூரி |
| பவதுர்ஷன் | 2AB -106 | யா/இந்துக் கல்லூரி |
| கு.காங்கேயன் | 2AC -119 | யா/விக்ரோறியாக் கல்லூரி |
| க.கஜிதா | A2B -157 | யா/விக்ரோறியாக் கல்லூரி |

## கலைப்பிரிவு

| | | |
|---|---|---|
| றொஷாந்தி | A2B | |
| காருண்யா | B2C | |
| திலக்ஷி | ABC | |
| ஜெயரஞ்சினி | B2C | |
| றஜிக்கா | B2C | |
| அனுந்தினி | 2BC | |
| திருமாறன் | 2AC | 12 |

## கணிதப் பிரிவு

| | | |
|---|---|---|
| பார்த்தீபன் | 2AB -54 | யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி |

## விஞ்ஞானப் பிரிவு

| | | |
|---|---|---|
| குலதீபன் | 3B -72 | யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி |

# சட்டவாளர் குழுவுக்கு அரசு அனுமதி மறுப்பு

கொழும்பு, பெப். 03

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் பதவி நீக்கம் தொடர்பில் உண்மையைக் கண்டறிவதற்காக இலங்கை வரவிருந்த சட்டவாளர்கள் குழுவுக்கு இலங்கை அரசு அனுமதி மறுத்துள்ளது.

சர்வதேச சட்டத்தரணிகள் விசாரணைக் குழுவின் சார்பில் இலங்கை வருவதற்காக விஸாவுக்கு விண்ணப்பித்திருந்த, இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் ஜே.எஸ்.வர்மாவுக்கே அரசு அனுமதி வழங்க மறுத்துள்ளது.

பிரதம நீதியரசராகக் கடமையாற்றிய ஷிராணி பண்டாரநாயக்க இலங்கை அரசால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். இவரது பதவி நீக்கம் இலங்கை அரசியல் அமைப்புக்கு முரணானது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தொடர்ந்தும் குற்றஞ் சுமத்தி வருகின்றது. அத்துடன் புதிய பிரதம நீதியரசராக பதவியேற்றுள்ள மொஹான் பீரிஸையும் அவர்கள் ஏற்க மறுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், சர்வதேச சட்டத்தரணிகள் விசாரணைக்கு குழு ஒன்றை நியமித்தனர். இதன் மூலம் பிரதம நீதியரசர் விவகாரம் தொடர்பிலான உண்மைத் தன்மையை அறிவதை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்டது.

இதற்கமைய, இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் ஜே.எஸ்.வர்மா நேற்றுமுன்தினம் இலங்கை வருகைதர இருந்தார்.

இதற்காக, இந்திய முன்னாள் பிரதம நீதியரசர் வர்மா, இலங்கை அதிகாரிகளிடம் விசா அனுமதி கோரியிருந்தார்.

சுற்றுலா விசா கோரி விண்ணப்பித்த அவருக்கு, அதற்கான அனுமதி வழங்க மறுக்கப்பட்டதை அடுத்தே அவரது கொழும்புப் பயணம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 'த ஹிந்து' பத்திரிகை வர்மாவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட கேட்டபோது, விசா மறுக்கப்பட்டுள்ளதால் தனது இலங்கைப் பயணம் ரத்து செய்யப்பட்டதென அவர் பதிலளித்துள்ளார். (த-5)

# முடிவுக்கு வந்தது விஸ்வரூபச் சர்ச்சை

சென்னை, பெப். 03

விஸ்வரூபம் திரைப் படத்தில் இஸ்லாமியர்களைப் புண்படுத்தும் 7 காட்சிகளை நீக்குவதற்கு கமல் ஹாசன் இணக்கம் தெரிவித்துள்ளார். இதனால் விஸ்வரூபம் திரைப்படம் விரைவில் திரையிடப்படவுள்ளது.

தமிழக அரசு, கமல் தரப்பு மற்றும் முஸ்லிம் அமைப்புகளுக்கிடையில் நேற்று இடம்பெற்ற முத்தரப்பு பேச்சுவார்த்தை சுமூகமாக நிறைவுக்கு வந்துள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், இது தொடர்பான அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெறுவதாக தெரிவித்த கமல்ஹாஸன், திரைப் படம் வெளியாகும் திகதியை விரைவில் அறிவிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, மேற்படி 7 காட்சிகள் இஸ்லாமியரை அவமதிப்பதாகவும், இஸ்லாம் மதத்துக்கு எதிரானதாகவும் உள்ளது என்று முஸ்லிம் தலைவர்கள் தெரிவித்ததை கமல் ஏற்றுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து திரைப்படத்தை வெளியிட இஸ்லாமிய அமைப்பினர் ஒருமனதாக சம்மதித்தனர். இந்த முடிவு ஏற்பட காரணமான தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கமல் நன்றி தெரிவித்துள்ளார். (5)

# இலங்கையில் தொடர்கிறது ஊடக அடக்குமுறை; கருணாநிதி

சென்னை, பெப். 03

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். அத்துடன் யாழிலிருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் தாக்கப்பட்டிருக்கின்றார்.

இந்த நிகழ்வுகள் இலங்கையில் பத்திரிகை சுதந்திரம் எந்தளவில் இருக்கிறது என்பதையே எடுத்துக்காட்டுவதாக, தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடர்ந்து பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுகின்றனர். காணாமல் போய் விடுகின்றனர். எனவே இந்தக் கொடூரமான நிகழ்வுகளை உலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இலங்கைப் பத்திரிகையாளர்கள் ஜனவரி 29 ஆம் திகதி அன்று கறுப்பு ஜனவரியைக் கடைப்பிடித்திருக்கிறார்கள்.

பிரகீத் எக்னெலி கொட என்ற கேலிச் சித்திர கலைஞர் 2010 ஜனவரி 24 அன்று காணாமல் போய்விட்டார். சண்டே லீடர் என்ற பத்திரிகையின் ஆசிரியர், லசந்த விக்கிரமதுங்க 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொலை செய்யப்பட்டார். சிரச என்னும் ஊடக நிறுவனம் 2009 ஜனவரியில் தாக்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொலைக்காட்சித் தயாரிப்பாளர் ஒருவர் தாக்கப்பட்டார். 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 'உதயன்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் என்பவர் தாக்கப்பட்டார்.

ஒரு பத்திரிகையாளர் காணாமல் போய் விட்டார். இலங்கையில் ராஜபக்ஷவின் ஆட்சியில் பத்திரிகை சுதந்திரமும், பத்திரிகையாளர்களும் என்ன கதிக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நிகழ்வுகள் நமக்குக் காட்டுகின்றன - என்றார். (5)


# மரண அறிவித்தல்

## கிருஷ்ணன் (சோமு) செல்லம்மா



ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த கிருஷ்ணன் செல்லம்மா நேற்று (02.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற புஸ்பமலர் மற்றும் தில்லையம்பலம்(கொழும்பு), சின்னத்தம்பி காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் கனகம்மா, நாகம்மா, யோகேஸ்வரி, நாகேஸ்வரி, தம்பிஐயா(கனடா) காலஞ்சென்ற றஜீவன் ஆகியோரின் அன்புத்தாயும் சிறீதரன், வர்ணகுலசிங்கம், பத்மராஜா, ஞானம், யமுனாராணி, துரைராணி, சாந்தி ஆகியோரின் மாமியும் சுஜித், சுஜீவா, பிரவணா, லகீஷன், கௌசிகன், குற்றாலீசன், ஜெயகோபன், பிரதாபன், சஜந்தன், கஜேந்தினி, டினோஜினி, முகுந்தன், மயூரன், சிந்துஜா, துஸ்யந்தன், சஜந்தன், ஜெயந்தன், பிருந்தா, நிறோஜினி, யசோதரன், ரேணுகா, குஷாலினி, கிருஜா, கஜானா ஆகியோரின் பேர்த்தியும் மதுஷா, தனுஜிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2013) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (29215)

தகவல்
குடும்பத்தினர்.
(கி.சின்னத்தம்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக யுவதிகளை படையில் இணைக்கவும்

### இ.தொ.கா. கோரிக்கை

வடபகுதியை சேர்ந்த யுவதிகள் போல், மலையக யுவதிகளும் இராணுவத்தில் இணைய சந்தர்ப்பத்தை வழங்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கில் தமிழ் யுவதிகள் இராணுவத்தில் இணைத்து கொள்ளப்பட்டதன் மூலம் வடக்கு, கிழக்கில் அமைதியை பாதுகாக்க சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது நல்லிணக்கத்தை மேலும் வலுப்படுத்த உதவியாக அமையும் எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆலோசகரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரி.வி. சென்னன் தெரிவித்துள்ளார்.


மலையகத்தை சேர்ந்த யுவதிகளுக்கும் இந்த சந்தர்ப்பத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மலையக இளைஞர், யுவதிகளுக்கு இராணுவத்தில் இணைய சந்தர்ப்பம் வழங்குமாறு கோரி ஜனாதிபதி கடிதம் அனுப்ப உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அவசரமான சந்தர்ப்பங்களில் மலையகத்தின் பாதுகாப்பு கடமைகளில் இவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் சட்டத்தையும், அமைதியையும் இலகுவதாக உறுதிப்படுத்த முடியும்.

மேற்படி கோரிக்கை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானினால் அடுத்த சில தினங்களில் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்படும் எனவும் ரி.வி. சென்னன் குறிப்பிட்டுள்ளார்.


உதயன் விளம்பரத் தொடர்புக்கு –
advt@uthayan.com
0215671111

**காணி விற்பனைக்கு**
இணுவிலிற்கும் மருதனார் மடத்திற்கும் இடையில் ஆஞ்சனேயர் கோவிலுக்கு அண்மையாக கிளக்குப் பக்கமாக KKS வீதியில் இருந்து 2வது காணி 4பரப்பு உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு : 0778 296 998

**கண்ணீர் அஞ்சலி**
**வைத்திலிங்கம் சீவரட்ணம்**



எமது கழக அங்கத்தவர்களான பாலஸ் கந்தன் , கவிதாஸ், மகளிர்குழு உறுப்பினர் வத்சலா கவிதாஸ் ஆகியோரின் அன்புப்பேரனுமான வைத்திலிங்கம் சீவரட்ணம் அவர்கள் கால மானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

சம்பியன்லேன், கொக்குவில். வளர்மதி முன்னேற்றக்கழகம். (c/6195)(14)

advt@uthayan.com
0215671111

**மணமக்கள் தேவை**
(UK Citizan) யாழ். இந்து கௌரவ குடும்பம் 15.09.1980 விசாகம் 4ஆம் பாதம் கி.பா 30 Eletical Eng மணமகளையும், 12.03.1982 சித்திரை - 01.பாதம் பாவ - 20 தகுந்த மணமகனையும் எதிர்பார்கின்றார்கள்
T.P No - Uk Miss call போடவும்
00447833819736,FAX 00442085488847 (29218)(14)

**வீடு விற்பனைக்கு**
கோண்டாவில் பலாலி வீதிக்கு அண்மையில் வைரவர் கோயில் வீதியில் அமைந்துள்ள 1¾ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0779563899 (29119)(14.6)

**காணி விற்பனைக்கு**
திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் கோயில் வீதியில் 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071 4977019

**வீட்டுப்பணிப்பெண் தேவை**
கௌரவ, படித்த, சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப்பணிப்பெண் தேவை. வீட்டில் தங்கியிருந்து வேலை செய்தல் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0773276502, 0212222594

**1 1/2 பரப்புக் காணித் துண்டுகள் இரண்டும் வீடும் விற்பனைக்கு**
சுதுமலை அம்மன் கோயிலுக்கு முன்பாக தாவடி பக்கமாக உள்ள வீடும் வெற்றுக் காணியும் விற்பனைக்கு
தொடர்பு:-0778532449

**கன்ரர் விற்பனைக்கு**
NP.LE XXXX என்னும் இலக்கமுடைய ISUSU 250நீல நிற கன்ரர் லீசிங் வசதியுடன் விற்பனைக்கு உண்டு. (Full Option).
(29211)(3.14) தொடர்பு-0776002641





**நீங்களும் ஒரு பொறியியலாளராகலாம்!**

உங்கள் பொறியியல் கனவுகளை நனவாக்கும்

# பிரித்தானிய பொறியியல் கற்கைநெறிகள்

நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள்?




**Benefits**

- Uk யை தலைமையகமாக கொண்டு 100 க்கு மேற்பட்ட நாடுகளின் பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்.
- தவணை முறையில் பாடநெறிக்கட்டணத்தை செலுத்தும் வசதி.
- விரிவுரைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்.
- பொறியியல் படிப்புக்களின் இறுதி வருடத்தை Uk பல்கலைக்கழகங்களில் தொடரும் வாய்ப்பு.
- குறித்த துறையில் Diploma பாடநெறியை முடிப்பவர்களுக்கு பிரபல பொறியியல் கம்பனிகளில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.
- பரீட்சைகள் யாவும் எமது நிறுவனத்திலேயே நடைபெறும் (யாழ் நகரில்)
- கடந்த ஜீன், டிசம்பர் Civil Diploma பரீட்சையில் 97% சித்திகள்

**Civil Engineering / Quantity surveying**
உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாட்டில் கூட உயர் சம்பளத்துடனான வேலை வாய்ப்புக்களை அள்ளி வழங்கும் கட்டிட நிர்மாணத்துறையில் வேலை வாய்ப்புக்களை எதிர்நோக்குவோரும், இத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ள இருக்கும் மாணவர்களுக்கானது.

**Electrical & Electronics Engineering**
குடிசார் எந்திரவியலுடன் நெருங்கிய தொடர்புடைய மின்னியல், மின்னணுவியல் துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளவும், தொழில்வாய்ப்பை எதிர்நோக்கி இருக்கும் மாணவர்களுக்கானது.

**Motor Vehicle Engineering**
மோட்டார் வாகன பொறியியல் துறையில் வேலை வாய்ப்புக்களை எதிர்நோக்கி இருப்போரும், இத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கானது.

**Mechanical Engineering**
இலங்கையில் துரித வளர்ச்சியடைந்து வரும் இயந்திரவியல் துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளவும், வேலைவாய்ப்பை எதிர்நோக்கி இருப்போரும் செய்ய வேண்டிய ஒரு முக்கிய கற்கை நெறியாக இது காணப்படுகின்றது.

0214 666 699
0771 067 394

City & Guilds APPROVED CENTRE

**SKILLS COLLEGE OF TECHNOLOGY**

Nugegoda Campus — No. 102, Stanley Thilakarathna Mw, Nugegoda — 011 4 696 696 — scot@skillsinternational.lk
Kurunegala Campus — No. 252, P... — 037 3 616... — kurunega...
Kandy Campus
Jaffna Campus

SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## தமிழரின் மண்வளம், கடல்வளங்களை ஜனநாயகப் போர்வைக்குள் முடக்கும் போக்கா?

"எங்களது சொந்தக் காணியில் மீளக்குடியமர்த்துமாறு கேட்டால் மிதிவெடி, கண்ணிவெடி என்று காரணம் காட்டுகிறார்கள். அப்படியானால், அதேகாணியில் அவர்கள் இப்போது தோட்டம் செய்யும் போது மிதிவெடிகள் எங்கே போய்விட்டன...?

ஆளானப்பட்ட முள்ளிவாய்க்காலிலேயே மூன்றாண்டுகளில் மண்டையோடுகள் இருக்கவே மக்களைக் குடியமர்த்தி விட்டனர். இருபத்தி மூன்று வருடங்களாக இடமின்றித் திரியும் எங்களை ஏன் மீளக்குடியமர்த்துகிறார்கள் இல்லை...?

1990 ஆம் ஆண்டில் வசாவிளானில் இருந்து இடம் பெயர்ந்து 23 வருடங்களாக ஏதிலிகளாக, ஏதுமற்றவர்களாக திரிகிறேன்; மாறிமாறி இருபது வீடுகளில் வசித்து விட்டேன்.

எங்களது பிரதேசத்தில் மண் வளமும், கடல்வளமும் நிரம்பவும் உண்டு என்பதனாலேயே இன்னமும் விடுவிக்கவில்லை; தாங்களே ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள்."

இவ்வாறு கண்ணீர் மல்கியவாறு வசாவிளானில் வாழ்ந்த மூத்த பெண்மணி ஒருவர், வலி.வடக்குப் பிரதேச சபை மண்டபத்தில் கூட்டம் நடைபெற்ற வேளை தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

அந்தப் பெண்மணிக்குள்ள மனநோவு வலி.வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த, அவர்களின் சொந்த மண்ணில் இருந்து வெளியேற்றப்பட்டு இருபத்தி மூன்று ஆண்டுகள் கடந்தும் இன்னமும் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்படாத பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் மனநோவை அனைத்துலகமும் வெளிச்சம் போட்டுக் காட்டும் ஒளிப்பிளம்பு எனலாம்.

மொத்தத்தில் 25 ஆயிரத்து 328 பொதுமக்கள் (இவர்கள் ஏழாயிரத்து அறுபத்தொரு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்) தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ்வதற்கு அரசிடம் விண்ணப்பித்தனர். ஆனால், அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

பாதுகாப்பு வலயம் என்ற மூடுபாகைக்குள் முடக்கப்பட்டுள்ள வலி.வடக்கின் நிலவளமும், கடல்வளமும் அந்தப் பிரதேசத்தின் பூர்வீக குடிகளான தமிழ் மக்களிடம் இருந்து நாட்டாண்மை காட்டி அரசாங்கத்தினால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள், அரசசார்பற்ற அமைப்புகள் மற்றும் வெளிநாடுகளின் பல நுாற்றுக்கணக்கான அழுத்தங்களால் பெயர்ப் பலகை கட்டப்படும் பாணியில் வலி.வடக்கின் எட்டுக் கிராம சேவகர்கள் பிரிவுகளுக்குள் அடங்கும் பகுதியிலேயே மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு என்ற சொற்பதத்துக்கு தாம் நினைத்தவாறு, வெவ்வேறு அக்கிரமங்களைக் கட்டவிழ்க்கவும், தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வுரிமைகளைப் பறிக்கவும் உள்ளார்ந்த சதித்திட்டங்களை வகுத்து, அவற்றுக்கு மேனிமினுக்கி, நீதியைப் புதைத்து, அனைத்துலகையும் ஏய்க்காட்டும் போக்கே இப்போது வடக்கில் கட்டவிழ்த்து விடப்படுகிறது. அதற்கான ஊன்றித் தொட்டுக்காட்டத் தக்கதொரு உதாரணம் (Typical example) வலி.வடக்கு மக்கள் மீதான ஜனநாயக விரோத அநியாயங்கள்.

வலி.வடக்கு மக்களின் வளம்நிறைந்த செம்மண் பிரதேசம், கடல்வளம் நிறைந்திருக்கும் கடற் பிரதேசத்தைப் பாதுகாப்பு என்ற போர்வைக்குள் மூடி அவற்றை அரசும், தெற்கும் முற்றுமுழுதாக உறிஞ்சிக் கொள்ளும், சுவறிக் கொள்ளும் நிலைமை இப்போது மேலெழுந்துள்ளது. காலப்போக்கில் அது முற்றுமுழுதாக தெற்குக்கே 'கடத்தப்படும்'. அந்த அநியாயத் திட்டத்தின் ஆரம்பமே இப்போது வெளிப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்ச்சியின் ஓர் அங்கமே வலி.வடக்கில் பெரும் எடுப்பிலான இராணுவத்துக்கான விவசாயத் திட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள், உல்லாச விடுதிகள் என்பனவாகும்.

பலாலி இராணுவ, விமானத் தளங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் இறுக்கமாகப் பேணுவதற்கெனவும் தொண்டமானாறு தொட்டு காங்கேசன்துறை வரையான நீண்ட நிலப்பரப்பில் தாம் அமைத்த பாதுகாப்பு வேலிக்கு உட்புறம் அமைந்திருந்த மக்களுக்குச் சொந்தமான வீடுகளை உடைத்து அழிக்கும் அநியாயம்.

போர்க் காலத்தில் தமிழர் பிரதேசங்களில் வீடுகள் குண்டு வீச்சு நடத்தித் தகர்க்கப்பட்டன. அத்தகைய சேதங்களை நிறுத்த வேண்டிய அமைதிச் சூழ்நிலையிலும், அவர்களின் வீடுகள் தகர்க்கப்படுகின்றன.

மொத்தத்தில், வலி.வடக்கின் மிக நீண்ட பிரதேசத்தில் மீளக்குடியமர்வு இனிமேல் சாத்தியமாகாது என்பதனை அரசு தனது நடவடிக்கைகள் ஊடாகப் பிரதிபலித்து வருகிறது. இது ஜனநாயகம் என்ற போர்வைக்குள் தமிழ் மக்கள் மீதான சர்வாதிகாரத்துக்கான மூலைக்கல் என்பதில் எள் அளவும் சந்தேகமில்லை.

# ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வு வடக்கு, கிழக்குக்கு அவசியம்

### தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு நியாயமான, ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் அதிகார பரவலாக்கம் ஒன்றைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஏ.ஜேசுதாசன் இவ்வாறு கூறினார்.

மீளக்குடியமர்ந்து நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் மக்களின் நிலை பற்றிய பத்திரிகையாளர் சந்திப்பு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் நடைபெற்றது.

அபிவிருத்தி, மீள்குடியமர்வுக்கு அப்பால் அரசியல் தீர்வுக்கான ஒத்துழைப்பு இயக்கத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

> இந்திய–இலங்கை ஒப்பந்தத்திலான அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தியவர்கள் அது குறித்து அடக்கி வாசிப்பதாகத் தோன்றுகிறது.

இன்றைய நிலையில் அரசியல் பரவலாக்கத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

ஆயினும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திலான அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தியவர்கள் அது குறித்து அடக்கி வாசிப்பதாகத் தோன்றுகிறது.

அதேவேளை, 13 இற்கு அப்பால் சென்று அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்படும் என்று கூறிவந்த அரசு கூட அது குறித்து மௌனமாக இருக்கிறது.

இன்று வடக்கு,கிழக்கு வாழ் தமிழ் மக்கள் வீதி அபிவிருத்தி, ஏனைய கட்டுமானப் பணிகள் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளை பெரிதாக வரவேற்பதாக இல்லை.

இந்த அபிவிருத்திகளும் தேவைதான். ஆயினும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் ஏனைய இனத்தவர்கள் அனுபவிக்கும் உரிமைகளுடனும் வாழத்தக்கவாறு அரசியல் தீர்வு ஒன்றை எதிர்பார்த்து காத்து நிற்கின்றனர்.

இன்றைய நிலையில் அதுவே அவர்களது அபிலாசைகள் ஆகும்.- என்று கூறப்பட்டது. , (ம-13)

# இலங்கையில் 21 வீதமான சிறார்கள் போஷாக்குக் குறைபாட்டுடன் அவதி

### மீன்பிடி, நீரியல்வள அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.3

இலங்கையிலுள்ள சிறார்களில் 21 சத வீதமானவர்கள் போஷாக்குக் குறைபாட்டால் அவதியுறுகின்றனர் என்பது ஆய்வொன்றில் வெளிப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு முடிவுறும் போது, போஷாக்குக் குறைபாட்டை 12 வீதம் வரையில் குறைத்துக் கொள்வதே எமது நோக்கம்.

ஒரு வேளை உணவின் போது அதிகளவில் மீனை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் அந்த நோக்கை நிறைவு செய்து கொள்ள முடியும்.

மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலத்தில் நிலவிய போர் சூழல் காரணமாக வடக்கில் மீன்பிடித் தொழில் நூற்றுக்கு ஏழு வீதம் வரையில் வீழ்ச்சி கண்டிருந்தது.

அந்த விகிதாசாரம் தற்போது, நாற்பத்தி மூன்று வீதம் வரையில் வளர்ச்சி கண்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் நூற்றுக்கு 15 வீதம் வரையில் வீழ்ச்சியடைந்திருந்த மீன்பிடித் தொழில் இன்று நூற்றுக்கு இருபத்து மூன்று வீதம் வரையில் உயர்வடைந்துள்ளது.

மீனவக் குடும்பங்களின்வாழ்க்கை நிலையை மேம்படுத்துவது தொடர்பாக தற்போது அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

மீனவ மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஓய்வூதிய முறைமையின் கீழ் ஒவ்வொரு மீனவருக்கும் 60 வயதாகும் போது 10 ஆயிரம் ரூபா வரையில் மாதாந்த ஓய்வூதியமாக கிட்டுகிறது.

அதேபோன்று, மாவட்டங்கள் தோறும் மீனவக் கிராமங்களை உருவாக்குவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தென்னாசியாவிலேயே விசாலமான மீன்பிடித் துறைமுகம் திக் ஓவிற்றவில் நிறுவப்பட்டுள்ளது.

ஜப்பான் நாட்டு பிரபல வர்த்தகர்களுடன் ஒருங்கிணைந்து இந்தத் துறைமுகம் ஊடாக பெரிய அளவிலான வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் வழிசமைக்கப்பட்டுள்ளது. (ம-22)

# இழுத்தடிப்பு இன்றி செய்யப்படும் எந்தவொரு காரியமும் வெற்றிபெறும்

### பொப்பிசைப் பாடகர் மனோகரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,பெப்.3

எந்தவொரு காரியத்தையும் இழுத்தடிப்பு இல்லாமல் தொடர்ந்து முயற்சி செய்தால் வெற்றி கிடைக்கும்.

என்னுடைய இசைத் துறைப் பயணம் எனது முயற்சியாலேயே கிடைக்கப்பெற்றது.

பொப்பிசைப் பாடகர்ஏ.ஈ.மனோகரன் இவ்வாறு தெரிவித்தார்.

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 190 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிதிக்காக பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்படவுள்ள பொப்பிசை கானங்கள் இசை நிகழ்வில் பாடகராக பங்குபற்ற இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள ஏ.ஈ.மனோகரன் ஊடகவியலாளர்களுடன் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் அருட்தந்தை என்.ஜே.ஞானபொன்ராஜா தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர்ச்சூழல் காலத்தில் இருந்த யாழ்ப்பாணம் இன்று கட்டடங்களால் மீள உருப்பெற்று இருப்பதைப் பார்க்கும் போது சந்தோஷமாகவுள்ளது.

நான் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் படிக்கும் காலத்தில் எனது திறமைகளுக்கு பாடசாலை தடையாக இருந்ததில்லை. களம் அமைத்துக் கொடுத்தது. முதன் முதலாக ''பாசநிலா'' எனும் திரைப்படத்தில் நடித்து சாதனை படைத்தேன். இந்தியாவில் சிலோன் கலைஞர் எனும் மதிப்பை எனக்குக் கொடுத்தார்கள்.

நடிப்பவர்கள் எல்லோரும் கலைஞர்கள் கிடையாது. மிகுந்த போட்டியின் மத்தியில் நான் ஒரு கலைஞராக அறிமுகப்படுத்தப்பட்டேன். எனது வருவாய்க்காகவே இசைத்துறையை தேர்ந்தெடுத்தேன். நான் 50 ஆயிரம் பாடல்களைப் பாடவில்லை. ஆனால் ''சுராங்கனி சுராங்கனி'' என்ற பாடலூடாக இரசிகர்கள் மத்தியில் இடம்பிடித்தேன்.

எந்த இசைக் கச்சேரிகளுக்கு சென்றாலும் 'சுராங்கனி' பாடல் பாடுங்கள் என்று கேட்கும் அளவுக்கு புகழ் கிடைத்துள்ளது.

இதனைவிட முன்னணி இந்திய நடிகர்களுடனும் நடித்துள்ளேன். 28 நாடுகளுக்கு மேல் எனது இசைப்பயணம் தொடர்ந்துள்ளது.

எதிர்கால சந்ததியினருக்கு கலை ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இளம் கலைஞர்களை உருவாக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பாகவுள்ளது. நான் இந்தியாவில் வாழ்ந்தாலும் யாழ்ப்பாணத்துக்கு வந்து இசை ஆர்வலர்களை உருவாக்க முயற்சிப்பேன்.- என்றார். (ம-14,23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றாக்குறையுடன் இயங்கும் கரியாலை நாகபடுவான் பாடசாலைகள்

கிளிநொச்சி,பெப்.3

கிளிநொச்சி கல்வி வலயத்திலே உள்ள கரியாலை நாகபடுவானில் அமைந்துள்ள பாடசாலைகள் ஆசிரியர் பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகின்றன என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள இலக்கம்-02 பாடசாலை தரம்-6 இலிருந்து 9 வரை கற்பிப்பதற்கு ஒரு விஞ்ஞான ஆசிரியர் மட்டுமே உள்ளார். ஏனைய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை என்று கூறப்படுகிறது.

இதேபோன்று கரியாலை நாகபடுவான் இல-03 ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் 50 வரையான மாணவர்களுக்கு அதிபருடன் வேறொரு ஆசிரியர் மட்டுமே பணியில் உள்ளார்.

**பூநகரியின் வினாசியோடைப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் 9 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் 80 மாணவர்களுக்கு 3 ஆசிரியர்கள் மட்டுமே கற்பிக்கின்றனர்.**

பூநகரியின் வினாசியோடைப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் 9 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் 80 மாணவர்களுக்கு 3 ஆசிரியர்கள் மட்டுமே கற்பிக்கின்றனர்.

இவ்வாறு இங்குள்ள பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்து இருந்து வருகின்றது என்று கவலை தெரி விக்கப்படுகிறது. ஆசிரிய இடமாற்றம் இடம்பெறவுள்ள நிலையில் கிராமப்புற பாடசாலைகளின் ஆசிரிய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வலயக் கல்விப் பணிமனையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-18)

திருமண நாள் மதிய உணவில் புழுக்கள்:

# வவுனியா உணவகத்தின் நிர்வாகிக்கு பிடியாணை

வவுனியா, பெப்.3

அண்மையில் வவுனியாவில் உணவகம் ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்ட மதிய உணவில் புழுக்கள் இருந்தமை சுகாதாரப் பரிசோதகரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றத்தால் குறிப்பிட்ட உணவகத்தை நிர்வகிப்பவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, ஹொரவப் பொத்தானை வீதி இறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற திருமண வைபவத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட மதிய உணவில் புழுக்கள் இருந்தமையால் பெரும் களேபரம் ஏற்பட்டது.

இந்த விடயம் வவுனியா சுகாதாரப் பிரிவினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து குறிப்பிட்ட உணவைப் பரிசோதனைக்கு உட்படுத்திய சுகாதார பரிசோதகர்கள் உணவுக்குள் புழு இருப்பதை உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்தினர்.

குறிப்பிட்ட விடயத்தை நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தியதை அடுத்து உணவகத்தை நிர்வகிப்பவரை மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது. எனினும் அவர் மன்றுக்கு சமுகம் கொடுக்காமையால் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ம-402)

## வவுனியாவில் நடைபெற்ற செயலமர்வு

நெளுக்குளம், பெப்.3

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் செயலமர்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் கடந்த 31 ஆம் திகதி பிரதேச செயலர் க.பரந்தாமன் தலைமையில் முக்கியமான செயலமர்வு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் வவுனியா வடக்கில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து இந்தப் பிரதேசத்துக்கான அபிவிருத்திகளை முன்னெடுக்கும் வகையில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஆகிய ரஜீவ விஜயசிங்க கலந்து கொண்டு கருத்துக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(க-435)

## கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் பாடசாலை வளாகத்திலுள்ள ஆலயம்

வவுனியா, பெப்.3

வவுனியா தமிழ் மகாவித்தியாலய ஆரம்பப் பாடசாலை வளாகத்தினுள் காணப்படும் ஆலயம் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது. வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் முன்பு வழிபட்டு வந்த இந்த ஆலயமே தற்போது கவனிப்பாரற்ற நிலையில் காட்சியளிக்கின்றது.

இதனால் வவுனியா இடைநிலை மற்றும் உயர்தர மாணவர்கள் வழிபடும் ஆலயத்துக்கு ஆரம்பப்பிரிவு மாணவர்கள் உட்பட பலரும் அழைத்துச் செல்லப்பட்டு வழிபாட்டில் ஈடுபடுகின்றனர்.

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் தனித்தனியாகவே ஆரம்ப மற்றும் இடைநிலை உயர்தரப் பிரிவுகளுக்கான கட்டடங்கள் இருக்கின்றன.

பாடசாலை நலன் விரும்பிகள் முன்வந்து இவ்வாலயத்தை புனரமைப்பதன் மூலம் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் வழிபாட்டுக்கென நீண்ட நேரம் செலவிடுவதைத் தவிர்க்க முடியும் என ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-402)

## உரிமையாளர் இல்லாத காணிகள் அரசியல் கட்சி உறுப்பினர்களுக்கு

கிளிநொச்சி, பெப்.3

கிளிநொச்சி நகரில் உள்ள உரிமையாளர்கள் இல்லாத தனியார் காணிகள் சிலவற்றை அரசியல் கட்சி ஒன்றின் அங்கத்தவர்களுக்கு வழங்கும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

புலம்பெயர்ந்த நிலையில் வாழும் காணி உரிமையாளர்களின் உறவினர்களால் பராமரிக்கப்படும் காணிகளுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனவும் மேலும் தெரிய வருகின்றது.

இதேவேளை, இந்தக் காணிகள் பெரும்பான்மை இனத்தவரின் தொழில் நடவடிக்கைகளுக்கு வழங்குவதற் கான முயற்சிகள் இடம்பெறுவதாகத் தெரிய வருகின்றது. (க-6)

## வவுனியாப் பாடசாலைகளுக்கு மரக்கன்றுகளும் உபகரணங்களும்

வவுனியா, பெப்.3

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளையால் வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள் மற்றும் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளையினர் மரம் நடுவதன் மூலமாக சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் செயற்றிட்டத்துக்கு அமைவாக தேக்கு, பலா, தேசி, அகத்தி, நெல்லி உட்பட பல்வேறு மரக்கன்றுகளை வழங்கியுள்ளனர்.

இதேவேளை, மண்வெட்டி, குப்பைவாரி, மண்கிண்டி உட்படப் பல்வேறு விவசாய உபகரணங்களையும் வழங்கியுள்ளனர்.

மேலும் வீட்டுத் தோட்டத்தை பாடசாலையில் நடைமுறைப்படுத்தல், நிழல்தரும் மரங்கள் மற்றும் பயன்தரு கனிவகை மரங்களை பாடசாலை வளாகத்துக்குள் வளர்த்தல் என்பனவற்றின் மூலமாக மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக மரக்கன்றுகளும் விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-402)

# வவுனியாவில் மரக்கறிகள் அதிகரித்த விலையில்

வவுனியா,பெப்.3

வவுனியாவில் மரக்கறியின் விலைகள் தற்போது என்றும் இல்லாதவாறு அதிகரித்துக் காணப்படுவதால் நுகர்வோர் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த வருடம் இந்துக்களின் விரத காலத்தில் அதிகரித்துக் காணப்பட்ட மரக்கறி வகைகளின் விலை இந்த ஆண்டு ஆரம்ப வாரத்தில் குறைவடைந்த போதிலும், தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. இங்கு தற்போது கீரை 30 ரூபாவில் இருந்து 40 ரூபா வரையிலும், கத்தரிக்காய் 120 ரூபாவில் இருந்து 160 ரூபாவரையிலும், வெண்டிக்காய் 80 ரூபா முதல் 100 ரூபாவரையிலும், தக்காளி 100 ரூபாவிலிருந்து 120 ரூபாவரையிலும், பூசணிக்காய் 50 ரூபாவில் இருந்து 60 ரூபா வரையிலும் விற்பனையாகின்றன.

கடந்த டிசெம்பர் மாதம் பெய்த மழையால் மரக்கறிப் பயிர்ச் செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டது.

**தம்புள்ள பகுதியில் இருந்து கொண்டு வரப்படும் மரக்கறி வகைக்கான விலைகளை மொத்த வியா பாரிகள் சடுதியாக அதி கரித்துக் கொண்டனர்.**

இதனால் ஜனவரி மாத இறுதிப்பகுதியில் மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதனை அடுத்து தம்புள்ள பகுதியில் இருந்து வரும் மரக்கறி வகைகளையே வியாபாரிகள் நம்பியிருந்தனர். தம்புள்ள பகுதியில் இருந்து கொண்டு வரப்படும் மரக்கறி வகைக்கான விலைகளை மொத்த வியாபாரிகள் சடுதியாக அதிகரித்துக் கொண்டமையால் இவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு நுகர்வோரைப் பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

கிளிநொச்சி, பெப்.3

கிளிநொச்சி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கடந்த 31 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயத் துறைசார் திணைக்கள அதிகாரிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தில் தற்போது அறுவடை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் தொடர்பாகவும், நெல் சந்தைப்படுத்துவதிலும் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-6)

# வவுனியா பிரதேச சபையால் மயானங்கள் புனரமைப்பு

வவுனியா, பெப்.3

வவுனியா தெற்கு பிரதேச சபையால் மயானங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா நெளுக்குளம் இந்து மயானம் துப்புரவு செய்யப்பட்டு அந்த மயானத்துக்கு மேடை அமைத்தல், பாதை அமைத்தல் வேலியடைத்தல், போன்ற வேலைகள் இப்போது இடம்பெற்று வருகின்றன.

கற்பகபுரம், சமயபுரம் மயானங்கள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, மயானங்களில் டெங்கு நுளம்பு தாக்கங்கள் ஏற்படாத வகையில் அங்கு காணப்படும் குழிகள் நிரவப்பட்டும் கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டும் வருகின்றன.

வவுனியா தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம் தலைமையில் திட்டமிடப்பட்டு நெளுக்குளம் இந்து மயானம் நவீன முறையில் அமைக்கப்பட்டு வருகிறது.

**மயானத்துக்கு கொண்டு வரப்படும் சடலங்களை உரிய வகையில் எரியூட்டவும் நான்கு மேடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.**

மயானத்துக்கு கொண்டு வரப்படும் சடலங்களை உரிய வகையில் எரியூட்டவும் நான்கு மேடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த மயானத்தை நேரியகுளம், புதையல்பிட்டி, கூமாங்குளம், நெளுக்குளம், முன்னிபுலவு, பாலாமைக்கல், மரக்காரம்பனை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-402)

# போர்க் காலத்தில் அர்ப்பணிப்புடன் மாணவர்களை வளர்த்தெடுத்தவர்

## அக்கராயன் ம.வி. பிரதி அதிபருக்குப் பாராட்டு

அக்கராயன், பெப்.3

போர்ச் சூழலின்போது மிகுந்த அர்ப்பணிப்புடன் மாணவர்களை வளர்த்தெடுத்தவர் திருமதி வசந்தகுமாரி இராஜமூர்த்தி.

இவ்வாறு வவுனியா கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் முன்னாள் அக்கராயன் ம.வி ஆசிரியருமான மி.சூசைதாசன் தெரிவித்தார்.

அக்கராயன் மகாவித்தியாலய பிரதி அதிபர் திருமதி வசந்தகுமாரி இராஜமூர்த்தியின் 25 ஆண்டு கால ஆசிரியப் பணிக்கு மதிப்பளித்து நடத்தப்பட்ட விழாவில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போர்க் காலத்தில் ஆசிரியராக, பிரதி அதிபராகப் பணிபுரிந்து பல மாணவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்த இந்த ஆசிரியைக்கு வெள்ளிவிழா எடுப்பது மகிழ்ச்சிக்குரியது. போர் நடைபெற்ற போது கிளாலி, ஊரியான் பாதைகள் ஊடாக சைக்கிளில் பயணித்து மாணவர்களின் கல்வியைப் பேணிவளர்த்த தாயுள்ளம் கொண்ட பல திறமைகள் வாய்ந்தவர் இவர் எனவும் அவர் புகழாரம் சூட்டினார்.

**போர்க் காலத்தில் மாணவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்த இந்த ஆசிரியைக்கு வெள்ளிவிழா எடுப்பது மகிழ்ச்சிக்குரியது.**

பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தலைமையுரையை பழைய மாணவனும் ஆசிரியருமான க.கனகலிங்கம் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற கிராம அலுவலர் க.மகேந்திரன், பாரதி மகா வித்தியாலய அதிபர் பெ.கணேசன், கனகபுரம் மகாவித்தியாலய அதிபர் ஐ.குகானந்தராசா, அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் க.மதுரநாயகம் உட்பட அயல் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

(க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

[illegible]
[illegible] இல. 162, [illegible]
[illegible] 29 [illegible]
[illegible]
தொடர்பு:0779505780/0771367615

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி A9 வீதியில் பிரதான நகர்ப் பகுதி யில் கடை வாடகைக்கு உண்டு.தரகர்தேவையில்லை
தொடர்புகளுக்கு:0774862367. (அ/5873)(6.25.4)

## கைத்தொழிற்சாலை இயந்திரம் விற்பனை

மின்சாரம் மூலம் ஒரு நாளைக்கு பல்லாயிரம் அப்பளங்களை உற்பத்தி செய்யும் அப்பள உற்பத்தி இயந்திரங்கள்(05) உடன் விற்பனைக்கு. சகல பொறிசாதனங் களும், உபகரணங்களும் உடன் சேர்த்து வழங்கப்படும்.
தொடர்பு:0775226462.. (அ/6186) (6.25.4)

## தேவை

A/L விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்த ஆண்கள் இருவர் கட்டட இரசாயனப் பொருள்கள் விற்பனை செய்யும் கம்பனிக்கு தேவை.
North+East Engineering
Jaffna Road, Manipay
T.P:0777 568686, 0217200290. (அ/6184) (6.25.4)

## சுத்திகரிப்பு சேவை

ஜேர்மன் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விசேட தொழில்நுட்பத்திலான இயந்திரம் மூலம் 2மணித் தியாலத்தில் உங்கள் வாகனத்தின் இருக்கைகளை அகற்றாமல் சுத்திகரிப்புச் செய்து தரப்படும்.
S.N.T Service Station
Jaffna Road ,Manipay
021 7200 290, 0777568685 (அ/6183) (6.25.4)

## மணமகள் தேவை

யாழ்.இந்து, 33 வயது, ரேவதி நட்சத்திரம்,4 இல் செவ்வாய், M.Sc ஆஸ்திரேலியா பிரஜை மணமகனுக்கு படித்த, பொருத்தமான மணமகள் தேவை.
தொடர்பு- 0778725295 (c/5886)(6.25.11)

## விக்னா

கல்வி நிறுவனம்

**A/L Day Class கலைப்பிரிவு**

ஆரம்பம்-05.02.2013 8மணி

| | |
|---|---|
| Eco. சுதாகர் | Tam. குழந்தை |
| Log. வாகீசன் | H/c. N.T.தரன் |
| Geo. தினேஸ் | Hist. தாஸ் |
| P/Sci. ஸ்ரீரங்கநாத் | Chri. சுயந்தன் |
| Dram. கஜீதரன் | H/Sci. மஜீபன் |

## இரண்டு மாடிக் கட்டடத் தொகுதி நீண்டகால குத்தகைக்கு

யாழ்.நகரில் இருந்து 1 மைல் தூரத்திலும் (A9) கண்டி வீதியில் இருந்து 500 யார் தூரத்திலும் உள்ள கட்டடத் தொகுதி/ வீட்டுத் தொகுதி நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட உள்ளது. 6000 சதுர அடி, விஸ்தீரணமுடைய கட்டடம் நிலப்பரப்பு 9 லாட்சம், கட்டடத்தின் அடித்தளமானது 5 அறைகள், சமையலறை, பெரிய ஹோல் என்பனவற்றை கொண்டமைந்தது. சலவை செய்வதற்கு மிகவும் பொருத்தமான பகுதியையும் கொண்டுள்ளது. 1ஆவதுமாடி 5 அறைகளையும் அழகான ஹோல் மற்றும் நடுவில் படிப்பறை வசதியுடன் அனைத்து அறைகளும் குளியலறை/கழிவறை வசதி கொண்டவை. பொழுது போக்கு (அமைதியான பூங்கா) மற்றும் வெளிப்புறமலசல கூட வசதியும் கொண்டது.
தொடர்பு- 0773516639 (C/6868)(6.25.11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 19.04.1951
உதிர்வு 17.01.2012
திதி: 04.02.2013

**அமரர் விசுவலிங்கம் வடிவமலர்**

நாளை (04.02.2013) திங்கட்கிழமை இல.46, நாகதம்பிரான் வீதி, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.
நி.மு - ஆழியவளை, தாளையடி. (C/6178)(6.25.11) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

**செல்வி திவ்யா திபாகரன்**

(உள்ளகப்பயிற்சி ஆசிரியை, ஆரம்பக்கல்வி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)



கடந்த வெள்ளிக்கிழமை (01.02.2013) அன்று அகாலமரணமடைந்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பக்கல்வி உள்ளகப்பயிற்சி ஆசிரியையான செல்வி திவ்யா திபாகரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆரம்பக்கல்வி
உள்ளகப்பயிற்சி ஆசிரியர்கள்
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி (29125)(3.6.25)

## தபால் மூல கல்வி

**O/L** இன் பின்னர் வீட்டிலிருந்து கற்க 03 மாத கால விஷேட

சகல பாட நெறிகளும் தமிழ்மொழி மற்றும் ஆங்கிலமொழி மூலம்

**DIPLOMA IN ENGLISH (SPOKEN ENGLISH)**
**CERTIFICATE IN ENGLISH / DIPLOMA IN BUSINESS ENGLISH**




- BUSINESS MANAGEMENT வியாபார முகாமைத்துவம்
- MONTESSORI TEACHING METHOD & CHILD PSYCHOLOGY மழலையர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறி

ஏனைய முகாமைத்துவ பாடநெறிகள்

- Diploma in Management
- Office Administrative
- Human Resources
- Production & Process
- Financial
- Marketing
- Customer Care
- Advertising

- வீட்டிலிருந்து கல்வி கற்க
- வயதெல்லை இல்லை
- சர்வதேச தகமை
- IVSC Certificate
- Job placement in Sri Lanka (Conditions Apply)
- ICCP Membership Certificate
- (Gold & Platinum) Exclusive Discount Card

நேரடி வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம்

**MSC College**
MSC INTERNATIONAL EDUCATION GROUP (PVT) LTD
Contact us:
203, Layards Broadway, Grandpass, Colombo 14.
Hotline : 0777 766 514 / 0777 766 546 Tel : 011-2433386
JEGZ

## SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

### Vacancies in Dairy Development Team (Jaffna District)

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors.

The Dairy Development Project Northern Province aims at improving milk production and income for dairy farmers in Chavakachcheri division in Jaffna district. It will be jointly implemented by Tetra Laval Food for Development Office, Cargills (Ceylon) PLC and GIZ. The project will use unique methodologies developed and tested in a number of Asian countries. The objective is to replicate the successes of these pilot projects commencing in Chavakachcheri into other divisions, districts and eventually nationwide.

In this regard, the project invites applications from highly motivated and committed professionals possessing a background in agriculture, ideally dairy, Tamil speaking and familiar with the local context. Most of all, the team must have "mover qualities" combined with a strong sensitivity in order to bring in and motivate farmers, connect with local institutions as well as stakeholders based in Colombo. The team will start work by attending a 30 day training in Bangladesh prior to implementing the project in the Chavakachcheri division.

Duty Station: **Jaffna District, Chavakachcheri Division**

**Positions:**
- PROJECT COORDINATOR
- EXTENSION SERVICE OFFICER
- CHILLING CENTRE OPERATIONS OFFICER
- CHILLING CENTRE OPERATIONS ASSISTANT
- PROJECT ADMINISTRATOR

Qualified female applicants are strongly encouraged to apply for these positions.

Please write to **giz-hrsrilanka@giz.de** for detailed job descriptions plus a brief of the project.

Qualified applicants must submit an updated CV including **1) a one page-writing sample that describes how you would develop a plan to motivate local farmers, connect with local institution as well as the stakeholders based in Colombo, 2) email & telephone contacts of two professional referees** to **giz-hrsrilanka@giz.de** or mail to the Human Resource Unit, GIZ-Colombo, No. 6, Jawatte Avenue, Colombo 5. **before cob 13 February 2013.**

We thank all applicants but only the short listed candidates will be contacted.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 7.9.1940
மறைவு 4.1.2013

**அமரர் சுப்பர் முத்துக்குமாரசாமி**

வையத்து வாழ் வாங்கு வாழ்ந்த – நீவிர் மண் விட்டு சென்று இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி பதம் நீர் விட்ட விழுதுகள் நாம் இங்கே
உன் பாதம் தேடிக் கண்ணீர் சொரிவதை உம்மை அழைத்த காலன் அறிவானோ.

எமது குடும்பத்தலைவர் அமரர் சுப்பர் முத்துக்குமாரசாமியின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (3.2.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினர் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு, கைதடி. (C/6162)(6.25.11) குடும்பத்தினர்.

## வீடு வளவு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மூளாய் வீதி, உடுக்கியவளை பிள்ளையார் கோயிலடியில் 04 பரப்புக் காணியில், பயன்தரு மரங்கள், குழாய்க்கிணறு முன்பக்க சுற்றுமதில் போன்றவற்றுடன் சகல வசதிகளையும் உள்ளடக்கிய நாற்சார வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0771520827 (தரகர் தேவையில்லை) (29042)(2.6.25)

## STUDY MBBS | 2013 ஆண்டிற்கான நுழைவுகள் பாடநெறி ஆங்கில மொழியில் | STUDY IN INDIA



RECOGNIZED BY: SLMC, Europian Medical Association, Medical Council of India, GMC-UK, ECFMG-USA & WHO

இந்தியா - JJM Medical College
Affiliated to Rajive Ghandhi University

ஐரோப்பா Georgia
Tbilisi State Medical University
கட்டணம் US$ 3000 ஒரு வருடத்திற்கு

நேபாளம் Nobel Medical College
Affiliated to Kathmandu University

**பல்கலைக்கழக நுழைவிற்கான விண்ணப்பம்**
on 9th Feb 2013
at BMICH (Block-02)
Committee Hall E
9.30 a.m - 2.00 p.m

தமிழ் மொழி மூல விசாரணைகளுக்கு
Dr. Jayapaskaran
0773 039 666

**பெங்களூர் பல்கலைக்கழகம், VTU மற்றும் ராஜீவ் காந்தி பல்கலைக்கழகம்,**

Programs After A/L's
- B.Sc - Biotech/Micro/Genetics
- Business Management
- B.Sc. - IT
- B.Com
- Bachelor of Engineering

Computer Science
Electronics
Electrical & Electronics
Mechanical / Auto Mobile
Aeronautical
Mechatronics
Civil
Mining

- B.A. - Journalism/English Psycholoty / Economics
- B.Sc. - Fashion & Apparel Design
- B.Pharmacy
- B.Sc. - Medical Lab Technology
- B.P.T. - Physiotherapy

Programs After O/L's
- Diploma in Engineering
- Pre-University (A/L)

**ICAM கல்வி நிறுவனம்**
17A, காசியப்ப வீதி, கொழும்பு 5.
தொ.பே: 011-2593933, 0773-022177, 0777-564970
www.icam.lk
info@icam.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Diploma in Nursing -3 Years
## Holy Cross School of Health Science

விண்ணப்ப இறுதித் திகதி- 28.02.2013

கற்கை நெறிக் கட்டணம்-1500/=

முற்பணம் - 3500/=

க.பொ.த உயர் தரத்தில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை சுகநல நிலையம் 767/4,கடற்கரை வீதி,யாழ்ப் பாணம் என்னும் விலாசத்திற்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும், அல்லது தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ளவும். பணிப்பாளர்

தொ.பே.இல: 0213001102, 0770712366 ,0774270120.

(28745)(6.7.4)



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் வயது 33, திருவாதிரை 3 ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமற்ற (கிரகபாவம் 34) 6 அடி உயரமுடைய யாழ்ப்பாணத்தில் நிரந்தர அரசாங்க தொழில்புரியும் பட்டதாரி மணமகனுக்கு அழகான தொழில்புரியும் மணமகள் தேவை.

தொடர்பு:- 021 225 0183

jaffna2011@hotmail.com.uk

(29038)(2.6.25)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
26★08★1974

ஆண்டவன் அடியில்
19★12★2012



(C/6141)(6.25.11)

### அமரர் சுந்தரலிங்கம் யோகலிங்கம் (சுரேன்)

நாள்கள் நாற்பத்தி ஐந்து கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீ சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஆறிடுமா எம் துயரம்

எங்கள் அன்பு மகன் இந்தியாவில் காலமான செய்தி கேட்டு உடன் நேரில் வந்தோர்க்கும், தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் கூறியோர்க்கும், இந்தியா செல்வதற்கு பயணஏற்பாட்டிற்கு உதவியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை கூறுவதோடு இன்று (03.02.2013) ஞாயிறு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். (இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சடையர் வைரமுத்து

உரும்பிராய் மேற்கு, மூன்று கோயிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சடையர் வைரமுத்து நேற்று (02.02.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சடையர்- குழந்தை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக்கணவரும் சின்னப்பொடியன்-குழந்தை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், லக்சுமி, ராமு, லச்சுமன், பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகராணி, நகுலேஸ்வரி, சுலோசனா, புஸ்பலதா, புஸ்பவதி, புஸ்பராணி ஆகியோரின் தகப்பனாரும் சுப்பிரமணியம், இராசரத்தினம், யோகேஸ்வரன், சிவகுமாரன், கணேசகுமார், செல்வேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், செல்லத்துரை மற்றும் இராஜேஸ்வரி, சின்னக்கிளி ஆகியோரின் அன்பு மைத்துனரும் விமலரூபன், சோபனா, நிமலினி, சைந்தன், சாலினி, கேமா, செந்தூரன், ரேகா, ஜேனுகா, சாரங்கன், சுடோயினி, திலக்சினி, ரிசாந்தினி, தேனுஜன், மதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுஉரும்பிராய் வேம்பன்மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
மூன்று கோயிலடி.

தகவல்:
இராசரத்தினம்
(மருமகன்)

(29091)(6.25.11)

## கை துண்டிக்கப்பட்ட மாணவிக்கு ரூ.50 இலட்சம் செலவில் செயற்கைக் கை

### கல்வி அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,பெப்.3

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீட மாணவி டபிள்யூ.கே.அச்சலாவின் துண்டிக்கப்பட்டுள்ள கைக்குப் பதிலாக அதி நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள செயற்கைக் கை ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் கல்வியமைச்சுக்கு உத்தர விட்டுள்ளார்.

மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உள்ளாகியிருந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் மாணவி அச்சலா பிரிய தர்சினியின் இடது கை துண்டிக்கப்பட்டது.

லண்டன் செயற்கைக் கைகளைத் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றிடம் இருந்து நவீனமான உயர் தொழில்நுட்பத்துடனான செயற்கை கை ஒன்றைப் பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் உயர் கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாணவி அச்சலாவுக்குத் தேவைப்படும் கையின் அளவுப் பிரமாணம் சம்பந்தப்பட்ட விவரங்களை நிறுவனத்துக்குத் தெரியப்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விரல்களைக்கூட அசைத்து செயற்படத்தக்க அதி உயர் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள இத்தகைய செயற்கைக் கையின் விலை 50 இலட்சம் ரூபா எனவும் கூறப்பட்டது.

மாணவி அச்சலாவுக்கு இந்தக் கையைப் பொருத்துவதை முன்னிட்டு செலவினம் உள்ளிட்ட ஏனைய சகல வசதிகளை வழங்குவதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் எனவும் அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த மாணவியின் எதிர்கால உயர் கல்விச் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு கல்வியமைச்சால் நிறைவேற்றப்பட வேண்டியுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும், அனைத்து சுமைகளில் இருந்தும் மாணவியின் பெற்றோரை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-22)

## ஆடு திருடிய சந்தேகத்தில் புத்தளம் வாசி கைதானார்

மூன்று இடங்களில் ஐந்து ஆடுகளைத் திருடிய குற்றச்சாட்டில் புத்தளத்தைச் சேர்ந்தவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுள்ளார். ஆடுகளும் மீட்கப்பட்டன என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்ஜெப்றி தெரிவித்தார். வடமராட்சி கொல்லங்கலட்டி யில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆடுகள் திருடப்பட்டுள்ளன.

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில்லாலைப் பகுதியில் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆடுகள் திருடப்பட்டுள்ளன. அவற்றை வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்போது பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர். பிறிதொரு இடத்தில் 10 ஆயிரம் ரூபா பெறுமதி யான ஆடு ஒன்றைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த மூன்று சம்பவங்களுடனும் தொடர்புடைய புத்தளத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்று மேலும் கூறினார். (ம-4)


## வேலைவாய்ப்பு

இலங்கையின் பிரபல தொலைத் தொடர்பாடல் நிறுவனம் ஒன்றிற்கு வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனை மேம்படுத்தல் அதிகாரி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தொடர்பு: 0772264756

(காலை 8.30 முதல் மாலை 5.30 வரை அலுவலக நாட்களில் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

(27647)(6.7.11)


## கண்ணீர் அஞ்சலியும் அஞ்சலி நிகழ்வும்



மாவிட்டபுரம் தெற்கு இலகடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட

### விஸ்வநாதர் கனகரத்தினம்

[ஓய்வுபெற்ற முகாமையாளர்
கிளை 13 தெல்லிப்பழை ப.நோ.கூ.ச]

28.01.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை கனடா மொன்றியலில் நடைபெறும். அதே நேரம் அராலி மத்தி, சண்முகவடிவேல் நாகேஸ்வரி இல்லத்தில் அஞ்சலி நிகழ்வும் இடம்பெறும்.

தந்தைக்கு நிகராக நின்று
தயவு காட்டிப் பாசத்துடன்
எமை வளர்த்த பெரியப்பாவே
கண்ணிமைக்கும் பொழுதினிலே
காலனவன் உயிரைக் கவர்ந்தானே
கண் கலங்கிக் காத்திருக்கிறோம்
உங்கள் திருமுகம் காண்பதற்காய்


இவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சண்முகவடிவேல் நாகேஸ்வரி குடும்பம்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
அராலி மத்தி, வட்டுக்கோட்டை. T.P. 0770752313, 0778258730, 0776184602

(29094)(2.6.25)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சீவரத்தினம்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சீவரத்தினம் 01.02.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் கணவரும், லங்காதேவி, ரதிதேவி, கெங்காதேவி, முருகமூர்த்தி, மேனகாதேவி, மீராதேவி, காஞ்சனாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசமூர்த்தி, காலஞ்சென்றவர்களான இரத்தினவேல், திருநாவுக்கரசு மற்றும் தேவகி, றஜீன்குமார், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா (போட்டோ சிறி) மற்றும் ஜெயதாசன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி, சண்டிலிப்பாய்
(துவாரகா போட்டோ)

(29084)(2.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு
ஐந்து அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.
இடம் - சிதம்பபுர வீதி, சமணங்குளம், வவுனியா. தொடர்பு:0773034516
(27648)(6.7.2)

## காணி விற்பனைக்கு
மானிப்பாய்,பொன்னாலை வீதியில்,பிப்பிலி சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் வடக்குப் பக்கமாக உள்ள ஒழுங்கையில் 10 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6086981, 0771378474.
(29092) (6.7.4)

## வீடு வாடகைக்கு
சகல வசதிகளும் கொண்ட வீடு யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையாகவும் யாழ். நகரத்தில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 2866429
பார்வையிடும் நாள் (04.02.2013) திங்கட் கிழமை மட்டும்.
(29087) (6.7.4)

## மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பம்,29 வயது,பூர நட்சத்திரம்,39 கிரக பாவம்,5' 8" உயரம்,மா நிறமுடைய பிரான்சில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 075 416 4274, 071 7049087.
(29083) (6.7.4)

## காணி விற்பனைக்கு
சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியில் மகளிர் கல்லூரிக்கு அருகில் 3¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
T.P- 0776667771
(18031) (6.2)

## பணியாள்கள் தேவை
25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.
உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
தொடர்பு: 077 3033 803
(27844) (45.6.7)

## கடைகள் Room வாடகைக்கு
நல்லூர் வடக்கு, கல்வியங்காட்டில் சகல வசதிகளுடன் கீழ் தளம் மற்றும் முதலாம் மாடி ஆகிய வற்றில் கடைகளும் 2 ஆம் மாடியில் அறையும் நாள், மாத மற்றும் வருடத் தவணை ஒப்பந் தத்தில் வாடகைக்கு உண்டு. இவற்றை Store ஆகவும் பயன் படுத்தலாம்.
தொடர்புகளுக்கு:- மயூரன் - 0773296035
(29031) (6.2.25)

## வாடகைக்கு உண்டு
கட்டடங்கள் கட்டுவதற்கு பயன்படுத்தும் கபோலின் வாடகைக்குண்டு.
மூர்த்தி கலர் லாப்
62/7,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
021 222 1358.
(A/6157) (6.7.4)

## தவறி விட்டது
முல்லையடி வீதி, பண்டத்தரிப்பு எனும் முகவரியுடைய நடேசப்பெருமான் உதயச்செல்வன் என்பவரின் தேசிய. அ.அ (771643477V),சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன ஏனைய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொ. பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு:077 4677502.
(29086) (6.25.4)

## வீடு விற்பனைக்கு
யாழ்.நகர் கொட்டடி சந்திக்கு மிக அருகில் சுமார் 3 பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-0772279219
(29090)(6.2.25)

## உடனடி வேலைவாய்ப்புக்கள்
வேலையில்லாத பிரச்சினையா? எங்களிடம் தீர்வு உண்டு. கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் உற்பத்தி /லேபல்/ பொதியிடல் பிரிவுக்கு 17-50 ஆண்- பெண் வயதினர் தேவை. சம்பளம் 18000/=, 25000/=,32000/= உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில். வருகை தரும் நாளிலே வேலை. (கல்வி அறிவு அவசியமில்லை)
தொடர்பு- 0775561883
SAKYA PVT LTD
103/01, Station Road,
Vavuniya.
(27637)(6.7.11)

## கிளிநொச்சி நகரில் கடைக் கட்டடம் உடனடி குத்தகைக்கு
கிளிநொச்சி நகரில் கடைக்கட்டட தொகுதி உடனடியாக குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.
(A9பாதை கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில்)
கட்டட விவரம்:
அடித்தளம்(Gr.floor)-1000 ச.அடி
மேல் மாடி(1st floor)-1000ச.அடி
விசேடமாக வியாபார நிறுவனங்களின் காட்சி அறை/ வியாபார அறை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மிகவும் பொருத்தமானது.
தொடர்பு:0776136818,0212220196.
பெப். 3 ஆம்,4 ஆம் நாள்களில் (ஞாயிறு,திங்கட்கிழமைகளில்) முற்பகல் 10 மணியிலிருந்து மாலை 4 மணிவரை பார்வையிடலாம்.
(29029)(6.25.4)

## விற்பனைக்கு
நல்ல இன பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779116052,0750412670.
(29089) (6.4)

## German Swiss மொழிகள்
தமிழ் மொழிபெயர்ப்புடன் Embassy யில் கேட்கப் படும் A1Certificate க்கு ஏற்றவாறு Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் வகுப்புகள் நடாத்தப்படுகின்றது.
German institute, ஆரியகுளம், யாழ்ப்பாணம்
T.P: 0771604823, Miss Kajenthini
தொடர்பு கொள்ளவேண்டிய நேரம்- 8- மாலை 6 மணி வரை
(29046)(6.25.11)

## காணி விற்பனை
மல்லாகம் பிரதேசசபை பகுதிக்குட்பட்ட ரயில் பாதைக்கு அண்மித்த "ஆனைவிழுந்தான்" நிபர 03 என்ற ஆதனம் விற்பனைக்குண்டு. விரும்பியவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0777069934
(29035) (6.2.25)

## வாகனம் விற்பனை
NPPS 5816 தொடர் இலக்க Single Cab 207 DI, Dual Purpose சிவப்பு நிறமுடைய வாகனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773721515
(27652) (6.2.25)

## வேலையாள்கள் தேவை
25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16-55 வரை ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.
அழையுங்கள்: 077 303 2004, அநுராதபுரம்.

## காயத்திரி திருமண சேவை
(உலகளாவிய ரீதியில் விரைவான திருமணசேவை)
எம்மிடம் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஆண், பெண் இருபாலாரின் ஜாதகக் குறிப்புடன், படங்களும் கைவசம் உள்ளன. தங்களுக்குத் தேவை யான பொருத்தங்களைத் தெரிவு செய்து கொள்ளத் தொடர்பு கொள்ள வேண்டியது
T.P.0778778484.
email.r.vijiraj20@gmail.com.
Fax: 021 7451210 (சந்திப்பு நாள்கள் சனி, ஞாயிறு) கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (29036) (6.2.25)

## விற்பனைக்குண்டு
NPJF 2289 இலக்கமுடைய ISUZU லொறி 10 ½ அடி நீளம் Full BODY விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0774380813
(29034) (6.2.25)

## வீடு வாடகைக்கு
காங்கேசன்துறை வீதிக்கும் மானிப்பாய் வீதிக்கும் இடையில் 25, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் அருகில்) 5 அறை, கிணறு, மோட்டார் வாகனத் தரிப்பிடம், சுற்றுமதிலுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:-0718246941, 0715213888
(C6164) (6.2.25)

## சிறு நீரகம் தேவை
40 வயதுடைய சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு "B" அல்லது "O" இரத்தவகை உடையவருடைய சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது. தகுந்த சன்மானம் வழங்கப்படும். வழங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:- 071 4269299

## FIRE EXTENGUISHER
### தீ அணைக்கும் கருவிகள்

யாழ்.நகரில் தீ அணைக்கும் கருவிகள் விற்பனைக்குண்டு
வியாபாரத் தாபனங்கள், காரியாலயங்கள், வீடுகளுக்கும் தேவையான சகல விதமான கருவிகளும் எம்மிடம் விற்பனைக்குள்ளது.

(29112)

**YARL FIRE PROTECTORS**
146,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 146, KANNATHIDDY ROAD, JAFFNA.
T.P.: 021 221 9905

## NORTH LEAD
**COMPUTER & ACCESSORIES WHOLESALER**
Tel: 021-222 4459, 0772533390. Fax : 021-222 4460



4GB Micro Sd : 475
8GB Pendrive : 1100
16GB Pendrive : 1850
32GB Pendrive : 3750

| | |
|---|---|
| E 173 Mul. Dongle : 3475 | Intel D.C Processor : 8750 |
| 13 M.P Webcamera : 775 | Intel I-5 M. Board : 7850 |
| Headphone with Mic: 300 | 500GB Hard Disk : 8500 |
| 21.M. Mul. Dongle : 4900 | 1000GB Hard Disk :13250 |
| Optical Mouse From: 320 | 2GB Kingstan Ram : 2450 |
| 3 Langua Keyboard : 550 | 4GB Kingstan Ram : 3550 |
| Notebook Coolpad : 875 | Samsung Dvd Writer: 2775 |
| Microlab Woofer : 4500 | ATX Casing : 2575 |
| Laptop Woofer : 1400 | 1User Kaspersky : 1650 |
| Intel I-3 LGA Fan : 875 | 1User Kaspersky : 3250 |
| Matrix UPS Battery: 1650 | 450w Power Supply : 1550 |
| Laptop Charger : 1675 | Flexble Keyboard : 850 |
| D-link 4port Router: 5700 | Laptop Charger Org : 2375 |


Techfine UPS
650w: 4475
1200w: 9850
1500w:14,500
Warranty: 18 Months


19"Samsung LED Rs. 12650
19"HP LED Rs. 12800


HP Deskjet 1050
Print, Scan, Colour Photo Copy
Rs. 12650
Warranty: 12 Months

சகலவிதமான கணினி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம், உங்கள் கணினிகள் அனைத்தும் ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். (Open 7 Days)
No: 328, Stanly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

## COMMERCIAL BANK
# கொமர்சியல் வங்கி
# சொத்துக்கள் விற்பனை

ஜோன் டீர்4 சில்லு டிரக்டர் RB - 9739 2010
ஜோன் டீர்4 சில்லு டிரக்டர் RC - 1031 2011
உளவு இயந்திர டிரய்லர் உள்நாட்டு தயாரிப்பு RW - 1195 2010
உளவு இயந்திர டிரய்லர் உள்நாட்டு தயாரிப்பு RW - 1815 2011
டெனிக்ஸியா ஹாவெஸ்டர் 104972 (சீனா) 2011

பார்வையிடுவது:
கொமர்சியல் வங்கி கிளிநொச்சி கிளையில்
353, கண்டி வீதி, கிளிநொச்சி.
2013 பெப்ரவரி 05 தொடக்கம் 12 ஆம் திகதிவரை
(விடுமுறை நாள்களைத் தவிர)
காலை 9.00 மணி முதல் மாலை 03.00 மணிவரை

கொமர்சியல் வங்கி கிளிநொச்சி கிளைக்கு மீண்டும் செலுத்தப்படமாட்டாத ரூபா 500/= ஐ செலுத்திய பின் இதற்கான விண்ணப்பப்படிவங்களை மேற்படி கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

கடித உறையின் இடது பக்க மேலிடத்தில் "Sale of Harvester" / Vehicle Number சீலிடப்பட்ட விலைகோரல் விண்ணப்பபடிவங்களைக் கேள்விப்பத்திர பெட்டியில் மேற்படி வழங்கப்பட்டுள்ள விலாசத்தில் 2013 பெப்ரவரி 12 ஆம் திகதி மாலை 03.00 மணிக்கோ அதற்கு முன்னதாகவோ வைப்பீடு செய்ய வேண்டும்.

வெற்றிகரமான விலை மனு கோரிக்கையை வழங்கியவர் களுக்கு முழுப் பெறுமதியைச் செலுத்த நேரிடுவதுடன் அதன் பின் பொருள்களை அறிவித்தல் வழங்கி ஏழு நாள்களுக்குள் ஸ்தலத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். இவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் மீள் செலுத்தப்படும் சமர்பிக்கப்பட்ட வைப்பீடுகள் பறிமுதல் செய்ய நேரிடும்.

சமர்ப்பிக்கப்பட்ட சகல அல்லது ஏதேனும் விண்ணப்பங்களை நிராகரிக்கும் உரிமை வங்கியைச் சார்ந்தது.

மேலதிக தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:
**முகாமையார், கிளிநொச்சி கிளை,**
**கொமர்சியல் பேங் ஒப் சிலோன் PLC**
**T.P. 021 228 0100 - 2**
(C/6120)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிக குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 7மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

நந்தினி பாம்
077 968 3028 இராசபாதை றோட், கல்வியங்காடு.
(29077)(5-6-7)

## ஜனா கொம்பியூட்டேர்ஸ்

''கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு''
கொம்பியூட்டர் - 10,000/= தொடக்கம்
C.R.T. மொனிற்றர் - 1500/=, L.C.D மொனிற்றர் - 4000/=
T.V. - 6000/= மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். கணினி திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0777508908.
9 தாநகர், கிளிநொச்சி. (26317) (6.7.2))

## கட்டடங்கள் விற்பனைக்கு உண்டு

யாழ்.நகர் மத்தியில் வாடகை வருமானத்துடன் கூடிய கட்டடமும் சுதுமலையில் வீட்டுடன் கூடிய 36 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு
தொடர்பு:077 192 1703.
(சி/6151) (6.25.4)

## காணிவீட்டுடன் விற்பனைக்கு

இல:24, பொன்னப்பா லேன், ஓட்டுமடம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் (மானிப்பாய் வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில்) 6¼ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை)
தொடர்பு:021 2270027
(18028)(6.25.4)

## வாடகைக்கு வீடு தேவை

இரு வெளிநாட்டவர்கள் (Forcign Professinals) யாழ்ப்பாணத்தில் நீண்ட கால திட்டம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக இரண்டு அறைகளுடன், வீட்டுத்தோட்ட வசதியும் கொண்ட வீடு ஒன்றை நல்லூர் அல்லது யாழ்ப்பாணத்தில் நீண்டகால வாடகைக்குத் தேடுகின்றனர். தயவு செய்து ஆங்கிலத்தில் மட்டும் தொடர்புகொள்ளவும்
தொடர்பு: 077 2271 389
(28878) (45.6)

## கடை வாடகைக்கு

சாவகச்சேரி,A-9 வீதியில், பிரதேச செயலகத்துக்கு முன்பாக அமைந்த 3 மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:077 6390501.
(18029) (6.7.4)

## German Deutsch Course

ஜேர்மன் சுவிஸ் செல்வோருக்கான டொச் மொழி ஜேர்மன் தூதரகத்தால் நடத்தப்படும்Deutsch A1 Course வகுப்பு நடைபெறுகின்றது.
0773319551
Jaffna College,464, HospitalRoad (28810)(6.4)

## Tipper விற்பனைக்கு

Leyland Tipper 3கியூப் (G45) பதிவு இல. LJ 72 xx 2012 மொடல்
தொடர்பு:077 3721517.
(27839)(6.25.4)

## வீடு விற்பனைக்கு

வேலணை மேற்கில் 20 பரப்பு காணியில் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.
(28882)(6.7.4) தொடர்பு: 0771943054.

## வீடு விற்பனைக்கு

தொல்புரம் ,டச்றோட்டில் இருக்கும் 5 அறை கொண்ட வீடு, 9 பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6178073
077 9440906.
(27638) (6.25.4)


## நீங்காத நினைவலைகள்

10 ஆம் ஆண்டு



21ஆம் ஆண்டு



அமரர் A.R. சிவகுருநாதன் — திருமதி தவமணி சிவகுருநாதன்

| | | |
|---|---|---|
| 14.12.1918 | மலர்வு | 09.08.1924 |
| 25.01.2003 | உதிர்வு | 06.09.1992 |

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

102, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில் வாழும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

(29068) (45.6)

## ST. JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
## MERIT SCHOLARSHIP AWARD
## G.C.E.(A/L) - 2015 BATCH

2012 O/L எடுத்து 2015 Batch இல் க.பொ.த. உ/த) எடுக்க இருக்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பெயர்: ..........................................................
02. 2012 O/L எடுத்த பாடசாலை: ..........................................
03. க.பொ.த. (உயர்தரத்தில்) பயில விரும்பும் துறை:
கலை / வர்த்தகம் / உயிரியல் / கணிதப்பிரிவு
04. பயில விரும்பும் மொழி: ஆங்கிலம் / தமிழ்
05. தந்தையார் தொழில்.......................தாயார் தொழில்.......................
06. குடும்ப விவரம்: ..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................
07. விலாசம்: ..........................................................

அதிபரால் உறுதி செய்யப்பட்ட பிறப்புச்சான்றிதழ் போட்டோ பிரதியும், ஆண்டு 11 பாடசாலை மட்ட பரீட்சை புள்ளிகளின் போட்டோ பிரதியும் இணைக்கப்படவேண்டும்.


* பரீட்சை முடிவுகள் வெளியான பின்பு அதிபரால் பரீட்சைப் பெறுபேறு உறுதிசெய்யப்படல் வேண்டும்.
* விண்ணப்பங்கள் 28.02.2013 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆண்கள்: அதிபர், சென்.ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
பெண்கள்: அதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

அதிபர்கள்:

(சி/6144) (45.6)

## நீரோடும் கண்களோடு நெஞ்சுருகும்
## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
01.10.1928

ஆண்டவன் அடியில்
04.01.2013

### அமரர்
### ஆறுமுகம் முத்துக்குமாரு

(முத்துவேலு,நயினாதீவு.
ஓயுவு பெற்ற தபால் ஊழியர்)

நாள்கள் முப்பத் தொன்று கழிந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
அன்பு மழை பொழிந்து எம்மை அரவணைத்த
அன்புத் தெய்வமே!
நயினை அம்பாள் பாதம் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம்

இன்று(03.02.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

36/20,பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
03.09.1934

உதிர்வு
05.01.2013

### திருமதி பரமேஸ்வரி இரத்தினசபாபதி

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரம்

எம் குடும்பத்தின் குல விளக்கே
அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்கும்
உறைவிடமாய் விளங்கிய எம் அன்னையே
மக்களுடன் மற்றுமுறவோரும்
நினைந்துருக ஞாலமதில் நீங்கள்
எம்மைப் பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களிலிருந்து நீங்கா......

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எம் குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், தாயகம், கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் நேரடியாக வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தும் உதவி புரிந்தவர்களுக்கும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

கனடா.

(29043) (2.6.25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 101

# மனித வாழ்வும் அயடீனும்

மனித உயிருக்கு அத்தியாவசியமான ஓர் இயற்கையான மூலப் பொருள் அயடீன் ஆகும். அயடீன் இயற்கை நிலையில் நிலத்திலும் நீரிலும் காணப்படுகிறது.

அயடீன் மிகக்குறைந்த அளவிலே எமது நாளாந்த தேவை எனினும், கிரமமாக எமது உடலுக்கு கிடைப்பது அவசியம். ஒரு தாயின் கருவில் வளரும் சிசுவுக்கு அதன் மூளையும் உடலும் இயல்பாக வளர்ச்சி அடைவதற்கு அயடீன் இடையறாது வழங்கப்படவேண்டும்.

அதேபோல் பாலபருவம், பூப்பெய்தும் பருவம், வளர்ந்தோர் கற்பகாலம், முதியோர் யாவருக்கும் அவசிய மானது. இவ்வாறு வாழ்வின் வெவ்வேறு பருவங்களில் தேவையான அளவு அயடீன் எடுப்பதால் கருப்பையில் வளரும் சிசுவின் கருச்சிதைவு தடுக்கப்படும்.

குழந்தை இறந்து பிறப்பது தவிர்க்கப்படும். சிசுவின் மூளை வளர்ச்சி, உடல் வளர்ச்சிக்கு உதவும். வளர்ந்தோருக்கு உடல் சோர்வு தடுக்கப்படும். உடல் தொழில் பாட்டை ஊக்குவிக்கும், குழந்தைகள் புத்தி விருத்தி பேச்சு, கேட்டல், உடல் மன வளர்ச்சிகளுக்கு உதவுவதுடன், அயடீன் குறைபாட்டால் உருவாகும் தொண்டைக் கழலையையும் தவிர்க்கலாம்.

தைரொக்சின் ஓமோன் சுரப்புக்கு இது அவசியமானது எனினும் நாம் அயடீன் கலந்த உப்பைத் தேவையான அளவு மட்டும் பாவித்தல் போதுமானது.



எமது **உணவில்** நாளாந்தம் சேர்க்கும் **உப்பில் சோடியம்** அதிகளவில் சேர்ப்பதைத் **தவிர்த்தல்** நல்லது. எமது **உடலுக்குள் உள்நுழையும்** சோடியத்தின் **அளவைக் கண்காணிப்பதும்** அவசியம். **பின்வருவனவற்றைக்** கடைப்பிடிப்பதன் **மூலம்** ஓரளவுக்கு எமது அயடீன் **தேவையைப்** பூர்த்தி செய்ய உதவும்.

1.**இலங்கையில்** பல்வேறு பகுதிகளில் **செய்கை** பண்ணப்படும் பயிர்களில் **அயடீன்** செறிவு பல்வேறு அளவுகளில் **காணப்படுகின்றது**. இந்தச் **செறிவை அந்தந்தப்பிராந்தியத்தின்** குடி **தண்ணீரில்** அறியலாம்.

**உதாரணமாக** மேல், தென், மத்திய ஊவா, **வடமேல்**, கீழ் மற்றும் வடமத்திய **மாகாணங்களில்** வசிப்பவர்கள் அயடீன் **ஊட்டிய** உப்பின் உருவில் **உணவில் சேர்த்துக்** கொள்வது அவர்களுக்கு **அயடீன்** கிரமமாகக் கிடைப்பதற்கு **வழிசெய்யும்**.

2.நீங்கள் **விரும்பினால்** உங்கள் பகுதி **பொதுச்சுகாதார உத்தியோ**கத்தருடன் தொடர்பு கொண்டு உங்கள் பகுதியில் விற்பனையாகும் உப்பில் எந்த அளவுக்கு அயடீன் இருக்கிறது என்பதைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

3. அயடீன் ஊட்டிய கால் நடை உணவுகளை உண்ணும் கால்நடைகள், அயடீன் செறிந்த பாலைப் பெறுவதற்கு வழிவகுக்கும்.

4. அயடீன் ஊட்டிய உப்பை சூரிய வெளிச்சத்திலும், ஈரலிப்பிலும் நீண்ட காலம் விட்டுவைத்தால் உப்பில் உள்ள அயடீன் சேதமாவதற்கு இடமுண்டு. எனவே காற்று புகாத பிளாஸ்ரிக், மர, கண்ணாடி அல்லது மட்கலங்களில் இட்டு இறுக மூடி வைத்தல் வேண்டும். உப்பைத் திறந்து வைத்தால் அயடீன் அழிந்துவிடும்.

5. உங்கள் வீட்டுத் தோட்டங்களின் மண்ணின் அயடீன் செறிவை அதிகரிக்கக் கடல் சாதாழைகளை பசளையாக இடுவதன் மூலம் மண்ணின் அயடீன் செறிவைக் கூட்டலாம்.

6. அயடீன் சேர்ந்த உப்பை வாங்கும் போது உற்பத்தி திகதி, முடிவு திகதி போன்றவற்றை அவதானியுங்கள். ஏனெனில் ஒரு வருட காலத்துக்குள் பாவித்தல் அவசியம். மற்றும் அயடீன் ஊட்டிய உப்பைக் கழுவக் கூடாது. கழுவினால் அயடீன் அழிந்துவிடும்.




7.அயடீன் பற்றாக்குறை உள்ள நிலப் பரப்புப் பகுதிகளில் வசிப்பவரும் அயடீன் ஊட்டிய உப்பை பாவிக்கலாம். மேலதிகமாக கிடைக்கும் அயடீன் எமது சிறுநீர் வழியாக வெளியேறிவிடும். அயடீன் ஒரு அத்தியாவசிய ஊட்டச்சத்து. மருந்து அன்று.

8. இயற்கையாக நாம் அயடீனைப் பெறுவதற்கு கடல் மீன்கள், கூனி இறால், பால், மாமிசம் மற்றும் அயடீன் செறிவான மண்களில் விளையும் காய்கறிகள், கீரை வகைகள், பயிர் வகைகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.


**ச.சுதாகரன்**, நதிய உத்தியோகத்தர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# சுடுநீர் விபத்து



சுடுநீரால் ஏற்படும் விபத்துக்கள் பொதுவாக **சிறுவர்களை** பாதிக்கின்றன. இதன் மூலம் சாதாரணமான தோல் காயம், **கொப்புளங்கள்** முதல் பாரதூரமான உயிர் ஆபத்து வரை ஏற்படலாம். சுடுநீரால் **ஏற்படும்** சாதாரண தோல் காயங்களுக்கு எமது வீடுகளிலேயே **வைத்துச் சிகிச்சை** அளிக்க முடியும்.

இதற்கு முதலில் சுடுநீர்பட்ட இடத்தில் அணியப்பட்டுள்ள ஆடைகளை அகற்ற வேண்டும். அதன் பின்னர் சாதாரண ஓடும் குழாய் நீரினால் சுடுநீர்பட்ட இடத்தை 15-30 நிமிடங்களுக்கு நனைக்க வேண்டும்.



பின்னர் பாதிக்கப்பட்ட இடத்தைத் தொற்றற்ற gaze bandagel அல்லது துணியால் இலேசாக சுற்றிக் கட்டிவிடவும். இடையிடையே அந்த இடத்துக்கு கற்றாளை இலைச்சாற்றைத் தடவுதல் நல்லது. வலி உள்ளபோது பனடோல் போன்ற வலி நிவாரணியை உள்ளெடுக்க முடியும்.

24 மணித்தியாலங்களின் பின்னர் சுடுநீர் பட்ட இடத்தை மிகவும் கவனமாக சவர்க்காரம் இட்டு கழுவுங்கள். அதன் பின் கழுவிய இடத்தில் நீர்த்தன்மை இல்லாதவாறு துணி ஒன்றால் ஒற்றி எடுத்து உலர்வாக வைத்திருங்கள்.

Polymyxin B Sulfate அல்லது Bacitracin Cream இனை பாதிக்கப்பட்ட இடத்தில் தடவுவதன் மூலம் காயத்தில் நுண்ணங்கிதொற்று ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

உங்களுக்கு ஏற்பட்ட சுடுநீர் விபத்து அளவில் பெரியதாக இருந்தாலோ அல்லது முகம், கைகள், மூட்டுகள், பால் உறுப்புபோன்ற இடங்களில் ஏற்பட்டாலோ அல்லது சுவாசப் பாதைக்குள் சென்றிருந்தாலோ உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லுங்கள்.

**வைத்தியர் ஆர்.அன்ரூ அருணன்,**
நீரிழிவுச் சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை.

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்தியசுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Singapore இல்
வேலை வாய்ப்புடன் கூடிய
Hotel Management பயிற்சி

**Spot Admission**

ஒரே வேலை நாளில் Offer Letter தரப்படும்.
28 நாட்களில் Student Pass Visa கிடைக்கும்.

**Certificate Levelக்கு - ஒரு வருட வீசா.**
**Diploma Levelக்கு - 1 1/4 வருட வீசா.**
**HND Levalக்கு - 2 வருட வீசா.**

HND Level முடித்தவர்களுக்கு Skill Pass உடன் நிரந்தர வேலை வாய்ப்பு செய்யும் வசதி.
Skill Pass கிடைத்த பின்பு PR கிடைக்கும் வாய்ப்பு.

**BRISTOL BUSINESS SCHOOL**

5001 Beach Road
#04-03 Golden Mile
Complex
Singapore 199588

**Regional Manager**
No :01, 2nd Lane,
Power House Road,
Jaffna.
T.P - 0212219787

தொடர்புகளுக்கு :- 0777751382 / 0773448706 / 0772521070

(C/5629)(2-6)

**தகுதிக்கேற்ப தொழில் வாய்ப்புக்கள் உடன் வாருங்கள்**

எங்கள் தொழிற்சாலை ஜாம், பிஸ்கட், சொக்லைட், கேக், யோக்கட், ரொபி, பால்மாவை உற்பத்தி செய்யும் ஜெலி, க்ளவுஸ், ரயர் ஆகிய உற்பத்தி பொருள்கள் லேபல் பிரிவுக்கும், 16 முதல் 55 வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சம்பளம் 38,000/= முதல். உணவு தங்குமிடம் இலவசம். சேர்த்துக்கொள்ளப்படும் இடம் அனுராதபுரம். நண்பர்கள் குழுவும் இணைந்து கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு: 071 3460 295**

50,000/= இக்கு மேல் துறைமுகம் (தனியார்)பிரிவுக்கு தச்சன்,வெல்டர் சாரதி, வேலையாள்கள் தேவை. விமான நிலையம் (தனியார்) பிரிவுக்கு கேட்டரின் பெயின்டஸ், மயில்ஸ், பாஸ்மார்களும் மற்றும் பாரவாகன ரைவர் J C B, Forclift வில்டஸ், ரோலர், ஒப்பரேட்டர் ஆகியோர் தேவை. சகல பிரதேசத்தவரும் தேவை. வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இணைந்துகொள்ளலாம் உணவு, தங்குமிடம் இலவசம்.

தொடர்புகளுக்கு: 071 3460 295

புதிய பஸ்நிலையம்,
அனுராதபுரம்.

(27643) (45.6)

## உணவுச் செயற்றிட்டம் குறித்த ஆய்வு

வடமாகாணத்தில் பாடசாலை உணவுச் செயற்றிட்டங்கள் தொடர்பாக ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வலய அடிப்படையில் உணவுச் செயற்றிட்டம் நடை பெறும் பாடசாலைகளில் 5 பாடசாலைகளைத் தெரிவு செய்து ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பாக தகவல்கள் மாகாண கல்வித் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்படவுள்ளது. இதற்கமைவாக வலய அடிப்படை யில் தரம்-1 முதல் தரம்-5 வரையான வகுப்புகள் உள்ள பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகளும், தரம் ஒன்று தொடக்கம் தரம் 9 வரையான வகுப்புகள் உள்ள பாடசாலைகளில் ஒரு பாடசாலையும் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகள் உள்ள பாடசாலைகளில் ஒரு பாடசாலையும், தரம்-1 தொடக்கம் தரம்-13 வரையான வகுப்புகள் உள்ள பாடசாலைகளில் ஒரு பாடசாலையும் என 5 பாடசாலைகளைத் தெரிவு செய்து ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு அது தொடர்பான தகவல்களை மாகாண கல்வித் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு அமைவாக அந்தந்த வலயங்கள் ஊடாக இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று கூறப்பட்டது.

(ம-14)

**மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை**

யாழ். மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 15.05.2012 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 15.11.2011 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப் படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை (யாழ் கச்சேரி , யாழ் பஸ் நிலையம் , யாழ் பிரதான வீதி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை<br>யாழ்ப்பாணம்<br>2013 பெப்ரவரி 16 ஆம் 17 ஆம் திகதிகளில் (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு |
| யாழ்.2ஆம் மேற்தரக்கிளை (கொக்குவில் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| திருநெல்வேலி | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் | |
| காங்கேசன்துறை (அளவெட்டி, இளவாலை விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நயினாதீவு விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி கைதடி, கொடிகாமம்,பளை, பூநகரி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| அச்சுவேலி | |
| கோப்பாய் | |
| உரும்பிராய் | |
| சங்கானை | |
| வல்வெட்டித்துறை | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

**செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி (வட பிராந்தியம்)**
**வடபிராந்திய காரியாலயம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.:- 021 222 4683, 021 222 3126**

(சி/6138) (2-6-25)





**50 ஆவது திருமண நாள் வாழ்த்து**

"முன்னறியும் தெய்வமடா அன்னை பிதா
அவர் சொல்வதெல்லாம் நமக்கு வேதமடா"

**திரு. திருமதி குஞ்சிதபாதம் மனோன்மணி**

பெற்றதாய் தந்தையுடனே பிறந்த நாட்டையே
பேணி அவர்பாதம் தொழ என்ன தயக்கமோ?
பெற்ற நலன் தனைமறந்து பேதமையுடனே
பாழாகி அவர் மனம் புண் படுத்தலாகுமா?
விழுதுகளும் வளர்க்கும் ஆலமரத்தைக் காக்குமே
வளர்த்த நன்றிக்காகத் தாய்மரத்தைக் காக்குமே
வாழ்வினில் நல்ல வித்தளித்த பெற்றோர் மகிழவே
அரவணைத்து நன்றிக்கடன் செலுத்துவோமே,

இன்று **03.02.2013** ஞாயிற்றுக்கிழமை
தமது ஐம்பதாவது திருமணநாளை நிறைவு செய்யும்
*திரு. திருமதி குஞ்சிதபாதம் மனோன்மணி*
தம்பதியினரை வாழ்த்தி வணங்குவதுடன்
அவர்கள் சகல செல்வங்களுடன் நீண்டகாலம்
வாழ எல்லாம் வல்ல நல்லூர் வடக்கு
சந்திரசேகரப்பிள்ளையாரை பிரார்த்திக்கும்

கவிதையாக்கம்,
புலவர் செ. பரமநாதன்,
தாவடி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு.

(29046) (45.6.25)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**University of Jaffna, Sri Lanka**
**இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறி**

## Diploma in Journalism - 2013 / 2014

**புதிய கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டுப் பயிற்சி நெறிக்காக (2013/ 2014), புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காகத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்** க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் (yes) தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**
01. அச்சு ஊடகம் (Print Media)
02. இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
03. இணைய ஊடகம் (New Media)

**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்**
செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
றேடியோ மற்றும் ரீ.வி.நிகழ்ச்சிகள் தயாரிப்பு
ஊடக நிறுவனங்களில் செயன்முறைப் பயிற்சி
சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
ஆவணப்படத் தயாரிப்பு

சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான மேலதிகப் பயிற்சிகள்

கற்கைக் காலம் - 2 ஆண்டுகள் (முழுநேரம்)
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 15.02.2013

**கட்டணங்கள்**

| | |
|---|---|
| கற்கைநெறிக் கட்டணம் | ரூ.20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூ. 750,00 |
| நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூ.750.00 |
| நூலக பயன்பாடு | ரூ.1000.00 |
| மொத்தம் | ரூ.22,500.00 |

விண்ணப்பப் படிவங்களை இல.84, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் ரூ.100/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்துக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம். 021 222 9873

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/6177) (2-6-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BANK BALANCE ARRANGEMENTS

UK, USA, CANADA, AUSTRALIA & NEW ZEALAND
BANK / FINANCIAL COMPANY
SOURCE OF FUND GUIDANCE
2 - 6 Months
Mr. Lihitharan: 07777 33 223 Wellawatta, Colombo - 06. RG ads

## MULTI MEDIA வேலைக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை

கொழும்பு-13- 223, ஸ்ரீ கதிரேசன் வீதியில் (223; Sri Kathiresan Street) அமைந்துள்ள Video Studio க்கு Adobe Premier, Canopus Edius, Photoshop ஆகியவற்றில் வேலை செய்த அனுபவ முள்ளவர்கள் தேவை. தங்குமிட வசதி யுண்டு. 05.02.2013 திகதிக்கு முன் தொலைபேசி மூலம் விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு:
**071 5904492**

## Study in Overseas

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, GERMANY SWITZERLAND, CYPRUS, UKRAINE, RUSSIA, FRANCE
Start your Higher Studies with Career Guidance
**Australia At Charlton Brown College**
Malaysia Transfer Program USA OR FINLAND FOR MD / MBBS / Pharmacy & Other Course
**Study In New Zealand / Europe**
Friendly Environment & Well Reputed College & University
• Minimum O/L • No Need Of IELTS
• Course Fee After Visa
IELTS Class Arrangements / Part Time Job Assistance
Forward your CV to : info.reliance.edu@gmail.com
Reliance Overseas Education Consultancy
No:14, 1/1, 37th Lane, Wellawatta, Colombo - 06.
Miss. Zaarah: 0778 858 358 Mr. Aravind : 0778 022 882
Tel: 0117 90 99 00 Intake: Mar / Apr
RG ads

## விசா

வேலை ( Work Visa) விசா
மலேசியா, சிங்கப்பூர், இத்தாலி, அமெரிக்கா, பங்கிகாக், பெலாருஸ்.
Student விசா
UK, அமெரிக்கா, செக்குடியரசு (செங்கன்)
விசிட் விசா
ஜப்பான், றுமேனியா, கொரியா, பிரான்ஸ், சுவிஸ், லண்டன், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ.
Resident Permit விசா
மோல்டோவா, லித்துவேனியா.

**வங்கி பணவைப்பு**
அனைத்து நாடுகளிற்கும் Student, Visit, Business விசாக்களிற்கான வங்கிப் பணவைப்புக்கள் செய்து கொடுக்கப்படும்.
Galaxy International (Pvt) Ltd,
198/A/1/1, காலி வீதி, தெகிவளை.
Tel : 0112 721 072 Mobile : 0774 740 040
RG ads

## REALMATRIMONY யின் மணப்பந்தல்

- 1981, அனுஷம், Bsc,Engineer, Singapore மணமகனுக்கு மணமகள் தேவை,
- 1980, பூரம் Manager,France citizen மணமகனுக்கு மணமகள் தேவை
- 1977, சதயம், Accountant,Australia citizen மணமகனுக்கு மணமகள் தேவை,
- 1980, பரணி 3, Bsc,Engineer Singapore PR மணமகனுக்கு மணமகள் தேவை
- 1979, பூராடம்,PHD,Engineer,Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை
- 1977, திருவாதிரை 2, Accountant,london citizen மணமகனுக்கு மணமகள் தேவை
- 1977, கேட்டை, IT Professional USA மணமகளுக்கு மணமகன் தேவை
- 1980, கார்த்திகை 3, Doctor, Sri Lanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1984, சித்திரை,Engineer,srilanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1984, திருவாதிரை, dental Doctor,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1982, அவிட்டம்,BSc Msc, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1988, சுவாதி 3, Nurse,Australia Citezen மணமகளுக்கு மணமகன் தேவை

MMW
Real Matrimony(Pvt)Ltd
இல.05, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel : 021 4923 739 / 864 / 738
WWW.realmatrimony.com ,E-Mail : support@realmatrimony.com

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

உங்கள் வீடுகளில் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றினூடாக மீண்டும் புதிய பொருள்கள் செய்து தரப்படும். உடைந்த கழிவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படும்.
இல. 06, ..., ..., கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: இல. 30/27, ..., ..., நல்லூர்.
Tel: 021 222 8680, 0775925088, 0750407430 (சி/6183)(2.6)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
30.01.1922



மறைவு
06.01.2013

## அமரர் சுப்பிரமணியம் சோதிலிங்கம்

(மண்டைதீவு — அல்லைப்பிட்டி)

கடந்த [06.01.2013] ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தஎமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று [03.02.2013] ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியம் நாளை மறுதினம் [05.02.2013] செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடை பெறும்.

அதனைத் தொடர்ந்து இல 527, நாவலர் வீதி,நல்லூரில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை [T.C.T] மண்டபத்தில் 12.30 மணியளவில் மதிய போசன நிகழ்வு இடம் பெறும். இந் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறி யோருக்கும், தொலை பேசி தந்தி மூலம் உள்நாடு,வெளிநாடுகளில் இருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மேலும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: இவ்வழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

32, அச்சுக்கூட வீதி,
கொக்குவில். (29128)(6.25.4) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் அன்னம்மா



(அம்மாக்கா)

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அன்னம்மா 30.01.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு, கந்தையா, பொன்னம்மா, சின்னம்மா, மாணிக்கம், சுப்பிரமணியம், தாமோதரம்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வாலாம்பிகை,சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.02.2013) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. (29095)(6.7.4)

தகவல்:
ந.இராசலட்சுமி (பேறாமகள்),
சு.யோகன் (மருமகன்).


## வீடு,காணி விற்பனை

செம்பாடு,மந்துவில் மேற்கில் அமைந் துள்ள 11 பரப்பு தோட்டக் காணியுடன் நல்ல வீடும் சேர்த்து விற்பனைக்கு உண்டு. நியாயமான விலையில் கொடுக்கப்படும். (c/5662)(3.6) தொடர்பு-0114578039

## கட்டடம் விற்பனைக்கு

தெல்லிப்பழை பழைய DRO இற்கு அருகில் மூன்று கடை கட்டடம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-0757627090,0770594789 (c/5661)(3.6.2)

# Study Abroad
வெளிநாட்டில் உயர்கல்வி

**UK (London)**
அடிப்படைத் தகைமை A/L or O/L
3 1/2 வருட வீசா
20 மணித்தியால பகுதி நேர வேலை வாய்ப்பு
IELTS இல்லாமலும் அனுமதி பெற வாய்ப்புக்கள்.

Express Service :
Visit Visa
Business Visa
Tourist Visa
to all Countries

**Canada - Student Visa + Work Permit**
கனேடிய கல்லூரிகளில் பல்கலைக்கழகங்களிலும் March/ April களுக்கான பாடநெறிகள் ஆரம்பம்.
அடிப்படை தகைமை : O/L மட்டுமே.

Student Visa to Japan
3 Months in Sri Lanka &
3 Month in Japan.

**Singapore / Malaysia**
Hotel முகாமைத்துவத் துறையில்.
6 மாதங்கள் சிங்கப்பூரில் கற்கைநெறி
பின்னர் – 6 மாதங்கள்
சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு.
அடிப்படைத் தகைமை O/L or A/L மட்டுமே.

**New Zealand / USA / Poland / Cyprus / Bulgeria**

GREENWICH COLLEGE
34, Galle Road, Dehiwala.
Tel : (011) 2713214
E: info@greenwich.lk,
w: www.greenwich.lk


Diploma / Degree
UK Certificates,
IELTS, A1, B1, B2
Exams & Certificates

Hotlines : 0777-341498, 072-8342490, 0722 419 418.


# மரண அறிவித்தல்

## தம்பு செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியர் (O.L.R), Personnel Manager
Mascons Asbestos Factory, Evinai - Ratmalana)



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செல்வராஜா 31.01.2013 வியாழக்கிழமை அமெரிக்காவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு- (நில அளவையாளர்), தங்கம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான நல்லையா (Attorney - at - law) - இராசமணி தம்பதியரின் மருமகனும், பாலேஸ்வரியின் அன்புக் கணவரும், Dr. மைதிலி (ஆஸ்திரேலியா), தயாபரன் (கணக்காய்வாளர் - லண்டன்), மகிலா (அமெரிக்கா) ஆகியோரின் தந்தையும் Dr.இராமநாதன் (ஆஸ்திரேலியா), மகாலட்சுமி (லண்டன்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் (சிங்கப்பூர்) மற்றும் செல்வராணி (லண்டன்), தேவராஜா (கனடா), வசந்தாதேவி (தெகி வளை), இந்திராணி (கனடா), ஆனந்தராஜா (கனடா), ரவீந்திர ராஜா (திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சறோஜினிதேவி (சிங்கப்பூர்), காலஞ்சென்ற E.K. சண்முக நாதன் மற்றும் சறோஜினி தேவி (கனடா), சுகுணதீரன் (தெகிவளை), காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் அனுஷா (கனடா), யோக ராணி (திருநெல்வேலி), காலஞ்சென்றவர்களான பாலசுப் பிரமணியம், பாலகிருஷ்ணன், இராஜேஸ்வரி, றூபா மற்றும் பாலேந் திரர் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், அபர்ணா (லண்டன்), அபிராமன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பாலேஸ்வரி செல்வராஜா,
தொ.பே. (718) 206 - 2770),
த.ரவீந்திரராஜா, 'நிருஹ தாரங்கி',
157, பலாலி வீதி, திருநெல்வேலி, தொ.பே. 077 1331 784,
திருமதி வசந்தாதேவி சுகுணதீரன்
(29098) (45.6.7) தெகிவளை, தொ.பே. 011 5621 485

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும், இல. 887, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பாலசிங்கம் 02.02.2013 காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் மகனும் இரத்தினத்தின் கணவரும் இரத்தினமாலா, இரத்தினகலா, இரத்தினலைலா, நிர்மலா, சசிகலா ஆகியோரின் தந்தையும் பாஸ்கரன், சாந்தகுமார், அகிலன், இங்கசா ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சிவசம்பு, மனோன்மணி, சரஸ்வதி மற்றும் சுந்தரலிங்கம், பஞ்சாட்சரதேவன், மகாலிங்கம், அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், இசைநாயகம் மற்றும் வசந்தாதேவி, சாரதாதேவி ஆகியோரின் மைத்துனரும், மயூரன், நிரோசன், துஸ்யந்தன், நிஷ்யந்தன், தினேஸ், கிரிசாந்தன், பிரவீன், லக்ஷன், மிதுஷன், அபிஷன், அனுஷ்கா, மிதுலேஸ்-நல்ஸ் ஆகியோரின் பேரனும் அரேனின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (03.02.2013) நடைபெற்று பிற்பகல் 5 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டக்கச்சி,
ஆறுமுகம் வீதி. (26324-6)

தகவல்
குடும்பத்தினர்
021 320 8087


## LONDON METROPOLITAN COLLEGE

புதிய பிரிவுகள் ஆரம்பம் - 05.02.2013



100% SUCCESS!
UK VISA பெறுவதற்கான பாடநெறி
Full Time & Part Time

**IELTS** ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Course Fee : 14,500/-

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
Duration: 20 hrs
Course Fee : 7,500/-

City & Guilds A1, A2, B1, B2
City & Guilds International. English for Speakers of Other Languages (ESOL) Diploma
Duration: 48 hrs
Course Fee: 14,500/-

197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மைக்கு சான்றாவோம்

இன்றைய ஞாயிறு சிந்தனையானது ''உண்மைக்கு சான்றுபகரும் பணி'' பற்றி சிந்திக்க நம்மை அழைக்கிறது. எம் ஒவ்வொருவருக்கும் இறைவன் ஒரு பணியைக் கொடுக்கிறார். மற்றவர்களின் பழிச்சொற்கள் வந்தாலும், மற்றவர்கள் நமக்கெதிராகப் போராடினாலும் நமது பணியை நாம் நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் இது இறைவனால் கொடுக்கப்பட்ட பணி. நாம் ஆற்றுகின்ற எல்லாப் பணிகளுமே இதற்குள் அடங்கும்.

யேசு தனது முப்பதாவது வயதில் மக்கள் மத்தியில் தன் பகிரங்கப் பணியை ஆரம்பித்தார். ''மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்'' என்ற தனது ஆரம்ப அடிப்படை போதனையோடு தன் பணியை ஆரம்பித்தார். இவ்வாறு கலிலேயாவின் பல்வேறு பகுதிகளில் தனது போதனைகளாலும், புதுமைகளாலும் மக்களின் வாழ்வை இறை வழியில் புதுப்பிக்கின்ற யேசு இன்றைய நற் செய்தியில் (லூக்.4:21-30) தனது சொந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து செபக் கூடத்தில் இறை வார்த்தையை வாசிக்கிறார். அவருடைய வார்த்தையைக் கேட்டதும் அங்கிருந்தவர்கள் ஆச்சரியம் அடைந் தார்கள். அவ ரைப் பாராட்டினார்கள்.




அவருடைய மீட்பின் நற் செய்திக்குமேலாகஅவர்கள்அவரிடமிருந்து புதுமையான வைகளைத் தான் எதிர்ப்பார்த்தார்கள். அவரோ, ''நான் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் இறைவாக்கினர் எவரும் தன்சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை'' என்று கூறுகின்றார்.

அவர் கூறியவற்றைக் கேட்டு அவர்கள் சீற்றம் கொண்டனர். அவரைத் தொலைத்துவிட எண்ணினர். அவரோ அவர்கள் நடுவே நடந்து அங்கிருந்து போய்விட்டார். அவருடைய நேரம் இன்னும் வராதமையால் அவர்களால் அவருக்கு எதுவும் செய்யமுடியவில்லை.

யேசு உண்மைக்கு சாட்சியம் பகர வந்தவர். அவர் உண்மையை எடுத்துரைத்தபோதெல்லாம் அவரின் சமூகப் பெரியோர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களின் வாழ்வின் பெயருக் கும்,பதவிக்கும், புகழுக்கும் இவர் தடையாக இருக்கிறார் என்று அவரை ஒழிக்கப் பார்க்கிறார்கள்.

இன்றைய சமுதாய வாழ்விலும் இறைவன் நம்மை இந்த இடத்தில் பிறக்க வைத்து ஒரு பணியையும் கொடுத்து அவைகளைத் துணிவோடு, அர்ப்பணிப்போடு, ஆர்வத்தோடு செயற்படுத்தப் பணிக்கிறார். உண்மைக்கு சான்று பகர அழைக்கிறார். யேசுவின் கரம் பிடித்து அன்போடு, அமைதியோடு, மகிழ்ச்சியோடு நாம் பெற்றுள்ள எந்தப் பணியையும் அவரின் ஆசீரோடு செய்வோம். வெற்றி காண்போம். மக்களுக்கு புதுவாழ்வு கொடுப்போம்.

**அருட்திரு அ.ம.ஸ்ரீபன்**




உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோல விழாவும் சங்காபிஷேகமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மாலை 5 மணிக்கு விசேட பூசை, வசந்த மண்டபப் பூசை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று கருணாகரப் பிள்ளையார் வீதி வலம் வரவுள்ளார். (3)

★ ★ ★

தென்மராட்சி, பெப்.3

மட்டுவில் வடக்கு லூர்த்து மாதா தேவாலய நவநாள் திருவிழா கடந்த முப்பதாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இன்று மாலை திரு நற்கருணை ஆராதனையும் திருப்பலிப் பூஜையும் இடம்பெற்று நாளை காலை 7மணிக்கு திருநாள் பாடற் பலி பூஜையும் திருச் சொரூப பவனியும் இடம்பெறும்.

சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத் தந்தை அருட்பணி யோசப் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் திருவிழா பூஜைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-9-131)

## மெய்வன்மைப் போட்டிகள்

வடமராட்சி,பெப்.3

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கே.கே.யோகநாதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலனும், சிறப்புவிருந்தினராக முன்னாள் உப அதிபர் திருமதி வி.சிவகுமாரனும் கலந்துகொள்வார்கள்.(3-8)

★ ★ ★

நெல்லியடி,பெப்.3

நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உல்லியனொல்லை ஆலய முன்றிலில் பாடசாலை அதிபர் நடராசா தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

போட்டிக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சிவஸ்ரீ பி.சண்முகநாதனும், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கி.கிட்டிணபிள்ளை சண்முகநாதனும், சிறப்பு விருந்தினராக நெல்லியடி வடக்கு கிராம அலுவலர் லோகீஸ்வரதேவன் சசிகாந்தனும் கலந்து கொள்வார்கள். (3-253)

★ ★ ★

தென்மராட்சி,பெப்.3

கைதடி எழுதிடல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் கலந்து கொள்வார். (3-9)

## மொழி உரிமை குறித்து மாணவரிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.3

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவால் பாடசாலை மாணவர்கள் இடையே ''மொழி உரிமையும் மனித நேயமும்'' எனும் தலைப்பில் கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தாய்மொழி அதன் முக்கியத்துவம், தாய் மொழியை இழக்க நேரிடுவதால் ஏற்படும் வேதனை தொடர்பாக பாடசாலை மாணவர்களிடம் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிக்கொணர்ந்து சமூகத்துக்கு வழிகாட்டும் நோக்குடன் இந்தக் கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

க.பொ.த.சாதாரண மற்றும் க.பொ.த.உயர்தர வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் ''மொழியும் மனித நேயமும்'' எனும் தலைப்பில் ''இலங்கையின் இனப் பிரச்சினைகளும் மொழி உரிமைகளும்'', ''மொழி உரிமைகள் மனித உரிமைகளே'', ''மொழி உரிமைகளும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வும்'', ''கலாசாரப் பன்மைத்துவத்தின் அடிப்படையாக மொழி உரிமைகள்'', ''மொழி உரிமைகளை மதிப்போம்'' ஆகிய உப தலைப்புகளில் ஏதாவது ஒன்றைப் பற்றியதாக கட்டுரைகளை எழுதலாம்.

ஆர்வமுடைய மாணவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக ''பொறுப்பதிகாரி, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 105, 05 ஆவது ஒழுங்கை, கொழும்பு, 03'' எனும் முகவரிக்கு பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் ''கட்டுரைப்போட்டி''எனக் குறிப்பிட்டு ஆக்கங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

இந்தப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் வெற்றி பெறும் ஆக்கங்களுக்கு முதலாம் பரிசாக 7ஆயிரத்து 500 ரூபாவும், இரண்டாம் பரிசாக 6 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 5 ஆயிரம் ரூபாவும், நான்காம் பரிசாக 3ஆயிரம் ரூபாவும், ஐந்தாம் பரிசாக 2 ஆயிரம் ரூபாவும், ஏனைய 5பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## திருவாசக முற்றோதல்

அரியாலை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. நாளை திங்கட்கிழமை உதய பூசையைத் தொடர்ந்து திருவாசக முற்றோதல் ஆரம்பமாகும்.

ஆலயத்தில் தைப்பொங்கல் திருநாளில் இருந்து திருமுறை முற்றோதல் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

**தருவது வித்தியா**

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?


**மேடம்:** பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் பழைய பொருள்கள் விற்பனையாகும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.


**இடபம்:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.


**மிதுனம்:** நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். புதிய வேலை கிடைக்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.


**கடகம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் அதிக இலாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.


**சிங்கம்:** விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் ஆர்வம் பிறக்கும். உத்தியோகத்தில் உங்களின் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.


**கன்னி:** எந்தக் காரியத்தை தொட்டாலும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வீண் பதற்றம் ஏற்படும். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். வியாபாரத்தில் பழைய கடன்களைத் திரும்பப் பெறுவீர்கள்.

**நாளை**

தை -22 திங்கட்கிழமை 04.02.2013

திதி: நவமி பி.இ. 02.13 வரை

நட்சத்திரம்: விசாகம் பி.ப. 02.47 வரை

சுபநேரம்: 12.35- 02.05 வரை

ராகுகாலம்: 08.05- 09.35 வரை


**துலாம்:** திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் மிகுதிகளைப் போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியை அனுசரித்துப் போங்கள்.


**விருச்சிகம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.


**தனுசு:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பழைய உறவினர், நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.


**மகரம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நட்பு வட்டம் விரிவடையும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். புத்துணர்ச்சி அதிகரிக்கும்.


**கும்பம்:** மனதில் இனம் புரியாத பயம் வந்து போகும். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகளை தவிர்ப்பது நல்லது.


**மீனம்:** தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது [illegible] உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | 8 | | 6 | | |
| 1 | | 2 | 6 | 7 | | | 5 | |
| | | 6 | 9 | 1 | | | | 4 |
| 2 | | | | | 7 | | 8 | |
| 6 | | 9 | 1 | | 3 | 2 | | 7 |
| | 1 | | 8 | | | | | 3 |
| 7 | | | | 3 | 6 | 9 | | |
| | 6 | | | 9 | 8 | 4 | | 2 |
| | | 5 | | 4 | 1 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 8 | 2 | 1 | 7 | 9 | 5 | 3 |
| 5 | 3 | 7 | 9 | 6 | 8 | 2 | 1 | 4 |
| 9 | 1 | 2 | 4 | 3 | 5 | 6 | 8 | 7 |
| 1 | 8 | 6 | 3 | 4 | 9 | 7 | 2 | 5 |
| 7 | 9 | 4 | 6 | 5 | 2 | 1 | 3 | 8 |
| 3 | 2 | 5 | 8 | 7 | 1 | 4 | 9 | 6 |
| 8 | 5 | 9 | 7 | 2 | 6 | 3 | 4 | 1 |
| 2 | 7 | 3 | 1 | 8 | 4 | 5 | 6 | 9 |
| 4 | 6 | 1 | 5 | 9 | 3 | 8 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 -9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 -9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 -9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை
## பழைய மாணவர் சங்கம்
## வருடாந்த ஒன்றுகூடல்-2013

எமது கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வும் பொதுச்சபைக் கூட்டமும் இன்று பிற்பகல் 4 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
புனித ஹென்றியரசர் கல்லூரி. (29127)(6.25.11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.01.1940

மறைவு
16.02.2012

### நல்லதம்பி மகாலிங்கம் (ஐயாத்துரை)

(திதி: 03.02.2013)

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடங்களோ ஒன்றாகின - அப்பா
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்.

இன்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

395/5, நாவலர் வீதி,
நல்லூர்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர். (29129) (45.6.7)

## முதலாம் ஆண்டு நினைவு



தோற்றம்
17.02.1963

மறைவு
15.01.2012

### அமரர் நந்தினி கருணாமூர்த்தி

மாண்டழிந்து போனாலும்
மறக்க மாட்டோம் எம் அன்னையே
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாது எம் கவலை
எம் கவலை சொல்லியழ
புவி தன்னில் யாருமில்லை

புதுத்தோட்டம்,
தெல்லிப்பழை (29126) (45.6.7)

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா திருஞானம்



போயிட்டி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருஞானம் நேற்று (02.02.2013) சனிக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் செல்லப்பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னு தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொற்கொடி தம்பதியரின் மருமகனும் அமிர்தலிங்கம், பராசக்தி, கணேசலிங்கம், சுந்தரலிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் தனரேகா, சிவராம், மாதங்கி, பிரியா, சந்திரா ஆகியோரின் பாசமிகு மாமனும் கரிசாலன், கீர்த்திகன், டக்சிகன், டனுசியா, காவியன், ஒவியா, அபிஷேகன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.29/35, நாவலடி லேன்,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

தகவல்
குடும்பத்தினர்

## வேலையாள்கள் உடன் தேவை

ஒரு பெண்மணியின் தலைமையின் கீழ் வீட்டில் இருந்தவாறு கேக் தயாரிப்பில் ஈடுபட ஆர்வமுள்ள மற்றும் பழக விரும்பும் 18-30 வயதுக்கு இடைப்பட்ட பெண் பிள்ளைகள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதி, 3 வேளை உணவும் இலவசம். (A/L, O/L முடித்து வீட்டில் இருப்பவர்களும் வேலை செய்ய முடியும்)
மேலதிக விவரங்களுக்கு- 0777563627

## வாடகைக்கு

டொயாட்டா பிக்கப் மாத வாடகைக்கு விடப்படும்.
(6191)(3.14) தொடர்பு-0714977019

## பழையவீட்டுக் கட்டடம் விற்பனைக்கு

பழைய தபாற்கந்தோர் வீதி கொக்குவில் (கொக்குவில் சந்திக்கு அருகில்)பழையவீடு இடிக்கக் கொடுக்கப்படும். கொள்வனவு செய்வோர் 10 நாள்களுக்குள் இடித்து எடுத்தல் வேண்டும்.
(29208)(14) தொடர்பு0752431018

## விற்பனைக்கு

நெல் உடைப்பதும், தீட்டுவதற்கும் உரிய மில் புதியது. விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 6081693

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வைத்தியசாலைக்கு அருகில் 02 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0776580889

## விற்பனைக்கு

WPND.xxxx இலக்கமுடைய 14 ஆசனங்களைக் கொண்ட முழு சொகுசு TATA Force (indian) வான் விற்பனைக்கு உண்டு.
(29203)(3.6.25) தொடர்பு-0777306049,0777642009

## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு பிரதேசத்தில் 3½ பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(29201)(3.6) தொடர்பு-0215660236,0775294484

## விற்பனைக்கு

QZ.xxxx தொடர் இலக்கமுடைய ஒரு கைப்பாவனை முச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு.
(29136)(3.6.25) தொடர்பு-0754985704

## விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோயிலடியில் பலாலி வீதியருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் தோட்டக்காணியும் விற்பனைக்குண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்ல இருப்பதால் சகாய விலைக்கு தரப்படும்.
(C/5875)(3.6.25) தொடர்பு-0772197194

## A/L Chemistry

General,Thermo,Organic,Physical chemistry துரிதகதியில் 20 வருட வினாத்தாள் மீட்கப்படும்.
ஆசிரியர்-(B.Sc(Cey), M.Sc(Cey))
(29028)(3.6) T.p-0776038913

## வாடகைக்கு அறை தேவை

பல்கலைக்கழக மாணவிக்கு திருநெல்வேலியை அண்டிய பகுதியில் அறைவேண்டும்.
(29135)(3.6.25) தொடர்பு-0779010661

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மன் / பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா / நியூஸிலாந்து ஆகிய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 12, 6, 3 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு
Saving Book - FD- Statement

விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகள் செய்து தரப்படும்.

077 4789289
077 9122334

No. 52 Davidson Road,
Colombo 04.
நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்துவிட்டு வரவும்.

FLEX Graphic

Study - Work in U.K

Diploma in
Health & Social Care ( Level 3)

# 17.5 Hours PAID WORK per week
# Additional 3 Months Full time work in Holidays
# Progress HND (Level 5) 2Yrs -with placement work

Qualification : G.C.E O/L + IELTS 5.0 + 1yr work experience

Admissions Open for Next Intake 2013

15 Months course with PAID PLACEMENT in the UK only 3,700£

ICS Study Overseas

தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna
021 7306000 , 077 3013060
www.icslanka.com

IMMEDIATE VACANCIES

WESTERN, NORTHERN, NORTH CENTRAL, NORTH WESTERN PROVINCES

SALES EXECUTIVES

- More than 3 Years experience in paints or Hardware field
- Age below 30 Yrs.
- Should be a self-motivated and result oriented Professional
- Preference will be given to candidates who have previous working EXPERIENCE IN ABOVE PROVINCES
- Fluent in English language is essential
- Should have a valid Driving License

GRAPHIC DESIGNER

We are looking for someone who has genuine interest and passion for print & design.

- Excellent attention to detail
- Previous experience working with a print services environment advantageous
- Should be able to work on Adobe Creative Suite (Photoshop, Illustrator& InDesign) and Corel Draw.
- Ability to Type Set in English,Sinhala and Tamil.
- Fluency in English , Sinhala & Tamil Translation would be an advantage.
- Age below 30Yrs

Apply with complete CV and indicating the post on the top left hand corner of the Envelope to reach us within 7 days to the address below.

General Manager,
C.P.T. CAUSEWAY PAINTS Lanka (pvt) Ltd.
15, Noel Mendis Mawatha
Modarawila Industrial Estate, Panadura

## ஓராண்டு நினைவஞ்சலி



மானிப்பாய் சங்குவேலியைச் சேர்ந்த

### அமரர் ஸ்ரீமதி நித்தியானந்த சர்மா சரோஜா அம்மையார்

நேர்ந்து தவமிருந்து பக்குவமாய்
பெற்றெடுத்து பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டி -
சிறப்பாக வையகத்தில் வாழ வழி காட்டி
நின்ற தவத்தாயே உன்
சிவப்பேறு நிறைவான ஓராண்டை
நினைத்தோம் அறி

சங்குவேலி, சிவஞானப்பிள்ளையார்,
மானிப்பாய். (C/6187)(6.25.11)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு வீடு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர்
பிரதேச செயலர்
பிரிவுகளுக்குள் அளவான வீடு
வாடகைக்கு உடன் தேவை.
தொடர்பு-0772671109 (C/6185)(3.6)

## கார் விற்பனைக்கு

Nissan Sunny,N16,Silver colour, good condition
தொடரிலக்கம் H4கொண்ட
கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு-0772975788 (29097)(3.6)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் பார்மசி ஒழுங்கை
சாத்தாவத்தை வைரவர்
அருகில் 8½ பரப்புக் காணி
பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு-0773655824 (29098)(3.6)

## தவறிவிட்டது

உரும்பிராய் வடக்கு, உரும்பிராயைச் சேர்ந்த இறஞ்சன் ரஜீர் என்பவரது தேசிய அடையாள அட்டை (862994230V), சாரதி அனுமதிப் பத்திரம்,யாழ். மாநகரசபை அடையாள அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் (30.01.2013) அன்று யாழ்.நகர்ப் பகுதியினுள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்
T.P-0770204142,0718627665 (29126)(3.6)

## தேவை

வீடு மற்றும் காரியாலயம்
(ஒரே கட்டட தொகுதியில்)

700 சதுர அடி
யாழ்ப்பாண நகர வளாகத்தில்

தொடர்புகளுக்கு 0722 352668

## கார் விற்பனைக்கு

ALTO K10 2012 Model கார் விற்பனைக்கு உண்டு.
9 lacks to hand + lease
தொடர்பு-0756479221 (29151)(3.6)

## ACT 16 MEDICAL LICENCE பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விசேட கற்கை நெறி யாழ். நகரில்

விசேட விரிவுரையாளர்களினால் மேற்படி மருத்துவப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு: 0774640770.

இடம்
Jaffna College Undergraduate Dept
464, Hospital Road, Jaffna.
யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக (29040)(6.26.4)

## வேலை வாய்ப்பு

காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவில் துடிப்பும் ஆர்வமுமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகருக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

* நீங்கள் விற்பனைத்துறையில் ஆர்வமுள்ளவரா?
* பகுதி நேர வேலைவாய்ப்பைத் தேடி நிற்பவரா?
* துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
* 18 வயதைக்கடந்தவரா?
* குறுகிய காலத்திலேயே அதிக வருவாயை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
* ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வம் உள்ளவரா?
* சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
* ஓய்வூதியரா?

இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரச நிறுவனமுமான எம்முடன் இணையுங்கள்.
தகைமை:G.C.E.O/L 6 பாடங்களில் சித்தி கணிதம்,தமிழ் அடங்கலாக
நீங்கள் எம்முடன் இணைந்தால்

* அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்
* வெளிநாட்டுச் சுற்றுலா
* ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ப பரிசில்களும்
* இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள்
* வாகன கடனுதவி
* போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
* தகைமைக் காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்குBANK, ASSURANCE , சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலை வாய்ப்பு மற்றும்EPF , ETF, வைத்தியசாலை கொடுப்பனவுகள்.

காப்புறுதியில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள்
இவற்றில் ஆர்வமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 15.02.2013 இக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விற்பனை முகாமையாளர்,
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
கண்டி வீதி,வவுனியா. T.P:024 2222 380. (27653)(6.26.4)

## விக்னா கல்வி நிறுவனம்

52,ஸ்ரான்லி வீதி,யாழ்.
**A/L Day Class** ஆரம்பம்-05.02.2013 8மணி
கலை,வர்த்தக வகுப்புகள் (C/6182)(3.6)

## Call today → Start tomorrow

சர்வதேச ரீதியில் 140 நாடுகளின் கீழ் இலங்கையில் 55 கிளைகளை கொண்ட எமது நிறுவனத்தில் புதிய தொழில் வாய்ப்பு பல்வேறு பகுதியில் வழங்கப்படுகிறது. இதில் ஆண்,பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம். அனைத்துப் பகுதிகளிலும் இருந்து 6 மாத கால பயிற்சியுடன் இணைத்துக் கொள்ளப்படுவர். இலவசமான பயிற்சியும், பயிற்சி காலத்தில் (10000/=, -15000/=) பெறமுடியும்.(தங்குமிடவசதியுண்டு)
தொடர்பு: 0217201521, 0778920777, 0770308484, 0777009820 (29086)(6.11)

## மரண அறிவித்தல்

### நல்லையா திருக்குமரன்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Thun ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா திருக்குமரன் கடந்த (30.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நல்லையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் (சுந்தரி-சுவிஸ்) அன்புக் கணவரும் கிரிசாந்தனின் (சாந்தன்- சுவிஸ்) அன்புத் தந்தையும் ராதாவின் (சுவிஸ்) அன்பு மாமனாரும் சிறியாவின் (சுவிஸ்) பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், சிவஞானம், சின்னத்துரை மற்றும் சரஸ்வதி, ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜேஸ்வரன், காலஞ்சென்றவர்களான சிவஜோதி, சுப்பிரமணியம் மற்றும் பவளம், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் நகுலேஸ்வரி, ராஜேஸ்வரி, காலஞ்சென்ற பவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மலிங்கம், சிவஜோகரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 01.02.2013வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம்05.02.2013 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி வரை Schonaustrasse 23, 3600 Thun, Schweiz, எனும் இடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு 06.02.2013 புதன்கிழமை மு.ப. 10.30 தொடக்கம் பி.ப3.00 மணிவரை Krematorium, Schonaustrasse 23, 3600 Thun, Suisse, என்னும் இடத்தில் தகனக் கிரியை நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காயாவீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு

சாந்தன் சுவிற்ஸர்லாந்து
+417 88749080

தகவல்
நகுலேஸ்வரி



## STUDIO 3000 DF.

*The Camera is only a tool,we make the* **difference...**

Bambalapitiya
0114003000
0710553000

| Galle Face Hotel | Mount Lavinia |
|---|---|
| 0114873000 | 0114973000 |
| 0718223000 | 0714443000 |

| Peliyagoda | Negombo |
|---|---|
| 0114853000 | 0114943000 |
| 0710663000 | 0714113000 |


www.3000.lk

(c/5871)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற வருடாந்த மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு இடம்பெற்ற வீதியோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற வீராங்கனை ஒருவருக்கு கிளிநொச்சி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டத் தலைவருமான த.குருகுலராசா பதக்கம் அணிவிக்கின்றார். (க-6)



பரந்தனில் இடம்பெற்ற பஸ் நிலையத் திறப்பு விழாவின்போது அதனை அமைத்து வழங்கிய ஆர்.இராஜரத்தினம் மங்கல விளக்கு ஏற்றுகிறார். கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் நா.வை.குகராசா நாடாவைவெட்டி பஸ் நிலையத்தைத் திறந்து வைக்கிறார். (க-6)




35 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள போதிலும் பயன்படாத நிலையில் காணப்படும் முரசுமோட்டை பொதுச் சந்தை. (க-6)



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் தலைவர் வி.சகாதேவன் தலைமையிலான குழுவினர் நடைபவனியில் ஈடுபட்டுள்ளனர். (க-12)



அக்கராயன் ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்ற பொங்கல் விழாவின் போது. (க-18)




வவுனியாவில் ஐ.எல்.ஓ. நிறுவனத்தின் நிதியுதவியுடன் பயிரிடப்பட்டுள்ள பப்பாசி மரங்கள். (க-402)




அக்கராயன் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு மருத்துவர்களினால் பற்சிகிச்சை வழங்கப்படுகின்றது. (க-18)



நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனால் வழங்கப்பட்ட 'பான்ட்' கருவிகளை வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினரான க.நாகரத்தினம் அக்கராயன் ஆரம்ப வித்தியாலய அதிபரிடம் கையளிக்கின்றார். (க-18)



கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தில் 2012 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்ற பா.சாரலன், ஐந்தாம் இடத்தைப் பெற்ற பா.பகீரதன் உட்பட சித்தியடைந்த மேலும் இரு மாணவர்கள் பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியைகளுடன். (க-18)



மன்னார் மடு வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர், அதிபர்களுக்கான இடர் பாதுகாப்பு நிகழ்ச்சி திட்டக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள். (ம-50)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்ற தரம் 1 மாணவர்களை அனுமதிக்கும் கால்கோள் விழாவின் போது விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். பாடசாலை

## வாடகைக்கு

டொயாட்டா பிக்கப் மாத வாடகைக்கு விடப்படும்.

(6191)(3.14) தொடர்பு-0714977019

## தேவை

United Colour Separation நிறுவனத்துக்கு Graphic Designer தேவை

**Contact : St.Xavier's Lane, Mallagam, Jaffna. 0777347452** (c-3889)

## காணவில்லை

வெள்ளைநிற பொமேரியன் நாய்க்குட்டியை 31.01.2013 தொடக்கம் காணவில்லை. மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்குமிடையில் தவறிவிட்டது. தகவல் தெரிந்தவர்கள் "பமிலிசுப்பர்" மானிப்பாய் எனும் முகவரிக்கு அல்லது தொலைபேசி இல.0773946487 உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை புவனேஸ்வரி (பவளம்)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்காலிகமாக கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை புவனேஸ்வரி (02.02.2013) நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்துரை வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், றஞ்சனாதேவி, பிரேமாதேவி(கொழும்பு), சுலோஜனா, ரவிதரன்(சுவிஸ்), சசிதரன், சிறீதரன்(சுவிஸ்), ஜெசிதரன்(வைத்தியர், யாழ் போதனா வைத்திய சாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரேமகுமார், லோகராஜா (கொழும்பு), தயாளன்(இலங்கை வங்கி, மானிப்பாய்), சிறிநளினி(சுவிஸ்), சாந்தினி, சுமதி(சுவிஸ்), யாழினி(வைத்தியர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, நடேசு, சண்முகம்பிள்ளை, இராசதுரை(சின்னக்கிளி), கனகரட்ணம் மற்றும் வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோகுலன், கார்த்தீபன்(லண்டன்), உதயதீபன்(லண்டன்), ஞானதீபன்(லண்டன்), கஜாளினி, தர்ஷிகா, வினோஜன், வினுசா, யதுசாயி, சுபானுஜன், யதுர்சன், டினுஜன், டிலக்சி, லதுர்ஷன், பவித்திரா, ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2013) மு.ப.11 மணியளவில் அவரது இல்த்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் லேன்.
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
சசிதரன்(மகன்), ஜெசிதரன்(மகன்)

## மணமகன் தேவை

| ஆண்டு | நட்சத்திரம் | செவ்வாய் குற்றம் | செவ்வாய் இல்லை | மொத்த கிரகபாவம் | தொழில் | எதிர்பார்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1981 | அனுசம் | ✓ | — | 53 ½ | BANK | BANK அரசதொழில் |
| 1992 | உத்தராடம் | — | சூரி, செவ் | 14 ½ | A/L, COMPUTER | லண்டன் கனடா |
| 1983 | உத்தராடம் | ✓ | — | 52 ¾ | ENGINEER | லண்டன் ஆஸ்திரேலியா |
| 1984 | சுவாதி4ஆம் | ✓ | — | 87 | BANK | லண்டன் ஆஸ்திரேலியா |
| 1971 | திருவாதிரை | ✓ | — | 54 | ஆசிரியர் | சுயதொழில் |
| 1976 | மகம் | ✓ | — | 75 | ENGINEER | ENGINEER DOCTOR லண்டன் |
| 1982 | மகம் | — | ✓ | 32 | A/L | கடை வெளிநாடு |
| 1986 | மூலம் | ✓ | — | 49 ¼ | B.Sc | BANK அரசதொழில் |
| 1980 | திருவாதிரை | செவ். சனி ✓ | — | 77 | ஆசிரியர் | அரச தொழில் |
| 1985 | பரணி | ✓ | — | 40 | B:COM | அரச தொழில் |
| 1984 | மகம் | ✓ | — | 54 ¼ | B.COM | லண்டன். கனடா |

மேற்குறிப்பிட்ட யாழ். இந்து கௌரவ குடும்ப மணமக்களிற்கு தகுந்த மணமகன்மார் தேவை. அத்துடன் வெளிநாட்டு பிரஜா உரிமை பெற்ற மணமகள், மணமகன், டொக்டர், இஞ்சினியர், எக்கவுண்டன், வர்த்தகர், சுயதொழில் புரிபவர், தாரமிழந்த மணமகன்மார்கள், மணமக்கள்மார்கள் குறிப்புகள் துல்லியமான கணிப்பீட்டுடன் கோவைப்படுத்தப்பட்டுள்ளன. சர்வதேச இணைப்புக் கொண்டது

சந்திக்கும் நேரம்:-
காலை 6.00 - 8.00 மாலை 4.00 - 9.00
(தொலைபேசி மூலம் முற்பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்)

இணைப்பாளர்:-
ஸ்ரீநாகபூஷணி அம்பாள் திருமணசேவை
(மாதாஜிலிங்கேஸ்வர ஆலயம் அருகாமை)
கைதடி கிழக்கு கைதடி.

தொ.பே.:- 077 519 3493
075 242 7915
077 959 0442
077 918 4646
077 978 2033
Fax:- 021 223 0049
E.mail:- kaithadycom@gmail.com

## பண்டத்தரிப்பு ஓய்வூதியம் பெறுவோர் சேமலாப நலன்புரி ஐக்கிய சங்கம் (பதிவு இல.யா/1758)

சகல அங்கத்தவர்களுக்கும்,

பின்வரும் விவரங்களை 15.02.2013 இக்கு முன்னர் செயலாளர், **பண்டத்தரிப்பு ஓய்வூதியம் பெறுவோர் சேமலாப நலன்புரி ஐக்கிய சங்கம், கிராமிய வங்கி, பண்டத்தரிப்பு** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

### அந்தியகால சேவை - நன்கொடை வழங்கல்

1. அங்கத்தவர் பெயரும் இலக்கமும் :-..........................................
2. விலாசம் :-..........................................
3. ஓய்வூதிய இலக்கம் :-..........................................
4. அந்தியகால சேவை அங்கத்தவர் இலக்கம் :-..........................................
5. பின் உரிமையாளர் பெயர் :-..........................................
6. அங்கத்தவர்களுக்கு உறவு முறை :-..........................................
7. விண்ணப்பதாரரின் ஒப்பம் :-..........................................

**சிற்றம்பலம் நமசிவாயம்**
**தலைவர்.**

(C/6179)(6.25.11)

# CIMA-UK

## Certificate Level (Foundation)

Starts on 16-02-2013 (Saturday 9.00am)

## Scholarships

worth Rs 1000,000
Based on A/L Results
[only for first 100 students]



Your Studies
Your Future
Your Choice

## CAPSTONE

154 A/1, Navalar Road, Jaffna
Tel : 021 222 0727, 021 720 0777

Admissions Open



BSc Biotechnology, Microbiology, Biochemistry

BSc Chemistry, Geology, Environment Science

BSc Chemistry, Food Science, Botany

All 3 years in Sri Lanka.
Also Available BSc Mathematics, Statistics & Physics

## University of Mysore

in Sri Lanka

Spectrum Institute of Science and Technology
190, Galle Road, Colombo - 00400.
(+94) (011) 2554848, (+94) (011) 2504742
info@spectrumcampus.edu.lk
www.spectrumcampus.edu.lk

Hot Line:
077 2278927
075 5459588

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது கனகரத்தினம் ம.ம.வி.

**கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி வீரர்களின் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாமல் 27.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கு களையும் இழந்து 81 ஒட்டங்களை மட்டும் பெற்றது.**

வவுனியா,பெப்.3

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவு அணிகளிற்கு இடையிலான பிரிவுக்கான கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் கனக ரெத்தினம் மகா வித்தியாலய அணி 10 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த வாரம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டன.

முதலில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்த வரோதயாக் கல்லூரி அணி 48.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 133 ஒட்டங்களைப் தமது அணி சார்பாக பெற்றனர்.

இதில் ஜனக்ஷன் 76 ஒட்டங்களயும், நிரோஜன் 12 ஒட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் அணி சார்பில் கலைச்செல்வன் வதயசுபேசன் ஆகியோர் முறையே தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய கனக ரெத்தினம் மத்திய வித்தி யாலயம் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 197 ஒட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் விதுர்ஷன் 43 ஒட்டங்களையும் தர்ஷன் 32 ஒட்டங்களையும், தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி அணி சார்பில் ஜனக்ஷன் 4 இலக்குகளையும், சிந்துஜன் நிரோஜன் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

64 ஒட்டங்கள் பின் தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸிற் காக துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி வீரர்களின் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாமல் 27.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 81 ஒட்டங்களை மட்டும் பெற்றது. இதில் ஜனக்ஷன் 33 ஒட்டங்களை பெற்றார்.

மற்றைய வீரர்கள் ஒற்றை இலக்கு ஒட்டத்துடன் ஆட்டம் இழந்தனர்.

பந்து வீச்சில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சார்பில் பிரசாந்த 5 இலக்குகளையும் வீழ்த்தினர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டியில் இன்று வெள்ளிக் கிழமை மோதவுள்ள அணிகள் வருமாறு-

பிற்பகல் 3மணி

கைதடி வளர்மதி வி.க. எதிர் ஆலடி சிந்து வி.க. 'ஏ' அணி

பிற்பகல் 4 மணி

சண்டிலிப்பாய் உதயசூரியன் வி.க எதிர் மாவைக் கலட்டி உதயதாரகை வி.க

★ ★ ★

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடி போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை இளஞ்சுடர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் குறித்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.

★ ★ ★

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லேப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் குறித்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்கள் மோதும் .

★ ★ ★

வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

★ நியூட்டன் வி.க. அணி எதிர் பாசையூர் சென்.அன்ரனிஸ் வி.க.

★ ★ ★

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டம், கபடிப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் குறித்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்கள் மோதும்.

(த-9-23-100)

# ஊர் சுற்றும் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விவரம்






யாழ்ப்பாணம்,பெப்.3

வடமாகாண ஊர் சுற்றும் போட்டி கடந்த வாரம் வவுனியாவில் இடம்பெற்றது. இதில் ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம்:-

**ஆண்கள் பிரிவு**

1 ஆம் இடம்-கே.நவநீதன் (வவுனியா மாவட்டம்)

2ஆம் இடம்- ஆர்.றஜீகரன் (யாழ்.மாவட்டம்)

3 ஆம் இடம்-பி.பிசத்த (முல்லைத்தீவு மாவட்டம்)

4 ஆம் இடம்- புவிந்திரன் (வவுனியா மாவட்ட)

5 ஆம் இடம்- பி.நிமேஸ் (கிளிநொச்சி மாவட்டம்)

6 ஆம் இடம்- ஜே.எம். எஸ்.என்.குமரா (வவுனியா மாவட்டம்)

7 ஆம் இடம்-எஸ்கணேஸ்வரன் (யாழ்.மாவட்டம் )

8 ஆம் இடம்-கே.சதீஸ்குமார் (வவுனியா மாவட்டம்)

9 ஆம் இடம்- அன்ரன் டேய்மன் (கிளிநொச்சி மாவட்டம்)

10 ஆம் இடம்-ரி.தேவராஜா (முல்லைத்தீவு மாவட்டம்)

**பெண்கள் பிரிவு**

1 ஆம் இடம்-ஆர்.சாளினி (வவுனியா மாவட்டம் )

2 ஆம் இடம்- எஸ்.கேமா (முல்லைத்தீவு மாவட்டம்)

3 ஆம் இடம்-எம்.வினிஜினி (வவுனியா மாவட்டம்)

4 ஆம் இடம்-கே.நிர்மதி (வவுனியா மாவட்டம்)

5ஆம் இடம்-என்.சுமதி (யாழ்.மாவட்டம்)

6 ஆம் இடம்-விமலதேவி (கிளிநொச்சி மாவட்டம்) (த-23)

# இறுதி ஆட்டத்துக்கு புதியபாரதி, இளந்தென்றல்

யாழ்ப்பாணம் பெப்.3

கரைச்சிபிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்டபதிவு செய்யப்பட்டவிளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலானஆண்,பெண் இருபாலருக்குமானகரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டத்தில் புதியபாரதிவிளையாட்டுக் கழகம் இளந்தென்றல் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் புதியபாரதி விளையாட்டுக் கழகஅணியை எதிர்த்துகிருஸ்ணபாரதி விளையாட்டுக் கழகஅணி மோதிக்கொண்டது.

3 சுற்றுக்களைக் கொண்ட ஆட்டத்தில் புதியபாரதி விளையாட்டுக் கழகஅணி 25:18, 25:22 என்றபுள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது

இரண்டவது அரையிறுதியாட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மருதநிலாவிளையாட்டுக் கழக அணிமோதிக்கொண்டது.

3 சுற்றுக்களைக் கொண்ட ஆட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகஅணி 25:20 25:18என்றபுள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

# வென்றது அரியாலை ஐக்கியம்

வலி.வடக்கு,பெப்.3

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்தும் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்துக்கான 30 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டம் ஒன்றில் அரியாலை ஜக்கிய விளையாட்டுக் கழகம் 167 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற போட்டி ஆட்டத்தில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பொர்ஸ் விளையாட்டுக் கழகமும் ,அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில்துடுப்பெடுத்தாடிய அரியாலை ஜக்கிய விளையாட்டுக் கழகம் 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 210 ஓட்டங்களை பெற்றது.

சுதர்சன் நான்கு பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக62ஓட்டங்களையும், றொகான் ஆறு பவுண்டரிகள் மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 52 ஓட்டங்களையும், கிருபா ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும், வினோதன் 16 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 26 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கிறாஸ்சொப்பொர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரவி 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து விசி 21 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பார்த்திபன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுக்கு 38 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பெர்ஸ் விளையாட்டுக் கழகம் 15.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 43 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் நிரோசன் 13 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 13 ஓட்டங்கள் பெறப்பட்டன.

அரியாலை ஜக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தர்சன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றத்துடன் 3 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் றொசான், கவிந்தன், நிரோஜன் ஆகியோர் முறையே 2 ,9 ,11 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கினையும் கைப் பற்றினர்.

(த-86)




நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் கடந்த வாரம்கொண்டலடி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இதில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக வீரர்கள் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் பிரசன்னாவும் காணப்படுகிறது. (த-23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிதாபநிலையில் பாகிஸ்தான்

தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் தொடரின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 49 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து தடுமாறுகிறது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிவரும் பாகிஸ்தான் அணிக்கும் தென்னாபிக்க அணிக்குமான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் நியூ வன்டீரிஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன் பிரகாரம் முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 253 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அணி சார்பில் கலிஸ் 50 ஓட்டங்களையும், டியூ பிளஸிஸ் 41 ஓட்டங்களையும், அம்லா 37 ஓட்டங்களையும், வில்லியஸ் 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.




உமர்குல் ஆட்டமிழந்து வெளியேறுகிறார்

பாகிஸ்தான் அணி சார்பில் மொஹமட் ஹபீஸ் மிகவும் சிறப்பாகப் பந்துவீசி, 16 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றினார். உமர்குல், யுனைட்டற் கான் தலா இரு இலக்குகளையும், யுனிஸ்கான் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி முதல்நாள் ஆட்டநேர முடிவில் எந்தவித இலக்கிழப்பின்றி, 6 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.




யுனைட்டட் கான்

இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. முதல் நாள் ஆட்டத்தில் பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்டு, தென்னாபிரிக்க அணியை குறைந்த இலக்குகளுக்குள் கட்டுப்படுத்தி, வலுவான நிலையில் இருந்த பாகிஸ்தான் அணிக்கு இரண்டாம்நாளில் பிரகண்டம் தொடங்கியது.



முதல்நாள் ஆட்டத்தில் அசத்திய கபீஸ்

தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களின் பந்துகளுக்கு முகம் கொடுக்க முடியாது திணறிய, பாகிஸ்தான் அணியால் வெறும் 49 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது. தென்னாபிரிக்க அணி சார்பில் மிகவும் சிறப்பாகப் பந்துவீசிய ஸ்ரியென் 8 ஓட்டங்களை மாத்திரம் பாகிஸ்தான் அணிக்கு வழங்கி சுமார் 6 இலக்குகளைப் பறித்தெடுத்தார்.



மிஸ்பா உல்ஹக்

பாகிஸ்தான் அணி சார்பில் அஸார் அலி (13), அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக் (12) இருவரும் மாத்திரமே இரட்டை இலக்க ஓட்டங்களைத் தொட்டனர். ஏனைய வீரர்கள் எவரும் பெரிதாக சோபிக்கவில்லை.

ஸ்ரியென் 6 இலக்குகளையும், பிளின்டர், கலிஸ் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காக தற்போது ஆடிவரும் தென்னாபிரிக்க அணி, இலக்கிழப்பின்றி 45 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பீற்றர்ஸன் (16), ஸ்மித் (24) ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். (16)

# மீண்டும் ரோஸ் ரெய்லர்

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணிக்கும், நியூசிலாந்து அணிக்குமிடையிலான 20/20 சர்வதேசப் போட்டித் தொடருக்கும், ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்குமான நியூசிலாந்து குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.



3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளும், மூன்று 20/20 சர்வதேசப் போட்டிகளும் இடம்பெறவுள்ளதுடன், முதலாவது போட்டியாக எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதி 20/20 சர்வதேசப் போட்டி இடம்பெறவுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில் நியூசிலாந்து அணியின் தலைமைப் பதவியிலிருந்து அண்மையில் நீக்கப்பட்ட ரோஸ் ரெய்லர் சேர்க்கப்பட்டுள்ளார். தென்னாபிரிக்கத் தொடருக்கு முன்னதாக அணித்தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ரோஸ் ரெய்லர், அதன் பின்னர் அந்தத் தொடரிலிருந்து விலகியிருந்தார். இந்நிலையிலேயே இந்தத் தொடரில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தொடரில் நியூசிலாந்து அணியின் பிரதான வீரர்களான டானியல் விட்டோரி, ரிம் சௌதி ஆகியோர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இருவருக்கும் ஏற்பட்ட உபாதைகளிலிருந்து அவர்கள் குணமடையாததன் காரணமாகவே இந்தத் தொடரில் சேர்க்கப்படவில்லை.

பிரெண்டன் மக்கலம், ட்ரெண்ட் போல்ட்ற், இயன் பட்லர், கிராண்ட்ற் எலியட், அன்ரூ எலியஸ், ஜேம்ஸ் ஃபராங்ளின், மார்ட்டின் கப்ரில், ரொனி ஹீரா, மிற்சல் மக்லநகன், நேதன் மக்கலம், கொலின் முன்ரோ, ஹேமிஸ் ரதர்போர்ட், ரோஸ் ரெய்லர் ஆகியோர் 20/20 குழாமில் பங்குகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரெண்டன் மக்கலம், ட்ரெண்ட் போல்ட்ற், கிராண்ட் எலியட், அன்ரூ எலியஸ், ஜேம்ஸ் ஃபராங்ளின், மார்ட்டின் கப்ரில், மிற்சல் மக்லநகன், நேதன் மக்கலம், கைல் மில்ஸ், கொலின் முன்ரோ, ரோஸ் ரெய்லர், பஜே.வற்லிங், கேன் வில்லியம்ஸன் ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் பங்குகொள்வர் என்வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்துக்கு இந்தியா மீண்டும் எதிர்ப்பு

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு சர்வதேசக் கிரிக்கெட் சபை புதிதாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மீண்டும் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. அத்தோடு போட்டிகளைப் புறக்கணிப்பது தொடர்பான எச்சரிக்கையையும் வெளியிட்டுள்ளது.

சர்வதேசக் கிரிக்கெட் சபை அண்மையில் மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைவாக போட்டிகளில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் போட்டிகளை நடாத்தும் நாட்டின் விருப்பம் மட்டும் போதுமானது என்பதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சித்து வருகிறது.

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்துக்குத் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்துவரும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இந்தப் புதிய நடைமுறைக்குத் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், அவ்வாறு இந்தியா பங்குகொள்ளும் தொடரொன்றில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் பயன்படுத்தப்படுமாயின் அந்தத் தொடரைப் புறக்கணிக்க வேண்டியேற்படும் எனவும் எச்சரித்துள்ளது.

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தில் பயன்படுத்தப்படும் தொழிநுட்பங்கள் 100 சதவீதம் சரியானவையல்ல என்பதைத் தொடர்ந்தும் வலியுறுத்திவரும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, அது நம்பக்கைக்குரியதல்ல எனத் தொடர்ந்தும் தெரிவித்து வருகிறது. தற்போதைய நிலையில் போட்டித் தொடரில் பங்குகொள்ளும் இரண்டு நாடுகளும் சம்மதித்தால் மாத்திரமே ஒரு தொடரில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு கனடா பழைய மாணவர்களினால் புதிதாக அமைக்கப்பட்ட அலங்கார வளைவுடனான புதிய நுழைவாயிலை பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ச.ஏகாம்பரநாதன் திறந்து வைக்கின்றார். (வ)



வலி.தென்மேற்கு மற்றும் பல பிரதேசங்களில் கைவிடப்பட்டவர்கள், அநாதைகள், ஏழைகள், சிறுவர், முதியவர்களுக்குப் பல்வேறுபட்ட சமூக உதவிகளை வழங்கிய நவாலியூர் செல்லத்துரை மகேந்திரனுக்கு நவாலி ஹேமலதா சிறுவர் ஞாபகார்த்த நிதியம் 'சமூகமணி' எனும் கௌரவ பட்டத்தையும் உயர் விருதையும் வழங்கியது. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.மேற்கு உறுப்பினர் த.நடனேந்திரன் அவரைக் கௌரவிக்கிறார். (ம-41)



மானிப்பாய் பொலிஸார் காக்கைதீவில் அண்மையில் நடத்திய பொலிஸ் நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டையைத் தொலைத்த நபர் ஒருவரின் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டு அதற்கான பதிவுப் பிரதியை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மல்கம் பேத் உடனே வழங்குகின்றார். (வ-100)





தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். (ம-86)



வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார். (வ-50)



சுன்னாகம், நாகேஸ்வரி வித்தியாசாலை கால்கோள்விழாவின் போது வித்தியாசாலை அதிபர் கு.ரவீந்திரன் மங்கல விளக்கேற்றுகிறார். (ம)



காரைநகர் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை இணைப்பதற்கான கால்கோள் விழாவை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு நிலை அதிபர் கா.குமாரவேல் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். (ம-250)



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கால்கோள் விழாவில் பெற்றோருடன் மாணவர்கள் அமர்ந்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.ebuybazaar24.com **Online Shop & Matrimony**
www.ebb24.com உலகத் தமிழர்களை திருமண பந்தத்தில் இணைக்கும் பாலமாக இணையத்தில்
EBB PROPOSAL இப்போது இனிய உதயம்!
உங்கள் துணையை எங்கள் இணையத்தில் தேடுங்கள்!
இலவச பதிவு, சீதாசகருக்கு இலவச சேவை!
அறிமுகச்சலுகை! 1வருட சேவைக்கட்டணம் 3990.00
[இச்சலுகை எதிர்வரும் 28.02.2013 வரை மட்டுமே]
இணைய வசதிகள் இல்லாதவர்கள் இலவச விண்ணப்பப்படிவத்திற்கு அழையுங்கள்.
தொலைபேசி: 021 791 7470
**www.ebb24.com**
இலங்கையில் நீங்கள் எந்த மூலையில் இருந்தாலும் உள்ளூர் அலுவலகத்தில் பணம் செலுத்தி சாதிகளை வாங்கலாம்!

## யாழ். மற்றும் வவுனியா நகரில் Diploma in Mass Media

### அறிவிப்பாளர் பயிற்சி

(2ஆவது பிரிவு 16 மாணவர்களுடன் வெற்றிகரமாக நிறைவு பெற்றதைத் தொடர்ந்து 3 ஆவது பிரிவு ஆரம்பம் 10.02.2013 காலை 9.00) வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக ,தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா!

இதோ...

வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களே நீங்களும் அரச,தனியார் வானொலி தொலைக்காட்சிகளிலும் நீங்களும் அறிவிப்பாளர் ஆகலாம்.

(Diploma in Mass Media)

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு- நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத்தயாரிப்பு ,நேரடி வர்ணணை, செய்தி வாசிப்பு இன்னும் பல பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 05 நாள் மழைFM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்.

வவுனியா,முல்லைத்தீவு மாணவர்கள்
Sun British College
No-26 Station Road
Vavuniya (27640) (3.6)
0777929475.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாணவர்கள்.
IISEEE NALLUR CAMPUS
No-72,Point Pedro Road,
NALLUR, JAFFNA
0777929475, 0212224728.

எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற் கொண்ட மாணவர்கள் அரச ,தனியார் , வானொலி, தொலைக் காட்சிகளில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றார்கள்.

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111

### டொல்பின் வாகனம் விற்பனைக்கு

182 தொடர் இலக்க டொல்பின் விற்பனைக்குண்டு.வெள்ளை நிறம் நீட்டு மொடல் Dual Ac,Alloyweel நல்ல நிலையில் உள்ள டொல்பின் உடனடியாக விற்பனைக்குண்டு.லீசிங் வசதிகள் உண்டு. உடன் அழையுங்கள்- 0773727376 (27646)(3.6.7)

### விற்பனைக்கு

சில மாதங்கள் மட்டுமே பயன் படுத்திய உடற்பயிற்சி இயந்திரம் ஒன்று விற்பனைக்கு உள்ளது.
(29027(3.6.25) தொடர்பு-0779550363

### A/L Day Class

கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்-04.02.2013 திங்கள் 8.00 மணி
* வழமையான ஆசிரியர் குழாம்.
**NEW ECONOMICS COLLEGE**
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர் (பெருமாள் கோவில் அருகில்)

advt@uthayan.com
0215671111

### வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 227-XXXX தொடரிலக்கமுடைய ISUZU TIPPER (01.கியூப்) விற்பனைக்குண்டு.
(29102)(3.6.25) தொடர்பு 0777111717

### காணி விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு ஞான வைரவர் கோயில் வடக்குப்பக்க முன் ஒழுங்கையில், 300m தூரத்தில் வீட்டுடன் சேர்ந்த 5½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-0777675097 0777065366 (29061)(3.6.7)

## DCM

யாழ். நகர்
A/L Day Class
கலை, வர்த்தகம்
05.02.2013
காலை 7மணி

### விற்பனைக்கு

சில காலம் பாவித்த Nokia கைத்தொலைபேசிகள் (Nokia -E5, C2, LG-5365) கண்ணாடி சாப்பாட்டு மேசை, Hero Honda பிளஷர் மோட்டார் சைக்கிள் (கறுப்பு) விற்பனைக்குண்டு.
0721869299 (29068)(6.7.4)

## நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, சைப்பிரஸ், கனடா, இங்கிலாந்து, மலேசியா, லிதுவேனியா, போலந்து, அமெரிக்கா

Student Visa - 1 மாதகாலம்
Visit Visa (சென்றுவர) - 10 வேலை நாள்கள்
Family Visa (குடும்ப விசா) - நாடுகளைப் பொறுத்து காலம் வேறுபடும்.

சட்ட ஆலோசனைக்கு
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016 (29836)(3.11)



எல்லா நாள்களும் காலை 8.30 - பி.ப 6.30 வரை திறந்திருக்கும்

## வேலையாள்கள் தேவை

சங்கென் கொன்ஸ்ரக்சன் ஸ்தாபனத்தின் கட்டடம்கட்டும் வேலைத்தளங்களுக்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை.

- சட்டறிங் வேலை தெரிந்த தச்சு வேலையாள்கள்
- கம்பி வேலை செய்யக்கூடிய பார்பெண்டர்ஸ்
- மேசன் தொழிலாளிகள்
- தொழிலாளிகள்
- எலக்ரிசியன்ஸ்
- பிளம்பர்ஸ்


விபரங்களுக்கு
0777069953 (துளசி மஹால் - சுச்சேரிபடி)
0771256918 (தெல்லிப்பழை - கான்சர் ஆஸ்பத்திரி)
0772293922 (அராலி வேலைத்தளம்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிறந்த சமூக சேவையாளர்களும், தீவக லயன்ஸ் கழக உறுப்பினர்களும், சமாதான நீதிவான்களும் ஆகிய


Lion.S.Balakumar.J.P


Lion K.Elambotharan J.P


Lion. A.Shanthalingam J.P


Lion. A.Sabanathan J.P


Lion. S.Sivapathasundaram J.P

ஆகிய ஐவருக்கும் "தேசமாணி" "தேசபந்து" "விஸ்வகீர்த்தி" "லங்காபுத்திர" எனும் கௌரவப் பட்டங்கள் இலங்கை Whole Ceylon Nena Guna Foundation அமைப்பால் Nuwaraeliya "Hotel Angel Park" இல் 28.01.2013 அன்று வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதை முன்னிட்டு இதயபூர்வமான வாழ்த்துக்களை

புங்குடுதீவு நண்பர்கள்.

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
முதன் முறையாக அறிமுகப்படுத்தும்
**Advanced Diploma in English**

**இக்கற்கை நெறியானது:-**

உயர்தர ஆங்கில Diploma வும் ஆங்கில மொழி கற்பதும் 6 மாதங்கள் அடங்கிய நிறைவான பல அம்சங்களைக் கொண்ட ஒரு கல்விநெறி. இந்நெறி ஆங்கில இலக்கியத்தினையும் பிரயோக மொழியினையும் பேச்சையும் உள்ளடக்கிய ஒன்றாகும். இவை பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- ◈ ஆங்கில மொழியையும் ஆங்கில இலக்கிய அறிவையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்கும் மேலும் மொழியைச் சிறப்பாகக் கற்று அதற்கு வேண்டிய தகமையை ஏற்படுத்த உதவி செய்யும்.
- ◈ மேலும் ஆங்கிலத்தினைப் பகுத்து வகுத்து விரிவாக்கி ஆங்கில இலக்கியத்தினூடாகவும் அவையல்லாத ஏனைய நூல்களுக்கூடாகவும் அறிவைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும்.
- ◈ ஆங்கில அறிவைப் பெற்று மேலும் அதை விருத்தியாக்கி அதோடு சேர்த்து ஏனைய துறைகளும் அடங்கிய மொழியியல், ஆங்கிலம் கற்பித்தல் போன்றவற்றை உருவாக்க உதவி செய்யும்.
- ◈ இந்த நெறி ஆங்கிலத்தில் சரிவர விளங்கிக் கொள்ளவும் அதோடு ஆங்கில அறிவையும், இலக்கியத்தினையும் விருத்தி செய்ய உதவும்.

**விசேடமாகக் கவனிக்க வேண்டியவை**

- ஆங்கிலத்தில் உயர்தரத் தகமை பெற்றுக்கொள்ள முடியும்.
- அரசாங்க நிறுவனங்களில், தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெற உதவும் கற்கை நெறி.
- எதிர்காலத்தில் ஆங்கில ஆசிரியராக வர இருப்பவர்களுக்கான கற்கை நெறி.
- ஆரம்பநிலை ஆங்கில ஆசிரியர்கள் உயர்தர நிலைக்கு இக்கற்கை நெறியைக் கற்பதன் மூலம் தம்மை மாற்றிக் கொள்ள முடியும்.

காலம் : 6 மாதம்

Week Days 9.00 - 12.00, 3.00 - 5.00
Week Ends 11.30 - 1.30, 3.00 - 5.00

புதிய வகுப்புக்கள் Batch I - 01.02.2013 Batch II - 04.02.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

## பல்கலைக்கு தெரிவான மாணவர்களுக்கு SPOKEN ENGLISH

A/L இல் வெற்றி... பல்கலையிலும் வென்றிட...

இலவசம் ஆங்கிலப் பாடநெறியில் கலந்து கொள்ளும் சகலருக்கும்

**SPOKEN SINHALA**

சவால்களை வெற்றி கொள்ளும் பட்டத்தைப் பெற்றிட இன்றே உங்களைத் தயார்படுத்துங்கள்...

ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு நிகரான Colombo ஆசிரியர் குழாமின் சிறந்த வழிகாட்டலில் மருத்துவம், பொறியியல், கலை மற்றும் வர்த்தக மாணவர்களுக்கு தனித்தனி பிரிவுகள்.

Workroom Based Practical English

Basic English, Advan[illegible] English, English Teac[illegible] Training, Diploma in English, IELTS

**IISEEES NALLUR CAMPUS**
762, Point pedro Road, Nallur. 0212224728/ 0777444225

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மரபணுக்களை கண்டறிந்து புற்றுநோய் அதிகரிப்பைக் குறைக்கலாம்


**"புற்றுநோய் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மரபணுக்களை தொடர்ந்து ஆய்வு செய்து முடிவுகளை சேகரிப்பதன் மூலம் நோயை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முடியும்"**

புற்றுநோய் கட்டிகளின் மரபணுவைக் கண்டறிந்து அவற்றிற்குரிய மருந்தை வழங்குவதன் வழியாக நோய் அதிகரிப்பதைக் குறைக்க முடியும் என்று விஞ் ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பிரிட்டனில் உள்ள புற்றுநோய் ஆராய்ச்சி அமைப் பின் நிபுணர்கள் குழு புற்றுநோய் குறித்து ஆய்வு செய்தனர்.

ஆய்வின் முடிவில், புற்றுநோய் கட்டிகளின் மர பணுவை கண்டறிந்து அவற்றுக்குரிய மருந்தினை தருவதன் வழியாக நோய் அதிகரிப்பைக் குறைக்க முடி யும் என கண்டறிந் துள்ளனர்.

இதுகுறித்து அந்த அமைப்பின் தலைமைச் செயலாளரும், பேராசிரியருமான ஆலன் ஆஷ்வொர்த் கூறுகையில், புற்றுநோயை முற்றிலும் குணப்படுத்



தவே நாம் விரும்பு கிறோம். ஆனால் அந்த நோயின் பாதிப்புக்கு உள்ளானவர்கள் தங்கள் எப்படி பாது காத்து நீண்டகாலம் உயிர்வாழ்வது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது .

புற்றுநோய் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மரபணுக்களை தொடர்ந்து ஆய்வு செய்து முடிவுகளை சேகரிப்பதன் மூலம் நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உடல் எடை குறைய வேண்டுமா? கரட் துருவலைச் சாப்பிடுங்கள்



கரட்டை நன்றாகத் துருவி, அதில் தேன் சேர்த்து நன்கு கலந்து சாப்பிட்டு வந்தால் உடலில் தேவையற்ற கொழுப்பு குறைந்து உடல் பருமன் குறையும்.

சோம்பை எடுத்து சுத்தம் செய்து தண்ணீர் விட்டு காய்ச்சி அந்த நீரை அடிக்கடி குடித்து வந்தால் உடல் எடை குறைவடையும். கடுக்காய், நெல்லிக் காய், தான்றிக்காய் ஆகியவற்றை எடுத்து நன்றாகப் பொடி யாக்கி வெந்நீரில் கலந்து காலையில் குடித்து வந்தால் உடல் எடை குறையும்.

நெல்லிக்காயை எடுத்து சுத்தம் செய்து கொட் டையை நீக்கி விட்டு நன்கு அரைத்து பிழிந்து சாறு எடுத்து அதனு டன் சிறிது இஞ்சிச்சாறு கலந்து தினமும் காலையில் பருகி வந்தால் தேவையற்ற கொழுப்பு குறைந்து உடல் பருமன் குறையும்.

நான்கு அவுன்ஸ் வெதுவெதுப்பான நீரில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து பருகி வந்தால் உடல் பருமன் குறையும். ஆமணக்கின் வேரை நன்றாக இடித்துத் தேன் கலந்து நீரில் இரவு ஊற வைத்து காலையில் கசக்கிப் பிழிந்து, நீரை வடிகட்டி குடித்தால் உடல் பருமன் குறைவடையும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
1957.03.01

ஆண்டவன் அடியில்
2013.01.04

## திருமதி கோசலா தனபாலன்

*திதி நிர்ணய வெண்பா*

நந்தன வருடமதின் நன் மார்கழித் திங்கள்
தந்திடும பரபக்க சப்தமியில் சிந்தை மகிழ்
சீர்மங்கை கோசலா சிவன்பாதம் சேரவென்
பார்மங்கை தனை விடுத்தாள் காண்.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு அமரர் கோசலா தனபாலன் அவர்களின் ஆத்மாவுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னார் திடீரென நோயுற்று திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது மருத்துவமனைக்குத் திரண்டு வந்து பார்வையிட்டவர்களுக்கும், உடல் நலம் பெறப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டோருக்கும், அன்னார் அமரர் ஆன செய்தி கேட்டு எம் துயரில் பங்கெடுத்துப் பல்வேறு வழிகளில் உதவிசெய்தவர்களுக்கும் தொலைபேசி, மின்னஞ்சல் வாயிலாக ஆறுதல் அளித்த உள்ளங்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்கள், மலர் வளையங்கள் சாத்தியவர்கள் ஆகியோருக்கும் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றி இறுதிவரை எம்முடனிருந்த உற்றார், உறவினர், அயலவர் பாடசாலைகளின் சமூகத்தினர், நண்பர்கள் அனைவருக்கும், அன்னாரின் நினைவேற்றல் ஏட்டிற்கு ஆக்கங்கள் தந்து உதவியோருக்கும் அச்சுப்பிரதி செய்த ஷாமனி பிறிண்டேர்ஸ் (பொற்பதி றோட் - கொக்குவில்) அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

44,கடல்முக வீதி, திருகோணமலை. (29071)(2.6.7) - குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
24 - 10 - 1948

உதிர்வு
16 - 01 - 2012

அமரர்

## கனகராயர் சிவபாலன்(துரை)

(இளைப்பாறிய கணக்காளர்,இ.போ.ச.(CTB)கோண்டாவில்)

திதி: அபரபக்க அட்டமி

ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள்
கடந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சைவிட்டு அகலாது.
உங்கள் அறிவுரைகள் என்றும் எங்களை
வழிநடத்தட்டும். உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

அம்பனைச் சந்தி,
பன்னாலை,தெல்லிப்பழை.
021 373 5247 (29114)(5.6.7)

உங்கள் பிரிவினால் தவிக்கும்
குடும்பத்தினர்.





நுவரெலியாவின் குளுகுளு மலையிலும்
பெந்தோட்டையின் வெதுவெதுப்பான
கடற்கரையிலும்
உங்கள் சருமத்தை பாதுகாக்கும்

# NNO

NOURISHING NIGHT OIL

ஜொஜோபா ஒயில், விட்டமின் E அடங்கியது

சருமத்துக்கு ஊட்டமும் உயிரும்
இளமை தோற்றமும் தரும்

- சூரியனிலிருந்து வெளிவரும் புற ஊதா கதிர்களிலிருந்து பாதுகாத்து சருமத்துக்கு அழகும் இளமை தோற்றமும் தரும்
- சருமத்தின் உறுதியையும் நெகிழ்ச்சிதன்மையையும் மேம்படுத்தி மென்மையையும் ஈரத்தன்மையையும் அதிகரிக்கும்
- கண்ணின் கீழ் கருவளையம், கோடுகள், சுருக்கங்கள் ஏற்படுவதை தடுக்கும்
- இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் இலட்சக்கணக்கானோரின் நம்பிக்கையை வென்றது

MEGA We care

நாடு முழுவதும் உள்ள பாமஸிகளிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் கிடைக்கும்.

தொலைபேசி இல.: 011 4366609, 0114375363, 077[illegible] மின்னஞ்சல்: [illegible]@megawecare.com இணையத்தளம்: www.megawecare.lk/nno


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 மாத நிலையான வைப்பு

15.5% நிலையான வைப்பு

16.5%

உயர் நம்பிக்கை
உயர் சலுகைகள்
உயர் பாதுகாப்பு

| காலம் | மாதாந்தம் | | வருடாந்தம் | | முதிர்வு | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | சாதாரண | வ.ஹொ.வ.வீ | சாதாரண | வ.ஹொ.வ.வீ | சாதாரண | வ.ஹொ.வ.வீ |
| 1 | 14.75% | 15.79% | | | 14.75% | 15.79% |
| 3 | 14.85% | 15.90% | | | 15.00% | 15.87% |
| 6 | 15.00% | 16.08% | | | 15.25% | 15.83% |
| 12 | 15.25% | 16.36% | 15.50% | 15.50% | 15.50% | 15.50% |
| 24 | 15.50% | 16.65% | 15.75% | 15.75% | 16.00% | 14.89% |
| 36 | 15.75% | 16.94% | 16.00% | 16.00% | 16.25% | 14.15% |
| 48 | 16.00% | 17.23% | 16.25% | 16.25% | 16.35% | 13.41% |
| 60 | 16.25% | 17.52% | 16.35% | 16.35% | 16.50% | 12.79% |

சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1% மேலதிக வட்டி

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி

www.lankaorix.com

துரித அழைப்பு 0773815602


# உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கும் பானங்கள்

உடல் ஆரோக்கியத்தில் பானங்களும் முக்கிய பங்கினை வகிக்கிறன. அத்தகைய பழச்சாறுகளில் பழங்கள், காய்கள் இரண்டிலுமே அதிகளவான புரோட்டீன்கள் மற்றும் விற்றமின்கள் உள்ளன.

**பாகற்காய் சாறு**

அனைவருக்கும் பாகற்காய் பழச்சாறு என்றாலே வெறுப்பு ஏற்படும். ஏனெனில் அது மிகுந்த கசப்புத்தன்மையைக் கொண்டது. ஆனால் இந்த பழச்சாற்றைக் பருகினால் நீரிழிவு கட்டுப்படுவதோடு, உடலில் தங்கியிருக்கும் தேவையற்ற கொழுப்புக்களும் கரைந்துவிடும்.



ஒரு வேளை அளவுக்கு அதிகமான ளவில் கசப்பு தெரிந்தால் அதை தயாரிக்கும்போது, சிறிது எலுமிச்சை சாற்றைச் சேர்த்து செய்தால் கசப்புத்தன்மையை குறைக்கலாம்.

**பசளிக் கீரைச் சாறு**

இந்த கீரைச்சாறு டயட்டில் உள்ளோருக்கு மிகவும் சிறந்தது. ஏனெ னில் இதில் விற்றமின்கள் மற்றும் புரோட்டீன்கள் அதிகம் உள்ளன. எனவே ஒரு குவளை பசளிக் கீரையைக் கொதிக்க வைத்த தண்ணீரை குடித்து வந்தால் உடல், சருமம், கூந்தல் மற்றும் கண்கள் அதிக ஆரோக்கியத் துடன் இருக்கும்.

**மாங்காய்ச் சாறு**

கோடைகாலத்தில் மாங்காய் பருவகாலம் ஆரம்பமாகும். மாங்காயை பச்சையாகவோ அல்லது பழச்சாறு செய்தோ குடித்து வந்தால், உடலில் வறட்சி ஏற்படாமல் சூரியக்கதிர்கள் சருமத்தை அதிகம் பாதிக்காமல் தடுக்கலாம்.


TATA

பிரச்சினைக்குத் தீர்வு முன்னேற்றம் உறுதி

டிமோபட்டா
டிமோபட்டி



*இலவச காப்புறுதி
*மிகக் குறைந்த ஆரம்பக் கொடுப்பனவு
தரமுயர்ந்த சேவை

பிரச்சினைகள் இன்றி லீசிங் வசதி பெறுங்கள்
இன்றே அழையுங்கள்: பிரின்ஸ் 0773-523572
டானியல் 0777-813269

வர்த்தக வாகனத் துறையில் மாபெரும் நிறுவனமாகிய டிமோவும் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவும் LOLC மைக்ரோ கிரெடிட்டும் இணைந்து உங்கள் வியாபார வளர்ச்சிக்குத் தேவையான டிமோ பட்டா அல்லது டிமோ பட்டி வாகனத்தைப் பெறுவதற்கு அபூர்வ வாய்ப்பை வழங்குகின்றன. டிமோ பட்டாவை அல்லது டிமோ பட்டியை கொள்வனவு செய்வதற்கு LOLC மைக்ரோ கிரெடிட் மூலம் இலவச காப்புறுதியுடன் இலகுவான லீசிங் வசதியைப் பெறுங்கள்.
முன்னேற்றப் பாதையில் விரைவாகப் பய...

DIMO TECHNOLOGY
0112 44 97 97

LOLC மைக்ரோ கிரெடிட்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாருக்காகக் காத்திருத்தல்...




22

துள்ளி எழத் துடிக்கும் சொற்கள்



06



தர்மத்தின் வாழ்வுதனை..

21



முகமூடி நகரமும் மூன்றாம் முகங்களும்....

08



வலுக்கும் இராணுவ நெருக்குவாரம்

03


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 03 பெப்ரவரி 2013 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# முருங்கைமரப் புனைவுகள்

ஔண்யன்



ஜெனிவாத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் களைகட்டத் தொடங்கியுள்ளன. திருவிழாவின் பிரதான உபயகாரர் தன்னுடைய திக்குப் பாலகர்களை இலங்கைக்கு அனுப்பத் தொடங்கிவிட்டார். ஏற்கனவே சொன்னபடி திருவிழாவுக்கு ஏற்ற ஆயத்தங்களை இலங்கை செய்து முடித்திருக்கிறதா அல்லது முருங்கை மரத்திலிருந்து இன்னமும் இறங்காமல் ஒட்டிக்கொண்டிருக்கிறதா என்பதை அறியவேண்டியது உபயகாரரின் கடமை. இல்லாவிட்டால் திருவிழா நடத்தியும் பயனில்லை. ஒருவேளை இன்னமும் முருங்கை மரமே தஞ்சமென்று இலங்கை வேதாளக் குணங்களோடு இருந்தால், திருவிழா மங்கலகரமாக இருக்காது. மாறாக பேயோட்டும் சடங்காக மாறிவிடும்.

திக்குப் பாலகர்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பி, தாம் குடிகொண்டிருக்கும் முருங்கை மரம் பற்றிய கணிப்புகளைக் கலைக்க இலங்கையில் மணிமுடிவாசிகள் புனைவுகளை எங்கும் பரவவிடத் தொடங்கியுள்ளனர். ஆனால் இதுபோன்ற நிறைய வேதாளங்களைக் கண்டவர்கள் உபயகாரர்கள். வேடிக்கை என்னவென்றால் உபயகாரர்கள் தான் வேதாளங்களின் தலைவர்களும்கூட. அவர்களால் ஒரு சாதாரண வேதாளம் என்ன செய்யுமென்பதையும், எந்த முருங்கை மரத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் என்பதையும் ஒரு நொடியிலேயே கண்டு பிடிக்க முடியும்.

★ ★ ★

அமெரிக்க திரிசூலக்குழு வந்து போய்விட்டது. இந்தக் குழு வருவதற்கு முன்னர் இலங்கைப் பாதுகாப்புச் செயலர் ஒரு கூற்றை வெளியிட்டிருந்தார்.

அண்மைய வெற்றிகரமான புளுகுகளில் ஒன்றுதான் "இறுதிப்போரில் படையினரிடம் சரணடைந்த எவரும் காணமால் போகவில்லை. போர் நடந்த பகுதியில் இந்திய வைத்தியசாலைகள், செஞ்சிலுவைக் குழு என்பவற்றின் மூலம் கையேற்கப்பட்டவர்கள் தான் காணாமல் போயிருக்கிறார்கள். எனவே, இதற்குரிய முழுப்பொறுப்பும் அவர்களுக்கே." என்று மிகச் சாதாரணமாக இந்தியா மீதும் செஞ்சிலுவைக் குழு மீதும் பூசிவிட்டு தன்பாட்டுக்கு 'சோலியைப்' பார்க்க போய்விட்டார் பாதுகாப்புச்செயலர் கோத்தபாய.

ஆனால் அவருடைய [illegible] மிதித்துக்கொண்டு வந்திறங்கியது திரிசூலக்குழு. வந்தவர்கள் எல்லா இடங்களிலும் தமது கழுகுப் பார்வையைப் பதித்தனர். அவர்களிடம் உண்மையின் குரலாக காணாமற்போனோர் விடயமே த மி ழ ர் க ளி ட த் தே இப்போதுள்ள முதன்மையான பிரச்சினை என்பதை முன் வைத்தார்யாம். ஆயர். அவர் வாய் மூடும் முன்னரே "பாதுகாப்புச் செயலர் சொன்னது உண்மையல்ல என்பதை நேரில் கண்டு உணர்ந்தோம். காணாமற்போனோரின் உறவுகள் இன்னமும் கண்ணீரோடு அவர்களை மீட்டுத் தரும்படி எம்மிடம் கெஞ்சினார்கள்." என்று திரிசூலக்குழு கூறியது.

★ ★ ★

ஓர் அரசன், நம்பக் கூடியசிறந்த பொய்யை சொல்லும் ஒருவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாகக் கொடுக்கப்படும் என்று அறிவித்தான். நாட்டின் பல பகுதியிலிருந்தும் பலர் வந்து பல பொய்கள் சொல்லிப் பார்த்தனர். ஆனால் அரசனுக்கு திருப்தி ஏற்படவில்லை.

ஒரு நாள் கந்தல் உடை அணிந்த ஒரு ஏழை அரச சபைக்கு வந்து தான் அப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவதாகக் கூறினான். அரைகுறை மனதுடன் அரசன் சம்மதம் தெரிவித்தான்.

அந்த ஏழை சொன்னான்,

"அரசே, உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? நீங்கள் எனக்கு ஆயிரம் பொற்காசுகள் தர வேண்டியிருக்கிறது. அதை வாங்கத்தான் இன்று இங்கு நான் வந்தேன்." அரசனுக்கு கோபம் வந்து விட்டது. "நீ பொய் சொல்கிறாய். நானாவது உனக்கு பணம் கடன் தர வேண்டியிருப்பதாவது?' என்று கத்தினான்!

உடனே ஏழை சொன்னான்,

"அரசே, நீங்களே ஒத்துக் கொண்டுவிட்டீர்கள், நான் சரியான பொய் சொன்னேன் என்று. எனவே போட்டி விதியின்படி எனக்கு ஆயிரம் பொற் காசுகள் கொடுங்கள்."

அரசன், தான் அவசரத்தில் உளறிவிட்டோம் என்பதை உணர்ந்தான். உடனே சொன்னான்,

"இல்லை, இல்லை, நீ பொய் சொல்லவில்லை." என்று அவசரமாக மறுத்தான்.

ஏழை சொன்னான்," நல்லது அரசே, நான் சொன்னது பொய் இல்லை, உண்மைதான் என்றால்,எனக்கு தர வேண்டிய ஆயிரம் பொற்காசுகளைக் கொடுங்கள்," அரசன் அந்த ஏழையை சிறந்த பொய்யன் என்று ஏற்று ஆயிரம் பொற்காசுகளை வழங்கினான்.

★ ★ ★

நல்ல வேளையாக இப்போது இது போன்ற புளுகுப் போட்டிகள் நடப்பதில்லை. நடந்தால் இலங்கையில் ஏட்டிக்குப் போட்டியாக புனைவுகளை நினைத்தபாட்டுக்கு அவிழ்த் துவிட்டுப் பின்னர் சில கணங்களிலேயே தங்களது பொய்கள் நிர்வாணமாகி விட, அவமானப்பட்டு, அதிகாரச் சாட்டையை ஏந்தியிருப்பவர்கள் தோற்றுப்போகவேண்டியிருக்கும். தங்களது புனைவுகளின் சாயம் மறுநொடியே கரைந்து ஒழுகிப்போனாலும், அதைப் பற்றி கிஞ்சித்தும் இவர்களுக்குக் கவலையில்லை. தொடர்ந்தும்

(சூரியகாந்தி 23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிலாக்ஸா படிங்க...



# திமிரும் திறமையும் மட்டுமே என்னிடம்

ஜெரா

சினிமாவில் உழைப்பதை சினிமாவுக்கே செலவழிக்கும் அபூர்வக் கலைஞன் கமல்ஹாசன். தமிழ் சினிமாவை வெள்ளைக்காரன் (ஹொலிவூட்) தரத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற அவரின் கனவுக்கான செலவாக உழைப்பை மட்டுமே இப்போதும் மிச்சம் வைத்திருக்கின்றார். அந்த நம்பிக்கையோடு தான் விஸ்வரூபத்தையும் ஆரம்பித்தார். பழனி, பாண்டிச்சேரி, ஆப்கான், அமெரிக்கா என்று அலைந்தார். சென்னையில் இருந்த தன் வீடு உள்ளிட்ட அனைத்து சொத்துக்களையும் அடைவு வைத்து படம் முடித்தார். செலவு 90 கோடி கடந்தது. ( 90 கோடியும் சீஐஏ அதாவது அமெரிக்கா உளவுத்துறை கொடுத்ததாகவும் ஒரு கதை இருக்குதுங்கோ) ரசிகர்களும், கமலும், சினிமா துறைசார்ந்தவர்களும் கமல் எடுக்கும் விஸ்வரூபத்துக்காக காத்திருந்தார்கள். ஜனவரி இருபதும் பறந்தது. அந்தத் திகதியில் படம் வெளியாகவில்லை. தடையுத்தரவு தான் வந்தது.

**இதொன்னும் புதுசில்லயே!**

முஸ்லிம் மக்களை புண்படுத்தும் விதமாக கதை இருப்பதாக கூறி தடை செய்யப்பட்டது. வழக்கு பறந்தது. பல்வேறு முஸ்லிம் அமைப்புகளும் கொடி தூக்கின. ஆனால் கமல் வீட்டுக்கு கல்லெறி விழவில்லை. முஸ்லிம் மக்களை அண்மைக்காலமாக நேர்த்தியாக கவனித்து வரும் இலங்கையிலும் விஸ்வரூபத்துக்கு தடை வந்தது. கமல் விருமாண்டி, வசூல்ராஜா எம்பிபிஎஸ், மன்மதன்அம்பு அனுபவங்களில் போராடத் தொடங்கினார். நீண்ட இழுத்தடிப்பின் பின்னும், நீதிபதியின் குடும்பத்தினருக்கு தனி காட்சி காட்டிய பின்னரும் இரவு 8.00 மணிக்கு நல்ல தீர்ப்பை வழங்கினார். படம், 29 ஆம் திகதி காலை 10மணிக்கு வெளியாகும்எனபரபரப்புச்செய்தி புரண்டது.

**இலவச விளம்பரம்**

இந்த இழுத்தடிப்புகள் விஸ்வரூபத்துக்கு பிரமாண்ட இலவச விளம்பரத்தை வழங்கியிருந்தது. ஒரு வாரமாக இந்தியாவில் இருக்கும் அனைத்து ஆங்கில, தமிழ் மலையாள ஊடகங்களும் (தினமலரைத் தவிர்க்க) கமலின் செய்தியையே தலைப்பிட்டிருந்ததால் இந்த இலவச விளம்பரம் கிடைத்தது. ஆகவே தியேட்டர்களில் கூட்டம் களைகட்டியது. ஆனால் முதல் காட்சிக்கு படப்பெட்டி வரவில்லை. பேருந்துகளில் குண்டாந்தடிகளுடன் பொலிஸ் தான் வந்து தியேட்டர்களை முற்றுகையிட்டது. தமிழக அரசு தொடுத்த வழக்கின் பிரகாரம் விஸ்வரூபம் தடைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ரசிகர்கள் அமைதியாக வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

**மதமற்ற மாநிலத்தை தேடுகிறார் உலக நாயகர்**

கமல் போராடத் தொடங்கினார். ஊடகங்கள் என்றும் இல்லாத ஆதரவைத் தந்தன. போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டன. உழைப்பு, நம்பிக்கை, திறமை ஆகியவை உட்பட 90 கோடி ரூபாய்களை இதில் கொட்டியிருப்பதாக விம்மினார் கமல். தனது இந்தப் போராட்டம் தோல்வியுற்றால் மதமற்ற, முழுச்சுதந்திரமுடைய நாட்டுக்கோ, மாநிலத்துக்கோ புலம்பெயரப் போவதாக அறிவித்தார்.( இலங்கைக்கு மட்டும் வந்திடாதீங்க மிஸ்டர் கமல்) இப்போதும் தமிழகத்தில் ஜனநாயகமும், மனித நேயமும் இருப்பதாக நம்புகிறேன் என தளதளத்தார். வார்த்தைக்கு வார்த்தை முஸ்லிம் சகோதர்கள் என்பதை குறிப்பிடத் தவறவில்லை.

**கமலுக்கு அந்த உரிமை இல்லை**

அவசர நீதி கோரினார் உலகநாயகன். விசாரணைக்கு வந்தும் பயனில்லை. தமிழக முதல்வர் தான் வென்றார். என்னிடம் 96 ஆயிரம் பொலிஸார் மட்டுமே இருக்கின்றனர். தமிழகத்தில் இருக்கும் முஸ்லிம் அமைப்புகளில் இருக்கும் முக்கிய உறுப்பினர்கள் மட்டும் 55 ஆயிரம். எனவே இந்தப் படத்தால் வன்முறை வெடித்தால் என்னால் கட்டுப்படுத்த முடியாது என அறிக்கை படித்தார். இதிலும் மத்திய அரசைக் கண்டித்தார். கமல் மீது தனிப்பட்ட மனவிரோதம் எதுவும் இல்லையெனவும், தானும் சினிமாக் களத்தில் இருந்ததால் கமலின் வலி தனக்கு தெரியும் எனவும் தெரிவித்தார். இறுதியாக சொன்னார், பிரதமரை தெரிவுசெய்யும் உரிமை கமலுக்கு இல்லை என்று.



**அதுவா சங்கதி?**

அட அதுவா சங்கதி? என்றது ரசிகர் வட்டாரம். கடந்த சில தினங்களுக்கு முன்னர்கலைஞர்தலைமையில்பா.சிதம்பரத்தின்நூல்வெளியீடு நடந்தது. அதில் கலந்து கொண்ட ரஜினி, கமல் உள்ளிட்ட சினிமா பிரபலங்கள் சூடான செய்திகளை வெளியிட்டனர். அரசியலில் என் வழி தனி வழியென்றார் சூப்பர் ஸ்டார். தன் வழி பொது வழியென்றார் கமல். கூடவே வேட்டி கட்டிய தமிழன் ஒருவர் பிரதமராகும் தூரம் நெருங்கிவிட்டது எனக் கூறி பா.சிதம்பரத்தை பார்த்தார் உலகநாயகன். கருணாநிதி சும்மா விடுவாரா? அப்ப சேலை கட்டியவர் பிரதமராகும் கனவு தவிடுபொடி என்றார் கலைஞர். (ஜெயலலிதாவுக்கும் கனவிருக்கு) கதை அந்த அம்மாவுக்கு போனது. கொதிப்பானார்.

**இது கலைஞரின் விஸ்வரூபம்**

இந்தப்படத்தைபடம் வெளியாகும் அதேதினத்தில் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்ப கமல் நடவடிக்கை எடுத்திருந்தார். அதன் உரிமையை அடிமாட்டு விலைக்கு ஜெயா தொலைக்காட்சி(ஜெயலலிதாவின் தொலைக்காட்சி) கேட்டிருந்தது. கமல் மறுத்துவிட்டார். விஜய் தொலைக்காட்சிக்கு வழங்கியதாக உறுதிப்படுத்தப்படாத செய்தியுண்டு. கலைஞரும் இதனை வெற்றிகரமாக அரசியலாக்கினார். கமலை தன் பக்கம் தன் கட்சிக்குள் இழுத்துக் கொள்ள பிரயத்தனப்பட்டார். முடியவில்லை. கமலின் பிடிவாதப் போராட்டத்துக்குப் பின்னர், முஸ்லிம் அமைப்புகள் உடன்பட்டால் விஸ்வரூபத்தை தமிழகத் திரைக்கு கொண்டு வர அனுமதியுண்டு என்று அம்மா சொன்னார்.

**800 திரையரங்குகளில் வெற்றி**

கமல் உயர்நீதி கோரி மும்பை பயணமானார். அதற்கிடையில் தமிழகம் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் உள்ள 800 திரையரங்குகளில் படம் வெளியாகி சக்கைபோடுபோட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் தமிழகத்தில் வெளியானாலே போட்ட பணத்தை எடுக்க முடியும் என்பதற்காக கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் முஸ்லிம் அமைப்புகளுடன் கமல் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றார். அது பெரும்பாலும் வெற்றியில் முடியும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் படத்தில் முஸ்லிம்களை புண்படுத்தும் விதமாக எந்தக் காட்சியும் இடம்பெறவில்லை. இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாதம் பற்றிய விமர்சனமே கதை.

**கமலிடம் ஒரு கேள்வி**

இந்த இடத்தில் உலக நாயகனின் அண்மைக்கால திரைப்படங்கள் குறித்த சந்தேகங்களை முன்வைப்பது முக்கியமானது. இதற்கு முன் வந்த உன்னைப்போல் ஒருவனிலும், விஸ்வரூபத்திலும் இஸ்லாமிய தீவிரவாதம் பற்றியே பேசுகின்றார். ஏனென்று கேட்டால் நாடுகடந்த மனித நேயமாம். அயல் தேசமான ஈழத்தில் லட்சக்கணக்கான அவரினத்தவர்கள் படுகொலை செய்யப்பட்டபோது இந்த நாடுகடந்த மனித நேயம் எங்கே போனது. ஏன் இந்தப் படுகொலையை சாட்சிப்படுத்தும் வலுவான சினிமாவை அவரால் எடுக்க முடியவில்லை? ஆக அமெரிக்காக்காரனின் அண்மைக்கால திரைத் தழுவல்களை கமல் தமிழ் சினிமாவிலும் காட்ட முயல்கிறாரா?

**காலாவதியான கட்டுரை இது**

படம் வெளியாக முன்பே எப்படி அதனை தடை செய்ய முடியும்? தம்மைக் கேவலப்படுத்தியிருப்பதாக முஸ்லிம்கள் எப்படி படையெடுக்க முடியும்? இப்படி எதிர்ப்பதற்கு முஸ்லிம் தீவிரவாதம் ஒன்றும் அகிம்சையின் பெயரில் நடப்பதில்லையே.

இப்படி ஆயிரம்நியாயம், எதிர்நியாயக்கேள்விகளை முன்வைக்கலாம். பெரும்பாலும் கட்டுரை பிரசுரமாகும் தினத்தில் விஸ்வரூபம் திரைக்கு வந்திருக்கும். முற்றுமுழுதான நம்பிக்கையுடன் அதைச் சொல்லலாம். எப்படியெனில் கமல் சொன்னபடி, நான் திமிரையும், திறமையையும் மட்டுமே வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறேன். இந்தக் களத்தில் போராடி வென்றிருக்கின்றேன். இது முதல்தடவையல்ல. மூன்றாம் தடவை. மீண்டும் எழுவேன். ஆகவே விஸ்வரூபம் திரைக்கு வரும். அந்தத் தருணத்தில் இந்தக் கட்டுரையும் காலாவதியாகியிருக்கும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுக்கும் இராணுவ நெருக்குவாரம்

■ அதிரன்



> மீண்டும் தமது வாழ்வைக் கட்டியெழுப்புவோம் என்ற கனவுகளுடனும் சொந்த இடங்களுக்கு திரும்புவோம் என்ற எதிர்பார்ப்புடனும் காத்திருந்த வலி.வடக்கு மக்களின் அங்கலாய்ப்பை உணராமல் தமது இராணுவ நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு படைத்தரப்பு மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையை உலகின் மிக மோசமான மனித உரிமை மீறல் என்றே சொல்ல வேண்டும்.

போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள்கடந்துவிட்ட போதும் தமிழர் தாயகப் பகுதிகளில் இராணுவ நெருக்குவாரங்கள் குறைந்தபாடாக இல்லை. அதுவும் குறிப்பாக வடக்கில் இராணுவ ஆட்சி மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையை தற்போது நடந்து வரும் சம்பவங்கள் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.

வடக்கில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் எந்தவித அச்சமுமின்றி சுதந்திரமாக நடமாட - கருத்து வெளியிட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என சர்வதேசத்துக்கு இலங்கை அரசு அடிக்கடி கூறி வருகின்ற போதும் அந்தக் கூற்றின் பிரதிபலிப்பை வடக்கில் காணமுடியவில்லை. அரசின் கூற்றுக்கு எதிர்மாறான விடயங்களே வடக்கில் அரங்கேறி வருகின்றன.

வடக்கு முழுவதையும் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வைத்து மக்களை அடக்கி ஆளவேண்டும் என்ற ஒரே நோக்குடனேயே பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. நெருக்குவாரங்களை குறைத்து மக்களை நிம்மதியாக வாழ அனுமதிப்பதற்குப் பதிலாக, அடக்குமுறைகளைப் பிரயோகித்து அவர்களை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளே அதிகம் இடம்பெறுகின்றன. அவற்றில் ஒன்றுதான் இப்போது வலி.வடக்கில் மும்முரமாக இடம் பெற்றுவரும் சம்பவம்.

வலி.வடக்கு ஒரு பரந்த பிரதேசம். விவசாயத்துக்கும் மீன்பிடிக்கும் பெயர்போன இந்தப் பகுதி கடந்த 25 வருடங்களுக்கு மேலாக படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகிறது. வடக்கின் மிகப் பிரதானமான இராணுவத் தளமாக - கட்டளையிடும் நிலையமாக உள்ள பலாலி படைத்தளமும், பிரதான போக்குவரத்து, விநியோக மார்க்கமாகவுள்ள பலாலி விமான நிலையமும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமாக விளங்கும் காங்கேசன்துறை துறைமுகமும் இந்த வலி.வடக்குப் பகுதியிலேயே அமைந்துள்ளன. இந்த மூன்று தளங்களும் இப்போது இலங்கைப் படையினரின் பூரண கட்டுப்பாட்டில் அதிஉயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

1990களில் இலங்கைப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் ஆரம்பமான காலகட்டத்தில் வலி.வடக்கின் முக்கிய பகுதிகளான காங்கேசன்துறை, பலாலி, மயிலிட்டி, தையிட்டி, வசாவிளான், குரும்பசிட்டி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, கீரிமலை ஆகிய கிராமங்களிலிருந்து தமது சொந்த வீடுகளை விட்டு இடம்பெயர்ந்தார்கள் அந்தப் பகுதி மக்கள். கிட்டத்தட்ட 23 வருடங்களுக்கு மேலாக அவர்கள் இப்போதும் அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் இன்றும் நலன்புரி முகாம்களில் தமது அவல வாழ்வை தொடர்ந்து வருகின்றனர்.

புலிகளுக்கு எதிரான போர் முடிவடைந்ததை அடுத்து பொதுமக்களின் வாழ்விடங்களான இந்தப் பகுதிகளை விரைவில் விடுவிப்பதற்கும் அந்த இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பலாலி விமான நிலையம், காங்கேசன் துறை துறைமுகம் தவிர்ந்த ஏனைய இடங்கள் அனைத்திலும் மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் எனவும் அரசு அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பினால் இடம்பெயர்ந்து இரு தசாப்தகாலமாக அகதி வாழ்வு வாழ்ந்து களைத்துப் போன வலி. வடக்கு மக்கள் சற்று தெம்படைந்தனர். தமது சொந்த இடங்களை மீண்டும் பார்க்கும் ஆர்வத்திலும் மகிழ்ச்சியிலும் அவர்கள் திளைத்திருந்தனர். சொந்த வீடுகளில் தமது வாழ்வையும் பொருளாதாரத்தையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கான கனவில் மூழ்கியிருந்தனர். அவர்களுடைய அந்த எண்ணங்களையெல்லாம் உண்மையாக்குவது போல அரசின் சில நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

முதற்கட்டமாக சேந்தாங்குளம், கீரிமலை, வசாவிளான், மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். அப்பகுதிகளிலிருந்த படை முகாம்கள் அகற்றப்பட்டன. மக்கள் மகிழ்ச்சியுடன் தமது வீடுகளுக்குத் திரும்பி நிம்மதியான வாழ்வை ஆரம்பித்தனர். இதனையடுத்து வலி. வடக்கின் ஏனைய பகுதிகளான பலாலி, மயிலிட்டி, தையிட்டி, குரும்பசிட்டி, காங்கேசன்துறை பகுதி மக்களும் தாமும் மீளக்குடியமர இயலும் என்ற பேராவாவில் காத்திருந்தனர். அவர்களின் இந்தக் காத்திருப்பு நீண்ட நாள்கள் நிலைக்கவில்லை.

கடந்த வருட நடுப்பகுதியில் வலி.வடக்கின் பல முக்கிய பகுதிகளை உள்ளடக்கி நிரந்தர பாதுகாப்பு வேலி ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகளை படையினர் ஆரம்பித்திருந்தனர். படையினரின் இந்த நடவடிக்கைக்கு அப்போது கடும் எதிர்ப்புக் கிளம்பியது. சிமெந்துத் தூண்களையும் முட்கம்பிகளையும் பயன்படுத்தி இந்த நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைக்கும் நடவடிக்கைகளை கனகச்சிதமாக முடித்தனர் படையினர். படையினரின் இந்த நடவடிக்கை வலி.வடக்கில் மீளக்குடியமரக் காத்திருந்த மக்களுக்கு பலத்த சந்தேகத்தை கிளப்பியது. ஆயினும் பொறுமையுடன் காத்திருந்தனர் மக்கள்.

மக்களின் பொறுமையை மீண்டும் சோதிக்கும் நடவடிக்கை ஒன்றை கடந்த மாதம் ஜனவரி 30 ஆம் திகதி வலி.வடக்கில் ஆரம்பித்தது படைத் தரப்பு. நிரந்தர பாதுகாப்பு வேலிக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள பொதுமக்களின் வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கும் வேலைகளை புல்டோசர்கள் கொண்டு ஆரம்பித்தனர் படையினர்.

தொண்டமானாறு முதல் காங்கேசன்துறை வரை படையினர் அமைத்துள்ள பாதுகாப்பு வேலியின் உட்புறம் அமைந்துள்ள வீடுகளே இவ்வாறு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு வருகின்றன. வீடுகளை இடித்தழிப்பதுடன் நின்றுவிடாது அந்தப் பகுதியூடாக தமது தேவைக்கென காப்பெற் வீதியொன்றை அமைக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கை வலி.வடக்கில் மீளக்குடியமரக் காத்திருந்த மக்களின் கனவுகளையெல்லாம் தவிடுபொடியாக்கும் வகையில் அமைந்திருக்கிறது. அவர்கள் சிரமப்பட்டு உழைத்துக் கட்டிய வீடுகளைக் கூட அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டிருக்கின்றமை தமிழர் மீதான இராணுவ ஒடுக்குமுறையின் மற்றொரு கட்டம் என்றே சொல்ல வேண்டும். மக்களின் வாழ்விடங்களையே நாசமாக்கும் அளவுக்கு இராணுவ ஆட்சி வடக்கில் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது என்பதே உண்மை.

தமது வீடுகளை இடிக்க வேண்டாம் என மக்கள் கெஞ்சி மன்றாடிய போதும் அதனை ஒரு பொருட்டாகக் கருதாமல் மக்களின் கண்முன்னாலேயே அவர்களின் சொந்த வீடுகள் இடித்தழிக்கப்பட்ட மிக மோசமான மனித உரிமை மீறல் வலி.வடக்கு பகுதியிலேயே தான் முதன் முதலில் இடம்பெற்றிருக்கிறது. இவ்வாறானதொரு மோசமான செயல் வேறு நாடுகளில் இடம்பெற்றதாக நான் அறியவே இல்லை என்று கூறினார் வலி.வடக்குப் பகுதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஒருவர்.

மீண்டும் தமது வாழ்வைக் கட்டியெழுப்புவோம் என்ற கனவுகளுடனும் சொந்த இடங்களுக்கு திரும்புவோம் என்ற எதிர்பார்ப்புடனும் காத்திருந்த வலி.வடக்குமக்களின் அங்கலாய்ப்பை உணராமல் தமது இராணுவ நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு படைத்தரப்பு மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையை உலகின் மிக மோசமான மனித உரிமை மீறல் என்றே சொல்ல வேண்டும்.

இவ்வாறான மோசமான செயல்கள் மூலம் இலங்கை அரசு தொடர்ந்தும் சர்வதேச அரங்கில் தனக்கு ஒரு அவப்பெயரை தேடிக் கொள்கிறதே தவிர வேறொன்றும் இல்லை. ஏற்கனவே இலங்கை இராணுவம் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உரிய முறையில் பொறுப்புக் கூறாமல் - பதிலளிக்காமல் நழுவிவரும் அரசு, தமிழர் தாயகப் பிரதேசங்களில் இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் இந்த அடக்குமுறைகள் காரணமாக மேலும் நெருக்கடிகளுக்கு உள்ளாகும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு அவர்கள் தொடர்ந்தும் தமது வாழ்விடங்களுக்குத் திரும்ப முடியாமல் அவலப்படுவார்களேயானால் மீண்டும் ஒரு மோசமான நிலை நாட்டில் உருவெடுக்கும். அந்த நிலைமையை வரவிடாமல் தவிர்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசுத் தலைமைக்கும் அதனுடன் சேர்ந்தியங்கும் அரச இயந்திரத்துக்கும் உள்ளது.

வலி.வடக்கு மக்களின் மனக்குமுறல்களை நன்குணர்ந்து அவர்களின் வாழ்விடங்கள் அழித்தொழிக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் அவர்கள் தமது சொந்த வீடுகளில் மீளக்குடியமர்ந்து தமது வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு அனுமதிக்க வேண்டும். தொடர்ந்தும் அவர்களை அகதிகளாக வைத்திருப்பதன்மூலம்நெருக்கடிகளை சந்திக்கப் போவதும் அதனால் அவப்பெயரை சம்பாதிக்கப் போவதும் அரசுதான். அதனை நன்குணர்ந்து அரசு செயற்படுவதே இப்போதைய புத்திசாலித்தனமான நடவடிக்கையாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக மேடையில் ஒரு முடியாட்சி

சந்திரசேகர ஆஷாத்

**விவசாயிகள் கடன்களைக் கட்ட முடியாமல் தற்கொலை செய்கின்றனர். லீசிங் முறையில் வாங்கிய உழவு இயந்திரங்களைப் பறிகொடுத்துக் கொண்டிருக்கின்றனர். அரச பணியாளர்கள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்குகின்றனர். தனியார் துறை ஊழியர்களின் நிலைமைகளோ மேலும் மோசமடைந்துள்ளது.**

ஞாயிறு காரம்

அன்று மன்னனின் பிறந்தநாள். பெரியோர்கள் பிரபுக்கள் என ஏராளமானோர் அரசவையில் கூடி அவனுக்குத் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். புலவர்கள் தங்கள் பாடல்களால் வாழ்த்திப் பரிசுகள் பெற்றனர். அவையில் வீற்றிருந்த ஔவையாரோ 'வரப்புயர' என்ற ஒரே சொல்லில் தன் வாழ்த்தைத் தெரிவித்து விட்டு அமர்ந்து விட்டார். அரசனும் ஏனையோரும் அதன் அர்த்தம் புரியாமல் தடுமாறினர். இறுதியில் அரசன் ஔவையாரிடமே விளக்கம் கேட்டான் அவரும் முழுமையான விளக்கத்தைப் பாடலிலேயே கொடுத்தார்.

அதாவது

**வரப்புயர நீர் உயரும், நீருயர நெல்லுயரும்**
**நெல்லுயரக் குடி உயரும் குடியுயரக் கோனுயருவான்.**

ஒரு நாடு பொருளாதாரத்தில் செழித்து குடிமக்கள் வளம் பெற்று வாழ்வார்களாயின் அரசன் பெருமையுடன் உயர்ந்தவனாக விளங்க முடியும் என்பதை ஔவையார் 'வரப்புயர' என்ற சொல் மூலமே சுருக்கமாக வாழ்த்தி விட்டார்.

ஒரு நாட்டின் நல்லாட்சி என்றால் ஆட்சியாளர்கள் சிறப்புற்றிருப்பார்களானால் நாடு பொருளாதார மேம்பாடடைய வேண்டும். பிரிட்டிஷ் அரசரதும், அரசியினதும் முடியாட்சியின் கீழ் இருந்த இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் அப்போது இலங்கை சுதந்திர நாடு என்று கூறப்பட்டபோதிலும் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எந்த ஒரு சட்டமும் பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியான மகா தேசாதிபதியால் அங்கீகாரம் பெறாவிடில் செல்லுபடியாகாது என்ற நிலைமையே நிலவியது. அது மட்டுமன்றி திருமலையில் பிரிட்டிஷ் கடற்படைத்தளமும் கட்டுநாயக்காவில் பிரிட்டிஷ் றோயல் விமானப்படைத்தளமும் அமைந்திருந்தன.

அதாவது இலங்கை சிவில், பாதுகாப்பு அதிகாரங்கள் பிரிட்டிஷ் மகாராணியின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

1972 ஆம் ஆண்டின் புதிய அரசியலமைப்பின் மூலம் இலங்கை ஒரு முழுமையான குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் மூலம் மகாராணியால் நியமிக்கப்படும் மகாதேசாதிபதியின் அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டு நாடாளுமன்றத்தால் நியமிக்கப்படும் ஜனாதிபதிமுறை அமுலுக்கு வந்தது.

பின்பு 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் முடிசூடப்படாத மன்னராட்சி மீண்டும் அமுலுக்கு வந்தது. அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையாகும். அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டாலும்கூட அவர் சர்வ வல்லமையுள்ள சகல அதிகாரங்களையும் கொண்டவராக விளங்கினார். அதை ஏற்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனா இப்பதவி பற்றி விளக்கும் போது ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதை விட ஏனைய சகல அதிகாரங்களையும் கொண்டது அது எனக் கூறியிருந்தார்.

தற்சமயம் 2010 ஆம் ஆண்டின் 18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் மேலும் வலுப்படுத்தப்பட்டது. அதாவது பொது நிர்வாகம், பொலிஸ், நீதிச் சேவை என்பவற்றுக்கான ஆணைக்குழுக்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டதன் மூலம் அவையும் நிறைவேற்று அதிகாரத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டது.

அதாவது இந்த நாட்டில் 1972 தொடக்கம் 1977 வரையுமே ஒரு ஜனநாயக நாடாளுமன்றத்தின் ஆட்சியை இலங்கை மக்கள் ஆறு ஆண்டுகளே அனுபவித்தனர். 1948 இன் முன்பு அந்நிய நாட்டவரின் முடியாட்சி நிலவியது. 1972 வரையும் அதன் அதிகாரம் தொடர்ந்தது. மீண்டும் 1978 தொடக்கம் உள்ளூர் சர்வாதிகாரிகளின் ஆட்சி தொடர்கிறது.

2005 ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்பு நிறைவேற்று அதிகாரம் வலுப்படுத்தப்பட்டதுடன் ஒரு குடும்ப ஆட்சியதிகாரம் நடைமுறைக்கு வந்துள்ளது.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என ஏறக்குறைய நூறு பேர் இருந்த போதிலும் பிரதான அதிகாரம் ராஜபக்ஷ சகோதரர்களிடமே குவிக்கப்பட்டு விட்டது. ஏனைய அமைச்சர்கள் ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டது போன்று வெங்காயத்துக்கு ஒரு அமைச்சர் உருளைக்கிழங்குக்கு ஒரு அமைச்சர் என்ற வகையில் அதிகாரமற்றவர்களாகவும் ராஜபக்ஷ சகோதரர்களுக்கு துதி பாடுபவர்களாகவும் விளங்கி வருகின்றனர். நிதி, நீதி, பாதுகாப்பு, பொருளாதாரம் என நாட்டின் எழுபது வீத நிதியை ராஜபக்ஷ சகோதரர்களே கையாளும் வகையில் ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

ஒரு மன்னராட்சியில் மன்னரும் அவர் குடும்பத்தினருமே அதிகாரம் பெற்றவர்களாக விளங்குவர். ஏனையோர் அனைவரும் அவர்களின் கட்டளைகளை நிறைவேற்றுபவர்களாகவோ, அவர்களைச் சார்ந்து செயற்படுபவர்களாகவோ விளங்குவர். பிரபுக்களும், மேட்டுக் குடியினரும் சலுகை பெற்ற வர்க்கமாக வசதி வாய்ப்புக்களை அனுபவிப்பர்.

இன்று இலங்கையில் அதே போன்ற எள்ளளவும் வித்தியாசம் காண முடியாத ஒரு ஆட்சி முறை நிலவி வருகிறது. அதாவது முடி சூடப்படாத ஒரு மன்னராட்சி நிலவி வருகிறது.

இப்படியான ஜனநாயக மேடையில் மன்னராட்சி இடம் பெறும் இவ்வேளையில் எமக்கு ஔவையாரின் வரப்புயர என்ற பாடல் நினைவுக்கு வருகிறது. வரம்பு உயர்ந்ததோ இல்லையோ நாடு விவசாயத்தில் தன்னிறைவு கண்டு விட்டதாகவும் அரிசி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் பொருளாதார அபிவிருத்தி 7 வீதத்தால் அதிகரித்து விட்டதாகவும் பெரும் பிரசாரம் செய்யப்படுகிறது. அது மட்டுமன்றி இன்று நாட்டிலுள்ள ஒரு தனி நபரின் வருட வருமானம் இரண்டாயிரத்து எண்ணூறு டொலர். அதாவது மாத வருமானம் 28,000 ரூபா எனவும் கூறப்படுகிறது.

ஆனால் விவசாயிகள் கடன்களைக் கட்ட முடியாமல் தற்கொலை செய்கின்றனர். லீசிங் முறையில் வாங்கிய உழவு இயந்திரங்களைப் பறிகொடுத்துக் கொண்டிருக்கின்றனர். அரச பணியாளர்கள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்குகின்றனர். தனியார் துறை ஊழியர்களின் நிலைமைகளோ மேலும் மோசமடைந்துள்ளது. தொழிலாளர்கள், மாணவர்கள் போராட்டங்கள் பொலிஸாராலும் படையினராலும், காடையர்களாலும் தாக்கப்பட்டு அடக்கப்படுகின்றன. ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் கொலை, கடத்தல், காணாமல் போதல், சிறையிடல் எனப் பலவித ஒடுக்கு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல்வேறு தரப்பிலுள்ள மக்களும் நாட்டை விட்டு சட்ட பூர்வமாகவும் சட்ட பூர்வமற்றும் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

இப்படியான நிலையில் நாட்டின் ஏழுவீத பொருளாதார வளர்ச்சியால் எட்டப்பட்ட 28,000 ரூபா தனிநபர் வருட வருமானம் எங்கே போகிறது? யாரிடம் போய்ச் சேருகிறது என்ற கேள்வி எழுகிறதல்லவா?

### 65 வருட சுதந்திரத்தின் பயன் என்ன?

இன்று இலங்கை மிக வேகமாக அபிவிருத்தி அடைந்து வருவதாகக் கூறப்படுகிறது. வீதிகள் அகலிக்கப்படுகின்றன. அதிவேக வீதிகள் அமைக்கப்படுகின்றன, பெரும் பெரும் கட்டடங்கள் எழுகின்றன. சுற்றுலா விடுதிகள் நாடு பரந்த அளவில் அமைக்கப்படுகின்றன, ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன. இவை எதுவும் தேவையற்றவை என்று எவரும் கூறிவிட முடியாது. ஆனால் இவற்றின் பயன்களில் மிக ஒரு சிறு பகுதியையே பொதுமக்கள் அனுபவிக்கின்றனர். ஆனால் அந்நிய நிறுவனங்களும் உள்ளூர் தரகர்களும், ஏற்றுமதி இறக்குமதியாளர்களுமே இவற்றின் பயன்களை முழுமையாக அனுபவிக்கின்றனர்.

இன்று இலங்கையின் ஒவ்வொரு குடிமகனின் தலையிலும் 3 லட்சம் ரூபா வெளிநாட்டுக் கடன் சுமத்தப்பட்டுள்ளது. இலங்கையின் வருமானத்தில் 70 வீதம் கடன் தவணைகளையும் வட்டியையும் செலுத்தவே பயன்படுத்தப்படுகிறது.

அதேவேளையில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 6 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் காரணமாகவும் பொறுப்புக் கூறலில் காட்டும் அக்கறையின்மை காரணமாகவும் ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. சலுகையை நிறுத்திவிட்டது. இதன் காரணமாகப் பல ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன ஒரு வீதம் அல்லது இரண்டு வீத வட்டிக்கே கடன்களை வழங்குவதுண்டு. ஆனால் இலங்கை பெருமளவு கடன்களைச் சீனா, இந்தியா போன்ற நாடுகளிடமே பெற்றுள்ளது. இவற்றுக்கான வட்டிவீதம் நான்கு அல்லது ஐந்து வீதமாகும். இவற்றை ஈடு செய்ய எமது நிலவளம், கடல் வளம், மூலப்பொருள்கள் வளம், மனித உழைப்பு வளம் என்பன தொடர்ந்து விற்கப்படுகின்றன. இவற்றின் நலன்கள் யாவும் சுற்றுலா விடுதி உரிமையாளர்கள், ஒப்பந்தக் காரர்கள், ஏற்றுமதி இறக்குமதியாளர்கள், ஐக்கிய முதலீட்டு நிறுவனங்கள் என்பவற்றுக்கே போய்ச் சேருகின்றன. மக்களோ உயரிய வாழ்க்கைச் செலவு காரணமாகவும், குறைந்த கூலி காரணமாகவும், வறுமை, நோய், இயலாமை போன்ற துன்பங்களுக்குள் தள்ளப்படுகின்றனர்.

ஒட்டுமொத்தமாக சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் எனச் சகல இனமக்களும் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த முடியாத அளவுக்குப் பொருளாதார நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டு விட்டனர். அதேவேளையில் அவற்றுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் கர்ணகொடூரமான முறையில் அடக்கப்படுகின்றனர். எந்த ஒரு தனி மனிதனுக்குமே பாதுகாப்பு இல்லை என்றளவுக்கு இனந்தெரியாதவர்களின் வன்முறைகளும் அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களான பாதாள உலகக் கோஷ்டியினரும் கோலோச்சி வருகின்றனர்.

நீதித்துறைச் சுதந்திரம் கூட இன்று கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு நாடு முழுவதும் ஒரு காட்டுமிராண்டித்தனமான சர்வாதிகார ஆட்சி நிலவும் அதேவேளையில் வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் மேல் பொருளாதார ரீதியில் மட்டுமன்றி அரசியல் பொருளாதார முறைகளிலும் கடுமையான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இது இன அழிப்பு மற்றும் சிங்கள மக்களை இனவாத மாயையில் வைத்துக் கொண்டு அவர்களின் கவனத்தைத் திசை திருப்பி அவர்களை ஒடுக்குவது என்பனவாகும்.

போர்முடிந்து மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பறித்தது. சிவில் நிர்வாகத்தில் இராணுவ மேலாதிக்கம் சிங்களக் குடியேற்றங்கள், அபிவிருத்தி, பாதுகாப்பு என்ற பேரில் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களைப் பறித்தல், பொய்யான குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்து தடுத்துவைத்தல், இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்படும் கொலைகள் உட்பட வன்முறைகள் என தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் இந்தச் சர்வாதிகார ஆட்சியாளர்கள் இந்த சுதந்திர தினத்தின் 65 ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் உயிர்களையும் பறித்தமை தொடர்பாக சர்வதேசத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய ஒரு இக்கட்டான நிலை எழலாம். ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் பல நெருக்கடிகள் எழலாம்.

ஜனநாயக மேடையில் இடம் பெறும் கொடுங்கோல் மன்னராட்சியின் பொட்டுக்கேடுகள் அம்பலப்படுத்தப்படும். அதுவே சில சமயங்களில் சர்வாதிகார ஆட்சி ஆட்டங்காண திறவுகோலாகவும் அமைந்துவிடலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கள் நல்வரவை விரும்பும்.....

– சிறுகதை



■ தொல்புரம் சி.கதிர்காமநாதன்

2013 பிறந்து பொங்குதலும் வந்து போய்விட்டது. அப்பாடா உலகம் அழிந்துவிடவில்லை. எல்லோரும் தப்பிப் பிழைத்துவிட்டோம். ஒரு பெரிய பெருமூச்சு எம்மை அறியாமல் வெளிவருகின்றது. சரி நாங்கள் உயிர் பிழைத்ததை நினைத்து என்ன நினைக்கின்றோம்? தை மாதம் அமர்க்களமாக தொடங்கியது குளிருக்கு பஞ்சமில்லை, மழையும் இடை இடையே பெய்து பூமியின் சுடுலையும், மனத்தையும் நனைத்து சூட்டைக் குறைத்தது.

எல்லாமே நன்றாகத்தான் போய்க்கொண்டிருக்கின்றது, வேலைக்கு போவதும், வீடு வருவதும் கச்சிதமாய் நடைபெற்றாலும், திடீரென வந்து சேரும் அழைப்பிதழ்கள் குடாநாடு வரும் வெளிநாட்டு பிரதிநிதிகளைக் கண்டு அரசு முகம் சுழிப்பது போன்ற நிலை எமக்கும் ஏற்படுகின்றது. சீரான ஒழுங்குநடைமுறையில் போய்க்கொண்டிருக்கும் வாழ்க்கைப் பயணத்தை குழப்பம் செய்கின்றது. அதுவும் தை மாதத்தில் வந்து சேரும் திருமண அழைப்பிதழ்கள்தான் இந்தக் குழப்பத்துக்கு காரணம்.

ஏதோ நான் இந்தப் பூமியில் பிறக்காமல் வேற்றுக் கிரகத்தில் பிறந்து, தற்செயலாக பூமியில் வளர்ந்த மனிதனல்ல, இந்த விடயங்கள் ஒத்துவராமல் போவதற்கு. நானும் இந்தப் பூமியில் பிறந்த இரண்டு கால் உயிரினம் தான். எனக்கும் மற்றவர்களின் கொண்டாட்டம், விழாக்களில் கலந்து கொள்வது சந்தோசமான விடயம்தான். இப்படியான நல்லநாள் பெருநாள்களில் தானே உற்றார், உறவினர், நண்பர்களை நீண்ட நாள்களுக்கு பிறகு கண்டு கதைத்து உணர்வுகளைப் பரிமாறி உணவுண்டு சந்தோசமடையலாம்.

மனிதனாய் பிறந்து தனித்து வாழ முடியுமா? மனிதன் ஒரு சமூகப்பிராணி என்று பெரிய மேதைகள்தான் சொல்லிவிட்டார்கள். எனவே தனித்து வாழுவது சிரமமான காரியம், சந்தோசத்தோடு இணைந்து அவற்றின் சுகதுக்கங்களில் பங்கு கொள்வது நியதியும் கடமையும் ஆகும். இந்த நிலையில் வீட்டுக்கு வந்து சேரும் திருமண அழைப்பிதழ்களோ அல்லது வேறுவிதமான அழைப்பிதழ்களையோ கண்டு சந்தோசமடையாமல், சும்மா அந்த விசயத்தை கவலை தரும் விடயமாக நோக்குவது உங்களுக்கு கஷ்ரத்தை கொடுக்கலாம். வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து அழைப்பிதழை கொண்டுவந்து தந்துவிடுவார்கள். அதுவும் பல மைல் தூரமாக இருந்தாலும் களைப்படையாமல் வீட்டைக் கண்டுபிடித்து..... உறவு மகத்தானது.

எப்போதும் புதிதாக ஒருவரது இடத்தினை பார்க்க போகும் போது அந்த இடமானது தூரமான இடமாகத்தான் தெரியும் அதுவும் இணுவிலிலிருந்து தொல்புரம் வருவது முத்தையன் கட்டுக்கு போகுமளவுக்குத் தூரம் அல்ல. சில நேரங்களில் 'வெளிநாடுகளிலிருந்து வரும் உறவுகள் யாழ். வந்து தொலைபேசியில் சொல்வார்கள் "உங்கட வீட்ட வரத்தான் வேணும். கொஞ்சம் தூரமாகவல்லே கிடக்கு"

நான் என்ன சொல்வது? பிரான்ஸ், ஜேர்மன் போன்ற இடங்களிலிருந்து இங்கு வந்தவர்களுக்கு என்ர இடம் தூரமாக தெரிவது ஆச்சரியமான விடயம் தான். ஒருபோதும் வீடு வராமல் இப்படியான விசேட தினங்களுக்கு மட்டும் வரும் உறவுகளுக்கு என்ர இருப்பிடம் தூரமாகத்தான் இருக்கும். வீடு பிரதான வீதியிலிருந்து உட்பக்கம் அலைந்து இருப்பதனால் வழக்கம்பரையோ சித்தன்கேணியோ இரு இடங்களிலிருந்தும் ஒழுங்கை வழியாகத்தான் பயணம் செய்ய வேண்டும்.

எனது திருமணத்துக்கு வந்த மாமா ஒருவர் "என்னடா உன்ர வீட்ட வாறதுக்கு பதினாறு முடக்கு தாண்ட வேண்டியிருக்கு" என ஒரு போடு போட்டார். (இன்றைக்கு அவர் சொன்னது சரிதானா? என நான் எண்ணிப்பார்க்கவில்லை) இப்படியாக, கஷ்ரப்பட்டு, வேதனைப்பட்டு முடக்குகள், தாண்டி பள்ளங்கள் தாண்டி ஆட்டோவிலோ மோட்டார் சைக்கிளிலோ வந்து அழைப்பிதழை தந்து 'கட்டாயம் வர வேணும், வராமல் நிண்டு போடாதையுங்கோ' (என்ர நடத்தை பற்றி ஏற்கனவே யாரோ வகுப்பெடுத்துள்ளனர்). இப்படி சொல்லிவிட்டுப்போனால் எப்படி இருக்கும்? அன்று வேலைமுடித்து வரும் போது எனக்காக அவர்கள் பொழுது சாயும் நேரத்தையும் பொருட்படுத்தாமல் தப்பியோடி மறைந்து வாழும் கைதியை பிடிப்பது போல் காத்து நின்றார்கள். அழைப்பிதழைத் தந்தார்கள். அது வேற திருமண அழைப்பு, இடம் இணுவில்தான். குறிப்பிட்ட நாளோ விடுமுறையாதலால் எனக்கு பிரச்சினையில்லை.

"அப்ப தம்பியவை வந்து கனநேரமோ?"
"அரைமணித்தியாலமாகுது".

"அடடா... அப்ப இஞ்ச குடுத்துட்டு போயிருக்கலாம்"

"பிரச்சினை இல்ல... சொல்லித்தான் விட்டவா. நேரம் செண்டாலும் உங்கட கையில குடுத்திட்டு வரச்சொல்லி"

ஐயோ.... கடவுளே எனக்கே இத்தன பாடு எண்டால் இறந்து போன ஒசாமா பின்லேடன் எவ்வளவு கஷ்ரப்பட்டிருப்பான்.

அவர்கள் போய்விட்டார்கள். அழைப்பிதழை பிரித்தேன். முற்பகல் 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் என நேரம் போட்டிருந்தார்கள்.

இன்று திருமணம். எனக்கோ இருப்புக்கொள்ளாது. வேலைக்கு போறதினால் வந்த பழக்கம். " 'வெள்ளன' திருமண மண்டபத்துக்கு போய் விட்டேன். கிராம சேவகரை சந்திக்க காத்திருக்கும் மக்கள் போல் சிலர் மட்டும் வாசலில் காத்து நின்றார்கள். சுமார் 10.30 க்கு பின்பே மணமகள் மண்டபத்துக்கு வந்தார். சனங்களும் விரைவாக உள்ளே நுழைந்தார்கள். எல்லாம் முடிந்து வீடு வந்து சேர்ந்த போது இன்னொரு வர்ணமான அழைப்பிதழைக் கண்டேன். அழைப்பிதழை கையில் எடுத்து படிக்க முன் மனைவி முந்திக் கொண்டாள். "உங்கட இணுவில்ல இருக்கிற மச்சான்ர கடைசி மகனுக்கு கல்யாணமாம். ஆட்டோவில வந்து வீடு தெரியாம அலைஞ்சு .... இப்ப சொல்லிப்போட்டு போயினம். கட்டாயம் வரட்டாம்" " சே.. நான் 11.30 இற்குக் கட்டாயப்படுத்தி உள்ளே செலுத்திய உணவு சமிபாடடைந்து விட்டது.

அவசரமாக அழைப்பிதழைப் பிரித்து பார்த்தேன். அட வாற திங்கட்கிழமை.... தெல்லிப்பழை... வேலைநாள்.... காலை நேரம்... கல்யாணம். என்ன செய்வது?

"என்ன யோசிக்கிறியள்?..... என்ர ஆக்களில்ல உங்கட [illegible] வேணும். "வேலை நாளில எப்படி[illegible] போறது?"


(20 ஆம் பக்கம் பார்க்க......)

மனிதனாய் பிறந்து மனித்து வாழ முடியுமா? மனிதன் ஒரு சமூகப்பிராணி என்று பெரிய மேதைகள்தான் சொல்லிவிட்டார்கள். எனவே தனித்து வாழுவது சிரமமான காரியம், சந்தோசத்தோடு இணைந்து அவற்றின் சுகதுக்கங்களில் பங்கு கொள்வது நியதியும் கடமையும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ளியெழத் துடிக்கும் சொற்கள்

ராணி சீதரனின் 'கன்னியா தானம் சிறுகதைத் தொகுதியை வைத்து சில எண்ணங்கள்......



இந்தச் சமுதாயம் பல பெண்களை எங்களுக்குக் காட்டிக்கொண்டிருக்கிறது. கணவனுக்காக ஏங்கும் பெண்கள், கணவனது ஆசைகளை நிறைவேற்றும் பெண்கள், ஆண்களால் சிதைக்கப்பட்டு வேறு ஆண்களாலேயே காப்பாற்றப்படும் பெண்கள், ஆண்களால் சிதைக்கப்பட்டு மீள முடியாத சுழ்ற்சிக்குள்ளும் சேற்றுக்குள்ளும் வீழ்ந்த பெண்கள், பிள்ளைகளை அதிகம் பெற்று ஏங்குபவர்கள் பிள்ளை இல்லாது துடிப்பவர்கள், தவறு செய்தாலும் குற்றவுணர்வுள் குறுகிக் கிடக்காது துள்ளியெழுந்து வாழும் பெண்கள்.

இந்த ஒவ்வொரு பெண்ணுக்குளும் எழுதப்படாத, அறியப்படாத, சொல்லப்படாத கதைகள் வகை, வகையாய் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எழுத்தாளன் அந்த உணர்வுக்குள் நுழைந்து கதைகளுக்கு உயிர் கொடுக்கும் போது பல கதைகள் வெளிச்சத்துக்கு வருகின்றன. எம் மனதைத்தொடுகின்றன. சிலவேளைசுடுகின்றன.

■ த.அஜந்தகுமார்



ராணி சீதரன் ஒரு பெண் எழுத்தாளர் என்ற வகையிலே பெண்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் கதைகளை எழுதுகிறார். திருகோணமலையைச் சேர்ந்த இவரது முதலாவது தொகுதி 'மாங்கல்யம் தந்து நீயே' ஆகும். அதை அடுத்து 2001 ஆம் ஆண்டு கன்னிகாதானம் என்ற தொகுதி வெளிவந்தது. இதில் அடங்கும் கதைகளைப் பற்றிய குறிப்பாக இப்பந்தி அமைகின்றது.

'உள்ளத்தின் கதவுகள் ' என்ற சிறுகதை தன் மனைவியை குடித்து விட்டு வந்து துன்புறுத்துகின்ற சந்தேகிக்கின்ற, கணவன் பெண்நிலைவாதிகளின் கருத்தரங்கு ஒன்றில் இருந்ததன் மூலம் மனம் மாறி அவளைப் புரிந்து கொள்வதைக் கூறுகின்றது. கதையின் இந்த முடிவு யதார்த்தமானதாக இல்லை. சில நேரங்களில் இந்தச் சம்பவம் உண்மையாகவே நடந்திருந்தாலும் இத்திருப்புமுனை மனதோடு ஒட்டுவதாக இல்லை

'பாவங்களே சாபசங்களாய்' என்ற கதையில் போர்ச்சூழலில் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாதவி என்ற பெண்ணின் கற்பு சூறையாடப்படுகின்றது. அவளுக்கு பேசிவரும் திருமணங்கள் எல்லாம் சமூகத்தின் புகார்களால் தடைப்பட்டுப் போகின்றன. ஆனால் இறந்த காலம் பற்றி யோசியாது எதிர்காலத்தை வாழ துடிக்கும் ஒருவன் அவளை ஏற்பதைச் சொல்லுகின்றது. கதையின் இறுதியில் இவளைச் சிதைத்தவன் பிச்சைக்காரனாய் தொழு நோய்க்காரனைப் போல் ஆகியிருக்கும் நிலை காட்டப்படுகின்றது. கதையின் இந்த முடிவும் வழமையான அறப் போதனை கதைகளையே நினைவுபடுத்தி ' திட்டமிட்ட தயாரிப்பு ' என்பதை உணர்த்துகின்றது.

'மீண்டும் நளாயினி' என்ற சிறுகதை தன் மனைவியின் நண்பியில் சலனப்படும் ஒருவனையும் வெளிநாட்டில் கணவன் இருக்கும் அவள் சிறிது சலனம் அடைந்தாலும் விட்டுக் கொடாது உறுதியாக இருப்பதையும் கணவனின் எண்ணம் உணர்ந்து மனைவியே தன் நண்பியை அவன் அடைய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க முயல்வதையும் கூறுகிறது. கதையின் தலைப்பே இதை உறுதி செய்து விடுகிறது. மனைவி ஒருத்தி நிய வாழ்வில் இவ்வாறு இருக்க முடியுமா என்ற கோன்னிவாசன் மனதில் எழவே செய்கிறது. ஆனால் 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு' என்பது போல் கணவனது எண்ணங்களுக்கான சாட்டை அடியாகவும் அவளது முடிவைக் கூறலாம். அவ்வாறு நினைக்கும் போது இந்தக் கதை உருவாக்கும் வாசகனுக்கான முடிவுகள் கனதியானவை தான் .

பெண்களின் பிரச்சினைகளைப் பேசும் கதைகளின் தீர்வுகள் யதார்த்தம் அற்றவையாக இருந்தால் அது மனதில் ஒட்டாமல் விலகி விடவே செய்கின்றன. ஒரு கதையில் முடிவு கூட கட்டாயம் இருக்க வேண்டும் என்று இல்லை. சூத்திரப் பாங்கான கதை முயற்சிகள் தான் நமது சிறுகதைத் துறையில் பலவீனப்படுத்தி விடுகின்றது போலத்தெரிகின்றது. வாசகனுக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் அவனும் முடிவுகளை கண்டு பிடிக்க வேண்டும், யோசிக்க வேண்டும் சில பிரச்சினைகள் அவனது மனதை அலைக்கழிக்க வேண்டும். இதைப் பல எழுத்தாளர்கள் யோசிப்பதே இல்லை.

'ஒரு எழுத்தாளனின் பயணம்' புத்தகம் வெளியிடும் எழுத்தாளனின் துன்பங்களை அவர்களின் நூல், சமூகத்துக்கு போக முடியாமல் போகும் போது படும் இன்னல் களையும் அரிதுன ஜீவன்கள் ஊக்குவிக்க இருப்பதையும் கூறுகிறது. எனினும் இதை ஒரு சிறுகதை என்று கூறிவிட முடியாது.


இப்படி ஒரு விடயத்தை எழுத வேண்டும் என்று ' ராணி சீதரன்' யாரோ ஒருவரை வைத்துக் கொண்டு எழுத முயன்றிருக்கிறார். ஆனால் ஒரு கருவைச் சொல்வதற்கு எழுத்தாளன் எடுக்கும் 'வடிவம்' தான் அவனது படைப்பின் வெற்றியைத் தீர்மானிக்கின்றது. கவிதையில் சொல்லவரும் விடயம் சிறுகதைக்கு வரும் போது தோற்று விடலாம். சிறு கதையில் சொல்ல வந்த விடயம் கவிதையில் தோற்று விடலாம் சில நேரம் இரண்டிலுமே வென்று விடலாம். அது படைப்பாளியின் 'வெளிப்பாட்டுத் திறனைப்' பொறுத்தது.

'பேதையே போதியோ' சிறுகதை மனைவியின் பிரிவால் உள்ளுடைந்து வெளிக்காட்டாது அழும் கணவனைப் பற்றிய கதை சொல்லியின் பதிவு

'அவளுக்குதான் தெரியும்' பிச்சையெடுக்கும் இளம் பெண் முகமறியாதவர்கள் பாதிக்கப்படுவதைக் கூறுகிறது. அவளில் விருப்பம் கொண்டாலும் குடும்பத்துக்கு அஞ்சி திருமணம் செய்ய முடியாத ஆணின் பலவீனத்தைத் பேசுகிறதுள மனதை நெருடும் கதை.

'கன்னிகாதானம்' ஆசிரியரின் துணிவைக் காட்டும் யதார்த்தத்தை காட்டும் சிறுகதை. பெற்றோரின் அடக்குமுறைக்கு ஆளாகி பல்கலைக் கழகம் சென்ற பெண் ஆணின் ஆசை வார்த்தைகளுக்கு பலியாகியும் நம்பி ஏமாறி கற்பை இழப்பதையும் அவன் வெளிநாடு சென்று வேறு வாழ்க்கை தேடும் போது ஏன் நான் என் வாழ்க்கையை வாழக்கூடாது என்று கேட்கும் கதை. படித்தவன் என்பதால் தான் பாதிக்கப்படாததையும் ஏழைப் பெண் எனில் என்ன பாடு படுவாளோ என அவள் கேட்பதும் நியாயமான யதார்த்தமே. ராணி சீதரனின் கதைகள் கருவை முழுமைப்படுத்தும் அஞ்சலோட்ட கதைகள் தான் ஆயினும் அந்த அஞ்லோட்டம் பெண்களுக்கான அவர்களின் மனதை - எண்ணங்களை – பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்காகவே நிகழ்கிறது. எனினும் அழகியல் உணர்வு இன்னும் ஆழமாக வெளிப்பட வேண்டும் என்று தோன்றுகின்றது.

பிரச்சினை– தீர்வுகள்–உணர்ச்சிகள்–உணர்வுகள் மட்டும் கலை வடிவமாகி விடுவதில்லை அதற்கான உழைப்பு இன்னும் தேவைப்படுகின்றது. ★



## மெழுகுவர்த்தி

உச்சந் தலை தீ சுமக்க
உடலுருகி ஒளி பரப்ப
தனித்து நின்ற மெழுகுவர்த்தி
மனதுருகி மனிதர்
இல்லையென்றெண்ணி
தானோ உருகி அழுகிறதா?
இல்லை தன் சுவாலை சுட்டெரித்த
விட்டில் பூச்சிகளுக்காக அழுகிறதா?
தன் சுவாலை மட்டுமல்ல
தானும் சாகும்வரை தலை நிமிர்ந்து
மிடுக்காக நிற்கிறதே
தியாகச் சுவாலை பெருகப் பெருக
உடலை உருக்கி தாழ்ந்து போகிறதே
இதுதான் தியாகத்தின் சின்னமா?
தன்மீது கொள்ளியிடப்படுவது
மனித குலத்துக்கு தெரிவதில்லை
இங்கு உச்சியில் கொள்ளி வைத்தும்
சுவாலை விழியால் தன் அழிவை
அமைதியாய் ரசிக்கிறதே இந்த
ஈகையில் இறக்கும் மெழுகு உடல்

அ.அஜந்தன்
கந்தர்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பசிய மரங்களால் நிறைந்த பூமி என்பதால் தென்மராட்சிப் பகுதிக்கு குழைக்காடு என்று பெயர். அந்தப் பகுதியின் மரபார்ந்த விடயங்கள் எமது பண்பாட்டுக்கு வலுச்சேர்ப்பவை. நாகரிகத்தில் அதிவேக உட்புகுதலோடு அத்தகைய மரபுகள் மெல்ல மெல்லத் தமது அடையாளங்களைத் தாமே தொலைக்கத் தொடங்கியுள்ளன. ஞாபகப் பரப்பில் தூறிக் கொண்டிருக்கும் குழைக்காட்டின் துளிகள் இங்கே பகிரப்படுகின்றன.**

# 'அடிப்பார்த்தல்'

## அற்றுப் போகும் தடங்கள்



பளையில் நானறிய அல்லிப்பளையைச் சேர்ந்த கனகப்பா தவிர காலடி பார்ப்பதில் பல நிபுணர்கள் இருந்தார்கள். பரியாரி பொன்னர் என அழைக்கப்பட்ட பொன்னையா இவரும் அல்லிப்பளையை சேர்ந்தவர் தான். இவர் இயன்றவரை காலடி பார்ப்பதை தவிர்த்துக் கொள்வார். இவர்கள் காலத்துக்கு கொஞ்சம் முன்பாக வாழ்ந்த தம்பாபிள்ளை அவர்களும் காலடி பார்ப்பதில் வல்லவர். இவர் புலோப்பளையில் வாழ்ந்து மறைந்தார்.

புலோப்பளை கிழக்கில் அண்மையில் கலைச் சேவைக்காக "கலைத் தென்றல்" விருதினை பெற்றுக் கொண்ட அல்பிரட்டும் காலடி பார்ப்பதில் நிபுணத்துவம் கொண்டவர் தான்.

இவர்களைப் போல நிறையப் பேர் காலடி பார்த்து ஆள் இனம் காண்பதில் வல்லவர்கள். எம்மூரில் வாழ்ந்து மறைந்து விட்டார்கள். வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இன்றைய காலகட்டத்தில் இதன் தேவைப்பாடு இல்லாது போய்விட்டதால் யாரும் காலடி பார்க்க யாரையும் கூப்பிடுவது கிடையாது.

எமது சமூக கட்டுமானம் குலைந்தோ தாழ்ந்தோ இருப்பது ஒரு காரணமாக அமையலாம். மிக நெருக்கமாக அமைந்த குடிமனைகள் இன்று பளையைச் சூழ இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. மூன்று தடவைகள் ஏற்பட்ட பெரிய இடப்பெயர்வுகளாலும், புலம் பெயர் காரணியாலும் அங்கு நெருக்கடி மிகுந்த குடியமைவு இல்லாது போய் விட்டது.

1980 களில் நிறைய மக்கள் அங்கு வாழ்ந்தார்கள். சமூகத் தேவைகள் பெருகி இருந்தன. இதனால் இத்தகைய சுவாரசிய சம்பவங்கள் நிகழ்ந்து மனதில் பதிந்து கொண்டு இருக்கின்றன. 1990 களுக்கு பின்பாக எல்லாமும் மாறிப்போய் விட்டது. இதனால் பழைய சம்பவங்களை மீட்டிப் பார்த்து சந்தோசப்பட வேண்டிய துரதிஷ்டசாலிகளாக மாறிவிட்டோம். ஆனாலும் நாம் வாழ்ந்த வாழ்வின் இன்ப நிலைகளை பதிவு செய்வதும் அவசியம் ஆகின்றது.

இது 1984, அல்லது 1985 ஆக இருக்கலாம். செல்லம் மாமியின் தண்ணீர் குடத்தினை காணவில்லை. தண்ணீர்க் குடம் ஈயத்தால் செய்யப்பட்டது- களவு போய்விட்டது.

அந்தக் காலங்களில் எல்லா வீடுகளிலும் தண்ணீர்க் குடம் மிக முக்கியமான பொருளாக இருந்து வந்தது. அது ஒரு சிறிய தண்ணீர் தாங்கியாகச் செயற்பட்டு வந்தது.

குசினிக்குப் பக்கத்தில் தண்ணீர்க் குடம் பேணப்பட்டு வரும். "பொச்சு" எனப்படும் தேங்காய்மட்டையை வட்டமாக அடுக்கி அதன் மேல் தண்ணீர் குடத்தினை வைத்து அதன் வாயை பூச்சிகள், பறவை எச்சம் விழாமல் செம்பையோ அல்லது வேறு பாத்திரத்தையோ கொண்டு மூடி வைப்பார்கள். தண்ணீர் குடிப்பவர் அதனுள் வார்த்து குடித்துக் கொள்ளலாம்.

முதலில் இதற்கு மண் பானைகள் பயன்பட்டு வந்தன. அவை இலகுவில் உடைந்து விடுவதால் பித்தளைக்குடம், வெண்கலக்குடம் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவற்றில் இரசாயன தாக்கம் ஏற்பட்டு மணம் ஏற்பட்டதால் ஈயக் குடங்கள் பாவனைக்கு வந்தன.

காலையில் குடும்பத் தலைவன் அல்லது தலைவி தண்ணீர்க் குடத்தினை நிரப்பி உரிய இடத்தில் வைப்பது முக்கிய கடமையாக இருந்தது. குடம் வைக்கப்படும் இடம் 'குடத்தடி' என அழைக்கப்பட்டது. கார்த்திகை விளக்கீட்டின் போது குடத்தடியும் ஒரு தீப்பந்தம் நடப்படும் இடமாக இருக்கும். அவ்வளவு முக்கியமான இடமாக குடத்தடி கருதப்பட்டதற்கு இது ஒரு சான்று. நாம் சாப்பிட்டு முடித்ததும் குடத்தடியில் கோப்பையை கழுவி தண்ணீர் குடிப்போம். அம்மா பல தடவை கத்தியிருப்பார் குடத்தடியில் கோப்பையை கழுவி, கழுவிய தண்ணீரை தூர ஊற்ற வேண்டும். ஏனெனில் நாம் ஊற்றும் தண்ணீரில் இருக்கும் உணவு துணிக்கைகளை சாப்பிட எமது கோழிகள் வரும். சாப்பிட்ட நன்றிக்கு அதில் எச்சமிட்டு சென்றுவிடும். இது ஒரு அசிங்கமான நிலையல்லவா.

குடத்தடி தூய்மையாக இருக்க வேண்டும். ஏனெனில் வீட்டுக்கு வரும் ஒருவருக்கு தண்ணீர் வார்த்துக் கொடுக்கும் போது அவர் குடத்தடியை கவனிப்பார். அப்போது அவருக்கு அருவருப்பு ஏற்படக்கூடாது.

'அவையின்ர குடத்தடியை பார்த்தால் தண்ணி குடிக்க மனம் வராதப்பா'' என்று பலர் சொல்வதை நான் கேட்டிருக்கின்றேன். குடத்தடி எப்போதும் ஈரலிப்பாக காணப்படும் இடம். இதனால் மண்புழு, மண் பன்றி, மண்ணை உள்ளால் உழுது விடும். இதனை தவிர்க்க தண்ணீர் குடத்தினை நாம் உயரமாக பேணிக் கொள்வோம். சிலர் குடத்தடியில் ஒரு வாழைக் குட்டியை நட்டும் விடுவார்கள். குடத்தடியில் வாழை செழிப்பாக வளரும்.

குடத்தடியின் அவசியம் சாப்பிட்டு முடித்ததும் கிணற்றடிக்கு போய் கழுவ முடியாது. சமையலுக்கு தேவையான தண்ணீரை கிணற்றில் அள்ளிக் கொள்வது சிரமம். அருகில் நீரை வைத்துக் கொள்வது வேலையை இலகுவாக்கி விடும். சில வீடுகளில் குடிதண்ணீர்ப் பிரச்சினை இருப்பதும் உண்டு. இதனால் கோயில் கிணற்றில் அல்லது நல்ல தண்ணீர் வீடுகளில் தண்ணீரை அள்ளிக் கொள்ள குடம் உதவி செய்யும்.

தண்ணீர் தாங்கிகளும், பைப் வசதிகளும் வந்தபின் குடங்கள் காணாமல் போய்விட்டன. கல்வீடுகள் வந்ததாலும், தண்ணீர்க்குடங்கள் வீட்டுக்குள் போய் விட்டன. மண் ஓலைக் குசினிகள் மறைந்து விட்டன. அவற்றோடு குடங்களும் மறைந்து விட்டன. இன்று எந்தக் கடையிலும் ஈயத்திலோ, பித்தளை, வெண்கலத்திலோ குடம் வாங்க முடியாது. பிளாஸ்ரிக் குடங்கள் சிறிது காலம் பாவனைக்கு வந்தன. அதனையும் இப்பொழுது காண முடியவில்லை.

குடிதண்ணீர் எடுக்க எங்கள் ஊரில் மூன்று, நான்கு பெண்கள் சேர்ந்து போவார்கள். பின் சேர்ந்து வருவார்கள். தண்ணீர் குடத்தினை இடுப்பில் வைத்துக் கொண்டு நடந்து வருவார்கள். மிக அழகாக இருக்கும். சில வேளை ஒரு இடுப்பில் பிள்ளையும் மறு இடுப்பில் தண்ணீர் குடமுமாக வரும் அழகு தனி தான்.

செல்லம் மாமியின் தண்ணீர்க் குடக் கதையினை சொல்ல முன்னதாக இன்னொரு கதை ஞாபகம் வருகின்றது.

*(சுவடுகள் பதியும்)*

---

## மண்ணின் மடியில் மரணித்த மனிதர்களை......

நந்திக்கடல் வெளியும்
முள்ளிவாய்க்கால்
பனங்கூடல் விளை நிலமும்
மெல்ல.... மெல்ல வந்து
தழுவிச் சென்ற
கடற்காற்றால்
மேனி சிலிர்த்துக் கொண்டன
எண்ணற்ற நினைவலைகளை
அவைகள் மனதில்
சுமந்து....
மௌனமாய் நின்றாலும்
மண் அடியில்
மரணித்துக் கொண்ட
மனிதர்களை
அவைகளால்
மறக்க முடியவில்லை
வஞ்சகம்
நிறைந்த மனித
இனம்... அடைக்கலம்
உண்ணாவிரதம்
என்ற பசப்பு வார்த்தை
வைக்கோல் போருக்குள்
மறைந்து... நின்று
ஆசை தீர
பார்த்து மகிழ்ந்தது
மனித இன அவலங்களை
குருதிக்குள்
குற்றுயிராய்
துடிதுடித்து
உறைந்து
போனவர்கள் மரணத்தின்
பிடியில் சிக்கி
அழ மறந்தவர்கள்
வெளிச்சம்
காணாமல்
பதுங்குழியில்
பறிபோனவர்கள்
வேடம் தாங்கியின்
கொத்துக் குண்டும்
இரசாயனக் குண்டும்
மனித நேயத்தை களவாடி
எம் தாய் நிலத்தை
சுவைத்த போது
எம் உறவுகளின்
இரத்தங்களும்
சதைகளும் கொப்பளித்தன
மண்டையோடுகளும்
எலும்புகளும்
போரின் சாட்சிகளாய்
ஓர் இனத்தின் அழியா வரலாறாய்
நிமிர்ந்து கொண்டன



- ரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடி நகரமும் மூன்றாம் முகங்களும்...

■ மதுவிழி





"உண்மையில் சமூகவலைத்தளங்களை சரியான முறையில் பயன்படுத்துகின்ற போது அவை பல அறிவியல் தகவல்களை மற்ற நண்பர்களோடு பகிரவும் சில விடயங்களைத் தேடவும் நல்ல வழியாக அமைகிறது. ஆனால் நாங்கள் தான் இன்று நிஜத்தை தொலைத்துவிட்டு வெறும் நிழல்களோடு மாத்திரம் நிற்கிறோமே."

"எத்தனையோ கொத்துற சர்ப்பங்களையெல்லாம் கோடரியால் வெட்டிக்கொண்ட கோபாலனிற்கு கோடரிப்பாம்பு வெருட்டிச்சாம் கொத்துவன் கொத்துவன் எண்டு". அப்படித்தான் இருக்கிறது இன்றைய எம் தமிழ் இளைஞர்களின் கதியும் தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடும்.

நெருப்புமழைக்குள் நீந்தி நிமிர்ந்து, கந்தக காற்றில் சவாரி விட்டு, எறிகணைச்சிதறல்களிற்கும் எழும்புகைமூட்டங்களிற்கும் முகம் கொடுத்து நிமிர்ந்திருந்த எம் இளம் சமூகம் இப்போ வெறும் உல்லாசத்தனங்களிற்கும் களியாட்டத்தருணங்களுக்கும் விலைபோவது ஏற்கக்கூடிய ஒன்றல்லவே.எல்லாமே இவர்கள் திட்டமிட்டு எங்களை நோக்கி ஏவிவிட்டது தான் என மிக இலகுவாக கைகளை நீட்டி இன்னொரு தரப்பினரை சுட்டிக் காட்டி விடுகிறோம்.ஆனால் திட்டமிட்ட பல சதிகளிற்கும் வழிமாற்றல்களிற்கும் அப்பால் எங்கள் ஒவ்வொருவரிற்கும் தனிப்பட்ட சிந்தனையாற்றல் என்ற ஒன்று உண்டு என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது.

தமிழ் சமூகத்தினுடைய மனோநிலையில் எண்ணப்பாட்டில் நேரெதிர்மாற்றத்தைக் கொண்டு வரவேண்டுமானால் இளஞ்சமூகத்தின் பாதையை மாற்றிவிட்டால் போதும் என நினைக்கின்ற பலரிற்கு நாமே"பால் கேட்க பாயாசத்தை அள்ளிக் கொடுத்த கதையாய்" இதில் பெருந்தன்மையாக இருந்துவிடமுடியாதே இன்று புத்தகம், கொப்பி இல்லாத உயர்தர அதேநேரம் பல்கலைக்கழக மாணவர்களைக் காணமுடியும்.ஆனால் கையில் தொலைபேசி இல்லாமல் யாரையும் காணமுடியாது. சந்தேகங்கள், விளக்கங்கள் எல்லாம் "போனில'"தான் நடக்கின்றன. தவறில்லை, தொழில்நுட்பவளர்ச்சி நன்மையே செய்கின்றதாயினும் வகுப்புகளிற்கே போகாமல் புறக்கணித்துவிட்டு பின்னர்,பணத்தையும் தொலைபேசிக் கம்பனிகளிற்கு வீணாக வாரியிறைத்து நேரத்தையும் வீணாக்கி அல்லல்படுவானேன்?

தொலைபேசி அழைப்புக்கள் எல்லாம் இப்போ அதிகம் இளஞ்சந்ததியினரின் நிலைத்திருப்பை கேள்விக்குறியாக்கும் அளவிற்கு மாறிவிட்டிருக்கிறது. ஒருநாள் இருநாள் வருகின்ற தவறான அழைப்புக்கள் வாழ்க்கைப்பாதையே தவறாகும்படி கொண்டுபோய் விட்டுவிடுகின்றன.குறிப்பாக நள்ளிரவு நேர அழைப்புக்கள் அதிகம் வேண்டத்தகாதவையாகவே இருக்கின்றன.தொலைபேசி நிலையங்களில் பணமீள்நிரப்பீட்டிற்காக தொலைபேசி இலக்கங்களை கொடுக்கின்ற போது மிக அவதானமாக இருக்கவேண்டும்.தெரியாத தவறிய அழைப்புக்கள் என்ற பெயரில் வேண்டுமென்றே தெரிந்த அழைப்புக்கள் இப்போது ஏற்படுத்தப்படுகின்றன.அந்த அழைப்புக்களே பின்னாளில் வாடிக்கையாகிப் போகின்றன. வெறும் குரலில் இருக்கின்ற இனிமையை, ஓசைநயத்தை வைத்துக்கொண்டு குறிப்பிட்ட நபரின் குணாம்சத்தை தம்மால் கணிப்பிட்டுவிட முடியும். மிக மிக நல்ல நபராகவே அவர் இருக்கிறார் என்ற குருட்டுத்தனமான பொறிக்குள் இலகுவாகவே விழுந்துவிடுகின்ற எங்கள் இளைஞர்கள்,தொடர்ந்தும் சந்தேகம் கேட்பது என்ற பெயரிலோ அல்லது வேறுஏதாவது காரணங்களை சொல்லிவிட்டோ பெற்றோர்களை நம்பவைத்துவிட்டு காதலாகிக் கசிந்துருக ஆரம்பித்துவிடுகிறார்கள்.

ஒரு கட்டத்திற்கு மேல் அது உயிரையும் விழுங்கிவிடும் பூதமாக வீட்டுவாசலில் வந்துநிற்கின்ற போது யாருக்கும் சொல்லிக்கொள்ளாமல் உயிரைக்கூட மாய்த்துவிடுகிறார்கள். காதல் என்ற போர்வையில் நாடகமாடிய ஒருவனின் உண்மை முகம் வெளித்தெரிந்ததும் நாட்டின் முதுகெலும்பென்று சொல்லப்படுகின்ற ஒரு பல்கலைக்கழக மாணவியே கோழைத்தனமாக தன்னைத் தீயிட்டு தற்கொலை செய்யுமளவிற்கு பல நச்சுச் செடிகள் பரவிவிட்டிருக்கிறது.வெறும் பாதீனியத்தை விட பலமடங்கு நச்சுத்தன்மை கொண்டவை இவை.

தலையிருக்க வாலைப்பற்றி மட்டும் பேசினால் அதற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுமல்லவா? தொலைபேசிகள் மட்டுமல்ல,இன்று முகநூல் கணக்கு (facebook) ஒன்று இல்லாவிட்டால் ஏதோ பிறப்புச்சான்றிதழ் இல்லாதது போல சிந்திக்கின்ற எம்மிளைஞர்கள் ஒன்று இரண்டல்ல எண்ணுக்கணக்கற்ற முகநூல் கணக்குகளை வைத்திருக்கிறார்கள். யார் யாரென அடையாளம் காணமுடியாத ஏதேதோ பெயர்கள் எல்லாம் அவர்களிற்கு சொந்தம். பூச்சி புழுக்களில் தொடங்கி காட்டுமிருகங்கள் வரை அந்த பெயர்களில் இருக்கும். இன்னும் சில இந்த தென்னிந்திய திரைப்பட சாயல்களோடு கெட்டவன், போக்கிரி, வசூல்ராஜா, படிக்காதவன், தளபதி, கிங் இவ்வாறு பலவற்றைச் சேர்த்துக்கொண்டு பல்லிளித்துக்கொண்டிருக்கும்.

உண்மையில் சமூக வலைத்தளங்களை சரியான முறையில் பயன்படுத்துகின்ற போது அவை பல அறிவியல் தகவல்களை மற்ற நண்பர்களோடு பகிரவும் சில விடயங்களைத் தேடவும் நல்ல வழியாக அமைகிறது. ஆனால் நாங்கள் தான் இன்று நிஜத்தை தொலைத்துவிட்டு வெறும் நிழல்களோடு மாத்திரம் நிற்கிறோமே. தேவையானவற்றையெல்லாம் கண்டிப்பாக விட்டுவிட்டு எவையெவையெல்லாம் தேவையில்லையோ அவற்றையெல்லாம் வடிகட்டி பத்திரமாக எடுத்துவைத்துக்கொண்டிருக்கிறோம். பல்வேறுபட்ட பிரதேசங்களிலிருந்தும் பல்வேறுபட்ட நடத்தையுடையவர்களும் வேலை காரணமாகவோ உயர் கல்வித்தேவைகளிற்காகவோ வர்த்தக நடவடிக்கைகளிற்காகவோ ஒரு இடத்தில் மையப்படுகிறார்கள்.அடுத்த வீட்டில் இருப்பவர்களைப் பற்றியே அறிந்துகொள்ள முடியாத இந்த நகரங்களில் மூன்றாம் முகங்கள் முளைப்பது இலகுவானதும் தவிர்க்கமுடியாததும் தான்.

வீட்டில் நல்லபிள்ளை முகத்தையும் வேலைத் தளத்தில் அல்லது கல்விக்கூடங்களில் இன்னொரு விதமான கண்ணியமான முகத்தையும் காட்டிக்கொண்டே தனிமையில் அந்த மூன்றாம்முகங்களை முளைக்கவிடுகின்றனர். யார் என்று கண்டுபிடிக்க முடியாத கணக்குகளிலிருந்து தேவையற்ற செய்திகளை அனுப்புவது, வேண்டத்தகாத அல்லது அருவருக்கத்தக்க கோப்புக்களை இடுகை செய்வது போன்ற சமூகத்திற்கு ஒவ்வாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. இங்கே நாங்கள் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும்.தனிமையில் மட்டுமன்றி சிலர் ஒன்று சேர்ந்து ஒருசில நிமிட பொழுதுபோக்கிற்காகவும் சந்தோசத்திற்காகவும் இவ்வாறு செயற்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் சுமத்தப்படுகிறது.உண்மையில் அவர்களிற்கிருக்கின்ற அந்த ஒருசில நிமிட சந்தோசம் பொழுதுபோக்கு அவர்களிற்கு அத்துடனே முடிந்துவிடுகிறது. ஆனால் பாதிக்கப்படும் நபரிற்கு அது வாழ்நாள் கால வலியாகக் கூட மாறிப்போகலாம்.சிலவேளைகளில் பாதிக்கப்படும் நபர்கள் வாழ்வை வெறுத்து முடித்துக்கொள்ளக்கூட முயற்சிக்கலாம்.

இதைவிட இன்னுமொரு விடயம். குறிப்பாக உயர் கல்விக்கூடங்களில் கல்விகற்பவர்கள் இன்னுமொருவிதமாக செயற்படுகிறார்கள்.அண்மையில்கூட ஒருமுகநூலில் நிலையொன்று (status) போடப்பட்டிருந்தது.அதை அப்படியே இங்கே தருகிறேன் "டேய் யாருடா இருக்கிறீங்க ஒன்லைன்ல இந்தாள் lecture பண்ணி ரொம்ப கழுத்தறுக்கிறான்டா. தாங்கமுடியல .யாராவது ஒன்லைனுக்கு வாங்கடா." என்று போடப்பட்டிருந்தது.நேரம் மு.ப 11..30க்கு பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது. விரிவுரையிலிருந்தவாறே அதை விட்டுவிட்டு ஒன்லைனில் சட் செய்யும் அளவிற்கு எங்கள் காலமும் கல்வியும் மாறிப்போய்க்கொண்டிருக்கிறது.

இதை இப்படியே கண்டுங்காணாமல் விட்டுவிட்டால் இந்த முகமூடி நகரங்கள் பல தமிழ் முத்துக்களை விழுங்கிவிடும்.யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பார்கள்.இது சும்மா யானையல்ல மதயானை. அட எல்லாம் சரிதான் .ஆனால் இவர்களை எப்படித்திருத்துவது என்று என்னை நீங்கள் கேட்டால் மன்னிக்கவும்,நான் ஒவ்வொருவரும் மாறிய பிறகு மிச்சம் யாராவது மாறாமலிருந்தால் அது பற்றிப் பேசலாம்.என்ன குழப்பமாக இருக்கிறதா? நான் எல்லாம் சரியானால் பிறகு நீ நோக்கி நீட்டவேண்டிய தேவை தான் இருக்காதே..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் நல்ல அம்மாவாக ஆசையா..?

சு.சாரங்கி
ஆனைக்கோட்டை .



பெற்றோராக இருப்பவர்கள், தங்கள் குழந்தைக்கு மிகவும் பிடித்த வாறு இருப்பதற்கு, புத்தகங்கள் பல வற்றை படித்து தெரிந்து கொண்டு, அதற்கேற்றாற் போல் தங்கள் குழந் தைகளிடம் நடந்து கொள்வார்கள். குறிப்பாக அப்பாக்களை விட, சில மாறுபட்ட சவால்களை அம் மாக்களே எதிர்கொள்கின்றனர்.

அந்தச் சவால்களை எப்படி எதிர் கொள்வது , குழந்தைகளை எப்படி நன் றாக வளர்ப்பது என்பது பற்றிய சில குறிப்புகள்

★தாயாக இருப்பது சில நேரங் களில் சற்று சவாலானதாகவே இருக் கும். அதனால் எப்போதும் அமைதி யாகவும் மற்றும் பொறுமையாகவும் இருக்க முயற்சி செய்யுங்கள்.உங்கள் பிள்ளைகள் ஏதாவது குறும்பு செய் தால், அதை ஏன் செய்யக் கூடாது என் பதற்கான காரணத்தைப் பொறுமை யாக எடுத்துச் சொல்லி அவர்க ளுக்குப் புரிய வையுங் கள்.

★ உங்கள் குழந்தைகளின் விருப் பங்களில் கவனம் செலுத்துங்கள். உங்கள் குழந்தைக்கு இசையில் விருப்பமிருந்தால், பிள்ளைக்காக ஏதே னும் ஒரு இசைக்கருவியை வாங்கிக் கொடுத்து, அவர்கள் வாசிப்பதை கவ னியுங்கள். குழந்தை கோபமாக இருந் தால், அப்போது அவர்களிடம் மனம் விட்டு பேசி, அவர்களுக்கு ஒரு நல்ல தோழனாக தோழியாக இருக்க முய லுங்கள்.

★பணவிடயத்தில் மிகவும் கண்டிப் பாக இருங் கள்.



ஒவ்வொரு நாளும் பணத்தைக் கொடுப்பது சரியல்ல தான், அதற் காக உங்கள் குழந்தை கேட்கும் எந்தவொரு விருப்பத்தையும் உடனே முடி யாது என்று நிராகரிக்க வேண் டாம். எதைக்கேட்டாலும் முடியா தென்றும், அவர்கள் கேட்கும், எந்த ஒரு பொருளையும் வாங்கிக் கொடுக்காமலும் இருந்தால், பின் அவர்கள் மனதில் உங்கள் மீது இருக்கும் அன்பு குறைய நேரிடும். எனவே அவ்வப்போது வீட்டு நில மைகளையும் அவர்களுக்கு எடுத் துச் சொல்லுங்கள. ஏதேனும் விருப் பமானதை வாங்கிக் கொடுக்க முயலுங்கள்.

> “ உங்களை எப்பொழுதும் அவர்களுடன் பேசுவதற்கு ஏற்ற நபராக வைத்துக் கொள்வதில் உறுதியாக இருங்கள். எப்பொழு தும் புரிந்துகொள்ளக் கூடியவராகவும் மற்றும் அவர்கள் பேசுவதை செவிகொடுத்து கேட்பவராகவும் இருப்பதற்கு, உங்களால் முடிந்த வரை கடினமான முயற்சிகளை எடுங்கள்.

★உங்களை எப்பொழுதும் அவர்களுடன் பேசுவதற்கு ஏற்ற நபராக வைத்துக் கொள்வதில் உறுதியாக இருங்கள். எப்பொழு தும் புரிந்துகொள்ளக் கூடியவராகவும் மற்றும் அவர்கள் பேசுவதை செவிகொடுத்து கேட்பவராகவும் இருப்பதற்கு, உங்களால் முடிந்த வரை கடினமான முயற்சிகளை எடுங்கள். அம்மாவிடம் நட்புடன் ஆலோசனை கேட்பதும், வயதுக்கு வருவது பற்றிய சந்தேகங்களை கேட்கவும், வீட்டுவேலைகளில் உதவி செய்யவும், அல்லது சாதார ணமாக அம்மாவை கட்டிப் பிடிப் பதும் அவர்களுக்கு தெரியும். தங்க ளிடம் பேசுவதற்கு யாரும் இல் லாமலிருந்தால், பின் குழந்தைகள் தனிமையிலேயே இருப்பார்கள். எனவே அவ்வப்போது அவர்களிடம் பேசும் வழக்கத்தை கொள்ள வேண் டும்.

★குழந்தைகளுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். உங்கள் குழந்தைக்கு மருத்துவம் படிப்ப திலோ அல்லது மருத்துவராக ஆவ திலோ விருப்பம் இல்லையென் றால், அப்போது கோபப்பட வேண்டாம். உங்கள் பிள்ளையின் எண்ணம் உங்களுடையதிலிருந்து மாறுபடு வதை ஏற்றுக் கொள் ளுங்கள். மேலும் குழந்தையை எப்போதுமே குழந் தையாக எண்ணாமல், அவர்களின் வயதிற்கு ஏற்றவாறு மாறுங்கள். ஏனெனில் அவர்களுடைய வாழ்க் கையில் ஏற்கனவே பெரியளவில் பங்கேற்றிருக்கிறீர்கள். அதனால் அதனையே திரும்பவும் செய்ய வேண்டாமே!

★தவறு செய்தால் அதனை ஏற்றுக்கொள்ளுங்கள் மற்றும் மன் னிப்பு கேட்க பயப்படாதீர்கள். இது கடினமாகத்தான் இருக்கும். ஆனால் உங்கள் தவறை நீங்கள் ஒப்புக் கொள்வதும் மன்னிப்பு கேட்பதும் அனைவருக்கும் நன்மையாக இருக் கும்.

நீங்கள் பிடிவாதமாக இல்லாமலி ருந்தால் அது மற்றவர்கள் உங்கள் மேல் கோபப்படுவதைத் தடுக்கும். மேலும் குழந்தைகளுக்கு மன்னிப்பு கேட்பதன் முக்கியத்துவத்தையும் கற்றுக் கொடுங்கள்.

★ குழந்தை தனது தந்தையை நேசிப்பதற்கு மதிப்பளித்திடுங்கள். உங்கள் குழந்தை, அவர்களது தந்தையை அளவுக்கு அதிகமாக நேசிப்பதைப் பார்த்து மகிழ்சி யடை யுங்கள்.

★இறுதியாக, மற்ற எல்லாவற் றையும் விட உங்கள் குழந்தைகளை அதிகமாக நேசியுங்கள். அவர்களை நேசிக்காமல், உங்கள் வாழ்க்கை யில் நீங்கள் செய்யும் எந்தவொரு செயலும் அர்த்தம் தராது. எந்த நேரத்திலும் குழந்தைகளை நேசித் தால், அவர்களது மனதில் எக்காலத் திலும் பெற்றோர்களை மறக்காமல் நேசிப்பார்கள்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் ‘‘திலகம்’’, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# நட்புடன் பழக...

சில சமயங்களில் மற்றவர்களு டன் பழகுவதற்கு நம் சுய நம்பிக்கை மிகவும் தடையாக இருக்கும். இத் தனை நாளும் நாம் மற்றவருடன் பேசு வது, பழகுவது பற்றிக் கூச்சம் கொண்டு வாழ்ந்த வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, நம்பிக்கையுடன் அடுத்தவரி டம் எப்படி பேசலாம், எப்படி பழக லாம் என்பதை மனதில் கொண்டு, அனைவரிடமும் நம்மால் பழக முடி யும் என்பதைத் தெரிந்து கொண்டும் பழக ஆரம்பிக்க வேணடும்.அப்போது தான் அனைவரைப் பற்றியும் நன்கு தெரிந்து நட்புடன் பழக முடியும். அவ் வாறு அனைவரிடமும் பழகச் சில வழிமுறைகள்....

★ எப்பொழுதும் தொடர்ச்சியாக செய்யும் வேலைகளில் இருந்து, மனதை மாற்றி, வேறு ஏதாவது புது வேலை செய்யவும். ஒரு பழக்கத்தை திடீரென்று மாற்றுவது கடினமாக இருப்பினும், அது நல்ல பலனைத் தரும். எப்படியெனில் ஒரு புதிய திசையில் நம்மை மாற்றிக் கொள்வ தும், பல இட மாற்றமும் மனதிற்கு பெரும் நம்பிக்கையை கொடுக்கும்.

★நாம் அடுத்தவருடன் பழக வேண்டுமெனில், அவர்களது பார்வை நம் மேல் படும்படி, நாம் நம்பிக்கை யுடன் செயற்படுவது தான் முதற்படி. உதாரண மாக, ஒரு கிளப்பில் கலந்து கொள்வது அல்லது குழுவில் சேர்வது, விளையாட்டில் ஈடுபடுவது போன் றவை செய்வதால் பிரபலமாக வாய்ப் புகள் கிடைக்கும்.

★ முக்கியமாக மனதிற்குப் பிடித்த ஒன்றைச் செய்வதால், மனம் அதில் அதிக ஆர்வத்தைக் கொண்டு, அதில் ஒருவகையான ஒளியை தரும். எந்த நேரத்திலும் விரும்பும் ஏதாவது ஒன்றை செய்வதன் மூலம் நீங்கள் மற்றவர் களை கவர நேரிடும். இதன் விளைவு, மற்றவர்களுடன் பழக வாய்ப்பை ஏற்படுத்தும்.

★ எந்த ஒரு செயலைச் செய்யும் போது தோல்வி வந்தாலும், அதைக் கண்டு மனதை தளர விடாமல், தொடர்ந்து முயற்சித்தால், ஒரு நாள் நிச்சயம் லட்சியத்தை அடைய முடி யும். எனவே எந்த ஒரு சிறிய முயற் சியை யும் கைவிடாமல், தொடர வேண் டும்.

★ ஒவ்வொரு வயதினரிடம் பேசும் போதும், அதற்கு தகுந்தாற்போல் அவருடன் கலந்து கொள்வதன் மூலம், நம் நட்பின் நெருக்கம் அதிகரிக்கும். இதற்கு வயது வரம்பு ஒன்றும் இல்லை.


★ உங்களை நீங்களே தட்டி கொடுத்து, செய்யும் வேலைகளை நீங்களே பாராட்டிக் கொள்வதால், மனதில் தன்னம்பிக்கை உண்டாகும். ஒவ்வொரு மனிதருடனும் பழக பல வழிகள் உள்ளன. அதற்கு சமயமும், சந் தர்ப்பமும் அமைந்துவிட்டால் எல்லாம் உங்களுக்கு ஏற்றதாகவே நடக்கும்.



வ.அற்புதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலுக்கு வந்த கர்வம்



ஒரு மயில் தனது தோகையை விரித்து ஆடிக் கொண்டிருந்தது. ஆடும் போது தோகையின் அழகைக் கண்டு அது கர்வம் கொண்டது. உடனே அது மற்றப் பறவைகளையெல்லாம் கேலி செய்யத் தொடங்கியது.



அது காக்கையைப் பார்த்து, "ஏ காக்கையே உனது இறக்கையையும் பார், எனது இறக்கையையும் பார்! எனக்குள்ள அழகில் ஆயிரத்தில் ஒரு பங்காவது உனக்குண்டேயா?" என்றது காகம் வெட்கி வாய் பேசாமலிருந்தது.



பிறகு மயில் குருவியைப் பார்த்து "குருவியே, உன் கழுத்தையும் பார் என் கழுத்தையும் பார்! அழகு சிறிதும் இல்லாத நீ இருந்து தான் என்ன, பயன்?" என்றது. "மயிலெங்கே நானெங்கே! என்று நினைத்து, குருவியும் நாவெழாமல் இருந்தது. மயிலுக்கோ கர்வம் மேலும் மேலும் அதிகரித்தது. அது அங்கிருந்த நாரையை விளித்து, "ஏ நாரையே, வெள்ளை வெளேறென்றிருக்கிறதே உன் சிறகு. வெள்ளை நிறம் ஒரு நிறமா? எனது தோகையின் அழகைப் பார்!" என்றது.



அதற்கு நாரை "ஏமயிலே, ஏன் வீணாகக் கர்வம் அடைகிறாய்? உனது தோகை எத்தனை அழகாய்த் தான் இருக்கட்டுமே. அதனால் உனக்கு என்ன பயன்? என்னைப் போல சிவ்வென்று கிளம்பி வானமெல்லாம் சஞ்சரிக்க உன்னால் இயலுமா? சற்றும் இயலாது என்பதை அறிந்து, அடங்கி நட!" என்றது.

மயில் நாணமுற்றுத் தோகையைச் சுருக்கிக் கொண்டு அப்பால் நகர்ந்தது.

நா.ஶ்ரீவித்தியாதர்,
தரம் -7பி, யாழ்ப்பாணக் கல்லூரி.

## தெரிந்து கொள்ளுங்கள்

* பாம்புகள் இல்லாத நாடு எது? அயர்லாந்து
* பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் பூ எது? குறிஞ்சிப்பூ
* பதினைந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் பூ எது? லிம்பா பூ
* ஐம்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் பூ எது? காக்டஸ் பூ
* முதலில் காகிதத்தினால் ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிட்ட நாடு எது? சீனா
* உலகிலேயே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு எது? ஸ்பெயின்
* அஞ்சல் தலையில் தனது நாட்டின் பெயரைக் கொண்டிராத நாடு எது? ஐக்கிய இராச்சியம்
* தேசியக் கொடியை முதன் முதலில் உருவாக்கிய நாடு எது? டென்மார்க் 1219 இல்

நா.ஶ்ரீகிருஷ்ணா, தரம் -4ஏ,
யாழ்ப்பாணக் கல்லூரி.

# நற்பண்புகளைப் பேணுவோம்

மாணவர்கள் சிறுவயதில் இருந்தே நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதுவே அவர்களின் வாழ்க்கையின் இறுதிக்காலம் வரை நிலைத்து நிற்கும். இதனாலேயே எமது முன்னோர் 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்' என்னும் முதுமொழியினைக் கூறுகிறார்கள். ஒரு மாணவரிடம் இருக்க வேண்டியது கீழ்ப்படிவு ஆகும். தன்னைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், பெரியவர்களிற்குப் பணிந்து நடக்க வேண்டும். ஒரு மாணவன் ஏனைய மாணவர்களோடு அன்பாக நடப்பதும் ஒரு நற்பண்பு ஆகும்.

இதனால் வள்ளுவர், "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்" எனக் கூறியுள்ளார். மாணவர்களிடம் இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று ஒழுக்கம் ஆகும். இந்த ஒழுக்கமானது ஒருவரிற்கு உயர்வைத் தருகின்றது. அத்துடன் சீரிய சிறப்பையும் தரும். 'ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' எனக் கூறப்பட்டுள்ளது. ஒருவன் ஒழுக்கத்தினை தன் உயிரிலும் மேலானதாக போற்றிக் காக்க வேண்டும்.

மாணவர்கள் உண்மை பேசுவதை நற்பண்பாக வளர்க்க வேண்டும். உண்மை பேசுகின்ற போது மற்றவரிடத்தே மரியாதை கிடைக்கிறது. அத்துடன் மற்றவர்கள் உண்மை பேசுபவர்களுடைய வாய்ச் சொல்லையே நம்புவர்.

ப.அனோஜா,
தரம்-9டி, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## விடை தெரியுமா? 196

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகில் வாழ்க்கைத் தரத்தில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
2. நாடுகளே இல்லாத கண்டம் எது?
3. நெடுநல் வாடை என்னும் நூலைப் பாடியவர் யார்?
4. மனிதனின் ஆறறிவுகளும் எவை?
5. கரப்பான் பூச்சியின் இரத்தத்தின் நிறம் என்ன?

### வெற்றி பெற்றோர் விவரம் (194)

* செ.விஜித்தா, தரம்-9, கிராஞ்சி அ.த.க.பாடசாலை.

### விடைகள் 194

1. ஐஸ்லாந்து
2. மூங்கில்
3. சீலர்கள்
4. பொலநறுவை
5. செங்குழியம்

### விடை தெரியுமா?

தெரிந்தால் 09.02.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# தூய்மை மறக்கலாமா?

காற்றில் புகையைக் கலக்கலாமா?
கலந்தே உயிரைப் பறிக்கலாமா?
ஆற்றில் கழிவைச் சேர்க்கலாமா?
சேர்த்தே நீரைக் கெடுக்கலாமா?

தெருவில் குப்பை குவிக்கலாமா?
குவித்தே தூய்மை அழிக்கலாமா?
உருவில் சிறிய விலங்குகள் கூட
நமக்கே உதவும் மறக்கலாமா?

மரத்தை வெட்டி அழிக்கலாமா?
அழித்தே மழையைத் தடுக்கலாமா?
மரத்தால் உயிர்வளி கிடைப்பதனை
மண்ணில் என்றும் மறக்கலாமா?

பே.மதுரிகா, தரம் 6 'சி'
யா/ யூனியன் கல்லூரி




ம.சுதர்சன், தரம்-9,
வல்வை சிவகுரு வித்தி.





ஈ.ஆர்.நிந்தியா, தரம்-4சி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி




அ.கார்த்திகேயன், தரம்-4ஏ,
அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை




அ.சோபிகன், தரம்-11 சி,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி




நே.தமிழனி, தரம்-5,
கிளிநொச்சி ம.வி.



நா.விபுஷணசர்மா,
தரம்-6, புற்றளை ம.வி.



வி.கேசவன், தரம்-2,
பொலிகண்டி இந்துத் தமிழ் கலவன் பாடசாலை



இ.[illegible]ருந்தா, தரம்-2,
[illegible]குவில் இந்து ஆரம்பப் பாடசாலை




கே.டன்சியா,
வேரவில் இ.ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுக்கடையானை விழுத்திய வண்டில்

37



■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

பஜனையில் பாட்டுச் சொல்லித் தரும் மேசன் தியாகுவும் சுவாமி காவுவதிலும் கலந்து கொள்வதுண்டு. பெருமாள் கோயில் இராஜகோபுரம் தென்னிந்தியா இராமநாதபுரத்திலுள்ள திருப்புலானி என்ற ஊரைச் சேர்ந்த ஸ்தபதி நாகலிங்கம் சிற்பங்கள் அமைத்து உருவாக்கினார். இதன் பின் மண்டபம் முற்றும் அட்டவேலைகள் தியாகராஜாதான். மண்டபத்தில் அண்ணாந்து பார்த்தால் பல வர்ணங்களில் தாமரை விரிந்திருப்பது கட்டடக் கலைஞர் தியாகராஜாவின் கைவண்ணத்தில்தான்.

அழுக்கடையான் சம்பந்தப்பட்ட கதைகள் நிறைய இருக்கிறது. கன்னாதிட்டி வீதி வழியாகத்தான் வீட்டுக்குப் போய்வருவான். சிலரிடம் பணம் கேட்பான். அவர்கள் முணுமுணுத்துக் கொண்டு கொடுப்பார்கள். சிலர் இப்போது இல்லை என்று அனுப்பி விடுவார்கள். ஒரு நாள் அழுக்கடையான் மாஸ்டர் வீட்டு கேற்றை திறந்து கொண்டு வந்தான். மாஸ்டர் தனது அலுவலக அறையிலிருந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

அவன் ஜன்னலுக்கு வெளியே நின்று மரியாதையாக மாஸ்டர் எனக்கு ஒரு பத்து ரூபா தேவை என்றான். மாஸ்டர் இல்லையென்றார். ஐந்து ரூபாயாவது தாருங்களேன் என்றான்.

சண்முகம் நான் உனக்கு காசு தரமாட்டேன். நீ இனிமேலும் காசு கேட்டு என்னிடம் வராதே என்றார். என்ன மாஸ்டர் இப்படிச் சொல்லிப் போட்டீங்கள். அப்ப நான் வாறன் என்று போய்விட்டான்.



## அந்த நாள் ஞாபகம்..

அவன் பெயரைக் கேட்டாலே நடுங்கும் மாஸ்டரின் தாயார் ஏன் அவனுக்கு ஐந்து ரூபாய் கொடுத்திருக்கலாமே என்றார். அவனுக்குப் பயந்து எந்நேரமும் காசு கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படி ஒதுக்கப்பட வேண்டும். அவனும் மனிதன்தானே என்றார். அம்மா அதன்பின் பேசவில்லை.

யாழ்.கன்னாதிட்டி வீதியில் பெருமாள் கோயிலுக்குச் செல்லும் ஒழுங்கையில் திரும்பும் மூலையில் பவுண் விக்கிற பொன்னம்பலத்தாருடைய (றேடியோ சிலோன் மயில்வாகனனின் தந்தை) வீட்டுக்கு எதிரில் சின்னத்துரை என்பவர் கடை வைத்திருந்தார். இரண்டு கடைகளில் ஒன்றில் சட்டி, பானைகள், தேங்காய்களும் இருக்கும். அடுத்த கடையில் பலசரக்கு பின்னர் கூப்பன் கடையாகவும் இருந்தது. கடைக்காரச் சின்னத்துரை நல்ல சிவலை. அதிலும் கோபம் வந்தால் கண்களும் கன்னங்களும் நெருப்புக்குக் காற்று போல கனல் கக்கும் கொள்ளியாகிவிடும். கடை மேசை கடை வாசலுக்கு வெளியே ஒரு சாண் நீண்டிருக்கும்.

சைக்கிளில் கடைக்கு வருபவர் சைக்கிளில் இருந்தபடியே சிகரெட்டோ வெற்றிலையோ வேறெந்தப் பொருளோ கேட்டால் ஏன் இறங்க முடியாதோ, இறங்கி வந்து வாங்கு இல்லாவிட்டால் வாசலில் நிற்காமல் போ என்ற பதிலே வரும்.

இரு கடைகளுக்கும் ஒரே இரு தட்டு நீண்ட படிகள். இரு கடைகளுக்குமிடையில் கொஞ்சம் இடைவெளி உண்டு. இந்த இடைவெளிப் பகுதியில் அழுக்கடையான் வந்து குந்தி இருந்து சின்னத்துரையிடம் ஊர் வியளம் சில வேளைகளில் பேசிக் கொண்டிருப்பான். இப்படி ஒருநாள் பேசிக் கொண்டிருக்கையில், கன்னாதிட்டி வீதியில் ஒற்றைத் திருக்கல் வண்டியை ஓட்டிக் கொண்டு ஓர் இளைஞன் வந்தான். நல்ல இளம் காளை, வண்டிலும் புது வண்டி பார்க்க அழகாயிருந்தது. இதைப் பார்க்க அழுக்கடையான் "ஏய் நில்லுடா" என்று கைகாட்டினான். "எங்கேயிருந்து வாறாய்" என்றான். கோப்பாயிலிருந்தோ உரும்பிராயிலிருந்தோ வருவதாகச் சொல்லியிருக்க வேண்டும். அழுக்கடையான் எழுந்து வண்டிலுக்கு அருகில் போய் "இறங்கு நான் கொஞ்சம் சவாரி போயிற்று வாறன்" என்று நெருங்கவும் இளைஞன் இறங்கினான். அழுக்கடையான் வண்டிலில் ஏறவும் அந்த இளம் மாட்டுக்கு ஏறியிருப்பது நம்மாளல்ல என்பது தெரிந்திருக்க வேண்டும். அது ஒரே பாய்ச்சலில் வேகமாக ஓடத் தொடங்கியது. அழுக்கடையான் வண்டியிலிருந்து விழுந்து கொஞ்சத் தூரம் இழுபட்டான். அப்போது அது தார்போடாத கிரவல் றோட்டாக இருந்த காலம்! உடலெல்லாம் இழுபட்டு அரைஞ்சு இரத்தம். உடம்பெல்லாம் தேஞ்சு, அம்மா அடசனியன் பிடிச்ச மாடு என்று தூஷணத்தில் ஏசியபடி கடை வாசலில் வந்து அந்த நீளப்படியில் படுத்து வலியால் கதறிக் கொண்டு கிடந்தான். இதற்கிடையில் கூட்டம் கொஞ்சம் கூடிவிட்டது. அவனுக்கு வேண்டிய இரண்டொருவர் வைத்தியம் செய்ய முனைந்தனர். ஒருவர் அரைப் போத்தல் சாராயம் வாங்கி வரச் சொன்னார். முதலில் சாராயத்தினால் உடல் முழுக்கத் தேய்ச்சார்கள். அவன் கூக்குரல் போட்டான். "இதுதான் காயத்தை ஆற்றும்" என்று தேய்ச்ச பின் மீதிச் சாராயத்தை வாயில் ஊற்றிக் கொள்ளக் கொடுத்தார்கள். இது அழுக்கடையானின் திமிருக்குக் கிடைத்த பரிசு.

அந்த நாளில் காத்தவராயன் கூத்து யாழ்ப்பாணத்தில் பிரபல்யம். இப்போது போல சிடி., டி.வி.டி. மட்டுமல்ல வீட்டுக்கு வீடு தொலைக்காட்சிப் பெட்டிகளும் இருக்கவில்லை. வானொலிப் பெட்டிகள்கூட வீதிக்கு ஒன்றுகூட இருப்பது குறைவு என்று கூறினார். தகப்பனார் தியாகராஜா பாகவதரின் பரம ரசிகர். பாகவதர் வானொலியில் கச்சேரி செய்யும் நாளை அறிந்து கொள்வார். கன்னாதிட்டிச் சந்தியிலிருந்து மணிக்கூட்டு வீதி வரையுள்ள கன்னாதிட்டி வீதியில் மாஸ்டர் வீட்டுக்கு எதிரே சிறிது தூரத்தில் பாலுப்பத்தர் வீட்டில் ஒரு வானொலிப் பெட்டி இருந்தது. மணிக்கூட்டு வீதி நாவலர் வீதிச் சந்தியில் ஆர்.சி. மன்மதராயன் வீட்டில் ஒரு றேடியோ, முற்றவெளியில் பின்னர் பூங்காவான ஆலமரம் இருக்கும் மைதானத்தில் ஒரு றேடியோ இந்த இடங்களுக்குத் தான் ஐயா என்னையும் கூட்டிக் கொண்டு போய் பாகவதரின் கச்சேரி கேட்பார் எங்கேயும் வீடுகளுக்குள் போகமாட்டார். வெளியே வீதியில் நின்றுதான் கேட்பார். அப்போது இன்று போல் வாகன இரைச்சல்களும் இருந்ததில்லை. எம்.எஸ்.சுப்புலட்சுமியின் கச்சேரியும் கேட்கப்போவார். ஒருமுறை எம்.எஸ்.சுப்புலட்சுமியின் கச்சேரி கேட்கப் போய் பாடுவதாக நினைத்துக் கொண்டு பாதியிலிருந்து கேட்டோம். பிறகு தான் இதுவரை பாடியவர் என்.சி.வசந்தகோகிலம் அவர்கள் என்றும் எதிர்பாராத விதமாக எம்.எஸ்.சுப்புலட்சுமிக்கு கச்சேரி செய்ய முடியாமல் போனதாகவும் பதிலாக வசந்தகோகிலம் கச்சேரி செய்தார் என்றும் வானொலியில் அறிவிக்கப்பட்டது. எம்.எஸ்.போலவே குறும்பாட்டும் இருந்தது.

(நினைவுகள் நீளும்.....)

## பாவம் நீதிதேவதை

நீதி தேவதை .....
மௌனமாய்
ஓலமிடுகிறாள்
அவள் பார்வை
இந்த பிரபஞ்சத்தை
வெறுக்கிறது .....
அவள் கரங்களில்
தவழ்ந்து
நீதி போதித்த
துலாபாரம்
அசைந்தாடி
அந்தரமாய்
தொப்பென
விழுந்து கொண்டது

அநீதியை
தகர்த்தெறிந்த
புனித வாள்
கை நழுவி
காற்றில்
கலந்து கொண்டது
கண்ணில் ..... இட்டு
கண்ணியம்
காத்த
கறுப்புத்திரை
கலங்கி நிற்கிறது
அவள் .....

இப்போது
நிராயுதபாணி
"இன்று போய்
போருக்கு நாளை வா"
என்ற ..... ஒலி
அவள் ..... காதுகளில்
விழுந்த போது
வீதியில் சுதந்திரமாய்
நடக்கின்றாள்
நீதியின் முகவரி தேடி
பாவம் ..... நீதி
தேவதை



- ரமணன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தியிசையில் பெயர் கொண்ட பாவலர்

## கவிதைக் கடல் கண.எதிர்வீரசிங்கம்



சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 78

பெரியவிளான்
தவமைந்தன்

பாடல்களுக்கு இசையமைத்தல் என்பது இரு வகைப்படும். பாடல் எழுதப்பட்டபின் இசை கூட்டுதல், இசை மெட்டு ஒன்றை உருவாக்கியபின் அதனை அனுசரித்துப் பாடலை எழுதுதல் என்பன அவ்விரண்டு வகைகளுமாகும். ஆனால் முன்னரே எழுதப்பட்ட பாடலுக்கு இசையமைப்பதாயின் அந்தப் பாடல் சந்தம் கொண்டதாயும் அழகான சொற்களை உடையதாயும் தாளத்தை அனுசரித்து வருவதாயும் அமைந்திருக்க வேண்டும். அப்படியான பாடல்களை இசைத்திறன் கொண்ட கவிஞர்களால் மட்டுமே எழுத முடியும்.

தற்காலத்தில் ஒழுங்கில்லாத வசனச் சேர்க்கைகள் கூடப் பாடல்களாக வரத் தொடங்கிவிட்டன. எனினும் மரபுக் கவிதைகளைச் சந்தச் செழிப்போடு எழுதுவதில் நீண்ட கால முதிர்ச்சி கொண்ட கவிஞராகவும் நாடகம், கட்டுரை, சொற்பொழிவு போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்ட திறனாளராகவும் ஈழத்தின் சைவாலயங்கள் மீது எண்ணற்ற கீர்த்தனைகளையும் ஊஞ்சற் பாக்களையும் இயற்றியிருக்கும் சைவப்புலவராகவும் ஆன்மிகப் பணியாளராகவும் சமூகத் தொண்டனாகவும் கடந்த பல ஆண்டுகளாக அர்ப்பணிப்போடு பணியாற்றி வருபவர் தமிழிசைச் செம்மல் கண.எதிர்வீரசிங்கம்.

மறைந்த கணபதிப்பிள்ளை மரகதம் தம்பதியின் மகனாக 20.08.1948இல் தேவரையாளி, அல்வாயில் இவர் பிறந்தார். வதிரி மெதடிஸ்த மிசன், தேவரையாளி இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா போன்ற பாடசாலைகளில் கல்வி கற்ற இவர் தனது பள்ளிப் பருவத்திலே கே.வி.மாணிக்கம், சைவப்புலவர் வல்லிபுரம், வித்துவான் ஆறுமுகம் போன்ற தமிழ்ப் பேராசான்களிடம் தமிழ் மொழியைச் செம்மையாகக் கற்று இவர்களின் வழிநடத்தலாலும் அன்பான அரவணைப்பாலும் எழுத்துத் துறையில் ஈடுபட்டு சிறு பராயத்திலேயே பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கவிதை, கட்டுரை எழுத்தாளராக பெயர் பெற்று வந்தார்.

தமிழ் மொழியில் புலமையும் பாண்டித்தியமும் கொண்ட இவரது நண்பரும் உறவினருமான சிவகுருநாதன் கணேசலிங்கத்தின் மேற்பார்வையிலும் வழிநடத்தலிலும் தனது எழுத்துத் துறையை மேலும் வளப்படுத்திக் கொண்டதுடன் அந்தக் காலத்தில் பத்திரிகைகளுக்கான செய்தி சேகரிப்பாளராகவும் பணியாற்றி வந்தார்.

1974இல் தென்னை பனைவள அபிவிருத்திச் சங்கத்தின் கணக்கு இலிகிதராக நியமனம் பெற்று 1997இல் பதில் பொது முகாமையாளராக உயர்வு பெற்று 2006இல் ஓய்வு பெற்றார். இயல்பாகவே ஆன்மிகத்துறையில் நாட்டம் கொண்டிருந்த இவர் 1987இல் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலில் தங்கியிருந்த நூற்று முப்பத்தேழு பொதுமக்கள் குண்டு வீச்சினால் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் ஆன்மிகத்துறையிலும் ஆலயப் பணிகளிலும் ஆழமாக ஈடுபடத் தொடங்கினார்.

இதன் தொடர்ச்சியாக ஈழத்தின் சைவாலயங்கள் மீது பக்திக் கனல் சொரியும் பாடல்களை இயற்றத் தொடங்கினார். அவற்றுள் பூவற்கரைப் பிள்ளையார் மீது பாடப்பட்ட பத்துக் கீர்த்தனைகள் நீர் சொரியும் விழிகளிலே என்னும் பெயரில் மிகச் சிறந்த இறுவட்டாகவும் பூவற்கரையான் பதிகமாலை எனும் பெயரில் நூலாகவும் வெளிவந்துள்ளன. இதைவிட ஞான வைரவ நாதம், நாவலடி நிழலிலே போன்ற இறுவட்டுக்களிலும் இவரது பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

ஆலய வரலாறுகளையும் கடவுளரின் பெருமைகளையும் பக்தி ரசம் பொங்கத் தெள்ளு தமிழில் அழகுறு பாடல்களாக லயக் கட்டுமானம் பிசகாமல் சந்தம் தவறாமல் வரகவிப் புலவர் போல் சரளமாக எழுதுவதில் வல்லவரான இவர் ஆங்கில மொழிப் புலமை கொண்டவராகவும் ஆங்கில ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றார். மரகத மாலை என்னும் சிறுவர்களுக்கான தமிழ், ஆங்கில அகராதியும் சிறுவர் கவிச்சரம் என்னும் சிறுவர் பாடல்களைக் கொண்ட நூலும் அகிலம் என்னும் பெயரில் சிறுவர்களுக்கான ஆங்கிலப் பாடற் தொகுப்பும் இதுவரையில் இவரால் வெளியிடப்பட்டுள்ளன.

நூற்றிற்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியிருக்கும் இவர் சிறு வயதிலிருந்தே சமூக நாடகங்களில் பெண் வேடம் தாங்கி நடித்து வந்ததுடன் எண்ணற்ற நாடகங்களில் நடித்துச் சிறந்த நடிகருக்கான விருதுகளையும் பெற்றுள்ளார். அத்துடன் கவிதை நூல்கள் பலவற்றுக்கான தனது நேர்த்தியான விமர்சனக் கட்டுரைகளையும் ஆழமாக ஆராய்ந்து எழுதி வருகின்றார்.

அனுபவ முதிர்ச்சி பெற்ற ஓர் இலக்கியவாதி வளர்ந்து வருகின்ற இளம் சந்ததியை தூக்கி விடக் கூடிய மனப்பக்குவம் கொண்டவராக இருக்க வேண்டும். தனக்கு வேண்டப்பட்டவர்களை மட்டும் உச்சத்திற்குக் கொண்டு செல்ல நினைப்பதைத் தவிர்த்துத் தான் கடந்து வந்த பாதையை நினைத்தால் எந்தவொரு இலக்கியவாதியும் நேர்மை தவற மாட்டான்.


அதைவிடக் கலைத்துறையில் ஈடுபடுவோர் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும். நிறைகுடம் தளம்பாது என்பார்கள். தன்னில் நம்பிக்கை கொண்ட கலைஞன் நிறைகுடம் போலவே இருப்பான். பலவீனங்களை மட்டும் மூலதனமாகக் கொண்ட கலைஞனோ தன் முன்னால் வைக்கப்படுகின்ற விமர்சனங்களைக் கண்டு சுருண்டு போகின்றான்.

கருத்துக்களையும் விமர்சனங்களையும் கண்டவுடன் குலை நடுங்கி, நிலைதடுமாறி, அலைந்து திரிந்து விமர்சகன் யார் என்பதை வலை வீசிக் கண்டுபிடித்து தொலைத்து விடுவோம் எனக் குழுவினராகச் சேர்ந்து சண்டித்தனம் காட்டுவது உண்மையான கலைஞர்களுக்குரிய இலக்கணமாக அமையாது.

கற்றது கைமண் அளவு எனும் பொன்மொழியை மனதில் இருத்தித் தன்னை வளப்படுத்திக் கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் முயற்சிக்காதவன் கலைஞனே இல்லை. தன்மீதான விமர்சனத்தை ஒரு கலைஞன் தனது ஆற்றுகைகளின் ஊடாகவே ஆரோக்கியமான தாக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஆயிரம் கச்சேரி செய்தேன் அவருக்கு ஜதிசொல்லிக் கொடுத்தேன் இவருக்குச் சுரம் சொல்லிக் கொடுத்தேன் இன்னும் பலருக்கு நட்டுவாங்கம் கற்பித்தேன், தங்கப் பதக்கங்கள் பல பெற்றேன் எனும் இறுமாப்புடன் விமர்சகனையே இல்லாமல் செய்து விட முயற்சிப்பதைக் கலைஞர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனத் துணிவுடன் கருத்துரைக்கின்றார் கவிஞர் கண.எதிர்வீரசிங்கம்.

# 'நியாண்டதல்' மனிதர்களை உருவாக்கும் முயற்சி



சுமார் 33000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள் என்று கருதப்படும் 'நியாண்டதல்' மக்களின் வாரிசு ஒருவரை உயிர்ப்பித்து பார்ப்பதற்கான பரிசோதனையில் ஹாவார்ட் பல்கலைக்கழக ஆய்வாளரான பேராசிரியர் ஜோர்ஜ் சேர்ச் என்பவர் ஈடுபட்டிருக்கிறார்.

ஆனால் அவர் விரும்புவது போல் 'நியாண்டதல்' மனிதர் ஒருவரின் எலும்பு எச்சங்களிலிருந்து குளோனிங் முறையில் இதனைச் சாதிப்பதற்கு ஒரு பெண்ணின் உதவி தேவைப்படுகிறதாம். அவருக்கு கிடைக்கப்பெற்றுள்ள 'நியாண்டதல்' மனிதர்களின் எலும்பு எச்சங்களிலிருந்து அந்த மனிதர்களின் மரபணுக்களை உருவாக்கிவிட முடியும் என்றும் அதன் மூலம் ஒரு பெண்ணின் வாயிலாக 'நியாண்டதல்' மனிதர் ஒருவரை பிறப்பிக்க முடியும் என்றும் அவர் கருதுகிறார். (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36 வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....



நட்பு வட்டம் அதிகம் இல்லாத நபர்களுக்கு இந்த வேலைகள் மிகவும் பயனுள்ளதாகவும் உற்சாகம் தருவதாவும் இருக்கும். இருப்பினும் நண்பர்களுடன் உங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிட விரும்புகிறீர்கள் என்றால் சில நல்ல யோசனைகளை எடுத்துக் கொண்டு அது பற்றி விவாதிக்கலாம். நண்பர்களைச் சந்திப்பது என்றாலே பெரும்பாலும் செலவு இழுத்துவிடும் விடயமாக இருக்கும். ஆனால் அந்த அளவுக்கு நம்மால் செலவழிக்க முடியாது. அதுபோன்ற தருணங்களில் செலவழிக்கும் சந்திப்பாக இல்லாமல் பயனுள்ள சந்திப்பாக மாற்றலாம்.

பின்வரும் அத்தியாயத்தில் நண்பர்கள், குடும்பத்தினருடன் எவ்வாறு குறைந்த செலவில் மகிழ்ச்சியாக இருப்பது என்பது பற்றிய ஆலோசனைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**விளையாட்டுக்கள்** விடுகதை போட்டு விளையாடும் விளையாட்டை நாம் அனைவருமே விளையாடலாம். ஏன் அது போன்ற விளையாட்டை மாலை நேரங்களில் விளையாடக் கூடாது? இது போன்ற விளையாட்டுக்கள், பொழுதுபோக்காகவும் வயதானவர்களுடன் விளையாடுவதற்கு ஏற்ற விளையாட்டாகவும் இருக்கும்.

**வேடிக்கை நிகழ்ச்சிகள்** பல நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தின் சார்பில் மக்களுக்காக இலவசமான வேடிக்கை நிகழ்ச்சிகளை நடத்தும். அதன் நோக்கம் அவர்கள் நிறுவனத்தின் பொருள்கள் எதையாவது வாங்குவார்கள் என்ற நம்பிக்கைதான். ஆனால் அதற்காகக் கண்டிப்பாக வாங்க வேண்டுமென்று வற்புறுத்தமாட்டார்கள்.

**விளையாட்டுத்தினம்** விளையாட்டுத்தினம் என்று ஒரு நாளை உருவாக்கி, அதில் அனைவரும் பங்குபெறும் வகையில் எளிதான விளையாட்டுக்களை அமைத்து விளையாட்டுப் போட்டிகள் நடத்தலாம். வென்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கலாம். பரிசு உண்டு என்பதால் அனைவரும் வெற்றியடைய முயற்சி செய்வார்கள். போட்டியும் விறுவிறுப்பாக இருக்கும்.

**நாடக வசனங்கள்** நாடகத்துக்கான உடைகள் அணியாமல், நாடக வசனங்களைச் சத்தமாக உணர்ச்சியோடு வாசிக்க வேண்டும். அதைக் குறுந்தகட்டில் பதிவு செய்து கொள்ளலாம். பின் பதிவு செய்யப்பட்ட குறுந்தகட்டை நண்பர்களுக்குக் கொடுக்கலாம்.

**படகுப் பயணம்** நீங்கள் வசதியுள்ளவராக இருந்தால் ஒரு பெரிய படகை எடுத்துக்கொண்டு அதற்கொரு கேப்டனும் நியமித்துக் கொண்டு படகுப் பயணம் செய்யலாம். உடன் சமைக்கும் பணியாளர்களையும் கூட்டிச் செல்லலாம். நண்பர்கள் பலருடன் சேர்ந்து செய்யும்போது இதற்கான செலவு குறைவாகவே இருக்கும்.

**மாலை விருந்து** மாலை விருந்துக்கு ஃபார்மலான உடை அணிந்து செல்லுங்கள். மற்றத் தம்பதிகளும் எவ்வாறு உடை அணிந்து வருகிறார்கள் என்று கேட்டுக்கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாணியில் உடை அணிந்து வருவது பார்ப்பதற்கு நல்லதாக இருக்கும். பார்ட்டிக்காக உணவுப் பட்டியலை முதலிலேயே சரிபார்த்து, பின்னர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**புதிர்ப்போட்டி** ஏன் ஒரு குழுவை அமைத்துக் கொண்டு, இரவு நேரங்களில் புதிர்ப் போட்டி நடத்தக் கூடாது. பல்வேறு வகையான ஆர்வம் கொண்ட நண்பர்களைச் சேர்த்துக்கொள்வதால், எந்த வகையான விடயத்திலும் கேள்வி கேட்கலாம்.

**நடனம்** நிறையப் பேருக்கு நடனம் ஆடத் தெரியும். அதிலேயே புதிய பாணிகளை ஏன் நீங்கள் முயற்சித்துப் பார்க்கக்கூடாது. நடனத்திலேயே பல வகையான பாணிகளும் புதிய புதிய நடனங்களும் உள்ளன. அதைக் கற்றுக்கொள்ள முயற்சிக்கலாம். வாழ்க்கைத் துணைவரைக் கூட்டிச் செல்லுதல் அல்லது குழுவினருடன் சேர்ந்து செல்லுதல் வேடிக்கையானதாக இருக்கும். சில வகையான இரவு நடன நிகழ்வுகளில் இலவசமாகவே நடனம் கற்றுக்கொள்ளலாம்.

**சவாலை ஏற்றுக்கொள்ளுங்கள்** சமூக நலக் காரியங்களுக்கு நிதி திரட்டும் வேலைகளை ஏன் முயற்சிக்கக்கூடாது? இதற்கு ஒரு நல்ல அணி தேவை. பல வகையான திறமைகள் கொண்டவர்களைக் கொண்ட அணி அமைத்துக் கொள்வது நல்லது. சிலருக்கு உடல்நிலை ஒத்துவரவில்லை, அல்லது உடல் குறைபாடுகள் உள்ளவராக இருந்தாலும் முக்கியமான வேலைகளில் ஈடுபடாவிட்டாலும் கூடமாட உதவியாக இருக்கலாம்.

**தன்னார்வத் தொண்டர்கள்** ஒரு ஊரில் சேவை செய்ய வேண்டி இருந்தால் நண்பர்களை அழைத்துத் தன்னார்வக்குழு அமைத்து முடிந்த அளவுக்குச் சமூகச் சேவைகள் செய்யலாம். இந்தச் செயற்பாடுகளின் முக்கியத்துவம் என்னவென்றால் இதை எத்தனை முறை வேண்டுமானாலும் திரும்பத் திரும்பச் செய்யலாம். இதுபோன்ற சேவைகளைத் தனியாகவும் குழுவாகவும் இணைந்து செய்யலாம். அத்துடன் குழு அமைத்து, நண்பர்களைக் குழுவுக்குத் தலைமையேற்று நடத்தச் சொல்லலாம். இதனால் அவர்களின் ஆளுமையும் வெளிப்படும். அவர்களுடைய ஒருங்கிணைப்புச் செயற்பாடும் அதிகமாகும்.

## மழையில் நனையாமல்...

இன்று காலையில் இருந்து
மழை பெய்து கொண்டிருக்கிறது.
அலுவலகம் செல்ல வேண்டும்
மழையில் நனையாமல் செல்வதெப்படி.

குடை எடுத்துப்போகலாம்
தற்போதிருக்கும் குடைகள்
சந்திக்கும் போதுமுன்
நம்மை நனைந்துவிடும்

றெயின் கோட் போடலாம்
பார்ப்பவர்கள் நினைப்பார்கள்
நனையாமல் போகிறோம் என்று
அங்கு போ... ...யின்




நாம் நன்றாக நனைந்திருப்போம்
மழையின் இடையே போகலாம்
என்கிறான் மூத்தவன்
இந்த மழை உங்களை ஒன்றும்
கரைத்து விடப் போவதில்லை
என்கிறாள் சின்னவள்

வெளியே எட்டி பார்க்கிறேன்
மாடு ஒன்றை ஒன்று
சட்டை செய்யாமல்
நனைந்தபடி செல்கிறது.

வேலணையூர் தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 251



அனுப்புபவர் பெயர்:.................................................

விலாசம்:.................................................

.................................................

கையொப்பம்:.................................................

### இடமிருந்து வலம்

1. தகுதியான பருவம்
4. தோழன்
6. பசுப்பால் சுரப்பது இங்கே
7. சிலப்பதிகார நாடகக் கணிகை
8. சமர்த்தனின் இயல்பு
11. (காலால்) நசி
12. வழங்கும்/ கொடுக்கும்
14. வழங்கு
15. மறி
16. ஒன்றை அல்லது ஒரு பகுதியை விடுத்து ஏனைய வற்றைக் குறிக்கும் சொல்.
17. பிரணவம்/ நட்சத்திரம்
19. திரளை/ கைப்பிடி அளவு
21. வீடு
22. இணைக்கச் சொல்.

### மேலிருந்து கீழ்

1. ஐந்து வகை பழங்கள் சேர்த்துத் தயாரிப்பது
2. திருமணமாகாத இளம் கன்னிப் பெண்
3. தெளிய வைக்கும் நடைமுறை
4. ரூபாவில் நூறு.
5. செம்மண் நிறம்
7. திடீரெனக் காணாமல் போதல்
9. மரியாதை கொடு
10. ஏமாற்றும் நோக்கத்துடன் செய்யப்படும் முறைகேடு.
13. தாய்- தந்தை- பிள்ளைகள் சேர்ந்து அமைவது
14. அசுத்தம் என்ற பொருள் தரும் பேச்சு வழக்குச் சொல்.
15. அமைய
18. ஓர் ஆங்கிலேயக் குடிவகை
20. இடப்பக்கம் என்பதற்கு எதிரான திசை.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 249 க்கான சரியான விடைகள் வருமாறு;

**இடமிருந்து வலம்**

(1) முதலுதவி (5) குவி (7) தூர் (8) வழிபடல் (10) குப்பம் (12) கல்வி (13) பல (14) இல் (15) புணர்தல் (17) கதை (18) தம் (19) கலைவாணி (21) கன (22) சிப்பி (24) கரும்பு (25) புரி

**மேலிருந்து கீழ்**

(1) முதுகு (2) தர்ப்பணம் (3) தவம் (4) விழி (5) குடல் (6) வில்வித்தை (9) பகல் (11) பலர் (14) இல்லை (15) புதன் (16) தகனம் (17) கனிப்பு (20) வாசி (21) கரு (23) பிரி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 251**
***நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.***
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (13.02.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.251 இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 17.02.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 249 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**க.சுந்தரேஸ்வரன்,**
இல.109. விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை.

**2 ஆம் பரிசு**
**ஆர்.ரஞ்சனா,**
பிரதேச வைத்தியசாலை, வேரவில், பூநகரி.

**3 ஆம் பரிசு**
**சந்திரபாலன் கலைவாணி,**
அம்மான் கோவிலடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

**4 ஆம் பரிசு**
**க.சர்மிளி,**
கருணை இல்லம், பலாலி வீதி, உரும்பிராய்.

**5 ஆம் பரிசு**
**கி.சர்மிதா,**
ஒடை, அல்வாய் தெற்கு, அல்வாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

**ச.வசந்தராணி,**
நெடுங்காடு, காரைநகர்.

**திருமதி ச.பாலசுந்தரம்,**
இல.95, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

**க.தனுசன்,**
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி.


*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிரு[illegible] தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோ[illegible] அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

## புண்ணியசுரர்கள்



நல்லவர்களை அழித்து விட்டு
நரகாசுரர்கள் பலரிங்கே
நடமாடித் திரிகிறார்கள்
நயவஞ்சக
நடப்போடு...! கபட
நாடக சூத்திர தாரிகளாக
நாடெங்கிலும்
இவர்கள்
வில்லத்தனம் விளங்காமல்
விலைபோக வேண்டாம்
விபரம் விளங்காமல்
விலையாக வேண்டாம்
பொல்லாத் தனம் புரியாமல்
நல்லுயிரை மாய்க்க வேண்டாம்
இவர்கள்
கள்ளத்தனமறிந்து
உள்ளத்தில் உறுதி கொண்டு
வல்லவராய் வளர வேண்டும்
என்னினமே...!
சில்லறைத் தனமாய்
சில தேவைகளுக்கு உடன்பட்டு
சீரழிந்து போக வேண்டாம்
அல்லல் படுத்தியவர்
அகதியாக்கியவர்
வல்லரசாய் வந்து நின்று
எல்லை மீறியவர்கள்
கொல்லப்படாமல் - எங்கள்
கொல்லைப் புறத்திலே
குடி புகுந்து வாழ்கிறார்கள்
இல்லறத்தில் நுழைந்து
இதயத்தைப் பிரிப்பதற்கு
வல்லுறவு மேடை கட்டி
வாசலிலே நிற்கிறார்கள்...
தோரணங்கள் கட்டி
அனுசரணைகள்
நீ
வழங்கிவிட்டால்...
வீதியும் இல்லையினி
விதியின் விளையாட்டிலே
போதிசத்தவனின்
புண்ணியவான்களால்

கவிஞர்
த.பருத்தி:தாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

03.02.2013 முதல் 09.02.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடர்** - உங்கள் பேச்சில் இனிமையும் செயல்களில் பரிமளிப்பும் உருவாகும். இளைய சகோதரர் உங்களின் வாழ்வியல் நடைமுறை சிறக்க, சில உதவி வழங்குவர். வீடு, வாகனத்தில் பெறுகிற வசதி திருப்திகரமாக இருக்கும். எதிரியால் தொல்லை வராத நல்ல சூழ்நிலை இருக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி சிறப்பாக நிறைவேறும். உத்தியோகத்தர்களின் பணித்திறமைக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். மாணவர்கள் படிப்புக்குதேவையான, எல்லா வசதியும் எளிதாகக் கிடைக்கும்.

**இடபர்** - மனதில் திட்டமிட்ட எண்ணங்களை செயல்வடிவமாக்க இது உகந்த காலம். பணவசதி திருப்திகரமாக அமைந்து செயல்களில், எதிர்பார்த்த நன்மைகளை பெற்றுத்தரும். சமூகத்தில் உங்கள் மீதான அந்தஸ்து அதிகரிக்கும். புதியவர்களின் நட்பு கிடைக்கும். இல்லறத்துணை ஒற்றுமை குணத்துடன் நடந்து, குடும்ப பணிகளை திறம்பட நிறைவேற்றுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற அனைத்துக் காரணிகளும் பலம் பெறும். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பு கிடைத்து பண வருமானம் பெறுவர். மாணவர்கள் படிப்பில் அதிக கவனமும், விளையாட்டு பயிற்சியில் தகுந்த பாதுகாப்பையும் பின்பற்ற வேண்டும்.

**மிதுனர்** - எதிர்காலம் பணிகளுக்காக தகுந்த முன்னேற்பாடு செய்வதால், தேவையற்ற சிரமம் வராமல் தவிர்க்கலாம். குடும்ப தேவை நிறைவேற்ற போதுமான பணவசதி இருக்கும். புத்திரர்களுக்கு உங்களின் ஆலோசனை, அவர்கள் மனதில் புதிய நம்பிக்கையை உருவாக்கும். இல்லறத்துணை உங்களின் நல்ல குணங்களை மனநிறைவுடன் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு என்கிற நடைமுறையை பின்பற்றுவீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் எதிர்பார்ப்புக்களை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவது நல்லது.

**கடகர்** - சுய கௌரவத்தைப் பாதுகாக்கிற எண்ணத்துடன் செயற்படுவீர்கள். சமூக நிகழ்வுகளின் தாக்கம் உங்களை, சொந்தப் பணியில் அதிக கவனத்துடன் செயற்பட வைக்கும். நிர்ப்பந்த பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். இல்லறத்துணையிடம் கடந்த கால எதிர்மறை செயற்பாடு குறித்து விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற, சில நடைமுறை மாற்றம் செய்வீர்கள். பணியாளருக்கு குடும்பத்துக்கான பணச்செலவு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தவும்.

**சிங்கர்** - எந்தச் செயலையும் உத்வேகமுடன் நடத்தி கூடுதல் நன்மை பெறுவீர்கள். பூர்வீக சொத்தில் கிடைக்கிற பணவரவு சீராகும். வாழ்வில் முன்னேற தடையாக இருக்கிற சூழ்நிலையை அகற்றுவீர்கள். இல்லறத்துணையிடம் தேவையற்ற விடயம் குறித்து பேச வேண்டாம். தொழில், வியாபாரம் அபிவிருத்தி அடைய தேவையான அரசு உதவி பெறலாம். பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை நன்கு உணர்ந்து செயற்படுவர். மாணவர்கள் சகமாணவர்களுடன் கலந்தாலோசித்து கல்வியில் திறம்படச் செயற்படுவர்.

**கன்னி** - எண்ணமும் செயலும் உற்சாகம் பெறும். திறமையுடன் செயற்பட்டு நிறைவேற்ற வேண்டிய பணிகளை எளிதாக்குவீர்கள். உங்களின் நல்ல கருத்து சிலரால் தவறாகப் புரிந்து கொள்கிற சூழ்நிலை உண்டு. கவனம் அவசியம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர்கள், புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வர். மாணவர்கள், ஒருமுகத்தன்மையுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**துலாம்** - மனக்குழப்பம் உண்டாகும். உங்கள் நலன் விரும்புவோரின் சிறந்த ஆலோசனைப்படி செயற்படுவது நன்மை பெற உதவும். சமூக நிகழ்வுகளை அறிவதில் உள்ள ஆர்வம் குறையும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு வகையைத் தவிர்ப்பது நல்லது. இல்லறத்துணையின் உறவினர்கள் நல்மனதுடன் உதவுவர். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறைச் சரி செய்வீர்கள். உத்தியோகத்தர், பணி சிறக்க நிர்வாகத்திடம் சில ஆலோசனை சொல்வர். மாணவர்கள் தகுந்தப் பயிற்சியினால் மட்டுமே எதிர்பார்த்த தேர்ச்சி இலக்கை அடைய முடியும்.

**விருச்சிகர்** - நியாய, தர்ம செயல்களில் அதிக நம்பிக்கை கொள்வீர்கள். நீண்ட நாள் கவனிக்காத விடயம் ஒன்றில், புதிய முயற்சியால் தேவையான நன்மை பெறுவீர்கள். அயல் வீட்டாரின் பரிவு, பாசத்துடன் நடந்து கொள்வீர்கள். புத்திரர் உங்களின் அறிவுரையை வேதம் என, மதித்து நடந்து கொள்வர். இல்லறத்துணையின் உறவினர்களால் சில உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து உபரி பணவரவைத்தரும். அரசியல்வாதிகளுக்கு பொறுப்பான பதவி பெற யோகம் உண்டு. மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்பதில் தகுந்த கவனம் வேண்டும்.

**தனுசு** - யாரிடமும் சாந்த குணத்துடன்பேசி நல் அன்பைப் பெறுவீர்கள். நீண்ட காலம் கண்ணென போற்றி, பாதுகாத்த இலட்சியத்துக்கு உரிய பலன் கிடைக்கும். குடும்பத்தின் முக்கிய தேவைகளை நிறைவேற்ற, பணிகளில் அதிக கவனம் கொள்வீர்கள். எதிர்பார்த்த அளவில் பணவரவு கிடைக்கும். அதிக சொத்துச் சேர்க்கை கிடைக்க அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூல சூழ்நிலையை தகுந்த கவனத்தால் பாதுகாத்து கொள்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகைப் பயன் கிடைக்கும்.

**மகரர்** - பேசுவதை விட செயலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள். கடந்த காலத்தில் ஏற்பட்ட அவமானகரமான சம்பவத்தின் பாதிப்புகளை சரி செய்வீர்கள். இல்லறத்துணை அதிக அன்பு, பாசத்துடன் நடந்து வாழ்வின் எதிர்கால லட்சியம் நிறைவேற உதவுவார். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்கள், கூடுதல் உழைப்பினால் தேவையான பணவரவு பெறுவர். மாணவர்கள் போக்குவரத்து, விளையாட்டு பயிற்சியில் பாதுகாப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

**கும்பர்** - மனதில் உருவாகும் குழப்ப சிந்தனையை உங்கள் நலன் விரும்புபவரின் நல்ல ஆலோசனையில் சரி செய்வீர்கள். சிறியளவிலான சுற்றுலா சென்று வர வாய்ப்பு உருவாகும். உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு பின்பற்றுவதால், உடல்நலம் சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்கள், இலக்கை நிறைவேற்ற கூடுதல் கவனம் கொள்வது நல்லது. மாணவர்கள், திட்டமிட்ட பயிற்சியினால் எதிர்பார்த்த தேர்ச்சி இலக்கை அடைவர்.

**மீனர்** - சிலர் சொல்கிற தவறான ஆலோசனைகளை கேட்டு போட்டி, பந்தயத்தில் ஈடுபட வேண்டாம். ஒருமித்த மனதுடன் பணிபுரிவதால், உழைப்புக்கான பலன் அதிகம் கிடைக்கும். உறவினர்கள் மனக்கிலேசம் [illegible] இல்லறத்துணை, உங்களின் கருத்துக்களை ஏற்று செயற்படுவார். தொழில், வியாபாரத்தில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். பணியாளர்களுக்கு சலுகைப் பயன் கிடைக்கும். மாணவர்கள், பெற்றோரின் எண்ணங்களுக்கேற்ப நடந்து கொள்வது நல்லது.




# அமெரிக்காவுக்கு வடகொரியா 'டோஸ்'

வடகொரியா அணுகுண்டு தயாரிப்பதை தடுப்பதற்கு ஐ.நாவும் அமெரிக்காவும் வேறு பல நாடுகளும் பெரும் முயற்சிகள் எடுத்து வரும் நிலையில் வடகொரியா அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதை அது அண்மையில் விடுத்துள்ள ஓர் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தியிருப்பது மட்டுமல்ல, விரைவில் நடத்தத் திட்டமிட்டிருக்கும் அணுகுண்டுச் சோதனை அமெரிக்காவை இலக்கு வைப்பதாக இருக்கும் என்றும் தெரிவித்து அமெரிக்காவையும் ஐ.நா. மற்றும் நாடுகளையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்காவில் இரண்டாம் தவணையாகவும் அதிபராக பதவி ஏற்றுக் கொண்டுள்ள பராக் ஓபாமாவுக்கு வடகொரியாவின் இந்த அறிக்கை சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள புதிய நெருக்கடியாக அமையும் என்பதைக் கூறத் தேவையில்லை.

நிச்சயமாக இந்த அறிவித்தலுக்கு மாற்றீடாக அமெரிக்கா ஓர் அறிவித்தலை விடுவது மட்டுமல்ல, வடகொரியாவின் அணுகுண்டுச் சோதனை அமெரிக்காவை நோக்கியதாக இருக்கும் பட்சத்தில் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் ஆராய வேண்டியிருக்கும். அதைவிட அவ்வாறான அணுகுண்டுச் சோதனையொன்றை நடத்துவது பாரதூரமான சர்வதேசக் குற்றத்தைப் புரிவதாக இருக்கும் என்பதை வடகொரியாவுக்கு அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அமெரிக்கா எடுத்தாக வேண்டும்.

வடகொரியாவின் இந்த அறிவித்தல் வெறும் அச்சுறுத்தல்களா அல்லது உண்மையாகவே அவ்வாறு செய்யத்தான் போகிறதா என்பது இனிமேல் தான் தெரியவரும்.

வடகொரியா ஏற்கனவே இரண்டு அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தியிருப்பதாகக் கருதப்படுகின்றது. கடந்த வியாழக்கிழமை அது விடுத்த அறிவித்தல் ஒன்றில்; வடகொரியா மீதான ஐ.நா. பொருளாதாரத் தடைகளை இன்னும் இறுக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளின் காரணமாக தனது முக்கிய எதிரியான அமெரிக்காவை இலக்கு வைத்தே மூன்றாவது அணு குண்டுச் சோதனைகளையும் ஏவுகணை வீச்சுக்களையும் நடத்தத் திட்டமிடுவதாக கூறியிருக்கிறது.

வெகுதூர ஏவுகணைகள், செயற்கைக் கோள் சோதனைகளை மட்டுமல்ல உயர்மட்ட அணுகுண்டுச் சோதனைகளையும் கூட நாம் தொடர்ந்து நடத்துவோம் என்பதை மறைக்கவில்லை. அவைகள் எல்லாம் எமது முக்கிய எதிரியான அமெரிக்காவை இலக்கு வைத்தே நடத்தப்படும் என்று வடகொரிய அறிக்கை கூறியது. அந்த நாட்டின் தேசியப் பாதுகாப்பு ஆணையம் விடுத்த அறிக்கையில் ;அமெரிக்காவுடன் கணக்குத் தீர்த்துக் கொள்வதானது வார்த்தைகளால் அல்ல பலாத்காரமாகத்தான் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்பொழுது இந்தச் சோதனை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படவில்லை. ஆனால் அமெரிக்காவுக்கு எதிரான, முற்று முழுதான, வரப்போகின்ற போராட்டத்தின் புதிய கட்டமாக அது அமையும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. [ப]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்



நெடுந் தொடர் 36

பா.உண்மை

**1861.** மார்ச் 4. அன்றைக்குத்தான் லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். பதவிப் பிரமாணக் கூட்டம் வெகுபிரமாதமாக நடந்தது என்று சொல்ல முடியாது. அழைத்திருந்தவர்களில் பெரும்பாலானோர் வரவில்லை. ஊர்வலமே கடுமையான இராணுவப் பாதுகாப்புடன் தான் செல்ல வேண்டியிருந்தது.

லிங்கன் சொற்பொழிவாற்றுவதற்கு எழுந்தார். பேசுவதற்கு முன்பு தன்னுடைய தொப்பியையும் கைத்தடியையும் எங்கு வைப்பது என்று யோசித்தார். முதல் வரிசையில் அமர்ந்திருந்த ஸ்டீபன் டக்ளஸ் கண்ணில்பட்டார். அவரிடம் போய், தொப்பியையும் கைத்தடியையும் கொடுத்துவிட்டுப் பேச ஆரம்பித்தார் லிங்கன். அவர் பேசி முடித்ததும் முதல் ஆளாகப் பாய்ந்து போய், அவர் கைகளைப் பிடித்துக் குலுக்கி, பாராட்டித் தள்ளிவிட்டார் டக்ளஸ்.

லிங்கன் ஜனாதிபதியாகி, வெள்ளை மாளிகையில் வந்து செட்டிலாகிவிட்டாலும், அவருக்கு ஒரு விஷயம் உறுத்தலாகவே இருந்தது. அது குதிரைப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதை.

சில குதிரைப்படை வீரர்கள் வாசலில் எப்போதும் தயாராக நின்றிருப்பார்கள். லிங்கன் வெள்ளை மாளிகைக்குள் வரும்போதும் வெளியே போகும்போதும் வீர முழக்கத்தோடு இராணுவ மரியாதை செய்வார்கள். முதல் நாளே இதை லிங்கனால் தாங்க முடியவில்லை.

அந்தக் குதிரைப்படையின் தலைவரைத் தம் அறைக்கு அழைத்தார் லிங்கன்.

"வணக்கம் மிஸ்டர் பிரஸிடெண்ட்"

"வணக்கம். உங்களிடம் ஒரு விஷயம் பேசவேண்டும்"

"சொல்லுங்கள்"

"நான் உள்ளே வரும்போதும் வெளியே போகும்போதும் குதிரைப்படை வீரர்கள் அணிவகுப்பு மரியாதை செய்கிறார்களே, ஏன்?"

"அது வழக்கமாக நடக்கிற ஒரு சடங்கு. எல்லா ஜனாதிபதிகளுக்கும் இப்படிச் செய்வது வழக்கம்"

"அந்த மரியாதை எனக்கு வேண்டாம். ஏனென்றால், நான் அரசனோ, குறுநில மன்னனோ இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களில் ஒருவன். புரிகிறதா? குதிரைப்படை வீரர்களை அந்த இடத்திலிருந்து முதலில் அகற்றுங்கள்"

"சரி"

லிங்கன் ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக் கொண்டாலும், அந்தப் பதவி முள்ளால் செய்யப்பட்ட ஆசனமாகத்தான் இருந்தது. கஜானா கிட்டத்தட்ட காலியாகியிருந்தது. நாடே கலவரத்தையும் போரையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்தத் தருணத்தில் போதுமான அளவுக்குப் படையில் ஆயுதங்கள் இல்லை.

லிங்கன் பதவியேற்ற அடுத்த நாளே புதிதாக ஒரு பிரச்சினை. பூதாகரமான பிரச்சினை. அமெரிக்க உள்நாட்டுப் போர் ஆரம்பமாகிவிட்டது என்பதற்கான அறிகுறி அங்கிருந்துதான் ஆரம்பித்தது.

தெற்குக் கரோலினாவில் இருந்த முக்கியமான துறைமுகங்களில் ஒன்று, சார்லஸ்டன் துறைமுகம். அமெரிக்காவிலிருந்து பிரிந்துவிட்டோம் என்று தெற்குக் கரோலினா அறிவித்துவிட்டது. ஆனால் அந்தத் துறைமுகத்தில் இருந்த சம்டர் என்ற கோட்டை மட்டும் இன்னும் அமெரிக்காவின் வசம் இருந்தது.

பிரிந்துபோய்விட்டது ஒரு மாநிலம். அங்கிருக்கும் ஒரு கோட்டையில் தினமும் அந்நியக் கொடி ஏற்றப்பட்டால் அவர்களுக்கு எப்படி இருக்கும்? அது எவ்வளவு பெரிய அவமானம்?

சம்டர் கோட்டையின் தளபதியான மேஜர் ராபர்ட் அண்டர்சனுக்குப் புதிதாக ஒரு தலைவலி. கோட்டையில் உள்ள படை வீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் தேவையான உணவுப் பொருள்களை அதுநாள் வரை அந்தப் பகுதியில்தான் வாங்கிக் கொண்டிருந்தார் அண்டர்சன். அமெரிக்காவின் தென்பகுதி பிரிந்து போனவுடன் தெற்கு கரோலினா முறைத்துக் கொண்டது.

"எங்கள் ஊரில் வந்து இருந்துகொண்டு, உங்கள் நாட்டுக்கொடியை கோட்டையில் ஏற்றுகிறாயா? இந்த லட்சணத்தில் நீங்கள் சாப்பிடுவதற்கு எங்கள் சாப்பாடு வேறு வேண்டுமா? தர முடியாது போ"

தெற்குக் கரோலினா மாநில அரசு, உணவுப் பொருள் வாங்குவதைத் தடை செய்துவிட்டது. வேறு என்ன செய்வார் அண்டர்சன்? வோஷிங்டன் தலைமைச் செயலகத்துக்குக் கடிதம் எழுதிவிட்டார்.

"கோட்டையில் உணவுப் பொருள் இல்லை. உடனே அனுப்பவும். ஆறு வாரங்கள்தான் தாக்குப் பிடிக்க முடியும். அதற்குள் உணவுப் பொருள் வந்து சேராவிட்டால், கோட்டையைவிட்டு வெளியேறி விடுவோம்"

(மீட்பர் வருவார்)

தெற்குக் கரோலினாவில் இருந்த
முக்கியமான துறைமுகங்களில் ஒன்று,
சார்லஸ்டன் துறைமுகம்.
அமெரிக்காவிலிருந்து பிரிந்துவிட்டோம்
என்று தெற்குக் கரோலினா அறிவித்துவிட்டது.
ஆனால் அந்தத் துறைமுகத்தில் இருந்த சம்டர்
என்ற கோட்டை மட்டும் இன்னும்
அமெரிக்காவின் வசம் இருந்தது.

# புதிய பிரார்த்தனை

அவரவர் பிரச்சினை
ஆயிரம் இருக்க
எனக்கு மட்டும்
ஏன்... அவை
கோடிகளாய்....
நிம்மதியாய் இருந்த நாள்
நிச்சயமாய்...
நினைவில் இல்லை!
முதன் முறையாய்
கடவுளை வேண்டி...
மறந்தும்கூட
மனிதனாய் எனக்கு
மறுபிறவி வேண்டாம் என்றேன்!



தேனுஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பெருமை மிகுந்த மரபுரிமைகள்

ம.திருக்குமரன்



# மரபுரிமைகளைக் காத்தல்:

## பெருங்கடைத் தொகுதியாக மாறியுள்ள கொழும்பு ஒல்லாந்த வைத்தியசாலை

இன்றைய முன்னேற்றகரமான திட்டமிடல் வடிவமைப்பு முறைகள் மரபுரிமைச் சொத்துக்களை தமது வடிவமைப்பின் மையவிசைகளுள் ஒன்றாக்குவதனூடாக நகர மற்றும் தேச அபிவிருத்தியின் பரந்த இலக்குகளை அடையவிழைகின்றன. இந்தப் பரந்த இலக்குகளென்பது நீண்ட அதன் இனத்துவப் பண்பாட்டு வரலாற்று வேர்களிற்கான - தனித்துவம் மிக்க அதன் சிறப்புக்கான சான்றாதாரமாக - வாழும் அடையாளமாக மட்டுமின்றி பரந்துபட்ட பொருளாதார எழுச்சிக்கான தளமாகவும் காணப்படுகின்றன. இத்தாலியும், இந்தியாவும் வருடாந்தரம் தமது மொத்தத் தேசிய வருவாய் ஈட்டுகையின் கணிசமான ஒரு பெருந்தொகையை அவர்களுடைய மரபுரிமைச் சொத்துக்களைக் காணவரும் பயணிகளிடமிருந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈட்டுகின்றன. அவ்வகையிலவை அவர்களுடைய பண்டைய வரலாற்று பெருமையின், அடையாளத்தின் சின்னங்களாக மட்டுமின்றி, சமூக பொருளாதார மேம்பாட்டின் காரணியாகவும் சிறப்பிடம் பெறுகின்றன. சுருக்கமாகக் கூறினால் மரபுரிமைச் சொத்துக்கள் என்பது இன்றைய நிலையில் ஒரு பிராந்தியத்தின் அபிவிருத்தியின் மிகமுக்கிய அலகாகியிருக்கிறது. வேறுவகையிற் கூறினால் மரபுரிமை என்பது பழைமையின் பாரமல்ல. அது வருங்காலத்திற்கான ஒரு பெருங் கொடையாகும். இத்தகைய ஒரு நிலைப்பாடே உலகளவில் மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாத்தல் என்பதை மிக முக்கியமான ஒரு செயற்பாடாக நிலைநிறுத்தியுள்ளது. இதற்காக பலவகைப்பட்ட வியூகங்களையும், சட்ட ஏற்பாடுகளையும் உலகம் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் கட்டமைத்துள்ளது. இவ்விதமான மரபுரிமைச் சொத்துக்களை காப்பதற்கான பல்வகைப்பட்ட பொறிமுறைகளில் சிறப்பானதொன்றாகக் கருதப்படுவது மரபுரிமைச் சொத்துக்களை இன்றைய நிகழ்காலத் தேவைகளோடு இணைத்தல் என்பதாகும். குறிப்பாக மரபுரிமைக் கட்டடங்களின் மீதாக இவ்வகைப்பட்ட அணுகுமுறை அதிகபட்சம் பிரயோகிக்கப்படுகிறது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. அவ்வகையான இலங்கை நிலைப்பட்டவொரு செயற்பாடு பற்றியே இக்கட்டுரை பேச முயல்கிறது.

காலனியத்திற்குட்பட்ட தென்கிழக்காசியப் பகுதியிலொன்றென்ற வகையில் இலங்கைத் தீவின் பிராந்தியங்கள் தோறும் காலனிய காலத்திற்குரித்தான மரபுரிமைச் சொத்துக்கள் பரந்துபடக்காணப்படுகின்றன. அவை காலனிய நவீனத்தின் வாழும் சாட்சியங்களாகவும், சமூக நிலைமாற்றங்களின் சான்றாதாரங்களாகவும் அமைவவை. அவ்வகையில் எம்மிடையே காணப்படும் போர்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கிலக் காலனியப் பெறுபேறுகளின் வரிசையிற் சிறப்பிடம் பெறுமொன்று கொழும்பு ஒல்லாந்த வைத்தியசாலையாகும். ஒல்லாந்தருடைய ஆட்சியின் (1656 - 1796) ஆரம்ப காலகட்டத்தல் 1681 இல் கட்டப்பட்டதாக, ஒல்லாந்தரிடதே அக்காலகட்டத்தில் பணியாற்றிய ஜேர்மனியரான கிறிஸ்தோபர் ஸ்கிவிற்ஸரின் குறிப்புக்களிலிருந்து தெரியவருகிறது. இற்றைக்கு 330 வருடங்களுக்கு மேற்பட்ட இந்தக் கட்டடம் ஒல்லாந்தருக்கேயான தடித்த - நெடிய சுவர்கள், கதவுகள், யன்னல்கள், வானத்துக்குத் திறக்கப்பட்ட நடு முற்றங்கள், ஆழமான விறாந்தைகளையுடைய இலங்கைத் தீவிற்கேயான சுவாத்தியச் சிறப்பும், எளிமையின் செந்நெறித் தன்மையுடைய ஒரு கட்டடமாகும். கட்டடக்கலையைப் போலவே, நிலவுருவாக்கத்திலும் (landscaping) கவனமுடைய ஒல்லாந்தர்கள் பெருவாய்க்காலை (canal) வைத்தியசாலையின் ஓர் விளிம்பாக்கி நீரருகோடும் ஒரு கட்டுமானமாக்கியிருந்தனர். (பின்பு அது இல்லாமற் போயிருக்கிறது).

காலப்போக்கிற் பல பண்டைய பண்பாட்டு வரலாற்று தனிச்சிறப்புடைய இடங்கள், கால மாற்றங்கள் - அதனை முன்நகர்த்தும் பலவேறு காரணிகளால் பின்தள்ளப்பட்டு பொய்யாய், கனவாய், பழங்கதையாய் போய்முடிந்து விடுகின்றன. ஆனால் அவற்றுட்தான் நம் வரலாறுகளும் - அவற்றின் நீண்ட வேர்களும் புதைந்துபோயுள்ளன. அதனாற்றான் தேசங்கள்தோறும் அவற்றைப் பாதுகாப்பதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேற்படி ஒல்லாந்த வைத்தியசாலையும் கால மாற்றங்களின் பலவேறு நிலவரங்களால் இவ்வகைப்பட்ட சிதைந்தழியும் நிலைநோக்கி நகரத் தொடங்கியிருந்தது. இடையில் 1980 - 1990 காலப்பகுதியில் கொழும்பு கோட்டைப் பகுதிக்குரிய காவல்நிலையம் இக்கட்டடத்தில் இயங்கியபோதிலும் பேரளவில் அதன் பௌதிக ரீதியான சரிவை அது ஈடுசெய்யவில்லை.

இந்த நிலவரங்களிற்கு மத்தியிற்றான் இரண்டாயிரத்திப் பதினொராம் ஆண்டின் கடைசி மாதத்தின் இரண்டாம் நாள் மேற்படி கொழும்பு ஒல்லாந்த வைத்தியசாலை, அதன் கட்டடவியற் சிறப்புக் கெடா வண்ணம், அதனைப் பேணியவாறு பெருங்கடைத்தொகுதியாக (shopping mall) மாற்றப்பட்டது. உணவகங்கள், கைவினைப்பொருட் கடைகள், ஆபரண மாளிகைகள், கைத்தறிப் புடைவை மற்றும் ஆயத்த ஆடைக் கடைகள் என்பனவற்றால் நிறைக்கப்பட்டு வண்ணமயமாகியுள்ள இவ்விடம் இன்றைய இலங்கையில் மக்களதிகம் கூடும் , உல்லாசப் பயணிகளை அதிகம் கவர்ந்திழுக்கும் ஓரிடமாகியுள்ளது. ஒருபுறம் மரபுரிமைச் சொத்தொன்றை அதன் சிறப்புக்கெடா வண்ணம் நிரந்தர - தொடர்ச்சியான பயன்பாட்டிற்குரிய இடமாக மாற்றியதன் மூலமாக மேற்படி மரபுரிமைச் சொத்தின் தொடர்ச்சியான உயிர் வாழுகைக்கு உறுதுணை செய்யப்பட்டிருக்கிறது. அதேநேரம் இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்பை, தொழில் விருத்தியை, வேலை வாய்ப்புக்களை இது உருவாக்கியுள்ளது.

இந்த முக்கியத்துவம் மிக்க செயற்பாட்டை நடைமுறைப்படுத்தியது பாதுகாப்பமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக பாதுகாப்பமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ ஆவார். மேற்படி கொழும்பு ஒல்லாந்த வைத்தியசாலையை வாழும் மரபுரிமையாக்கியதில் மட்டுமின்றி மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாத்தல், நகர மற்றும் நிலவுருவாக்கத்திலும் கவனமெடுத்தல் எனத் தென்பகுதியில் திருவாளார் கோத்தபாய ராஜபக்ஷவின் படையணி மிக முக்கிய பங்காற்றுவதாகத் தென்பகுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தெற்கின் கதை.

வடக்கின் -கிழக்கின் கதை என்ன? - தீவின் பல பிராந்தியங்கள் போலவே வட பிரா்ந்தியத்திலும் காலனியத்தின் பெறுபேறான மரபுரிமைச் சொத்துக்கள் பல காணப்படுகின்றன. வட பிராந்தியம் காலனிய நிலவரங்களோடு நிகழ்த்திய உரையாடல்கள் அதற்கு ஒரு செழுமை மிக்கதும், தனித்துவம் மிக்கதுமான ஒரு காலனியக் கடந்த காலத்தைத் தந்துள்ளன. அவற்றில் பலவற்றை இனப்பகைமையின் திட்டமிட்ட செயற்பாடுகளும் - அதன் பெரும் விளைவான போர் மட்டுமன்றி, எமது அசட்டையும் - உதாசீனமும், அறியாமையும், செயற்பாட்டுத் திறனற்ற அண்மைய காலகட்டத்து கல்விசார் நிலவரங்களும் சரியான அர்த்தத்தில் இந்த நிமிடம்வரை காணப்படுகின்ற சமூக பண்பாட்டுத் தலைமைத்துவமின்மைகளும் உருவாக்கியுள்ளன.

மேற்படி கொழும்பு ஒல்லாந்த வைத்தியசாலையை இன்றைய நாள் தேவைகளுக்கான களமாக்கியதன் மூலமாக ஒரு நாணயத்தின் இருபக்கம் போன்ற மரபுரிமைக் காப்புச் செயற்பாட்டையும், நிகழ்கால மேம்பாட்டினையும் கூட்டிணைத்தது போன்ற ஒரு செயற்பாட்டை நாமும் முன்னெடுக்கலாம் - இந்தளவுக்கும் பின்னாலுங் கூட இன்னும் யாழ்.குடாநாட்டில் ஆங்காங்கே "தெரியாத்தனமாக" தப்பியுள்ள மரபுரிமைக் கட்டுமானங்கள் உள்ளிட்ட மரபுரிமைச் சொத்துக்கள் மீதாக ஏன் இவ்விதமான ஒரு செயற்பாட்டை நாம் நடைமுறைப் படுத்த முடியாது? ஒருவேளை தெற்கைப் போன்ற அரச உறுதுணை எமக்கில்லை என்று நாம் வாதாட முடியும் - ஆனால் அரசை இதனை நோக்கி நிர்ப்பந்தித்துப் பார்க்கலாம் - குரல் கொடுக்கலாம் அல்லது எமது அதிகார அல்லது இயலுமை எல்லைகளுள் நாமே செயற்படக் கூடிய சாத்தியங்கள் கூட சந்தேகமின்றி எம் முன்னால் உள்ளன.

ஆனால் இவை எதைப் பற்றியும் யோசிக்காது இன்று நாம் உடைத்தெறிகின்ற அல்லது உருக்கெட மாற்றிச் சிதைக்கின்ற பண்டைய கட்டுமானங்களை இவ்விதமான பேணுகைக்கு கொண்டுவருதல் மூலமாக யாழ்ப்பாணத்தை ஒரு மரபுரிமை நகரமாகப் பேணவும், அதன் வரலாற்றையும்- தனியடையாளத்தையும் நிலைநிறுத்தவும் முடியும் என்பது மட்டுமின்றி குடாநாட்டினை நோக்கிய பயணிகளின் வருகையையும் - அதன் மூலமான பொருளாதார எழுச்சியையும் கூட நிகழ்த்த முடியும். ஒவ்வொருவரும் நினைத்தால் , தமக்கெட்டிய தூரம் வரை தம்மால் மரபுரிமைக் காப்புத் தொடர்பில் செயற்பட முடிந்தால் யாழ்ப்பாணத்தையும் அதன் சரியான அர்த்தில் ஒரு யாத்திரைத் தலமாக்க முடியும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகத்திடமிருந்து சில தகவல்கள்

ரம்யன்

அசை போட ஒரு வியம் 64

குப்பை மேட்டில் எறியப்பட்டிருந்த எச்சில் இலையில் மிச்சமாய் இருந்த சோற்றை நக்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது தெருநாய் ஒன்று. அந்த வழியாகபறந்து போய்க் கொண்டிருந்த காகம் நாய் எதையோ சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டுவிட்டு கீழ் இறங்கி ஒரு மரக் கிளையில் அமர்ந்து குரல் எடுத்து 'கா, கா' என்று கத்தியது அக்கம் பக்கத்திலிருந்து ஐந்தாறு காகங்கள் அங்கு வந்து சேர்ந்தன.

அவைகள் தங்களுக்குள் தங்கள் மொழியில் பேசிக் கொள்ள வுமில்லை. வேறுவித சைகைகளும் காட்டிக் கொள்ளவில்லை.

ஒரு காகம் சாப்பிட்டுக் கொண்டிருந்த நாயிடம் சென்று அதன் வாலில் சொண்டால் சீண்டி இழுத்தது. கோபமுற்ற நாய் பின்னால் திரும்பி வாலில் பிடித்திழுத்த காகத்தை கலைத்துக் கொண்டு செல்ல ஏனைய காகங்கள் மறுபக்கமாக பறந்து சென்று நாய் சாப்பிட்டுக் கொண்டிருந்த இலையில் கிடந்த மிச்சசொச்ச சோற்றையும் வாரிக் கொண்டு போய்விட்டன. திரும்பி வந்த நாய் ஒன்றுமில்லாமல் திரும்பிப் போயிற்று.

இது கதையல்ல, சாதாரணமாக நாம் ஆங்காங்கே காணும் சம்பவங்கள்தான். அவைகளைக் கண்டும் காணாமல் போய் விடுகின்றோம். கொஞ்சம் சிந்தித் துப் பார்த்தால் காகத்தின் புத்திசாலித்தனத்தை புரிந்துகொள்ளலாம். நாயின் ஏமாளித்தனமும் புரிந்தவிடும். ஆனால் இந்தப் புத்திசாலித்தனம் காகத்துக்கு எப்படி வந்தது? அதுதான் இயற்கை யின் சூத்திரம்.

முதல் காகம் கொடுத்த குரலைப் புரிந்து கொண்டு ஏனைய காகங்கள் அந்த இடத்துக்கு வந்தனவென்றால் அந்தக் குரலில் ''இங்கே சாப்பாடு இருக்கு வாருங்கள்'' என்று விடுக்கப்பட்ட செய்தி அடங்கியிருந்திருக்க வேண்டும். அந்தச் செய்தியை வழங்கும் விதத்தில் அது தன் குரலை உயர்த்தி, தாழ்த்தி அல்லது நெளிவு, சுழிவுகளோடு வெளிப்படுத்தியிருக்க வேண்டும். வந்த காகங்கள் எல்லாமாக நாயை சீற்றம் கொள்ளச் செய்து அதன் உணவை பறித்த விதம் வியப்புக்குரியது.

இதைத்தான் ''எத்தித் திரியும் அந்தக் காக்கை' என்று பாரதியாரும் பாடினாரோ?



கடையில் கச்சான் கடலை வாங்கி கடதாசி பொதியுடன் சிறுவன் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான். அங்கே பறந்து வரும் காகம் அவன் கையில் இருக்கும் கச்சான் பொதியைப் பறித்துக் கொண்டு பக்கத்திலுள்ள மரத் தின் மீது வைத்து பொதியைக் கிளறு கிறது. பொதி கிழிந்து கச்சான் முழுதும் கீழே கொட்டிவிடு கின்றன. இதில் விசேடம் என்னவென்றால் அவன் சிறு வன் என்பதும் அவனை நெருங்குவதில் ஆபத் தில்லை என்பதும் காகத்துக்குத் தெரிந் திருக்கிறது.

இவ்வாறு காகத் தின் புத்திசாலித்தனத்தை அவதானித்துதான் முன்னோர்கள், காகத்தை முதன் மையாக வைத்து சிறுவர்களுக்கான பல கதைகளை உருவாக்கியிருக்கிறார்கள்.

அதில் ஒன்றுதான் தாகம் எடுத்த காகம் ஒன்று தண்ணீர் கிடைக்காமையால் அங்குமிங்கும் திரிந்து பின் ஒரு பாத்திரத்தின் அடியில் தண்ணீர் இருக்கக் கண்டு சிறு கற்களை பொறுக்கிப் பாத்திரத்துக்குள் போட்டு தண்ணீர் மேல் எழும்பியதும் தாகத்தைத் தீர்த்துக் கொண்டது என்ற கதையாகும். காகத்துக்கு அவ்வளவு தூரம் புத்திசாலித்தனம் இருக்க முடியுமா என்பது சிந்தனைக்குரியதுதான். முதலில் நாம் கண்ட இரண்டு சம்பவங்களும் உண்மையானவை என்பதால் காகம் தண்ணீர் அருந்திய கதையும் உண்மையில் நடந்த சம்பவமாகவே இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

காகத்தின் புத்திசாலித்தனத்தை அவதானித்த நம் முன்னோர்கள் காகத்தைப் பிரதானமாக வைத்து வேறு கதைகளையும் உருவாக்கி யுள்ளார்கள்.

மரத்தில் தான் கட்டிய கூட்டில் இருந்த முட்டைகளை குடித்துவிட்ட பாம்பை பழிதீர்த்துக் கொள்ள நினைத்த காகம் அரசி ஒருவரின் முத்துமாலையைத் திருடி வந்து பாம்பின் புற்றுக்குள் போட்டதும் காகத்தைப் பின் தொடர்ந்து வந்த சேவர்கள் பாம்பின் புற்றை சிதைத்து பாம்பையும் கொன்று முத்துமாலையை எடுத்துச் சென்றார்கள் என்ற கதையும் இவ்வாறு உருவானதே.

காகம் கருமை நிறத்து பட்சிதான். அதிலும் இரண்டு வகை உண்டு. சிறியவாக காகங்களின் நிறம் சற்று வெளுப்பாக இருப்பதைக் காணலாம். அண்டங்காக்காய் பெரிதாகவும் மினுமினுப்புக் கொண்ட அடர்த்தியான கருப்பு நிறத்தைக் கொண்டவையாகவும் இருக்கும். காகங்கள் கூட்டமாக இருக்கும் இடங்களில் அண்டங் காக்கைகள் ஏனையவற்றின் மீது ஆக்கிரமிப்பு செலுத்துவதைக் கூட காண முடியும்.

புத்திசாலிகள் (மனிதர்களாலும்) எல்லாவகையிலும் புத்தி சாலித்தனமாக இருப்பதில்லை என்பதற்கு காகத்தையே உதாரணமாகக் கூறலாம். ஏனைய பறவைகளை விட நாம் அறிந்த அளவில் காகம்தான் புத்திசாதுர்யமானது என்றாலும் அதன் கூட்டில் குயில் முட்டையிட்டு அடைக்காகச் செய்து குஞ்சு களையும் பொரிக்க வைத்துவிடுகின்றது. இது இந்த புத்திசாலிப் பறவைக்கு புரிவதில்லை.

காகத்தை அழகான பறவையென்று யாரும் சொல்லமாட்டார் கள். அதன் குரலும் அழகாய் இல்லை. பெரும்பாலும் அழுக்கான பொருள்களையே சாப்பிடுகின்றது. அதிகாலையிலேயே துயில் எழுந்துவிடுகின்றது. அவ்வப்போது தண்ணீர் கிடைக்கும் இடங்களில் குளித்து உடல் உலர்த்தி கொள்கின்றது. காது கொடுத்துக் கேட்டால் அது தன் குரலை வெவ்வேறு வித மாக மாற்றி தன் இனத்தவர்களுக்குத் தகவல் வழங்கு வதை அறியலாம். ஒரு காகம் இறந்துவிட்டால் உள்ள காகங்கள் எல்லாம் ஒன்று கூடி மரணச் சடங்கு நடத்துவது போல் கத்தித் தீர்ப்பதைப் பார்க்கலாம்.

மிருகங்களில் யானை, நரி மற்றும் வாலில்லா குரங்கு போன்றவைக்கு இம்மாதிரி புத்தி சாலித்தனம் இருப்பதாகக் கூறப் படுகிறது.

அண்மையில் ஒரு தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியைக் காண நேர்ந்தது. வாலில்லா குரங் கின் (சிம்பான்சி) விவேகத்தை பரிசீலிக்க விரும்பும் ஒருவர் உயர மான ஒரு கண்ணாடி பாத்திரத்தில் அதற்கு விருப்பமான தின்பண்டங்கள் சிலவற்றைப் போட்டு பாத்திரத்தை அசைக்க முடியாதபடி இறுக்கி வைத்து விடுகிறார்.

குரங்கு வந்து பார்க்கின்றது பாத்தி ரத்துக்குள் கையை, விரலை விட முடிய வில்லை. பாத்திரத்தை அசைத்து எடுக்க வும் முடியவில்லை. அங்கிருந்து சென்று திரும்பி வருகின்றது. வாய் நிறைய கொண்டு வந்த தண்ணீரை பத்திரத்துக்குள் விடுகிறது. பொருள் மேல் வருகிறது. ஆனால் முழுதுமாக வரவில்லை. மேலும் ஒரு தடவை நீரை வாயில் கொண்டு வந்து பாத்திரத்தில் விட்டு பொருள் மேலே வந்ததும் எடுத்து வாயில் போட்டுக் கொண்டு போய்விடு கிறது.

ஆரம்ப காலத்தில் மனித சமூகமும் இவ்வாறுதான் இருந்து முன்னேறியிருக்க வேண்டும்.

தேவையைப் பொறுத்தும் சூழ்நிலையைப் பொறுத்தும் மனித மூளை பகுத்தறிவோடு வேலை செய்கிறது. அதனால் இன்றைய நிலைக்கு வந்துள்ளான் மனிதன்.

முன்பு இருந்தவர்கள் கண்டு பிடித் தவைகளை இன்று நாம் பயன்படுத்துகிறோம், அனுபவிக்கின் றோம். நம் காலத்தில் கண்டு பிடிக்கப்படுபவை எதிர்கால சந்ததியினருக்குப் பயன்படும் என்று சொல்ல வேண்டுமா? ★

> “ புத்திசாலிகள் (மனிதர்களானாலும்) எல்லாவகையிலும் புத்திசாலித்தன மாக இருப்பதில்லை என்பதற்கு காகத் தையே உதாரணமாகக் கூறலாம். ஏனைய பறவைகளை விட நாம் அறிந்த அளவில் காகம்தான் புத்திசாதுர்யமானது என்றாலும் அதன் கூட்டில் குயில் முட்டையிட்டு அடைக்காக்கச் செய்து குஞ்சுகளையும் பொரிக்க வைத்துவிடுகின்றது. இது இந்தப் புத்திசாலிப் பறவைக்கு புரிவதில்லை. ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடைபடும் சட்டகங்கள்:

## அலைவுறும் பிரக்ஞை



■ ந.மயூரரூபன்

படைப்பு என்பது முற்றுமுழுதான தூய உருவாக்கம் அல்ல. ஏனெனில் அது இல்லாத ஒன்றிலிருந்து உருவாவதுமல்ல. எங்கோ ஒரு வெளியிலிருந்து பிரம்மமாய் தோற்றங்கொள்வதுமல்ல. அது ஒரு தேவையிருந்து உருவாவது. எமக்குள் அலைந்து கொண்டிருக்கிற தேவையின் உந்துதல் உருவாக்கித் தருகின்ற வெளிப்பாட்டின் அடையாளமே இது. இப்படி ஒரு படைப்பு உருவாகிற போது அதன் முழுமை எப்படி நிகழ்கிறது. முழுமையாக்கும் சட்டகங்கள் எவை என்கிற கேள்விகளும் உருவாகின்றன.

*அது படைப்பாளியின் பிரக்ஞையா?*
*அவனது நனவிலி மனமா?*
*ஏதாவது மாதிரிச் சட்டகமா?*

பொதுவாக எந்தத் தனிச் சட்டகங்களும் தனக்குரியதாக ஒரு படைப்பை அடையாளப்படுத்த முடியாது. இவற்றுடன் வாசகனின் மன–மொழி இயங்கியல் இணைகிற போதுதான் ஒரு படைப்பின் முழுமையை நாம் உணர முடியும்.

இதனால் ஒரு படைப்பு குறித்த ஒருமைப் புள்ளியை நோக்கி நகர்வது சாத்தியமற்றதாகிறது. இங்கு எழுத்தின் மையம் அழிந்து போகிறது. இந்தப் படைப்பின் முழுமைக்குள் படைப்பாளியின் சுயம் வேறற்றுக் கலந்துள்ளது. சமூகம், இனம், நாடு, உலகம் என்பன கட்டமைத்த புனைவுக்குள் அமிழ்ந்துள்ள அவன் தனது சுயத்தை அவற்றின் இயல்பு வெளியிலேயே கட்டமைத்துள்ளான்.

*''கடவுளர் அலையும் காலத்தில்*
*இரவில் புணர்ச்சிக்கலையும் நாய்களினது*
*காலடி ஓசைகளும் கடவுளர்களுடையவைதான்*
*ஒப்பாரிகளும் விசும்பல்களும்*
*ஓலங்களினாலுமான நகரத்தில்*
*சனங்களின் பிரார்த்தனை*
*தெருவில் சுடப்பட்டு இறந்தவனின்*
*இறுதி மன்றாடலாயும் கதறலாயும்*
*நிர்க்கதியாய் அலைகிறது.''*

(கடவுளர்களின் நகரங்களில் வாழுதல், சித்தாத்தன்)

போர் சிறைப்பிடித்த காலத்தின் இருப்பினைப் பேசும் கவிதையின் ஒரு பகுதி இது.போர்ச் சூழலின் பயங்கரம் இல்லாத ஒன்றல்ல. தூய புனைவுமல்ல. வாசகனின் மனதில் கடவுளரின் தோற்றம், அவனின் அறிக்கைக்கும் நனவிலி மனதின் உருவாக்கத்துக்குமேற்ப திறந்துகொள்ளும். ஒரு படைப்பாளியின் சுயம்; அதிகாரத்தின் மீதான விமர்சனமாய், ஒடுக்கப்பட்டோரின் சார்பு நிலை தரும் அகவயமாய் புனைவின் சொற்களின் அரசியல் தரும் படிமமாய் வெளிப்படுகிறது.

*''இவை தவிர*
*ஒருவர் கொல்லப்படும் போது*
*பெரிதாக என்ன நடக்கப் போகின்றது*
*இன்னொருவன் கொல்லப்படுவான்*
*என்பதைத் தவிர''*

(ஒருவன் கொல்லப்படும் போது, அலறி)

படைப்புத் தருகின்ற சூழல்–அதுவொன்றுதான். காலத்தைப் போர் சிதைத்த கணங்கள் அவை. சாவின் அவலத்தை–அது உருவாக்கியுள்ள பிரக்ஞையையே இக்கவிதை பேசுகிறது.

*'ஒருவர் பின்னொருவராய்*
*சாகக் காத்திருக்கிறோம்*
*பிணங்கள் விழ விழ*
*பிணங்களாயே விழ'*

(இருள், கருணாகரன்)

இருப்பின் உடனடிக் கணங்கள் வரிகளில் தொற்றியிருக்கின்றன. வாழ்வின் மீதான அவநம்பிக்கையும் தொடரனுபவத்தின் பின்னான நிதான எதிர்பார்ப்பும் இங்கு வெளிப்படுகிறது.

''உண்மையின் புலன்கடந்த உறுதிப்பாடுகள் இறந்துவிட்டன, மொழி விளையாட்டுகளின் துயரமான போராட்டத்தில் பொதுப்பகுப்பு முறைகள் மறைந்து விட்டன; வட்டாரச் சொல்லாடல்களைக் கடந்த உண்மைக்கான விதிமுறைகள் என்று எதுவுமில்லை, இருப்பதெல்லாம் தம்மை நியாயப்படுத்திக் கொள்ளப் போராடும் வட்டாரக் கதை கூறல்களின் முடிவற்ற போர் மட்டுமே''

(செய்லா பென்ஹபிப்1992)

நாங்கள் இதுவரை காலமும் பேசி வந்த அதியுன்னத கருத்தியல்களும் நம்பிக்கைகளும் காலாவதியாகிவிட பிரக்ஞை மாற்றத்தினை சமகால ஈழத்துக் கவிதைகளில் நாம் காணமுடியும். குறிப்பாக கோட்பாட்டு நிலையிலும் சமூக சீர்திருத்த–மாற்றங்களை பேசிவந்த இயல்பு முற்று முழுதாக புறந்தள்ளப்படுகின்ற சூழல் இது.

ஒரு உடனடித் தன்மையை (Immediacy) நாம் இங்கு அனுபவிக்க முடியும். பிரமரிக் ஜேம்சன் வான்கோவினதும், அன்டிவரோலினதும் காலணி ஓவியங்களை ஒப்பிட்டு இதனை தெளிவுபடுத்துகிறார். அன்டிவரோனின், 'டைமன்ட் தூள் ஷீ' எனும் ஓவியம் சிறப்பானது.

எனினும் அங்கு பார்ப்போனோடு பேசக்கூடிய பண்பு இல்லை. பார்ப்போன் ஓவியத்தில் தனக்கான ஓரிடம் உண்டு என்பதை உணர்ந்து கொள்ளவே முடியாது. ஆனால் வான்கோவின், 'ஒரு சோடி பூட்ஸ்கள்' ஓவியம் அவ்வாறானதல்ல. அது நவீன காலகட்டத்தைச் சேர்ந்த காலனிய ஓவியத்தோடு பார்ப்போனுக்கு உறவை ஏற்படுத்த வல்லது. அது ஹிட்லரின் அவுஸ்விட்ஸ் (போலந்தில் உள்ளது) சித்திரவதை முகாமில் குவிக்கப்பட்ட காலணிபோல் தொங்குவதை பார்ப்போனுக்கு நினைவூட்டுவது.

இதுவரை பார்க்கப்பட்டுவந்த கவிதை தொடர்பான எண்ண அடுக்குகள் மாற்றங்கண்டுள்ளன. பிரடரிக் ஜேம்சன் குறிப்பிடுகின்ற உடனடித் தன்மையை இங்கும் அடையாளப்படுத்த முடியும்.

போர்–போருக்குப் பின்னான சூழமைவில் சுழன்றோடுகின்ற–அலைகின்ற நமது மனங்கள் மரபார்ந்த படைப்புச் சிந்தனை வெளிகளிலிருந்து–வரைந்த சட்டகங்களிலிருந்து நகர்ந்திருக்கிறது என்பதை சமகால ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் சொல்லுகின்றன. ★

**ஒரு படைப்பு குறித்த ஒருமைப் புள்ளியை நோக்கி நகர்வது சாத்தியமற்றதாகிறது. இங்கு எழுத்தின் மையம் அழிந்து போகிறது. இந்தப் படைப்பின் முழுமைக்குள் படைப்பாளியின் சுயம் வேறற்றுக் கலந்துள்ளது**

## தாய் நிலம் 3



–சபா கோபன்

*கார்த்திகையும் மார்கழியும்*
*கடந்துபோன மாதங்கள்*

*பிறப்பிற்காகவும் இறப்பிற்காகவும்*
*மீட்பர்கள்*
*நினைக்கப்படுகின்ற காலம்*

*தேவதூதன்*
*மானிட மீட்பனாய்*
*மண்ணுக்கு வந்தான்*

*மீட்பு நிகழ்ந்ததா......?*
*மனிதர் மீட்கப்பட்டனரா....?*

*ஒவ்வொரு மீட்பனதும்*
*புதைக்கப்படுதல் என்பது*
*உயிர்த்தெழுதல்களுக்காகவே*
*நிகழ்த்தப்படுகிறது*

*முள்ளிவாய்க்கால் புதைகுழிகளில்*
*முளைத்த புற்கள்*
*பூத்திருக்கின்றன*

*வண்ணத்திப்பூச்சிகளும்*
*தேனீக்களும்*
*அவதானிக்கப்படுகின்றன*

*மகரந்தக் காவுதல்*
*எதையாவது நிகழ்த்தி*
*மீண்டுமொரு உயிர்ப்புக்கு*
*உறுதுணையாகி விடுமோவென்று*

*வண்ணத்திப்பூச்சிகளும்*
*தேனீக்களும்*
*அவதானிக்கப்படுகின்றன*

*ஓமந்தை*
*இப்போதும் நம்புகிறது*
*தான்தான் எல்லையென்று*

*மக்கள் மயப்படாத போராட்டம்*
*போராட்ட மயப்படாத மக்கள்*
*உலகசந்தையில்*
*விடுதலை வேண்டிவர*
*புறப்பட்ட தலைமைகள்*

*முள்ளிவாய்க்காலில்*
*முடிந்த போரல்ல*
*முள்ளிவாய்க்காலில்*
*தொடங்கிய போரே*
*வெல்லப்படவேண்டியது*

*ஓர் இனத்தின்*
*உயிர்கள் மீதான போரைவிட*
*ஓர் இனத்தின்*
*அடையாளங்கள் மீதான போரே*
*வெல்லப்படவேண்டியதுதெரிந்த*

*போரை விட*
*தெரியாத சமாதானம்*
*பயங்கரமானது*

*அந்திப் பொழுதுகளுக்காக*
*நான்*
*அச்சப்படப்போவதில்லை*

*ஏனெனில் அது*
*விடியலுக்கு முந்திய*
*ஒரு நிகழ்வேயன்றி*
*வேறொன்றுமில்லை*

*கார்த்திகையும் மார்கழியும்*
*கடந்து போன மாதங்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டுப்போகும் சொந்தங்கள்

விநயன்

உற்றார், உறவினர் என்றொரு தொடர் தமிழில் வழங்கி வருவதை அறியாதார் இருக்க மாட்டார்கள். இந்தத் தொடர் கொண்டுள்ள பொருள் பற்றிய பிரக்ஞை பற்றி யாரும் ஆழ்ந்து சிந்திப்பதில்லை.

ஒரு மனிதனின் அன்றாட வாழ்வு சுமுகமாக இயங்கி வருதல் என்பது அவனது தனிப்பட்ட தொழிற்படுதலில் தங்கியிருப்பதில்லை. எப்படியோ அடுத்தவர் சிலரின் ஒத்துழைப்பு, உதவி உடனிருப்பு இவற்றுடனேயே அவனது வாழ்வின் சக்கரம் சுழலுதல் இயலும். நம் ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் இது பொருந்தும். இவ்வாறு தம் பொருட்டாக ஏதேனுமொரு வழியில் சம்பந்தமுற்றவர், துன்பமுற்றவர், சிரமமுற்றவர் என்றெல்லாம் எம் அனைவருக்கும் உற்றார் பலர் இருக்கவே செய்கிறார்கள். இரத்த சம்பந்தமுடையவர்கள் தாயாய் தந்தையாய் சகோதரராய் எமது உற்றார் ஆகிறார்கள். அது போலவே இரண்டாவது படியில் ஏனைய உறவுகள் சித்தப்பா, பெரியப்பா, மாமா, சித்தி என ஏதோவொரு வகையில் எம்முடன் தொடர்புற்றவர்களாக அமைகிறார்கள் – இவர்களே உற்றார் என்று கருதப்படுகிறார்கள். இவர்களுக்கு அடுத்தபடியாக எமது உறவினர்கள் என்ற அகலமான வட்டத்துக்கு உரியவர்களாக அமைகிறார்கள்.

எமது நல்லது, கெட்டதுகளில் இத்தகைய உற்றாரும், உறவினரும் பங்கு கொள்கிறார்கள். எமது துக்கங்களையும், சந்தோஷங்களையும் பகிர்ந்து கொள்கிறார்கள். உரிமையுடன் அன்பு பாராட்டும் நண்பர்களும் இத்தகைய வட்டத்துக்கு உரியவர்களாக அமைகிறார்கள்.

கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இத்தகைய உறவுகளைத் தேடிப்போய்ப் பழகவும் சிரமங்களில் பகிர்ந்து கொள்ளவும் ஒரு கொண்டாட்ட நேரமொன்றில் கூடி நின்று பாடுபடவும் நமது பெரியவர்கள் பழகியிருந்தார்கள். அதை ஒரு நடைமுறை வாய்ப்பாகக் கொண்டு வாழ்க்கை முறைக்கு அனைவரும் இசைவு பட்டிருந்தார்கள். அத்தகைய உறவுகளிடையே பற்றும் ஒட்டுதலும் இயல்பாகவே அமைந்திருந்தன. துன்ப, துயரங்களில் இயல்பாகவே பங்கேற்கவும், துயருறவும் கூடிய அன்பான சொந்தங்கள் அந்த நாள்களில் காணப்பட்டன. பாட்டன், பாட்டிகளின் பாசம் இனிய உறவாய் வாழ்வின் அர்த்தத்தை யாவருக்கும் கற்பித்தது. ஆச்சி, அப்பு என வாழ்ந்தவர்கள் காலப்போக்கில் அப்பப்பா, அம்மம்மா என அழைப்புப் பெயர்கள் மாறிய போதும் அன்பு மாறாதவர்களாய் விளங்கினார்கள்.

ஒரு வீட்டில் பலர் படுத்தால் அயல் வீடெல்லாம் உண்டு மகிழும் ஒரு காலம் இருந்தது. அயலுக்கும் உறவுக்கும் தராமல் எந்த விசேட உணவையும் உட்கொள்ளும் பழக்கம் இருக்கவில்லை.

அத்தகைய உறவின் ஒட்டுதல் இன்று எங்கே போய்விட்டது? கூடி வாழ்ந்து கொண்டாடும் மனித இயல்புக்கு என்னாயிற்று? தனக்கென்று மட்டும் தேடவும் சேர்க்கவும் அனுபவிக்கவும் என மனிதனின் உலகம் சுருங்கிப் போனதேன்?

அந்த நாள்களில் பாட்டன், பாட்டிகளோடுதான் குழந்தைகள் ஒட்டுதலாக இருந்தார்கள் அவர்களின் பிரியம் இவர்களின் வாழ்வை நிழற்றி அழகு படுத்திய அனுபவங்கள் மிக அழகாய் இருந்தன.



> “நல்லது, கெட்டதுகளில் இத்தகைய உற்றாரும், உறவினரும் பங்குகொள்கிறார்கள். துக்கங்களையும், சந்தோஷங்களையும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

## நம்மை நாம்...




அண்மையில் ஒரு ஆசியருக்கு நேர்ந்த ஒரு அனுபவத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்கும். தனது வகுப்பிலிருந்த ஒரு மாணவனின் முக அமைப்பு அச்சொட்டாகத் தான் அறிமுகமான ஒருவருடைய முகத்தைப் போல தென்பட்டது, ஆசிரியரும் அந்த மாணவனை அழைத்து, அவனது தந்தையின் பெயரை விசாரித்திருக்கிறார். பையன் பெயரைச் சொன்னதும் உன் அப்பப்பாவின் பெயரென்ன? என்று கேட்க பையன் [தரம்–6 வகுப்பு மாணவன்] எனக்குத் தெரியாது சேர் என்று சொல்லியிருக்கிறான். அவர் இருக்கிறாரா இல்லையா என்று கேட்க அவர் எங்களது அப்பாவின் அக்கா வீட்டில் இருக்கிறார். என்று கூறினான் பையன். அப்பப்பாவின் பெயரை நீ அறிந்ததில்லையா? என்று கேட்டார் ஆசிரியர். அப்பப்பா கனகாலமாய் எங்கட அப்பாவோட கதைக்கிறேல்ல சேர் என்று பதிலளித்தான் பையன். அந்தக்கால உறவுகளின் நன்மை பற்றி மனம் திறந்து பேசினார் ஆசிரியர். வாழ்வில் வசதிகள் பெருகிவிட்ட இன்றைய சூழலில் அன்பும், உறவும், பாசமும் பரிவும் மனிதனிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் விடை பெற்று விட்டனவா? எமது பிள்ளைகளுக்கு நாம் எமது முன்னைய பரம்பரையினர் பற்றிய பற்றுணர்வை ஊட்டத் தேவை இல்லை என்று கருதுகிறோமா? பெரியப்பா, மாமா, அம்மப்பா எனப் பலவாக விரியும் உறவின் கிளைகள் அவசியமில்லை என்று கருதுமளவுக்கு எமது அவசர வாழ்வு எம்மை மாற்றி விட்டதா?

### அண்மையில் ஊரில் ஒரு சம்பவம்

வயிற்றில் ஒரு பெரிய சத்திர சிகிச்சைக்காக ஒருவர் கொழும்பு சென்றிருக்கிறார். குறிப்பிட்ட சில நாள்கள் வைத்தியசாலையில் தங்கிப் பின் சத்திர சிகிச்சை செய்வதாக ஏற்பாடு. சத்திரசிகிச்சை நடந்து முடிந்த பின்னர்தான் மேற்படி நபரின் ஊரில் இரண்டு தெருக்கள் தள்ளி வசிக்கும் அண்ணனுக்கு இந்த நபரின் சத்திர சிகிச்சை பற்றிய விவரம் மூன்றாந்தரப்பு நபர் ஒருவரால் கூறப்பட்டிருக்கிறது. கேள்விப்பட்ட அண்ணன் மிகவும் மனமுடைந்து போனார். அண்ணன் என்று இருக்கிற எனக்கு ஒரு சொல் சொல்லக்கூடாதா? அவ்வளவு தூரம் அறியாமல் போய்விட்டேனா என்று கவலைப்பட்டிருக்கிறார். இத்தகைய நிகழ்ச்சிகள் எல்லாம் மனிதர்களில் தோன்றி இருக்கிற விசித்திரமான மாறுதலை வேதனைக்குரிய நிலைமைகளை அல்லவா எடுத்துக்காட்டுகின்றன. இதே வேகத்தில் போனால் வாழ்வின் இனிமையான அர்த்தம் பொதிந்த பல தருணங்களை இழந்து விட நேரிடும் என்பதை ஏன் பலரும் புரிந்து கொள்கிறார்களில்லை?

வாழ்வின் வசதிகளும் ஆடம்பரங்களும் புறத்தோற்றப் பளபளப்புக்களும் உள்ளார்ந்த உறவின் அழகைச் சிதைத்து விடுவதற்கு ஏன் அனுமதிக்கிறோம்?

இத்தகைய மனப்பான்மைதான் இன்று பரவலாக நடைபெறும் குடும்ப உடைவுகள், குடும்ப உறவுகளையே கொலை செய்தல் எடுத்த எடுப்பிலேயே தற்கொலை புரிதலை ஒரு தீர்வாகத் தெரிந்தெடுத்தல் என்கிற விபரீத முடிவுகளை நோக்கி இட்டுச் செல்கின்றனவா? – சிந்திப்போம்.



---

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தங்கள் நல்வரவை.....

“உங்கட வேலைக்காண்டி.... கல்யாணத்த மாத்தி வைக்கலாமோ.. உப்பிடி வாற எல்லாத்துக்கும் சலிச்சுக்கொண்டு நிண்டா எங்களுக்கும் நாளைக்கு நாலு சனங்கள் வரவெல்ல வேணும்... எல்லாத்தையும் சமாளிச்சுக்கொண்டு போக வேணும்”

உண்மைதான். இந்திய அரசு, இலங்கைப் பிரச்சினையை சமாளிப்பது போல் நானும் சமாளிக்க வேணும். நான் மாத்திரமா இப்பிரச்சினையில் சிக்கித் தவிக்கிறேன்? வேலையில் உள்ள அனைவரும் இந்துப் பிரச்சினையில் சிக்கிக்கொண்டு இருப்பார்கள். மனிசனெண்டு மதிச்சு வீடு தேடி வருபவர்களை உதாசீனம் செய்யாது. எல்லோரும் அடிக்கடி சொல்லும்.... “எங்களுக்கும் கடைசியில நாலு சனம் வேணும்” வசனத்தை சொல்லி சொல்லியே வேதனைப் பட்டிருப்பார்கள். அந்த நாலு சனமெண்டு யாரை சொல்கிறார்கள்? அவர்களிடம் இது பற்றி ஏதாவது ஒப்பந்தம் போட்டுக் கொள்ளலாமா? அவர்கள் எங்கே இருப்பார்கள்? என்னோடு வேலை செய்யும் தாதிய உத்தியோகத்தர் ராசநாயகம் அண்ணனிடம் கேட்டேன். “அதுவே... எங்கள கடைசியில செத்தாப் பிறகு தூக்கிக்கொண்டு போறதுக்கு நாலு பேர் தேவையல்லோ அதைத்தான் சொல்லினம்”

அட.... கடைசியில நிலைமை இப்பிடி மாறிவிட்டது. இப்பிடி சொன்ன பிறகு எப்படி பேசாமல் இருப்பது.

“ சரியம்மா தனியப் போனா சரிவராது- துடக்குக் காரர். நீரும் லீவை போட்டிட்டு வாரும்....

“ஐயோ.. என்னை விட்டிடுங்கோ. என்னால லீவு எடுக்கேலாது.. அண்டைக்கும் சோட் லீவு போட்டுத்தான் ஒரு செத்த வீட்டுக்கு போட்டு வந்தனான். நெடுக ரீம் வந்தபடி... நீங்க போட்டு வாங்கோ. ச்சே... இரண்டு பேரும் வீட்டில வேலைக்கு போற ஆக்கள் எண்டா வேற வினையே வேண்டாம்”

“என்னப்பா.... எப்ப பார்த்தாலும் ஸ்கூல்ல ரீம் வருகுது, வருகுது என்டு சொல்லுறீர்.. நானறிஞ்சு ஒருக்காலும் பாகிஸ்தான் ரீமும், இந்திய ரீமும் வந்த தில்லையே..... தனியாப் போனால் சோலியப்பா. சொந்தக்காரர்கள் எல்லாம் மனிசியக் கூட்டிக் கொண்டு வரேலயோ எண்டு துளைச்செடுத்துப் போடுவினம். இல்லாட்டி... நான் அவையளுக்கு சும்மா பழகியெல்லே தாளிக்க வேணும்.

இந்நேரம் எனது கையடக்கத் தொலைபேசியில் செய்தி வந்து சேர்ந்தது. அனுப்பியது எனது அக்கா. அது வழமையான குறுஞ் செய்தியாக இராமல் பெரும் செய்தியாக இழுத்தது.

மச்சான் வீட்டில நடக்கிற கல்யாணத்துக்கு மனுசியையும் கூட்டிக்கொண்டு வா. அவையள் உன்ர வீடு குடிபுகுதலுக்கு ‘வான்’ பிடிச்சு எல்லாரும் வந்தவை” நான் தொலைபேசியில் எனது நிலமையைச் சொன்னேன்.


“அக்கா....நாட்டு நிலமை தெரியும் தானே.... மாமிக்கு ஏலாது படுக்கையில இருக்கிறா, பிள்ளையள் பள்ளிக்கூடம் போறது... ரெண்டுபேருக்கும் வேலை. மனுசிக்கு ரீம் வருமாம்.” என்று கெஞ்சினேன். ஆனால்,

“மனுசி வரேக்க ரீமையும் கூட்டிக் கொண்டு வரட்டுமே.. வாறது நல்லது தானே” ஒரே சொல்லில் முடிவைச் சொல்லிவிட்டார் அக்கா.

போதும் போதும் எனக்கு போதும்.... இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா.வில் கொண்டு வரும் புதிய தீர்மானத்தை... அரசு சமாளிக்கத்தானே போகின்றது... நாங்களும் அதில் இணைய வேண்டியது தான். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





■ தில்லாலங்கடி

# தர்மத்தின் வாழ்வுதனை...

இலங்கையில் இரண்டாவது முள்ளிவாய்க்கால் போரும் நடந்து முடிந்துவிட்டது. இந்தத் தடவை இடம்பெற்ற போரில் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. இரண்டு போரிலும் வெற்றி பெற்றது ராஜபக்ச அன் கோவினர். 2009 ஆம் ஆண்டு, 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த இரண்டு போர்களும் முள்ளிவாய்க்கால்தான் என்று சொல்வதற்கு நியாயப்பாடுகள் நிறையவே உள்ளன. இரண்டு போரிலும் அதர்மம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது என்று வெள்ளிடைமலையாகத் தெரிந்தும், ஏனையோரது கையாலாகாத்தனத்தால் ராஜபக்ஷாக்கள் வெற்றி கண்டனர்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருந்த, தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறி 2006 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ராஜபக்ஷ அரசு போர் தொடுத்தது. இந்தப் போரை வெற்றி கொள்வதற்காக அவர்கள் எதனைச் செய்யவும் தயாராக இருந்தார்கள். இதனால் லட்சக்கணக்கான தமிழ் மக்களின் உயிர் ஒரு சிறிய நிலப்பரப்புக்குள் பறிக்கப்பட்டது.

''எனது அமைச்சரவையில் இருந்த மஹிந்த மாத்திரமே சிறுபான்மையினருடன் பேசுவதை விரும்பவில்லை. அவர், அவர்களை கொன்றொழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்'' என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் கூறியிருந்தார்.

சந்திரிகா குறிப்பட்டதைப் போன்று, ராஜபக்ஷாக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை விரும்பினர். அதனால்தான் சர்வதேசங்களின் எந்தவித அழுத்தங்களையும் கணக்கில் எடுக்காது போரை நடத்தி முடித்தது அரசு. இறுதியில் பல லட்சக்காண தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டும், பல ஆயிரக்கணக்கானோர் காணமல் போனதுடன் இன அழிப்பு கொலை வெறி அடங்கியது. தமிழனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்த இன அழிப்பு போரை, சிங்களதேசம் வெற்றி விழாவாகக் கொண்டாடியது. இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் முணுமுணுக்கக் கூட இல்லை.

இரண்டாவது முள்ளிவாய்க்கால் போர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்துடன் ஆரம்பமானது. இந்த முள்ளிவாய்க்கால் போர் சற்று வித்தியாசமானது. முன்னர், ராஜபக்ஷாக்களால் தமிழ் இனத்துக்கு எதிராக போர் தொடுக்கப்பட்டிருந்தது. இப்போது, தனது இனத்துக்கு எதிரான போரை அவர் தொடக்கியிருக்கிறார். தனது அதிகாரத்தை விஸ்தீரணப்படுத்தும் நோக்குடன் இந்தப் போரை அவர் தொடக்கியிருக்கிறார்.

'வளர்த்த கடா மார்பில் பாயு[illegible]' என்பது போல், ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்[illegible]ன், பதவியில் அமர்த்தப்பட்ட ஷிராணி பண்டாரநாயக்க, அவருக்கு எதிராகவே அவதாரம் எடுத்தார். ராஜபக்ஷவுக்கு சாதகமான தீர்ப்புக்களை வழங்காது சட்டத்தின்படி அவரால் வழங்கப்பட்ட தீர்ப்பு இரண்டாவது முள்ளிவாய்க்கால் 'போர்' ஒன்றுக்கு அடித்தளமிட்டது.

முதலாவது முள்ளிவாய்க்கால் போர் முடிவுக்கு கொண்டுவரப்படுவதற்கு 3 வருடங்களுக்கு மேல் எடுத்தது. ஆனால் இரண்டாவது முள்ளிவாய்க்கால் போர் மூன்று மாதங்களுக்குள்ளேயே முடிவுக்கு கொண்டு வரப்பட்டுவிட்டது. இரண்டாவது முள்ளிவாய்க்கால் போரில் உயிரிழப்புக்கள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பாகவே எதிர்தரப்பு விலகிக் கொண்டதால், போரும் விரைவில் முடிவுக்கு வந்துவிட்டது.

ராஜபக்ஷ முதலாவது முள்ளிவாய்க்கால் போருக்கு படைகளைப் பயன்படுத்தினார். ஆனால் இரண்டாவது போருக்கு தனது அரசின் அமைச்சர்களைப் பயன்படுத்தி வெற்றி கொண்டார். ராஜபக்ஷ எதைச் சொன்னாலும் தலையாட்டுவோரைப் பயன்படுத்தி தான் நினைத்ததை சாதித்து முடித்து விட்டார்.

இரண்டு முள்ளிவாய்க்கால் போர்களுக்கிடையே ஆனந்தபுரம் சமர் இடம்பெற்றிருந்தது. இந்தச் சமரையும் ராஜபக்ஷ இலகுவாக வெற்றி கொண்டிருந்தார். அதுவும் ஒரு வகையில் ஷவளர்த்த கடா மார்பில் பாய்ந்ததைப் போன்றதுதான். ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட சரத்பொன்சேகா, அவருக்கு எதிராகவே ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியிருந்தார்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் போரால் அவர்கள் சிதைந்து முட்கம்பிகளுக்குள் அவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த போதுதான் இந்தச் சமர் இடம்பெற்றது. இதில் தமிழ் மக்கள் மீது வந்த அம்பும், அம்பை எய்தவனும் எதிரியாகி தமக்குள் மோதிக் கொண்டனர்.

தமிழ் மக்கள் அம்பு எய்தவன் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதற்காக போராடினார்கள். சிங்கள தேசமும் இந்த விடயத்தில் இரண்டு பட்டுப் போயிருந்தது. பலராலும் நோக்கப்பட்ட இந்தச் சமர் இறுதியில் ராஜபக்ஷவின் வெற்றியோடு முடிவுக்கு வந்தது.

இரண்டு முள்ளிவாய்க்கால் போரிலும் அதர்மம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது என்பது யாவருக்கும் தெரிந்தும், அதையும் மீறி அவை வெற்றி கொள்ளப்பட்டன.

தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, [illegible] தேசத்தில் தமிழர்களால் ஆர்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால் அன்று ஐ.நா மௌனமாக இருந்தது. எல்லாம் முடிந்து 3 ஆண்டுகளின் பின்னரே ஐ.நா தான் செய்த தவறுகளைக் கூட கண்டுபிடித்துக் கொண்டது.

ஏன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூட தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது மௌனமாகத்தான் இருந்தார்.

இரண்டாவது முள்ளிவாய்க்கால் போரிலும், கண்டனங்கள், ஆர்பாட்டங்கள் என்று பரவலாக எதிர்ப்புக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருந்தன. அமெரிக்கா முதல் எல்லா நாடுகளும் தமது கண்டனங்களைப் பதிவு செய்தன. சிங்கள மக்கள் தங்கள் மீது தொடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் போருக்கு எதிராக குரல் கொடுத்தனர்.

ஆனால் தமிழர் விடயத்தில் ஐ.நா என்ன செய்ததோ அதைத்தான் ஷிராணி பண்டாரநாயக்க விடயத்திலும் ஐ.நா செய்தது. தாம் மௌனமாக அவதானிப்பதாக தெரிவித்திருக்கின்றது. தாமதமாக கிடைக்கும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமனானது என்பதை ஐ.நா இன்னமும் அறியாமல் இருக்க முடியாது.

முள்ளிவாய்க்கால் போர்கள் எல்லாம் தமிழர்களுக்குச் சொல்லும் செய்தி ஒன்றுதான். ராஜபக்ஷாக்களால் உங்களுக்கு என்றும் விடிவு இல்லை என்பதுதான். தன்னால் நியமிக்கப்பட்ட தனது இனத்தை சார்ந்த ஒருவரையே பதவியிழக்கச் செய்ய தன்னுடைய அதிகாரங்களை எவ்வாறெல்லாம் பயன்படுத் முடியுமோ அந்தளவுக்கு மஹிந்த பயன்படுத்தியிருந்தார். அதிலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தான் நினைத்ததை எப்படி நடைமுறைப்படுத்த முடியுமோ அத்தனையும் செய்து முடித்திருந்தார். எதிர்கட்சியினர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து வெளிநடப்புச் செய்த பின்னரும் தான் அடையவேண்டிய இலக்கை மஹிந்த அடைந்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நியமிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு பங்குபற்ற முடியும் ? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்வைத்தாலும், அதனைப் பெரும்பான்மை பலத்தை கொண்டுள்ள மஹிந்தவின் கைப்பாவைகள் ஏற்பார்களா?

சம்பிக்க, விமல் போன்றவர்களை உள்ளடக்கியதாக அமையும் இனப்பிரச்சினைக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எதனையும் செய்ய முடியாது போகும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது சார்பு உறுப்பினர்களின் பெயரைக் கொடுத்து விட்டு, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நியாயமில்லை என்று விலகினாலும் மஹிந்த நினைத்த தீர்வு நிறைவேறியே தீரும். அது தமிழ் மக்களுக்கு பாதகமானதாகவே இருக்கும். அதனைச் சர்வதேசமும் வேடிக்கை பார்த்துக் கொண்டேயிருக்கும்.

மஹிந்த அமைச்சரவையில் அங்கும் வகிக்கும் அமைச்சர் ஒருவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கெடுக்க வேண்டும் என்று அடிக்கடி

ஷிராணி விடயத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு எவ்வாறு செயற்பட்டதோ அவ்வாறே தமிழர் இனப் பிரச்சினை விடயத்திலும் தெரிவுக்குழு என்பதே என்பதுதான் நிதர்சனம். அதனை உள்ளூர அறிந்து கொள்ளும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை தலைக்கு மேல் தூக்கி வைத்து காவடி ஆடுகிறார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியாருக்காக காத்திருத்தல்



■ நிலாந்தன்

மறுபடியும், மார்ச் மாதத்தை நோக்கி ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்புக்கள் பெருகத் தொடங்கிவிட்டன. அமைச்சர் பீரிஸின் இந்திய விஜயம் அமெரிக்கப் பிரதானிகளின் இலங்கை விஜயம் என்பவற்றின் பின்னணியில் ஜெனீவாவில் ஏதோ பெரிய திருப்பம் ஏற்படப்போகிறது என்ற விதமான ஊகங்களை ஊடகங்கள் உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன. இதில் உண்மையை விடவும் ஊடகங்கள் உருவாக்கும் மாயத்தோற்றமே பெரிதாகிக்கொண்டு வருகிறது. குறிப்பாக, படித்த, பத்திரிகை வாசிக்கின்ற, இணையத் தொடர்புடைய நடுத்தர வர்க்கத்தினர் ஊடகங்களின் தலைப்புச் செய்திகளின் பின் எடுபடத் தொடங்கிவிட்டார்கள்.

தமிழர்கள் இப்படியாக வெளியிலிருந்து வரக்கூடிய மீட்சிகளுக்காக காத்திருப்பது என்பது இது தான் முதற்றடவையல்ல. இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் தமிழர்கள் தாங்கள் இனரீதியாக ஒடுக்கப்படுவதாக நம்பத் தொடங்கிய போது தோன்றிய ஒரு காத்திருப்பு இது. தென்னிலங்கையில் காலத்துக்குக் காலம் நிகழ்ந்த இன வன்முறையால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் இந்தியாவை நோக்கி காத்திருப்பதிலிருந்து இது தொடங்கியது. பின்னர் ஆயுதப் போராட்டத்தின் எழுச்சியோடு, குறிப்பாக, திருமதி இந்திராகாந்தியின் காலத்தில் இக்காத்திருப்பு ஒரு புதிய வளர்ச்சியை அடைந்தது. இந்தியா ஒரு படை நடவடிக்கை மூலம் பங்களாதேஷை உருவாக்கியது போல இலங்கைத்தீவிலும் ஒரு படை நடவடிக்கையை மேற்கொள்ளும் என்ற காத்திருப்பு 1987 வரை மிக வலிமையாகக் காணப்பட்டது.

இந்திய அமைதிப்படையுடனான மோதல் மற்றும் ரஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டமை என்பவற்றின் விளைவாக இந்தியாவின் கதவுகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து மேற்கத்தேய கதவுகள் ஓப்பீட்டளவில் அகலத் திறக்கப்பட்டன. எழுச்சிபெற்று வந்த புலம்பெயர் தமிழ்ச் சமூகமும் அதற்கு முக்கிய காரணம். தொடக்கத்தில் புலம்பெயர் சமூகமானது ஈழப்போரின் காசு காய்க்கும் மரமாகத்தான் காணப்பட்டது. அதன் பின் மூன்றாம் கட்ட ஈழப்போரின்போது அதுவொரு பிரித்துப் பார்க்க முடியாத நிதிப் பின்தளமாக மாறியது. மூன்றாம் கட்ட ஈழப்போரின் முடிவில் மேற்கு நாடுகளின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின் பின்னணியில் அது, அபிப்பிராயங்களை உருவாக்கவல்லதும், தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தவல்லதுமான ஓர் இரண்டாவது பின்தளம் என்று அழைக்கப்படக்கூடிய வளர்ச்சியைப் பெற்றது. இதனால் ஈழத் தமிழர்களின் காத்திருப்பு என்பது மேற்கையும் நோக்கித் திரும்பியது.

பின்னர் நாலாம் கட்ட ஈழப்போர் வெடித்தபோது மேற்படி மேற்கை நோக்கிக் காத்திருத்தல் என்பது உச்சவளர்ச்சியை அடைந்தது. இடையிடையே தமிழ்நாட்டை நோக்கியும் காத்திருப்பு திரும்பியதுண்டு. தோல்விகளின் கடற்கரையை நோக்கி ஒரு பெரிய சவ ஊர்வலம் போல தமிழ் மக்கள் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து கொண்டிருந்த காலம் அது. எனவே, பற்றிக்கொள்ள எது கிடைத்தாலும் அதைப் பற்றிக் கொண்டு மீண்டுவிட வேண்டும் எனும் தவிப்பே அவர்களுக்கிடையே மேலோங்கியிருந்தது. அத்தகைய ஒரு பின்னணியில் கருணாநிதி மனிதச்சங்கிலிப் போராட்டம் என்றபோதும் தேர்தலில் வெல்வதற்காக ஜெயலலிதா ஈழத்தமிழர்களை தத்தெடுப்பது போலப் பேசியபோதும் சாதாரண ஈழத்தமிழர்கள் தமது நம்பிக்கைகளை மீண்டுமொரு தடவை தமிழ்நாட்டுத் தலைவர்களின் மீது முதலீடு செய்தார்கள்.

அதைப் போலவே அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போதும் ஒபாமாவிற்கான தமிழர் அமைப்பின் மூலம் அமெரிக்காவின் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தலாம் என்றவொரு நம்பிக்கை வன்னிப் பெருநிலத்தில் சாதாரண தமிழ் மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது. ஒபாமாவின் பதவியேற்பு உரையின்போது அவர் ஈழத்தமிழர்களைப் பற்றிக் குறிப்பிடுவார் என்றொரு வதந்தியும் உலவியது. அரச ஊழியரான எனது நண்பர் ஒருவர் அப்பொழுது என்னிடம் வந்து எரிச்சலடைந்தவராகக் கேட்டார். 'ஒபாமாவை ஏன் இப்படி முரட்டுத்தனமாக நம்பவேண்டும்? ஒபாமா என்ன இவர்களுடைய வகுப்பறைச் சகபாடியா'' என்று. ஒபாமா பதவிக்கு வந்தார். எதுவும் நடக்கவில்லை. பெரும் எதிர்பார்ப்புகளை உருவாக்கிய வணங்காமண் கப்பலும் வன்னிக் கரைகளுக்கு வந்துசேரவில்லை.

முடிவில் எல்லாக் காத்திருப்புகளும் வீண் என்றானபோது நந்திக் கடலை நோக்கி நடக்கத் தொடங்கிய இறுதி நாள்களில் படித்த மற்றும் அபிப்பிராயத்தை உருவாக்கவல்ல தமிழர்களின் மத்தியில் மேலுமொரு காத்திருப்பு மிஞ்சியிருந்தது. அதாவது, R2P என்று சுருக்கமாக அழைக்கப்படும் Responsible to Protect எனப்படுகின்ற ஐ.நா. கோட்பாட்டுக்கமைய ஒரு வெளித் தலையீடு நிகழ முடியும் என்பதே அது. ஆனால், நிலம் சிறுத்துக் கொண்டே போனது. யூதர்களின் நவீன வரலாற்றை "எக்ஸோடஸ்'' என்ற நாவலாக எழுதிய லியன் ஊரிஸ் தனது நாவலில் கூறியதுபோல, அதிசயங்கள், அற்புதங்களின் காலம் எனப்படுவது எப்பொழுதோ முடிந்து விட்டிருந்தது. அம்பலவன் பொக்கணை நெடுஞ்சாலை வழியாக கைகளை உயரத்தூக்கியபடி நடப்பதே இறுதித் தெரிவாக இருந்தது.

இப்படியாக சுமார் அரைநூற்றாண்டுக்கும் மேலாக ஏதோவொரு வெளிச் சக்திக்காக காத்திருந்த தமிழ் மக்கள் நந்திக் கடற்கரையில் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு சுமார் 4 ஆண்டுகள் ஆன பின்பும்கூட, மறுபடியும் வெளியிலிருந்து வரக்கூடிய மீட்சி ஒன்றுக்காக காத்திருப்பது என்பதை எப்படி விளங்கிக்கொள்வது?

முதலில், மேற்படி காத்திருத்தலின் புவிசார் சமூகப் பண்பாட்டு வேர்களைக் கண்டுபிடிப்போம். அதன் பின் இப்போதுள்ள மேற்கை நோக்கிய காத்திருத்தலின், அரசியல் அடிப்படைகளை ஆராய்வோம். இவற்றில் முதலாவது மேற்படி காத்திருத்தலின் அரசியல் சமூக பண்பாட்டு அடிப்படை எதுவென்பது?

இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் தெற்கு மூலையில் தமிழகத்துக்கு கீழே இருக்கும் ஈழத்தமிழர்களின் புவிசார் அரசியல் அமைவிடம்தான் இதற்குரிய அடிப்படைக் காரணம். இவ்வமைவிடம் காரணமாக ஈழத்தமிழர்கள் எப்பொழுதும் தங்களைத் தமிழகத்தின் பின்னணியில் வைத்துச் சிந்தித்து வந்திருக்கிறார்கள். பெரும்பான்மைச் சிங்களவர்கள் மத்தியில் தங்களைச் சிறுபான்மையினராக உணரும் போதெல்லாம், தமிழர்கள் சிங்கள சமூகத்தினரைவிட பெரியதும், வலியதும் ஆகிய தமிழகத்துடன் தொடர்ச்சியாக தங்களை அடையாளப்படுத்துவதன் மூலம் இச்சிறு தீவில் தங்களை நிலைநிறுத்த முயன்றுள்ளார்கள். இலங்கை – இந்திய உடன்படிக்கையின் விளைவாக ஏற்பட்ட புதிய எதிர்மறையான அரசியற் சூழலில் மேற்படி ஈழ– தமிழக உறவில் குறிப்பாக, அரசியற் தளத்தில் ஓர் இடைவெளி ஏற்பட்டிருந்தாலும்கூட வேர்நிலை உறவில் அதாவது, இனத்துவ மற்றும் சமூக, கலை, பண்பாட்டுத் தளங்களில் பாரதூரமான விரிசல்கள் எதும் ஏற்படவில்லை.

1990களிலிருந்து புலம்பெயர் தமிழ்ச் சமூகம் ஒரு நிதிப்பலமுடைய பின் தளமாக எழுச்சிபெற்றபோதும் அது ஓர் இரண்டாவது பின்தளமாகத்தான் காணப்படுகின்றது. உடனடியான முதல்நிலைப் பின்தளமாக தமிழகமே தொடர்ந்தும் காணப்படுகின்றது.

இத்தகைய ஒரு பின்னணியில், தமிழகத்துடன் தங்களை இணைத்து அடையாளப்படுத்துவதிலிருந்து தொடங்கியதே இந்தியாவுக்காகக் காத்திருத்தல் என்பது. பிந்திய தசாப்தங்களில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒரு பலமான இரண்டாவது பின்தளமாக மேலெழுந்த பின் மேற்குக்காகக் காத்திருப்பது மாகமேற்படி காத்திருத்தலானது மைய இடப்பெயர்ச்சிக்கு உள்ளாகியது. இதுதான் ஈழத்தமிழர்களுடைய காத்திருப்பு அரசியலின் பின்னணி.

இந்தியாவை நோக்கிக் காத்திருப்பதிலிருந்து தொடங்கியது, இப்பொழுது அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளை நோக்கிக் காத்திருப்பதாக மையமாற்றம் கண்டுள்ளது. கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் தமிழ்ச் சினிமாவில் உச்சக்கட்டத்தை நோக்கிக் காட்சிகள் உணர்ச்சிகரமாகக் கட்டியெழுப்பப்படுவது போல, எதிர்பார்ப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன.

ஆனால், இது தமிழ்ச் சினிமாவைப் பார்ப்பதைப் போன்றது அல்ல. தமிழர்கள் இந்த இடத்தில் நிதானமாகவும், விஞ்ஞானபூர்வமாகவும் சிந்திக்கவேண்டும். இது முழுக்க முழுக்க மேற்கு நாடுகளின் முன் முயற்சிதான். இதில் புலம்பெயர் தமிழர்களுடைய பங்களிப்பென்பது ஒப்பீட்டளவிற் குறைவு. சாதாரண தமிழர்களில் பலர் இவையெல்லாம் புலம்பெயர்ந்த தமிழர்களின் முன் முயற்சிகளின் திரட்டப்பட்ட விளைவென்று நம்புகின்றனர். ஆனால், அது ஒரு சிறிதளவு உண்மை மட்டுமே. இப்படியொரு தீர்மானத்தைக் கொண்டு வருவது என்பது மேற்கு நாடுகளின் முகவர்களாகத் தொழிற்படும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மேற்கு நாடுகளின் ராஜதந்திரிகள், கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் எடுக்கப்பட்ட ஒரு முடிவுதான். இதில் தமிழர்கள் வெறும் கருவிகள் மட்டுமே. அதாவது, மேற்குநாடுகளின் உலகளாவிய நிகழ்ச்சி நிரலின் கருவிகளாக தமிழர்கள் கையாளப்படுகிறார்கள். 1980களில் எப்படி பிராந்தியப் பேரரசின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தமிழர்கள் கருவிகளாகக் கையாளப்பட்டார்களோ அதுபோன்று தான் இதுவும். சீனாவை நோக்கிச் சரியும் இலங்கை அரசை வழிக்குக் கொண்டு வருவதற்கான நிர்ப்பந்தங்களை பிரயோகிப்பதே மேற்கு நாடுகளின் இறுதி இலக்காகும்.

தமிழர்களிற்பலர் நம்புவதைப் போல, இலங்கை அரசைத் தண்டிப்பது மேற்கு நாடுகளின் முதல் நிலை நோக்கம் அல்ல. கடந்த ஆண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனால் பெரிய திருப்பங்கள் எதுவும் ஏற்படவில்லை. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் 35 வீதத்தை மட்டுமே நிறைவேற்றியிருப்பதாக அரசு கூறுகிறது. இந்நிலையில் இவ்வாண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும். அது கடந்த ஆண்டைவிட சற்றுக் கடுமையாக இருக்கக்கூடும். நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான கட்டமைப்புக்களை உருவாக்குவது, அவற்றுக்கான கால எல்லைகளை உடைய செயன்முறை வரைபடத்தை உருவாக்குவது போன்ற திசைகளிலேயே அதிகம் சிந்திக்கப்படக்கூடும். ஆனால், அரசாங்கம் ஏற்கனவே, இந்தியாவைச் சமாளிக்கும் முயற்சிகளில் இறங்கியிருப்பது தெரிகிறது. இதன் மூலம் வரப்போகும் தீர்மானத்தின் கடுமையைத் தணிக்க அல்லது மேலும் ஒரு கால அவகாசத்தைப் பெற அவர்கள் முயற்சிக்கக்கூடும். மேற்கு நாடுகளைப் பொறுத்த வரை அவர்களுக்கு தெரிவுகள் குறைவாகவே காணப்படுகின்றன. அரசை வளைப்பதே அவர்களுடைய நோக்கம். முறிப்பது அல்ல.

இந்நிலையில், தமிழர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? வரப்போகும் தீர்மானம் தமிழர்களுக்குச் சாதகமாகவே அமையும். அதன் மூலம் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு உடனடிச் சர்வதேச அந்தஸ்தும் அங்கீகாரமும் அதிகரிக்கக் கூடும். ஆனால், விவகாரம் அதை விட ஆழமானது. கடந்த சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலான தமிழர்களின் காத்திருப்பு அரசியலின் மறுபக்கம் எனப்படுவது அவர்கள் சக்தி மிக்க அரசுகளின் நிகழ்ச்சி நிரல்களின் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள் என்பதே. வெளிச்சக்திகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கும் தமது நிகழ்ச்சி நிரலுக்கும் நடுவே நலன்சார் சமநிலை ஒன்றைக் கண்டுபிடிப்பதன் மூலம் வெளிச்சக்திகளை தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பட வைப்பதில் ஈழத்தமிழர்கள் இன்று வரையிலும் போதிய வெற்றியைப் பெறத்தவறிவிட்டார்கள். இலங்கை அரசு தன்னைவிடப் பலமான நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கிடையில்படி வெற்றிகரமாகச் சுழித்தோடுகின்றது என்பதைத் தமிழர்கள் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அரசு இந்தியாவைச் சமாளிக்கும் வேலைகளை ஏற்கனவே தொடங்கிவிட்டது.

இந்நிலையில், சக்திமிக்க மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கும் தமது நிகழ்ச்சி நிரலுக்கும் இடையில் ஒரு பொதுப் பரப்பைக் கண்டுபிடித்து அதைப் பலப்படுத்துவதென்றால், தமிழர்கள் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விவகாரம் உண்டு. இப்பொழுது கொழும்புக்கு எதிராகக் காய்களை நகர்த்துவது போலத்தோன்றும் பெரும்பாலான மேற்குநாடுகளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடை இன்று வரையிலும் அகற்றப்படவில்லை. அதே சமயம், நாடுகடந்த தமிழீழ அரசுக்கு சட்டரீதியான சவால்கள் எதுவும் இதுவரை தோன்றவில்லை. எனவே, ஈழத்தமிழர்களுக்கான மேற்கு நாடுகளின்செய்தி மிகத் தெளிவானது. அதாவது ஆயுதப் போராட்டம் அல்லது ஆயுதமேந்திய நடவடிக்கை எதற்கும் அவர்கள் ஆதரவு தரப்போவதில்லை. பதிலாக, ஜனநாயக விழுமியங்களை அடித்தளமாகக் கொண்ட செயற்பாடுகளுக்குத்தான் ஆதரவுண்டு. இப்போதுள்ள நிலைமைகளின் படி விடுதலைப்புலிகளுக்குப் பின்னரான ஈழத்தமிழ் அரசியல் எனப்படுவது ஜனநாயக அடித்தளத்தின் மீதுகட்டியெழுப்பப்படும் ஒன்றாக அமைந்தால் மட்டும்தான் தமிழர்களின் நிகழ்ச்சி நிரலுக்கும் சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலுக்கும் இடையில் ஒரு நலன்சார் பொதுப்பரப்பை பலப்படுத்த முடியும். இதில் ஈழத்தமிழர்கள் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் அல்லது இதற்கு எதிர்த்திசையில் சிந்திக்கும் ஒவ்வொரு கணமும் அவர்களை அரசியல் அனாதைகளாக்கிவிடும். ஏனெனில் சீனாவை நோக்கிச் சாயும் கொழும்பை வளைத்தெடுப்பதே மேற்குநாடுகளினதும், இந்தியாவினதும் உடனடி இலக்காகும். இது விடயத்தில் சீனாவைக் கைவிடுவது என்ற ஒரு முடிவை கொழும்பு எடுக்குமாயிருந்தால் முழு உலகமுமே ஈழத்தமிழர்களைக் கைவிட்டு விடும், ஏற்கனவே, நந்திக் கடற்கரையில் கைவிட்டதைப்போல.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவும் சர்ச்சைகளும்

ஆஸ்திரேலிய அணி இரண்டு வகையான திறமைகளுக்குப் பெயர் பெற்றது. கிரிக்கெட் உலகில் முடிசூடா மன்னர்களாக வலம் வந்தவர்கள் அவர்கள். அவர்கள் கிரிக்கெட்டில் தாங்கள் மட்டுமே சாதிக்க வேண்டும் என்ற வெறி கொண்டவர்கள். இதனால் தான் என்னவோ அவர்கள் சர்ச்சைகளிலும் ஈடுபடுகின்றார்கள். இலங்கையின் சாதனை நாயகன் முரளியின் பந்து வீச்சில் சர்ச்சையைக் கிளப்பியவர்களும் இவர்கள்தான்.

இலங்கை அணியுடனான இரண்டாவதும் இறுதியுமான ஷரி-20' ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர்கள் சர்சையில் ஈடுபட்டனர். இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் கடைசி மூன்று பந்துகளில் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் என்ற நிலையில், திஸ்ஸர பெரேரா வீசிய இரண்டு பந்துகளிலும் பவுண்டரி விளாசினார் மக்ஸ்வெல். இதனால் இறுதிப் பந்து வீசப்படுவதற்கு முன்பதாக, மஹேல, மத்தியூஸ், மலிங்க மூவரும் பெரேராவுடன் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தனர்.

இவ்வாறான பரபரப்பான இறுதிக் கட்டங்களில் கலந்தாலோசனைகள் நடைபெறுவது வழமை. ஆனாலும் இதனைப் பொறுக்க முடியாத மக்ஸ்வெல் பந்தை வீசுமாறு கேட்க, சர்ச்சை கிளம்பியது. பதிலுக்கு மஹேல, மத்தியூஸ் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்தனர்.


இலங்கை அணியைப் பொறுத்த வரையில் ஆஸ்திரேலியச் சுற்றுலாவில், டெஸ்ட் தொடரைப் பறிகொடுத்திருந்தார்கள். அதன் பின்னர் இடம் பெற்ற ஒரு நாள் தொடரைக் கைப்பற்ற வேண்டியவர்களாக இருந்தாலும் இறுதியில் தொடர் சமநிலையில் முடிந்தது. ஷரி-20' தொடரின் முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி ஏற்கனவே வெற்றி பெற்றிருந்த நிலையில் இரண்டாவது ஆட்டத்திலும் வெற்றியைப் பெற்று தொடரை வெல்வதிலேயே குறியாக இருந்தது. ஆஸ்திரேலியாவைப் பொறுத்த வரையில் இரண்டாவது ஆட்டத்தில் தாங்கள் வெற்றி பெற்று இந்தத் தொடரையும் சமப்படுத்த பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டனர்.

எனவே திஸ்ஸரவின் இறுதிப் பந்து இரு அணிகளுக்குமே முக்கியமான தருணம். இந்தத் தருணத்தில் இயல்பாகவே ஆவேசம் எழும். இறுதிப் பந்து வீசப்பட்டு அதில் ஓர் ஓட்டம் மாத்திரம் பெறப்பட இலங்கை அணி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

இதன் பின்னரும் சர்ச்சைகள் முடிந்தபாடில்லை. வீரர்கள் கைகுலாவும் போது டேவிட் வோணர், மத்தியூ வேட் இருவரும் மஹேலவும் முரண்பட்டுக் கொண்டனர்.

ஆஸ்திரேலிய வீரர்கள் எப்போதும் சர்ச்சைக்குப் பெயர் போனவர்கள். அவர்கள் இலங்கை அணியை வம்புக்கு இழுத்து சர்ச்சையை வளர்த்திருந்தாலும், இலங்கை அணியின் – கிரிக்கெட் அரங்கில் – அனுபவ வீரரான மஹேல நிலைமைகளை லாவகமாக கையாண்டு தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்த்திருக்க வேண்டும். அதுவே அனுபவ கிரிக்கெட் வீரருக்கு அழகு.

ஆஸ்திரேலிய வீரர்கள் எப்போதும் சர்ச்சைக்குப் பெயர் போனவர்கள். அவர்கள் இலங்கை அணியை வம்புக்கு இழுத்து சர்ச்சையை வளர்த்திருந்தாலும், நிலைமைகளை லாவகமாக கையாண்டு தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்த்திருக்க வேண்டும். அதுவே அனுபவ கிரிக்கெட் வீரருக்கு அழகு.



■ அருண்மொழி




# முருங்கைமரப் புனைகள்.....

*(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

ஒருவரையொருவர் மிஞ்சிக்கொண்டு தினமும் தம்சாரபான பொய்களை எந்த வித கூச்சமுமின்றி கூவிக்கூவி காற்றில் மிதக்கவிடுகிறார்கள் இவர்கள்.

பாதுகாப்புச் செயலர் காணாமற் போனோர் பற்றி தான் 'கண்டுபிடித்த' விளக்கத்தில் "இறுதிப் போரின் போது எங்கு ஓடுவது என்று திசைதெரியாமல் தவித்த மக் கள் செஞ்சிலுவைக் குழு ஊடாகவும், இந்திய வைத்திய சிகிச்சை நிலையம் ஊடாகவும் மாத்திரமே படைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து சேர்ந்தனர்." என்று சொல்லி கண்ணீரில் தவிக்கும் மக்களை வெறுப்பேற்றியுள்ளார். அவரது கூற்று படையினரால் பிடிக்கப்பட்டு, காணாமற்போனோர் பற்றிய இருப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. பாதுகாப்புச் செயலர் கூட தான் சொன்னதைத் தானே நம்பியிருக்கமாட்டார். அந்தளவுக்கு கலப்படமற்ற தூய பொய் அதுவென்று அவருக்கு மட்டுமன்றி அகில உலகத்துக்குமே தெரிந்த ஒன்று.

★ ★ ★

போரின் தணல்கள் உயிர் தின்னும் பேராசையுடன் குறு நிலப்பரப்பில் குருதியாற்றை ஓடவிட்ட தருணத்தில் செந்நிறமான சிலுவையை தாங்கிய கொடிகளோ அல்லது அசோகச் சக்கரத்தோடு அசைந்தாடும் மூவர்ணக் கொடிகளோ மக்களை வரவேற்கவில்லை. ஏனெனில் போரின் வெம்மை இந்தக் கொடிகளையெல்லாம் தூர ஓடவைத்திருந்தது. போர் நடைபெறும் இடத்திலிருந்து எட்டவாகவே இவற்றின் அமைவிடங்கள் இருந்தன. எந்தவழியால் தப்பிப்பது என்பது தெரியாமல் கொதிக்கும் போர் என்ற எண்ணெய்ச் சட்டிக்குள் தவித்த மக்கள் படைக் கட்டுப்பாட்டுப் பிரதேச 'அடுப்புக்குள்' வந்து விழுந்தனர். இந்த அடுப்பு எரிந்து கொண்டிருந்த பகுதிகளில் மக்களை வாள் ஏந்திய சிங்கங்களைக் கொண்டிருந்த கொடிகளே வரவேற்ற துர்ப்பாக்கியம் நிகழ்ந்தது.

போரின் மரபார்ந்த நெறிமுறைகளையெல்லாம் மிதித்துவிட்டு வெற்றியை மட்டுமே இலக்காகக் கொண்டு நகர்ந்தன. அரச பாதுகாப்புப் படைகள் ஏந்தி நின்ற கொடிகளில் பொறிக்கப்பட்டிருந்த சிங்கத்தின் வாளில் 24 மணி நேரமும் குருதி எந்தவித உறைதலுமின்றி வழிந்தோடிக் கொண்டேயிருந்தது. எங்கும் கூக்குரல்கள். காயங்களோடு மீட்பர்களுக்காகக் காத்திருந்து, காத்திருந்து உயிரற்றுப்போன உடலங்கள். மனித உடல்களைத் தின்று கொழுத்துப்போன காகங்கள் .

இந்த எல்லையில் வாள் ஏந்திய சிங்கக் கொடிகளுக்கு, தூரத்தே தெரியும் வெள்ளைக் கொடிகள் கூட புலிக்கொடிகளாகவே உருமாறின. மஞ்சள் காமாலை பிடித்தவனுக்கு காணுகின்ற எல்லாக் காட்சியும் மஞ்சளாகவே தெரியும். கந்தகப் புகையும், வெற்றி மமதையும் படைகளின் கண்களை மறைத்திருந்தன. குருடாகிப் போன கண்களுக்கு புலிக்கொடிக்கும் வெள்ளைக் கொடிக்குமான பேதம் எப்படித்தெரியும்?

சாட்சிக்கு யாரும் இல்லை. வேலியும் ஓணானும் மட்டுமே எஞ்சியிருந்தன. என்னதான் கண்முன்னே வேலி ஆயிரம் பேரை கழுத்தறுத்துக் கொன்றிருந்தாலும், "நான் நிரபராதிதானே?" என்று வேலி கேட்டால், "ஓம்" என்று தலையாட்டுவது தானே ஓணானின் குணம். ஓணான்கள் இங்கே காட்டிக்கொடுக்கும் சாட்சிகளாயின. அவையும் பேதம் பாராமல் தலையாட்டிக்கொண்டே இருந்தன. ஒவ்வொரு தலையாட்டுதலுக்கும் ஒவ்வொருவர் அதிகாரத்தின் குகைக்குள் தள்ளப் பட்டுக் கொண்டிருந்தனர்.

ஏதும் செய்யமுடியாமல் ஊமைச் சாட்சியாய் விரிந்துகிடந்த வானம், கண்ணீர்த் துளிகளை மழைவழியே சிந்துவதைவிட வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை.

ஓணானும் வேலியும் ஒன்றுகூடிச் செய்த வேள்வியில் கருகிப்போன உயிர்கள் பற்றிய கடைசிச் செய்தி புகைப் படங்களாகவும், காணொலிகளாகவும் வந்தவண்ணமேயுள்ளன. ஆனாலும் கூட சற்றும் தளராத விக்கிரமாதித்தனாக தன் மீதான பழியை இந்தியா மீதும் செஞ்சிலுவைக்குழு மீதும் "அலாக்காகத்" தூக்கிப் போட்டிருக்கிறார் கோத்தா. கலப்படமற்ற பொய் என்பது அவருக்கு மிக நன்றாகவே தெரியும்.

ஆடிய காலும் பாடிய வாயும் சும்மா இருக்குமா? எப்போதுமே தன்னுடைய புளுகுக்கலையை உலகுக்கு காட்ட அவர் இப்படித்தான் ஏதாவது நம்பமுடியாத விடயங்களை சொல்லிக்கொண்டேயிருப்பார். உலகும் மக்களும் பொய் என்று தெரிந்தும் நம்புவது போல் நடித்து, திரிசூலக்குழுவைப்போல கேட்டுச் சிரித்து விட்டுப் போகவேண்டியதுதான்.

என்னதான் புனைவுகளின் மீது படுத்துறங்கினாலும் ஜெனிவாத் திருவிழாவில் பேயோட்டம் ஒன்று நடக்கப் போவது மட்டும் மிகத் துலக்கமாகத் தெரிகிறது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரியா:

## மூண்டெழும் பெரு நெருப்பு

## அரபு வசந்தத்தின் அடுத்த இலக்கு

- ★ சிரிய இராணுவ மையம் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல்
- ★ ஐ.நா.தூதுவரின் அமைதி முயற்சி தோல்வி
- ★ சிரிய ஆற்றில் மிதந்து வந்த 80 இற்கும் மேற்பட்ட சடலங்கள்
- ★ இஸ்ரேலுக்கு ரஷ்யா எச்சரிக்கை

**உலக நடப்புகள் ஒரு பார்வை**

■ரெங்கன்

முப்பது வருடங்களுக்கு மேலாக அவசர கால நிலைமைக்குள் மூழ்கிக் கிடந்த எகிப்து நாட்டில் கடந்த மே மாதத்தில் நீக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை மீண்டும் மூன்று முக்கிய மாகாணங்களில் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது கவலை தருவதாகும். 1981 ஆம் ஆண்டு அப்போதைய அதிபர் அன்வர் சதாத் கொலை செய்யப்பட்டதிலிருந்து அங்கு அவசர கால நிலைமை அமுலில் இருந்து வந்துள்ளது. தற்போதைய முகமது மோர்ஸி பதவிக்கு வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்புதான் அங்கு அவசரகால நிலைமை நீக்கப்பட்டது.

நாடு முழுவதும் பரந்துபட்ட விதத்தில் கலவரங்கள் வெடித்துள்ளதையடுத்து அதிபர் மோர்ஸி செய்து துறைமுகம், சுவெஸ் மற்றும் இஸ்மாயிலியா மாகாணங்களில் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து எகிப்தில் தலைதூக்கியுள்ள வன்செயல்களில் செவ்வாய்க்கிழமை வரை 45 பேர் கலவரங்களில் கொல்லப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த திங்கள் இரவு நாட்டு மக்களுக்கு விடுத்த ஒரு செய்தியில் குறித்த மூன்று மாகாணங்களிலும் இரவு ஊரடங்குச் சட்டத்தையும் அவர் பிரகடனப்படுத்தினார். அதேவேளை, இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பாக தேசிய கலந்துரையாடல் ஒன்றுக்கும் அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை சில அமைப்புக்கள் நிராகரிப்பதற்கு ஆலோசித்து வரும் அதேசமயம் வேறுகட்சிகள் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

நாட்டில் இரத்தக்களரிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வது சாத்தியமில்லை என்று சபாஹி அமைப்பு அறிவித்துள்ளது.

அரசியல் தீர்வொன்றை முன் வைப்பதுடன் பாதுகாப்பையும் அதிபர் உறுதிப்படுத்தினால்தான் அர்த்தமுள்ள பேச்சுக்கள் நடைபெறமுடியும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். மோர்ச்சியை பதவியில் அமர்த்திய புரட்சி இயக்கத்தையே அவர் காட்டிக் கொடுத்துவிட்டார் என்று சில அமைப்பாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள இரத்தக் களரிக்கு அதிபர் பொறுப்பேற்க வேண்டும். நாட்டை மீட்டெடுக்கும் அரசொன்றை நிறுவ வேண்டும், அரசமைப்பை மாற்றியமைப்பதற்கான குழுவொன்றை நியமிக்க வேண்டும். இல்லையென்றால் பேச்சுவார்த்தைகள் எல்லாமே காலத்தை வீணடிப்பதாக இருக்கும் என்று நோபல் பரிசு வென்றவரான மொகமத் எல்பாரடே கூறியிருக்கிறார். மோர்ஸியின் பிரதான இஸ்லாமிய அமைப்புக்கும் எதிர்த்தரப்பு இடதுசாரிகள், மிதவாதிகள், கிறிஸ்தவர்கள் மற்றும் தீவிர முஸ்லிம் தரப்புகள் ஆகியவற்றுக்குமிடையில் ஆழமாக முரண்பாடுகள் முற்றியிருப்பதே குழப்பங்களுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. சமயக் கோட்பாடுகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும்படியாக இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வருடம் விளையாட்டரங்கொன்றில் ஏற்பட்ட குழப்பத்தில் 74 பேர் கொல்லப்பட்டது தொடர்பான வழக்கில் உள்ளூர் விளையாட்டுச் சங்கம் ஒன்றின் ஆதரவாளர்களுக்கு எதிராக நீதிமன்றம் அளித்த தண்டனையை அடுத்து சையது துறைமுக நகரில் கலவரங்கள் வெடித்து பல பகுதிகளுக்கும் பரவியது.

சுவெஸ் கால்வாய் நகரில் 46 பேர் வரை கலவரங்களில் இறந்துள்ளனர். சையது துறைமுகம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 37 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. சிரியாவில் அமைதியைத் தோற்றுவிக்கும் ஐ.நா.வின் முயற்சி கைநழுவிப்போகக் கூடும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஐ.நா.வின் சார்பில் சிரியாவில் செயற்படும் சகல தரப்புகளோடும் ஆலோசனைகளில் ஈடுபட்டு வந்த தூதுவர் லக்தார் பிரிகிமி வெறும் கையுடன்திரும்பியிருப்பதாகத்தெரிகின்றது. அங்குநிலைமை மிக மோசமாகியிருப்பதும் கட்டு மீறிப் போய்க் கொண்டிருப்பதும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

அலம்பே நகரின் அருகில் உள்ள ஆறொன்றில் படுகொலை செய்யப்பட்டு வீசப்பட்டு கிடந்த ஏராளமான ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி கடைசியாக கிடைத்துள்ள செய்திகளின்படி சிரிய இராணுவ மையம் ஒன்றின் மீது இஸ்ரேலிய போர் விமானம் ஒன்று தாக்குதலை நடத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து ரஷ்ய அதிகாரிகள் ஆத்திரத்தை வெளியிட்டிருப்பதுடன் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அறிவித்துள்ளனர். சிரியாவின் சில நிலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியிருப்பதாக வந்துள்ள செய்திகள் ஐ.நா. வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இஸ்ரேலின் இராணுவ ஆய்வு நிலையம் இஸ்ரேலிய போர் விமானத் தாக்குதலுக்குள்ளானதாக டமாஸ்கர் வட்டாரத் தகவல்கள் கூறின. இது குறித்து உடனடியாக கருத்து வெளியிட்ட ரஷ்ய தரப்பினர் சிரிய மீதான இஸ்ரேலின் எந்தவொரு தாக்குதலையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று எச்சரிக்கை செய்துள்ளனர். சிரியாவிடம் இருந்து வந்துள்ள இத்தகவல் குறித்து மிகுந்த கவலை கொண்டுள்ளோம். மேற்கொண்டு தகவல் அறிவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சின் அறிக்கை கூறியது.

இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்படுமானால் ஓர் இறைமையுள்ள நாட்டின் மீது எதுவித ஆத்திரமூட்டப்படாத நிலையில் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவே கொள்ளப்பட வேண்டும். என்ன தான் நியாயங்கள் கூறப்பட்டாலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமாகும்என்றுஅந்தஅறிக்கை கூறியது.

சிரிய இராணுவம் விடுத்த அறிக்கை ஒன்றில் புதன்கிழமை அதிகாலையில் இஸ்ரேலிய விமானம் டமாஸ்கஸிற்கு அருகிலுள்ள ஜமாயா என்ற இடத்தில் இராணுவ ஆய்வு மையத்தை இலக்குவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலக்குமீது இஸ்ரேலிய விமானம் இறங்கி வந்து தாக்குதல் நடத்தியது. இரு பணியாளர்கள் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### இஸ்ரேல் தாக்கியதன் காரணம்

சிரியா தனது கிடங்குகளில் சேர்த்து வைத்துள்ள இரசாயன ஆயுதங்கள் லெபனானிலுள்ள சையீத் ஹெஸ்பொல்லா குழுக்களின் கைகளுக்குக் கிடைத்து விடும் அபாயம் இருப்பதாக இஸ்ரேல் அறிந்ததன் பின்னரே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக ஊகிக்கப்படுகிறது.

அத்துடன் ஏற்கனவே ஹெஸ்பொல்லா தீவிரவாதிகளுக்கு சிரியா வெகுதூரம் பாயும் ஸ்கட் ஏவுகணைகளை வழங்கியிருப்பதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தது. அவ்வாறு விமான எதிர்ப்பு சாதனங்கள் மற்றும் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்தைத் தாக்கும் ஏவுகணைகள் லெபனான் தீவிரவாதிகளின் கையில் கிடைப்பதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றியும் இஸ்ரேல் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தது.

### வெறும் கையுடன் ஐ.நா.தூதுவர்

சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு ஐ.நா. தனது தூதுவர் லக்தார் பிரகிமி மூலமாக மேற்கொண்ட இன்னொரு முயற்சியும் தோல்வியில் முடிந்திருக்கிறது.

இதுவரை சுமார் 60 ஆயிரம் மக்களின் உயிரைப் பலி கொண்டுள்ள சிரியாவின் உள்நாட்டுப் போரை ஒரு முடிவுக்கு கொண்டு வர ஐ.நா. கடுமையாகப் போராடி வருகின்றது. இந்தப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பல தரப்புகளோடும் பேச்சுக்களை நடத்தி ஒரு தீர்வுக்கான ஆலோசனை வழங்குவார் என்று அவர் எதிர்பார்க்கப்பட்டார். ஆனால் அவ்வாறான எந்தவித ஆலோசனையும் இல்லையென்ற வகையில் அவர் கையை விரித்திருப்பதாக இப்போது தெரிய வந்துள்ளது.

சிரியாவில் அமெரிக்க ஆதரவு எதிர்த்தரப்பு கூட்டமைப்பினரோடும் அதன் சர்வதேச ஆதரவாளர்களோடும் பாரிஸில் நடத்திய பேச்சுக்களின் பின்னர் பிரகிமி இந்த முடிவுக்கு வந்துள்ளார் என்று தெரிகின்றது.

சிரியா தொடர்பாக நடைபெற்ற 50 நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டம் பாரிஸில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் லாரன்ட் பாபியஸ் பேசும் போது, சிரியா வீழ்ச்சியை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது. மத்திய கிழக்கில் தீவிரவாதிகளின் குழுக்கள் ஆக்கிரமிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

அதிபர் பாஷர் அல் அசாத்தின் அரசுக்கும் எதிர்த்தரப்பினருக்குமிடையில் இடைக்கால அரசு ஒன்றை உருவாக்குவதற்காக பிரகிமி எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

சிரியாவில் போர் நடந்து கொண்டிருக்கும் பகுதிகளில் சிக்கியுள்ள 40 லட்சம் மக்களின் வாழ்வாதாரம் நாளுக்கு நாள் சேமமடைந்து கொண்டு வருவதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். சுமார் 650 ஆயிரம் மக்கள் வெளி முகாம்களில் இருந்து வருகிறார்கள். இவர்களில் சிறு அளவினர்தான் ஐ.நா. உதவிகளைப் பெற்றுள்ளனர். இந்த மக்களுக்கு அமெரிக்க அரசு தான் தனிப்பட்ட முறையில் இது வரை 200 மில்லியன் டொலர் வரை உதவி புரிந்துள்ளது.

### ஆற்றில் மிதந்து வந்த சடலங்கள்

இதற்கிடையில் சிரியாவில் அலப்பே நகருக்கு அருகிலுள்ள குயீக் ஆற்றில் மிதந்து வந்துள்ள 80க்கு மேற்பட்ட சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மிதந்து வந்த சடலங்களின் கைகள் பின்பக்கமாக இழுத்து கட்டப்பட்டிருந்ததாகவும் எல்லோருமே தலையில் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாகவும் வெளி வந்துள்ள தொலைக்காட்சிப் படங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. கொல்லப்பட்டுள்ளவர்கள் பெரும்பாலும் ஆண்களாவர். தலைகளில் அடிபட்டு இரத்தம் வடியும் நிலையில் ஆற்றிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. கொல்லப்பட்டவர்களில் சிலர் இளைஞர்கள் என்றும் அனேகமாக பதின்மவயதினராய் இருக்கலாம் என்றும் கூறப்பட்டது. ஜீன்ஸ் காற்சட்டைகளும் மேல் சட்டைகளும் அணிந்திருந்ததாகவும் படங்கள் காட்டுவனவாய் இருந்தன. மேலும் பல சடலங்கள் ஆற்றிலிருந்து இழுத்தெடுக்கப்பட்டு வருவதாகவும் கடைசியாகக் கிடைத்த செய்தி கூறியது. குயீக் ஆறானது புரட்சியாளர்களின் வசமுள்ள பஸ்தான் பகுதியிலுள்ளது. இது அலப்பே நகருக்கு அண்மித்த பகுதியாகும்.

இந்தப் படுகொலைகளை யார் செய்தார்கள் என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை. இவர்கள் அனைவரும் விசாரணையின்றிப் படுகொலை செய்யப்பட்டவர்கள் என்று தெரிவித்துள்ள மனித உரிமைக் குழுக்கள் இரு தரப்பினரையும் குற்றம் சாட்டியுள்ளனர். சிரியாவின் மிகவும் மக்கள் கூடிய பகுதியான அலப்பேயில் கடந்த கோடை காலத்தில் புரட்சியாளர்கள் சில பகுதிகளைக் கைப்பற்றியிருந்தார்கள். என்றாலும் இப்பொழுது தடைபட்டு நிற்கிறார்கள். கடந்த செவ்வாயன்று புரட்சியாளர்கள் அரச படைகளின் புலனாய்வு முகாமொன்றை சுற்றிவளைத்து தாக்கியதுடன் அங்கே சிறை வைக்கப்பட்டிருந்த 11 பேர் வரையானோரை விடுவித்தார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org